விடுகதைத் தொகுப்பு

முனைவர். சு.சக்திவேல்

முனைவர். ஆ.சண்முகம் பிள்ளை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - தமிழ்நாடு - 613 010

விடுகதைத் தொகுப்பு

முனைவர் சு. சக்திவேல்
முனைவர் ஆ. சண்முகம் பிள்ளை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-383-3

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 340

திருவள்ளுவராண்டு 2040, ஐப்பசி - நவம்பர் - 2009

நூல்	:	விடுகதைத் தொகுப்பு
ஆசிரியர்	:	முனைவர் பழனி. அரங்கசாமி
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு - நவம்பர் 2009
பக்கம்	:	422 + 4 = 426
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டு	:	சாதாக்கட்டு
படிகள்	:	1200
விலை	:	**உரூ. 130.00**
ஒளியச்சு	:	திருவள்ளுவர் அச்சகம், தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முன்னுரை

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது. மறை பொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். விடுகதை என்னும் சொல்லுக்குப் புதிர்மைப் பண்புடையது என்றும், விடுவிக்கப்பட வேண்டிய பொருள் கதையாக அமைந்துள்ளது என்றும் தெளியலாம். வினா எழுப்பும் வகையாகவும் விடை யிறுக்கும் தன்மையாகவும் விடுகதைகள் உள்ளன. தமிழிலே புதிர்ப் பண்பை அடிப்படையாகக் கொண்டு எதிர்மறை யிலேயே பெரும்பாலும் விடுகதைகள் தோன்றுகின்றன. அறிவு ஊட்டுவதும், சிந்தனையைத் தூண்டுவதும் விடுகதையின் குறிக்கோளாகும். கதைக்கு ஆதாரமாகவும் செய்யுளுக்கு உயிராகவும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் உள்ளது. பெரியோர்க்கும் சிறியோர்க்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துகிறது. விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும். விடுகதைகளுக்கும் உருவகங்களுக்கு முள்ள தொடர்பினை முதன்முதலில் உலகுக்கு உணர்த்தியவர் கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டில் ஆவார்.

விடுகதை மூலம் வட்டார வழக்குகள், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், காலமாற்றத்தின் சாயல்கள் முதலியவற்றை அறிய முடியும். மனித வாழ்வில் காணப்படும் கருப்பொருட்கள் அனைத்தையும் விளக்கு கின்றன. மக்களிடையே காணும் ஒழுக்கம், அவர்கள்

வழிபடும் தெய்வம், தொழில்முறைகள், சாதி வேறுபாடுகள் போன்ற பலவும் விடுகதையின் பின்னணியில் உணர்த்தப் படுகின்றன. மனித இனத்தின் சிந்தனைத் திறனை அளவிட்டு அறிவிக்கும் கருவியாக நிற்பதோடு மட்டுமன்றி மக்களின் செயல்முறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கை கள், சிந்தனைப்போக்கு, கொள்கைகள், கோட்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் வரலாற்றுச் சான்றாகவும் விடுகதைகள் விளங்குகின்றன என டாக்டர் ச.வே. சுப்ரமணியம் கூறுவது குறிப்பிடத்தக்கது. மனித சமுதாய வரலாற்றை அறிய விடுகதைகள் துணை புரிகின்றன.

அறிவுக்கு உரைகல்லாகவும், சிந்தனைக்குத் தூண்டு கோலாகவும், கதைகளுக்கு ஆதாரமாகவும், சிலேடைச் செய்யுளுக்கு உயிராகவும், பொழுதுபோக்கிற்குத் துணை யாகவும் விடுகதைகள் விளங்குகின்றன. மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றைக் காட்டும் காலக்கண்ணாடியாகவும் அவை விளங்குகின்றன. நாகரிக முன்னேற்றமும், தொழில் வளர்ச்சியும், உரைநடைப் போக்கும் விடுகதையின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமை கின்றன. விடுகதைகளைச் சேகரித்து வகைப்படுத்தி ஆய்வு செய்வது நம் கடமையாகும்.

சு. சக்திவேல்
ஆ. சண்முகம் பிள்ளை

முன்னுரை

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது. மறைபொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். விடுகதை என்னும் சொல்லுக்குப் புதிர்மைப் பண்புடையது என்றும் விடுவிக்கப்பட வேண்டிய பொருள் கதையாக அமைந்துள்ளது என்றும் தெளியலாம். வினா எழுப்பும் வகையாகவும் விடையிறுக்கும் தன்மையாகவும் விடுகதைகள் உள்ளன. தமிழிலே புதிர்ப்பண்பை அடிப்படையாகக் கொண்டு எதிர்மறையிலேயே பெரும்பாலும் விடுகதைகள் தோன்றுகின்றன. அறிவு ஊட்டுவதும் சிந்தனையைத் தூண்டுவதும் விடுகதையின் குறிக்கோளாகும். கதைக்கு ஆதாரமாகவும் செய்யுளுக்கு உயிராகவும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் உள்ளது. பெரியோர்க்கும் சிறியோர்க்கு மிடையே தொடர்பை ஏற்படுத்துகிறது. விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும். விடுகதைகளுக்கும் உருவகங்களுக்குமுள்ள தொடர்பினை முதன்முதலில் உலகுக்கு உணர்த்தியவர் கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டில் ஆவார்.

'விடுகதையால் கூறுபவனின் உளப்பான்மை வளர்கிறது; ஆர்வத்தினின்றும் விடுதலை கிடைக்கிறது. சிறியோர்க்கும் பெரியோர்க்கும் தொடர்பை ஏற்படுத்துகிறது' என ஜேம்ஸ் என்ற அறிஞர் கூறுகிறார். 'கனவு மனிதனது அடிமன உணர்வுகளுக்கு வெளியீடு தருவதுபோல விடுகதைகளும் வெளியீட்டிற்கு உதவி வருகின்றன' என கார்லோசு கூறுகிறார். 'சில விடுகதைகள் கதையைப் போலவே விரிவாக இருக்கும். சின்னச்சின்ன விடுகதைகட்குப் புதிர் என்ற பெயரே மிகவும் பொருந்தும். கதைபோல் வருவனவற்றை விடுகதை என்று குறிப்பதுதான்

பொருத்தமாக இருக்கும்' என நாட்டுப்புறவியல் அறிஞர் கி.வா.ஜெகந்நாதன் கூறுகிறார்.

விடுகதையின் வரலாறு தொல்காப்பியத்தில் தொடங்கி இன்றுவரை தொடர்கிறது. இனிமேலும் தொடரும். விடுகதைக்கு உரையாசிரியர்கள் விளக்கம் தந்தனர். இடைக்காலப் புலவர்கள் விடுகதைகளைச் செய்யுள் வடிவில் பாடினர். இருபதாம் நூற்றாண்டில் விடுகதைகளைத் தொகுக்க ஆரம்பித்தனர். தற்போது விடுகதைகளைப் பற்றி ஆய்வே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தொல்காப்பியர் யாப்பு முறையைக் குறிப்பிடும்போது விடுகதை பற்றியும் குறிப்பிடுகிறார்.

பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,
அங்கதம், முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்
வன்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்
(செய்யுளியல் - 79)

அடிவரையறையில்லாத ஆறுவகை யாப்பினையும் தொல்காப்பியர் உரைக்கிறார்.

நூலி லான உரையி னான
நொடியோடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான
(செய்யுளியல் - 165)

இவற்றில் 'பிசி' என்பது விடுகதையாகும்.

ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளர்ந்த துணிவி னாலும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே

என்று பிசிக்கு விளக்கம் தருகிறார். உவமையாக அமைவதும் தெளிவுபட வருவதும் என விடுகதை இருவகையில் அமையும் என்கிறார் தொல்காப்பியர். விடுகதையை விளக்கியவர் தொல்காப்பியரே ஆவார்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் உவமை விடுகதைக்குக் கீழ்க்கண்ட சான்றைத் தருகிறார்.

அச்சுப்போல பூப்பூக்கும்
அமலேயென்னக் காய்காய்க்கும்

பேராசிரியர் மூன்று விடுகதைகளும் தந்து அவற்றிற்கு விடையும் தருகிறார். விடுகதைகளைத் தொகுத்தவர்களில் பேராசிரியரே முதலாவர்.

பிறை கவ்வி மலை நடக்கும்
- யானை

முத்துப்போல் பூத்து
முதிரில் களாவண்ண
நெய்த்தோர் குருதி
நிறங்கொண்டு வித்துதிர்த்து
- கமுகு

நீராடான் பார்ப்பான்
நிறஞ்செய்யான் நீராடின்
ஊராடு நீரிற் காக்கை
- நெருப்பு

தமிழில் பிசி, நொடி, புதிர், விடுகதை என்றும் வழங்கப் படுகின்றது. விடுகதை என்ற சொல்லாட்சி பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணப்படவில்லை. இச்சொல்லாட்சி எக்காலத்துப் புகுந்தது என்பதற்குச் சான்றில்லை. ‘பிசி’ என்ற சொல்லே பின்னாளில் பிதிர் என்றாகிப் பின் ‘புதிர்’ என்றாகியிருக்க வேண்டும். கிராம மக்களின் அன்றாடப் பேச்சில் என்ன புதிர் போடுகிறாய் எனக் கூறுவதைக் கேட்கிறோம். மிகக் குறுகிய காலத்தில் கூறத்தக்கவாறு சுருங்கிய அமைப்புடையது என்ற கருத்தில்

‘நொடி’ என்ற சொல் கையாளப்பட்டிருக்க வேண்டும். திருச்சி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ‘வெடி’ என்ற சொல்லைப் பயன்படுத்து கின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் விடுகதையை அழிப்பாங்கதை என்கிறார்கள். ஒருவர் விடுகதை போட, மற்றவர் அதனை விடுவித்துவிட்டால் அவர் அதனை அழித்து விட்டார் என்று பொருளாகும். எனவே ‘அழிப்பாங் கதை’ என்கிறார்கள். கதையில் ஏற்படும் சிக்கலை, புதிரை அவிழ்த்தல் என்ற பொருளில் அவிழ்ப்பாங்கதை என மாறிற்று எனக் கூறுவாருமுளர். பேச்சுவழக்கில் விடுகதை என்றும் இலக்கிய வழக்கில் ‘புதிர்’ என்றும் கொள்ளலாம்.

உலகில் பல்வேறு மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி பற்றி இங்குக் காண்போம். அவ்வம் மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி அதன் தன்மையை விளக்குவதுபோல் காணப்படுகின்றது.

தமிழ்

பிசி
நொடி
புதிர்
விடுகதை
வெடிபோடுதல்
அழிப்பாங்கதை

தெலுங்கு

விடிகதா
பொதபுக்கலு

கன்னடம்

ஒடகதா
விடிகதா

மலையாளம்

விடிகதா
கடன்கதா

வடமொழி

பிரம்மோத்யம்
பிரஸ்னம்
கூதம்
பிரவக்லிகா
விவாத
சமஸ்யா
குடா

மராத்தி

உகானா

வங்கமொழி

பிராஹெல்இகதந்தா

குஜராத்தி

வரத்

இராஜஸ்தான்

பஹேலி

அஸ்ஸாமி

சதுர்

English : Riddle
Germen : Ratsel
Greek : Enigma
African : Alo
Western Countries : Quiz, Puzzle

நாட்டுப்புற இயலை நாட்டுப்புற இலக்கியம் என்றும் நாட்டுப்புறக்கலை, நம்பிக்கை என்றும் இரண்டு பிரிவாகப் பிரிப்பர். விடுகதை நாட்டுப்புற இலக்கியத்தின் பாற்படும். அந்த நாட்டுப்புற இலக்கியத்தையும் இரண்டு வகையாகப் பிரிப்பர். மாறும் அமைப்புடையவை (Free phrase genre) என்றும் மாறா அமைப்புடையவை (Fixed Phrase genre) என்றும் பிரிப்பர்.

விடுகதையை மாறா அமைப்புடையவையின் கீழ் வகைப் படுத்துவர். நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்துப் பண்புகளும் விடுகதைக்கும் பொருந்தும். விடுகதைகள் அறிவுக்கு உரைகல்லாகவும் சிந்தனைக்குத் தூண்டுகோலாகவும் கதைக்கு ஆதாரமாகவும் உள்ளவை. கதைகளிலும் விடுகதையின் பண்பைக் காணலாம். விடுகதைகள் பழமொழிகளைக் காட்டிலும் பழமைப்பண்பு வாய்ந்தவை. பழமொழிகளில் ஒரு உண்மை அல்லது கருத்து உருவகப்படுத்தப்பட்டு வருகின்றன. விடுகதை பொருளையோ அல்லது கருத்தையோ மறைத்துக் கூறுகின்றது. விடுகதையில் ஒப்புவமைப் பண்பும் உருவக அமைப்பும் இன்றியமையாதவையாகும். உவமையும் உருவகமும் இல்லையெனில் விடுகதையே இல்லை எனலாம். பெரும்பாலான விடுகதைகளில் உவமை, உருவகப் பண்பு அடிப்படையாக அமைந்துள்ளது.

விடுகதைகளின் வகைகள்

விடுகதைகளை ரோஜர் டி.ஆப்ரஹாம் அவர்களும், ஆலன் டாண்டிஸ் அவர்களும் ஒன்பது வகையாகப் பிரிக்கின்றனர்.

1. விளக்க விடுகதைகள்
2. எதிர்மறை விடுகதைகள்
3. தலைதப்பும் விடுகதைகள் (neck riddles)
4. கதையமைப்பு விடுகதைகள்
5. உரையாடல் வகை
6. சொல் விளையாட்டு
7. நகை வினாக்கள்
8. அறிவு வினாக்கள்
9. புதிர்கள்

மரியா லீச் (Maria Leach) அவர்கள் இரண்டு வயைாகப் பகுக்கின்றார்.

1. உண்மை விடுகதைகள்
2. வினா விடுகதைகள்

பிரிட்டானியா கலைக்களஞ்சியம் இரண்டு வயைாகப் பகுக்கின்றது.

1. விளக்க விடுகதைகள் (Descriptive riddles)
2. நகை வினாக்கள் (Witty questions)

டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் பண்பு கருதி விடுகதைகளை இரண்டாகப் பகுக்கின்றார்.

1. நாட்டுப்புற விடுகதைகள் (Folk riddles)
2. இலக்கிய விடுகதைகள் (Literary riddles)

அவரே பயன் அடிப்படையில் நான்கு வகையாகப் பகுக்கின்றார்.

1. விளக்க விடுகதைகள் (Descriptive riddles)
2. நகைப்பு விடுகதைகள் (Witty question riddles)
3. கொண்டாட்ட விடுகதைகள் (Ritualistic riddles)
4. பொழுதுபோக்கு விடுகதைகள் (Recreative riddles)

ஆறு. இராமநாதன் அவர்கள் விடுபுதிர், விடுகணக்கு முதலியவற்றை நாட்டுப்புற விடுகதையிலும் இருசொல் அலங்காரம், முச்சொல் அலங்காரம் முதலியவற்றை இலக்கிய விடுகதையிலும் அடக்குவார். விடுகதையைப் பாட்டு விடுகதை என்றும் உரைநடை விடுகதை என்றும் பிரிக்கிறார். விடுபுதிரை வினாவிடு புதிர், உண்மைவிடு புதிர் என இரண்டாகப் பகுத்து, வினாவிடு புதிரின் கீழ் மெய்யறிவு வினாவையும், நகைப்பு வினாவையும் உண்மை விடு புதிரை எதிர்மறை, எதிர்மறை அல்லாதது என இரண்டாகப் பகுக்கின்றார்.

விடுகதைச் சூழல்

புதிரையும் நொடிவினாவையும் உலகிற்கு வழங்கிய பெருமை இலத்தின் மொழிக்கு உண்டு. ஜெர்மனியில் ஒரு காலத்தில் மணப்பெண்ணை விடுகதை மூலம் தேர்ந்தெடுத்ததாக அறிகிறோம். தொடக்க காலத்தில் விநோதப் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள் காலப்போக்கில் சமயஞ்சார்ந்த விடுகதைகளாக மாறின. பைபிளிலும் குர்ரானிலும் விடுகதைகள் காணப்படுகின்றன. திருமணச் சடங்கு, இறப்பு, பலி, விழாக்காலங்களில் விடுகதைகள் போடப்

பட்டன. ஆப்ரிக்க விடுகதைகள்தான் உலகில் சிறந்தவை எனக் கூறுகின்றனர். விடுகதை இரவிலேதான் போடப்படுகின்றது. இதற்குரிய காரணம் புரியவில்லை. தமிழ்நாட்டில் சிறுவர்கள் ஒன்றுசேர்ந்துவிட்டால் விடுகதைபோடும் வழக்கத்தைச் சில கிராமங்களில் இன்றும் காணலாம். இவ்வழக்கும் இன்று அருகி வருவது குறிப்பிடத்தக்கது. நகர்ப்புறச் சிறுவர்களைக் காட்டிலும் நாட்டுப்புறச் சிறுவர்களிடையேதான் இவ்வழக்கம் ஓரளவு உள்ளது. விடுகதைகளுக்கு உரிய செய்தியைப் பெரும் பாலும் சிறுவர்களிடமிருந்துதான் சேகரித்தேன்.. கடினமான விடுகதைகளுக்குப் பெரியவர்கள் விளக்கம் கூறி, விடை கூறுகின்றனர். பழமொழிகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவது போன்று விடுகதைகள் பயன்படுத்தப்பட வில்லை. ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் பயன்படுத்தப் படுகின்றன. விடுகதைகளைச் சொற்போராகவும் விளையாட்டாகவும் பொழுது போக்காகவும் பயன்படுத்து கின்றனர். விடுகதை உள்ள சமுதாயத்தில் நிச்சயம் பழமொழி இருக்கும். பழமொழி உள்ள சமுதாயத்தில் விடுகதையும் இருக்கும். எனவே ஏறத்தாழ எல்லாச் சமுதாயத்திலும் பழங்குடி சமுதாயம் உட்பட பழமொழிக்ளையும் விடுகதைகளையும் காணலாம்.

விடுகதையின் கருப்பொருட்கள்

மக்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் பிரதி பலிப்பனவான விடுகதைகள் வாழ்க்கையின் பயன்படுபொருள் களான கருப்பொருள் யாவற்றையும் விளக்கும் வகையினவாக அமைகின்றன.

1. இயற்கைப் பொருட்கள்
2. விலங்குகள் மற்றும் பறவைகள்
3. தாவரங்கள் (மரம், செடி, கொடிகள்)
4. உடல் உறுப்புக்கள் (Human body parts)
5. உணவுப் பொருட்கள்
6. பண்ட பாத்திரங்கள்
7. அணிகலன்கள்
8. வாகனங்கள்
9. தத்துவம்
10. அறிவியல்

11. புராணம் இதிகாசம்
12. பல்பொருள் (Miscellaneous)

இயற்கைப் பொருட்கள்

1. அப்பா பணத்தை எண்ண முடியாது
அம்மா புடவையை மடிக்க முடியாது.

– விண்மீன், வானம்

2. அலை அலையாய் ஆடிவரும் கடலும் அல்ல
நிலையாக இருக்காது நிலவும் அல்ல
அது என்ன?

– மேகம்

3. அள்ளலாம், கிள்ள முடியாது.

– தண்ணீர்

4. அறிவின் மறுபெயர்
இரவில் வருவது. அது என்ன?

– மதி

5. ஆனை ஏறாத மலையிலே
ஆடு ஏறாத மலையிலே
ஆயிரம் பூ பூத்திருக்கும் - அது என்ன?

– விண்மீன்

6. உலகுக்கெல்லாம் ஒரே துப்பட்டி

– வானம்

7. உருவம் இல்லாத மனிதன்
உலகம் எல்லாம் சுற்றுகிறான்

– காற்று

8. பொழுதுபோனால் பூந்தோட்டம்
விடிந்துபார்த்தால் வெறுந்தோட்டம்

– வானம்

9. ஊருக்கெல்லாம் ஒரே கூரை

– வானம்

10. ஆதவன் உதித்தால் மறைந்திடுவான்
ஆயிரம் விளக்கை அணைத்திடுவான்.

– இருள்

11. மோதிய பின் மின்னும்
மின்னியபின் வெடிக்கும்

– மின்னல் இடி

12. கோடி கோடி வெள்ளிப்பணம்
ஓடிவிடுது சாலைப்பணம்

– நட்சத்திரம்

13. ஏழை படுக்கும் பஞ்சணையை
எடுத்துச் சுருட்ட ஆளில்லை.

– பூமி

14. ஒரு குளத்தில் ஒரு தட்டு
நனையாமல் கிடக்கிறது

– நிலா

15. இரவில் தோன்றும்
இருளை வெட்டும்

– மின்னல்

16. இரவெல்லாம் பூக்காடு
பகலெல்லாம் வெறுங்காடு

– வானம்

17. எட்டாத ராணி
இரவில் வருவாள்
பகலில் மறைவாள்

– நிலா

18. கண் சிமிட்டி மணி அடித்து
கண்ணீர் வடிப்பார்கள்.

– மின்னல், இடி, மழை

19. அந்திக் கிழக்கே அதிகாலை மேற்கே

– வானவில்

20. ஓடோடும் சங்கிலி உருண்டோடும் சங்கிலி
பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி

– தண்ணீர்

21. எஸ்.எஸ்.கன்றுக்குட்டி
இங்கிலீஷ் கன்றுக்குட்டி
தண்ணீர் பட்டால் செத்துப்போகும்

– நெருப்பு

22. திரி இல்லாத விளக்கு

– சூரியன்

விலங்குகள்

1. உண்டதை நினைப்பான்
உதையை மறப்பான்
உயிரையும் கொடுப்பான்

– நாய்

2. ஒற்றைக் காலி நாராயணன்
ஓடையிலே மீன் பிடிக்கிறான்

– கொக்கு

3. கால் இல்லாத கள்வன்
கால் உள்ளவனைப் பிடித்தான்
தலையில்லாதவன் அதைப் பார்த்து
கலகலவென்று சிரித்தான்

– பாம்பு, தவளை, நண்டு

4. செடியைஉலுக்குது ஒரு குருவி
செடியோரம் போகுது ஒரு குருவி
குட்டையைக் குழப்புது ஒரு குருவி
குட்டையோரம் போகுது ஒரு குருவி

வெள்ளாடு, செம்மறியாடு, எருமை, பசு

5. தண்ணீர் இல்லாத தடாகத்தில்
தாவிப்பாயுது ஒரு கப்பல்

– ஒட்டகம்

6. இருட்டிலே எழுவார் எங்கள் தாத்தா
உருட்டிடுவார் பானையை எங்கள் தாத்தா

– பூனை

7. இருட்டு வீட்டிலே
குருட்டெருமை மேயுது.

– பெருச்சாளி

8. உச்சாணி மரத்திலே உயர்ந்த கிளையிலே
பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது.

– அணில்

9. பாரினில் பறவாத கொக்கு
பாயாத வேங்கை

– குதிரை

10. நோய் நொடியில்லாமல்
முக்கி முனங்கித் திரிகிறான் ஒருவன்

– பன்றி

11. பந்தக்கால் நாலு, பவளப்பல் பத்து
வெள்ளத்தடி இரண்டு, வெள்ளித்தடி இரண்டு
வெஞ்சாமரம் ஒன்று.

– பசு

12. ஆடாத அழகிக்கு
ஆடு என்று பெயர் வந்தது

– ஆடு

13. கணுக்கால் தண்ணீரில்
கரடி நீச்சல் போடுது

– தவளை

பறவைகள்

1. அத்திக் கட்டை முள் எடுத்து
அடைப்பாரும் இல்லை
அழகான பூ எடுத்து
முடிப்பாரும் இல்லை

– சேவல்

2. அது ஓர் அழகு தேவதை
ஆடும் தேவதை - அது என்ன?

– மயில்

3. அவளொரு தாசி அதிகப் பிள்ளைக்காரி
பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில்
பலே கெட்டிக்காரி.

– கோழி

4. அவள் ஒரு பாடகி
ஆனால் பெண் அல்ல - அது யார்?

– குயில்

5. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணன்

– மயில்

6. தங்க உடற்காரி தரமான ஆட்டக்காரி
மேகம் இருண்டு வந்தால் மோகம்கொண்டு
ஆடுவாள் அங்கம் முழுவதும் தங்க நிறம்

– மயில்

7. பகலில் துயிலுவான்
இரவில் அலறுவான்

– ஆந்தை

8. கறுப்புச் சட்டை அணிந்தவன்
கபடம் அதிகம் உள்ளவன்
கூவி அழைத்தால் வந்திடுவான்
தன் கூட்டம் அனைத்தும் சேர்த்திடுவான்

– காகம்

9. பட்ட மரத்தில் பச்சை
அதிலும் சிவப்பு

– கிளி

10. மாடமாளிகையில் வசிப்பான் மன்னன் அல்ல
கூடகோபுரத்தில் இருப்பான் கடவுள் அல்ல.

– மாடப்புறா

11. குட்டியும் போடும் குவலயத்திலும் பறக்கும்

– வௌவால்

தாவரங்கள்

1. பரந்த காட்டேறிக்குப்
பக்கமெல்லாம் சடை

– ஆலமரம்

2. அடி பெருத்தேன் குந்தாணியானேன்
தலைவிரித்தேன் சடைச்சியானேன்

– தென்னை

3. ஓகோ ராசா உயர்ந்த ராசா
தோள்மேல் என்ன தொண்ணூறு முடிச்சு

– தென்னை

4. ஆழக்குழி வெட்டி
அதிலே ஒரு முட்டையிட்டு
அண்ணாந்து பார்த்தால்
தொண்ணூறு முட்டை

– பனை

5. அம்மிக் குழவிபோல் பூ இருக்கும்
அரிவாள் பிடிபோல் காய் காய்க்கும்.

– வாழை

6. மரமுண்டு அடுப்பெரிக்க விறகுமாகாது
சீப்புண்டு தலைகோதி வார முடியாது
பூவுண்டு கொண்டையிலே முடிக்க முடியாது

– வாழை

7. கத்திபோல் இலை இருக்கும்
கவரிமான் பூ பூக்கும்
தின்னப் பழம் பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும்

– வேப்பமரம்

8. ராசா மகள் பூ இல்லாமல்
சடை போட மாட்டாள்

– முருங்கை

9. அவரோ பெரியவர் அவர் இலையோ சிறியது
அவர் பெற்றதெல்லாம் கோணல்

– புளியமரம்

10. அவிழ்த்த தலைமுடியாத சிறுக்கி
அவள் பெற்ற பிள்ளைகளுக்கு
வகைவகையாய் பெயராம்

– பனை

11. அடி மலர்ந்து நுனி மலராத பூப்பூக்கும்

– வாழை

செடிகள்

1. மரத்திலே மரம் முளைத்து
மக்க சக்கரப் பழம் பழுத்து
எடுப்பார் உண்டு தின்பார் இல்லை

– காப்பி

2. மாடிமேல் மாடிகட்டி
குடியிருக்கும் மனிதனை
தொட்டால் குத்திடுவான்
பட்டால் கீறிடுவான்

– சப்பாத்திக்கள்ளி

3. பல்லில்லாத வெள்ளையன்
காட்டிலேயும் மேட்டிலேயும்
வாய்விட்டுச் சிரிக்கிறான்

– பருத்தி

4. மண்ணுக்குள்ளே பொன்னம்மாள்

– மஞ்சள்

5. சுற்றுவேன் அந்தச் செடியை
சூடேன் அந்தப் பூவை

நத்துவேன் அந்தக் காயை
நாடேன் அந்தப் பழத்தை

– சுண்டைக்காய்

காய்

1. முட்டைக்கு மூன்று கண்
அட்டைக்கு ஆயிரம் கண்

– தேங்காய், சல்லடை

2. அடித்தால் அழுவான்
பிட்டால் சிரிப்பான்

– தேங்காய்

3. கடைக்குப் போனேன், ஒருவனைக் கண்டேன்
கண்டவுடன் கொண்டேன் கொண்டவுடன் அடித்தேன்
அடித்தவுடன் அழுதான் அழுதவுடன் சிரித்தான்
சிரித்தவுடன் கடித்தேன்

– தேங்காய்

4. பெரிய கடாரங்காய் போலக் காய் காய்க்கும்

– பூசணிக்காய்

5. பச்சைக்கிளி பறக்கமுடியாத கிளி
கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி

– மாங்காய்

6. செடியைச் சுற்றிச் செந்துருக்கம்

– மிளகாய்

7. ஒற்றைக்கால் கோழிக்கு
வயிறு நிறைய முட்டை

– கத்தரிக்காய்

பழம்

1. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது

– எலுமிச்சம்பழம்

2. அடிஅடி என்று அடித்து
உரிஉரி என்று உரித்து
உள்ளிருப்பதை எடுத்துக்கொண்டு
மேலே இருப்பதை எறிந்துவிட்டேன்

– புளியம்பழம்

3. அட்டைக்கரிப் பெண்ணுக்கு
உச்சந்தலை மஞ்சள்

– பனம்பழம்

4. அப்பன் சொறியன்
ஆத்தாள் சடைச்சி
குழந்தைகள் சக்கரைக்கட்டி

– பலாப்பழம்

5. தோல் இருக்கச் சுளை விழுங்க

– வாழைப்பழம்

6. பூத்தபோது மஞ்சள்
பூத்ததும் சிவப்பு
காய்த்தபோது சிவப்பு
காய்த்ததும் கருப்பு

– ஈச்சம்பழம்

7. செம்பு நிறைய செம்பு

– மாதுளம்பழம்

8. குடுக்கை நிறைய வயிரமணி

– மாதுளம்பழம்

9. செம்பு நிறைய சிவப்புமுத்து

– மாதுளம்பழம்

தானியம்

1. அடி காட்டில் நடு மாட்டில்
நுனி வீட்டில்

– நெல்

2. நடுக்காட்டில் ஈட்டி

– கம்பு

3. ஒற்றைக்கால் குருவி
உழக்கு முட்டையிடும்

– சோளம்

4. இவ்வளவுண்டு ராமனுக்கு
அவ்வளவுண்டு நாமம்

– உளுந்து

உடல் உறுப்புக்கள்

1. கட்டி மாம்பழம் தொப்புன்னு விழுந்தது
பார்த்தது இரண்டு போர்
எடுத்தது ஐந்து பேர்
தின்றது முப்பத்திரண்டு பேர்
ருசி கண்டது ஒருவர்
இவர்கள் யார்?

–கண்கள், விரல்கள், பற்கள். நாக்கு

2. அக்காள் தங்கை உறவுண்டு
அண்டை அண்டை வீடுண்டு
கிட்டக்கிட்ட வந்தாலும்
தொட்டுக்கொள்ள முடியாது

– கண்கள்

3. ஒரு சாண் குட்டையில் ஒரு முழவால்

– நாக்கு

4. ஒரு கட்டுத்துறையில் முப்பத்திரண்டு
வெள்ளைப் பசுக்கள்

– பற்கள்

5. அண்ணனுக்கு எட்டாதது
தம்பிக்கு எட்டும்

– உதடு

6. இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம்

– மூக்கு

7. ஆற்றிலே பத்துமரம்
அசையுது பிடுங்க முடியவில்லை

– கைவிரல்கள்

8. எந்நேரமும் கொட்டும்
சத்தங் கேட்காது.

– கண்ணிமை

9. அங்குமிங்கும அலைவது இரண்டு
பக்கம் பக்கமாய் பார்ப்பது இரண்டு
கண்ணொளி தன்னைக் கேட்பது இரண்டு
எட்டி எடுத்துக்கொள்வது இரண்டு

– கால், கண், காது, கை

10. சொன்னதைக் கேட்பான்
சொல்லச் சொல்லக் கேட்பான்
திரும்பச் சொல்லமாட்டான்
திருடன் மாதிரி இருப்பான்

– காது

11. மூன்று கொடியோடி முச்சத்தில் கூடி
கொள்ள வாளம்பட்டு கொடிகட்டு ஆடுவோம்.

– சடை

12. பாறைக்குள்ளே கோரை
கோரைக்குள்ளே குறவன்

– தலை

13. மஞ்சள் பெட்டி மரக்கால் பெட்டி
ஒருக்காலும் திறக்காப்பெட்டி.

– வயிறு

14. இரணியனைப் பிளந்தவனை
அறுத்தெடுத்து வருவாயேல்
மனமகிழ இருக்கைக்கும்
வெகுமானம் தருவேன்.

– நகம்

15. கிணற்றைச் சுற்றி அகத்திமரம்

– புருவம்

உணவுப்பொருட்கள்

1. ஒரு மரத்திலே ஐந்து பூக்கள்

– பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்

2. தாய் இனிப்பாள்
மகள் புளிப்பாள்
பேத்தி மணப்பாள்

– பால், தயிர், வெண்ணெய்

3. ஏரித்தண்ணீர் வற்ற வற்ற
எருமைக்கடா உப்ப உப்ப

– பணியாரம்

4. ஒன்றும் இரண்டும் கலப்பு
உள்ளங்கையில் அடைப்பு
ஆவியிலே நடிப்பு
ஆண்டவனுக்குப் படைப்பு

– கொழுக்கட்டை

5. அரிசி பணத்துக்கு ஒரு படி
ஆக்கித் தின்ன ஆள் இல்லை.

– உப்பு

6. ஊருக்கெல்லாம் ஒரே கல்.

– உப்பு

7. கல்லும் கரடும் முள்ளும் முரடும்
வேரும் விறகும்

– கற்கண்டு

8. ஆற்று மணலை அள்ளி அள்ளித் தின்போம்
பாராங்கல்லலக் கடித்து கடித்துத் தின்போம்.

– சர்க்கரை, கற்கண்டு

9. வெள்ளைக்காரன் பூக்க
வெகுபேர் காத்திருக்க.

– சோறு

10. கறுத்த கட்டிலின் மீதே காரிகையாம்
விரிக்கும் விரிப்பாம் எடுக்கும் விரிப்பாம்.

– தோசை

11. கோழி மேயுது குடல் வேகுது

–முட்டை

12. அப்பனே பறங்கிக்காயே
அடுப்பிலே ஏறினாயே
ஏறி இறங்கினாலும்
என்னை நீ மறந்திடாதே.

– வெல்லம்

பண்ட பாத்திரங்கள்

1. மூடாத வாய்க்கு முழம் வால்

– அகப்பை

2. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை

– அடுப்பு

3. கடகடா குடுகுடு நடுவிலே பள்ளம்

– ஆட்டுக்கல்

4. பொழுது விடிந்தால் நல்லது என்றது ஒன்று
பொழுது விடியவேண்டாம் என்றது ஒன்று
விடிந்தால் என்ன விடியாவிட்டால் என்ன என்றது
இன்னொன்று

– கட்டில், அடுப்பு, உறி

5. அட்டைக்கு ஆயிரம் கண்

– சல்லடை

6.. ஆள் இறங்காத கிணற்றுக்குள்
மரம் இறங்கிக் கூத்தடிக்கிறது

– மத்து

7. கையிலே கணக்குப் போடும் கணக்கப்பிள்ளை

– படி.

8. அனல்மேல் கறுப்புக்குதிரை
அதன்மேல் வெள்ளையன்
ஏறி ஏறிக் குதிக்கிறான்

– தோசைக்கல்

9. அக்காள் சப்பாணி தங்கை நாத்தனப்பெண்
இந்த இருவரும் இல்லாவிட்டால்
குடித்தனப்பெண் சிணுங்குவாள்

– உரல், உலக்கை

10. அக்காள் வீட்டுக்குத் தங்கை போகலாம்
தங்கை வீட்டுக்கு அக்காள் போகமுடியாது.

– படியும் உழக்கும்.

11. அங்கே சிலுக்குவாள் இங்கே பிலுக்குவாள்
கதவு மூலையில் ஒண்டிக் கொள்வாள்.

– விளக்குமாறு

12. இத்தனையுண்டு பூனைக்குட்டி
வைத்ததெல்லாம் சுமக்குது.

– அடுப்பு

13. ஒத்தைக்கால் குள்ளனுக்கு
எட்டுக்கை.

– குடை

14. கடக்கா முடக்கான் சந்தைக்குப் போறான்

– வண்டி

15. நட்டமாய் நிற்கிறவனுக்கு
நறுக்கு நறுக்கு என்று கடிக்கும் வேலை

– அரிவாள்மணை

அணிகலன்கள்

1. நாடி நாடி நீட்டும் கை
தேடித் தேடி அலையும் கை
கோதிக் கோதி முடிக்கும் கை
ஊதி ஊதி ஒட்டும் கை.

– நகை

2. கங்கையிலே பிறந்து வளர்ந்து
கடைகளிலே வந்து போயி
மங்கையின் உடலிலே மருவி
மங்காமல் ஜொலிப்பாள் ராணி.

– முத்து

3. வீட்டைச்சுற்றிப் புளியமரம்
உலுக்கினால் கலகல என்னும்

– வளையல்

4. ஒட்டுத் திண்ணையிலே பட்டுக் காயுது

– மூக்குத்தி

5. தரையில் முட்டிடும்
விரலில் ஒட்டிடும்.

– கால்மெட்டி

6. தலையை முறித்துக் கம்புக் காட்டுக்குள் வைத்தான்.

– தலைப்பாகை

7. கழுத்து உண்டு தலையில்லை
உடல் உண்டு உயிர் இல்லை
கையுண்டு விரலில்லை.

– சட்டை

வாகனங்கள்

1. ஆனை சேனை அறுபதுபேர் கூடி
வாளறுத்துக் கூறுபோட்டு வன்னிமரம் பிளந்து
நாலுகால் சிலம்பு கட்டி
நடுத்தெருவில் போற பெண்ணே

– இரதம்

2. மொட்டைத் தட்டிலே
எட்டுப்பேர் பயணம்

– படகு

3. உடலுண்டு உயிரில்லை
ஓடி ஓடிப் போய்ச்சேர்ந்தான் ஊருக்கு

– சைக்கிள்

புராண இதிகாசம்

1. இராவணன் சிரசற்றதேன்?
இராவெள்ளி மறைவதேன்?

– இராமன் தாரத்தால், இரா மந்திரத்தால்

2. தொட்டுக் கெட்டவன் ஒருத்தன்
தொடாது கெட்டவன் ஒருத்தன்
விட்டுக் கெட்டவன் ஒருத்தன்
விடாமல் கெட்டவன் ஒருத்தன்

– பத்மாசூரன், கீசகன், மகாபலி, இராவணன்

3. இலங்கை அழிந்ததேன்
இரும்பு உருகுவதேன்?

– நெருப்பால்

தத்துவம்

1. போய் வருபவை இரண்டு
போனால் வராதவை இரண்டு
எப்போதும் இருப்பவை இரண்டு.

– இரவு, பகல் – நாள், இளமை – சூரியன், சந்திரன்

2. காலையில் நா்ன்கு காலோடே
பகலில் இரண்டு காலோடே
மாலையில் மூன்று காலோடே
முடிவில் எட்டுக் காலோடே

– உடல்

அறிவியல்

1. உயிர் இல்லாமல் ஓடித்திரிவான்
மூக்கு இல்லாமல் மூச்சுவிடுவான்
வாய் இல்லாமல் தண்ணீர் குடிப்பான்
வயிறு இல்லாமல் கரியைத் தின்பான்
காற்றிற்கு அஞ்சான் மழைக்குஅஞ்சான்
காட்டிலும்மேட்டிலும் போவான்

– புகைவண்டி

2. அடங்கிக் கிடப்பான்
எடுத்துக் காதில் வைத்தால்
கதை ஆயிரம் அளப்பான்.

– தொலைபேசி

3. ஆடையில்லாத கறுப்பழகி
ஆடிச் சுழன்று பாடுகிறாள்.

– இசைத்தட்டு

4. ஆயிரமாய்க் கூடச் செய்யும்
ஆரவாரம் எழுப்பச் செய்யும்
ஆடிப்பாடி விளையாடும்
அடங்கிவிடும் பெட்டிக்குள்.

– திரைப்படம் (சினிமா)

5. இந்த ஊரிலே அடிபட்டவன்
அடுத்த ஊரிலே போய்ச் சொல்லுகிறான்.

– தந்தி

6. இரத்தம் குடிப்பான்
கண்ணுக்குத் தெரியாதவன்

– மின்சாரம்

7. உயரப் பறக்குது ஊர்க்குருவி.

– வானவூர்தி

8. உள்ளதைச் சொல்லுவான்
சொன்னதைக் கொள்ளுவான்.

– டேப்ரிக்கார்டர்

9. ஒரு பக்கம் செய்தி ஊர் எங்கும் கியாதி

– வானொலி.

10. வானத்திலே ரோடுபோட்டு
எட்டாத தொலைவிலே
இங்கிருந்து பார்த்தால்
இங்கிலீஸ்காரன் பள்ளிக்கூடம்.

– டெலிவிஷன்

சில விடுகதைகள் ‘அன்று’ வாய்பாட்டுடன் முடிகின்றன. விடுகதைப் பொருளோடு தொடர்புடைய பொருளைக் கூறி ‘ஆனால் அது அல்ல’ என்று கூறுவதையும் காண்கிறோம். சிந்திப்பதற்காகத் தான் ‘அன்று’ ‘ஆனால் அதுவல்ல’ போன்ற வாய்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

விடுகதையின் நடை

1. மோனை

கறுப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன்.

– பூட்டு

2. எதுகை

கடித்தால் கடிபடாது
பிடித்தால் பிடிபடாது.

– தண்ணீர்

3. இயைபு

பச்சைப் பசேலென்றிருக்கும் பாகற்காயுமல்ல
பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல
உருக்கினால் நெய்வடியும் வெண்ணெயுமல்ல

– ஆமணக்கு

4. அந்தாதி

ஏணயிலே கேணி
கேணியிலே குண்டு
குண்டுமேலே புல்லு
புல்லுக்குள் பூச்சி

ஓரடி விடுகதை

சிவப்புச் சட்டிக்குக் கறுப்பு மூடி

– குன்றிமணி

ஈரடி விடுகதை

செத்துக் காய்ந்த மாடு
சந்தைக்குப் போகிறது.

– கருவாடு.

மூவடி விடுகதை

காயும் காய்க்கும
பூவும் பூக்கும்
காசுக்கொரு இலையில்லை

– நாகதாளி

நாலடி விடுகதை

ஏறினால் வழுக்கும்
இலையென்றால் சுருளும்
காய் என்றால் துவர்க்கும்
பழம் என்றால் இனிக்கும்.

– வாழை

விடுகதையால் அறியலாகும் செய்திகள்

விடுகதை மூலம் வட்டார வழக்குகள் மக்களின் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள், காலமாற்றத்தின் சாயல்கள் முதலியவற்றை அறியமுடியும். மனித வாழ்வில் காணப்படும் கருப்பொருட்கள் அனைத்தையும் விளக்குகின்றன. 'மக்களிடையே காணும் ஒழுக்கம், அவர்கள் வழிபடும் தெய்வம், தொழில்முறைகள், சாதி வேறுபாடுகள் போன்ற பலவும் விடுகதையின் பின்னணியில் உணர்த்தப்படுகின்றன. மனித இனத்தின் சிந்தனைத்திறனை அளவிட்டு அறிவிக்கும் கருவியாக நிற்பதோடு மட்டுமின்றி மக்களின் செயல்முறைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைப் போக்கு, கொள்கைகள், கோட்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் வரலாற்றுச் சான்றாகவும் விடுகதைகள் விளங்குகின்றன என டாக்டர் ச.வே. சுப்ரமணியம் கூறுவது குறிப்பிடத்தக்கது. மனித சமுதாய வரலாற்றை அறிய விடுகதைகள் துணைபுரிகின்றன.

விடுகதையின் அமைப்பியல் ஆய்வு

விடுகதையை இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம்.

விடுகதை

உருவகமில்லாதது (Literal)	உருவகமுடையது (Metaphorical)
ஆட்டிவிட்டால் ஆடுவது அந்தரத்தில் தொங்குவது - ஊஞ்சல்	ஒரு சீசாவில் இரண்டு எண்ணெய் - முட்டை

விடுகதைகளை எதிர்மறை விடுகதைகள் (Oppositional Riddles), உடன்பாட்டு விடுகதைகள் (Non-oppositional Riddles) என இரண்டாகப் பிரிக்கலாம்.

- விடுகதைகள்
  - எதிர்மறை விடுகதைகள் (Oppositional Riddles)
    - (Antithetical)
    - (Privational)
    - (Contrary)
  - உடன்பாட்டு விடுகதைகள் (Non-Oppositional Riddles)

எதிர்மறை விடுகதைகள் (Oppositional Riddles)

அடித்தால் விலகாது
அணைத்தால் நிற்காது

– **தண்ணீர்**

உடன்பாட்டு விடுகதைகள் (Non-oppositional Riddles)

அங்கே சிலுக்குவாள்
இங்கே பலுக்குவாள்
கதவு மூலையில் ஒண்டிக்கொள்வாள்

– **துடப்பம்**

Antithetical Opposition

பேசாமல் பேசுவான்
சொல்லாமல் சொல்லுவான்
அகிலத்தை ஆட்டிவைப்பான்

– **புத்தகம்**

Privational Opposition

காலும் கையும் இல்லாதவன்
ஆடி ஆடிப் பாடுகிறான்

– **இசைத்தட்டு**

Contrary Opposition

அகல நெற்றி உண்டு
ஆணும் அல்ல பெண்ணும் அல்ல

அழகான பொட்டு உண்டு
சிவப்பும் அல்ல கறுப்பும் அல்ல

– வானம், நிலா

1960-ஆம் ஆண்டு அமைப்பியல் கோட்பாடு உருவாகியது. விளாடிமிர் பிராப்பை அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை என்பர். ஆலன் டாண்டிஸ், லெவிஸ்டிராஸ், இ.பி.மராண்டா போன்றோர் இத்துறையில் நிறைய ஆய்வு செய்துள்ளனர்.

அமைப்பியல் ஆய்வு மூலம் தமிழ் விடுகதைகளை மூன்றாகப் பகுக்கலாம்.

1. தனிநிலை விடுகதை அமைப்பு (Simple Riddle Structure)
2. கூட்டுநிலை விடுகதை அமைப்பு (Compound Riddle Structure)
3. இணைநிலை விடுகதை அமைப்பு (String Riddle Structure)

தனிநிலை விடுகதை அமைப்பில் மறைபொருளை விளக்கும்குறிப்பும் விடையும் 1:1 என்ற விகிதத்திலும், கூட்டுநிலை விடுகதை அமைப்பில் மறைபொருளை விளக்கும் குறிப்பும் விடையும் N:1 எனன்ற விகிதத்திலும் இணைநிலை விடுகதை அமைப்பில் மறைபொருளை விளக்கும் குறிப்பும் விடையும் N:N என்ற விகிதத்திலும் அமைந்திருக்கும் ('N'ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணைக் குறிக்கும்)

தனிநிலை விடுகதை அமைப்பு (Simple Riddle Structure)

இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம் - மூக்கு
விடுகதை அமைப்பினைக் கீழ்க்கண்டவாறு காட்டலாம்.



இந்த அமைப்பினைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தலாம்

சொற்கூறுகள் (Terms)		தரவு வாக்கியம் (Premises)		
		மாறாதது (Constant)	மாறுவது (Variable)	
உள்ள வடிவம்	இரண்டு கிணறு I	பாலம் II	ஒரு அல்லது ஒன்று IV	கருத்துருவம் (Image)
மறை வடிவம் (Hidden)	மூக்கு V		இரண்டு III	விடை (Answer)

இத்தனி நிலை விடுகதை அமைப்பில் ஐந்து கூறுகள் (Five elements) காணப்படுகின்றன.

கொடுக்கப்பட்ட வடிவமான (given terms) இரண்டு கிணறு (I) மாறாத வடிவமாக பாலம் (II). மாறும் இடத்திலுள்ள மறை வடிவம் சூன்ய மதிப்புடையதாகும் (Zero value). மறைபொருளை விளக்கும் குறிப்பாக மாறும் வடிவமான 'ஒரு' பதிலைப் பெறுவதற்கு உதவி புரிகிறது. மறை வடிவமான 'மூக்கு' 'என்ற பதில் நமக்குக் கிடைக்கின்றது.

I, II, IV - விடுகதை கூறுவோரின் கூற்றாகும்.

விடை கூறுவதற்கு முன் விடை கூறுவோன் இரண்டு (III) என்பதை மனத்திலிறுத்திப் பதில் கூற வேண்டும்.

கூட்டுநிலை விடுகதை அமைப்பு (Compound Riddle structure)

கூட்டுநிலை விடுகதை அமைப்பில் மறைபொருளை விளக்கும் குறிப்புக்கள் (Clue) ஒன்றுக்குமேல் N : 1 என்ற

விகிதத்தில் உள்ளன. கீழ்க்கண்ட விடுகதையில் ஒரே விடைக்கு மறைபொருளை விளக்கும் குறிப்புகள் இரண்டு உள்ளன.

கோயிலுக்குப் போனானாம் எங்கத்தம்பி
தீர்த்தம் விட்டானாம் தங்கத்தம்பி

தேங்காய்



இந்த விடுகதையில், கொடுக்கப்பட்ட வடிவம் தம்பி (I) மாறாத கொடுக்கப்பட்ட வடிவம் செயல். (II) மாறுகிற மறை வடிவமான செய்யாதிருத்தல் அல்லது விடாதிருத்தல் (III) என்பது சூன்ய மதிப்பாகும் (Zero value). கொடுக்கப்பட்ட மாறும் வடிவங்களான (அ) கோயிலுக்குப் போதல் (ஆ) தீர்த்தம் விடல் (IV) என்பது மறைபொருளை விளக்கும் குறிப்புக்களாக, மறை வடிவமான 'தேங்காய்' என்ற பதிலைக் கூறுவதற்கு உதவியாக உள்ளன.

இந்த விடுகதையில் இரண்டு மறைபொருளை விளக்கும் குறிப்புக்கள் (Clues) உள்ளன. (அ) கோயிலுக்குப் போதல் (ஆ) தீர்த்தம்விடுதல். இக்குறிப்புக்கள் விடுகதைக்குப் பதில் கூறுவதற்குத் துணை புரியும்.

சொற்கூறுகள் (Terms)	தரவு வாக்கியம் (Premises)		
	மாறாதது (Constant)	மாறுவது (Variable)	
கொடுக்கப் பட்ட வடிவம் (Given) தம்பி i	செயல் ii	அ)கோயிலுக்குப் போதல் ஆ)தீர்த்தம் விடுதல் iv	கருத்துருவம் (Image)
மறை வடிவம் (Hidden) தேங்காய் v		செய்யாதிருத்தல் அல்லது விடாதிருத்தல் iii	விடை (Answer)

i, ii, iv- விடுகதை கூறுவோனின் கூற்று.

iii - விடையான தேங்காயைக் (v) கூறுவதற்கு முன், செய்யாதிருத்தல் அல்லது விடாதிருத்தல் (iii) என்பதை நினைவிலிருத்தி பதில் கூற வேண்டும்.

இணைநிலை விடுகதை அமைப்பு (String Riddle Structure)

இணைநிலை விடுகதை அமைப்பில் ஒவ்வொரு வரியிலும் மறைபொருளை விளக்கும் குறிப்பும் விடையும் அடங்கியிருக்கும். இணைநிலை விடுகதையில் மறைபொருளை விளக்கும் குறிப்பும் (Clue), விடையும் (answer) N : N என்ற விகிதத்தில் இருக்கும்.

எங்களப்பன் செந்தலை செந்தலை
எங்களாத்தாள் முழுமொட்டை முழுமொட்டை
முழுமொட்டை வயிற்றிலே கொழுக்கட்டை
கொழுக்கட்டை வயிற்றிலே கீச்சு மூச்சு

– சேவல், கோழி, முட்டை, குஞ்சு

நான்கு மறைபொருளை விளக்கும் குறிப்புகளுள் நான்கு விடைகளும் (answers) உள்ளன. எங்களப்பன் செந்தலை போன்றவன், எங்களாத்தாள் முழுமொட்டை; முழுமொட்டை வயிற்றில் கொழுக்கட்டை; கொழுக்கட்டை வயிற்றில் கீச்சு மூச்சு. இவற்றில் மறைபொருளை விளக்கும் குறிப்புகளும் விடைகளும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. எனவே இத்தகைய அமைப்பு விடுகதைகளை இணைநிலை விடுகதைகள் (String Riddles) என்பர். இவ்விடுகதையில் மாறாதது ‘பொருள்’ ஆகும். மாறும் தன்மையுடையனவாக *(1)* செந்தலை *(2)* முழுமொட்டை (மயிரில்லை) *(3)* வயிறு *(4)* சத்தம் முதலியவை காணப்படுகின்றன. மற்ற விடுகதைகளைப் போன்று இணைநிலை விடுகதையிலும் மறைவடிவம் மாறாதது ‘சத்தம் போடாதிருத்தல்’ ஆகும். செந்தலை என்பதால் சேவல் என்றும் முழுமொட்டை என்பது (சேவலைப் போன்று தலையில் கொண்டை) மயிரில்லை என்பதால் கோழி என்றும் உணர்கிறோம். முதலிரண்டுவாக்கியம் மூலம் சேவல், கோழி என்றும் அடுத்திரண்டு வாக்கியம் மூலம் முட்டை, கோழிக்குஞ்சு என்றும் ஊகித்துணர்கின்றோம். இந்த அமைப்பினைக் கீழ்க்கண்டவாறு காட்டலாம்.

விடுகதை



விடை



கீழேயுள்ள படத்திலுள்ளவாறு விடுகதையையும் விடையையும் இணைக்கலாம்.



கடைசியாக மாறாத மறைவடிவமான 'வயிறு இல்லாத செயல்' என்பது விடை கூறுபவர்களுக்குப் பெருந்துணையாக யிருந்தது விடை அளிப்பதற்கு உதவுகின்றது.

அறிவுக்கு உரைகல்லாகவும் சிந்தனைக்குத் தூண்டு கோலாகவும் கதைகளுக்கு ஆதாரமாகவும் சிலேடைச் செய்யுளுக்கு உயிராகவும் பொழுதுபோக்கிற்குத் துணையாகவும் விளங்குகின்றது. நாகரிக முன்னேற்றமும் தொழில் வளர்ச்சியும் உரைநடைப்போக்கும் விடுகதையின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன. மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றைக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றது. அவற்றைச் சேகரித்து வகைப்படுத்தி ஆய்வு செய்வது நம் கடனாகும்.

விடுகதைகள்

1. அக்கம்பக்கம் இருந்தாலும் அத்தான் மச்சி உறவுண்டு
அரைக்கால் அவர் தான் நடுவுண்டு. என்னதான்
இவர்கள் ஒன்றாக ஒட்டிக்கொண்டே இருந்தாலும்
ஒன்று சேர வழியில்லை.

– இரு கண்கள்

2. அக்கரைக்கு ஓடி வருவான் அக்கறையோடு
தேடியது கிடைக்காமல் திரும்பிப் போவான்.
அவன் யார்?

– கடல் அலை

3. அக்கரைக்கும் இக்கரைக்கும் காலூன்றி
அழகான சங்கிலியை மேல்பூட்டி
வெள்ளித் திருகாணியைச் சுழற்ற விட்டால்
வீசம் நாழிகையில் போய்விடும். அது என்ன?

– புகை வண்டி

4. அக்கா பொண்ணும் அருமை மச்சானும்
அழகாய்க் கட்டிய வீடு. அக்கம் பக்கம்
பார்த்து எடுத்தால் ஆத்தூரே பரிசு.

– தூக்கணாங்குருவிக்கூடு.

5. அக்காள் ஊருக்கு அடுத்த ஊரு
இடத்தை விட்டுவிட்டு மடத்தைப் பிடுங்கி
ஒட்டித் தொடுத்து நன்றாகப் பாருங்கள்
ஓர் ஊர்ப் பேர் வருமே. உங்களுக்குத்
தெரியுமா?

– தங்கச்சிமடம்

6. அக்காள் குந்தாணி அக்கம்பக்கம் அசையமாட்டாள்
இருந்தாலும் அவள் சக்களத்தி இப்படி அப்படிக்
குத்தி இடுப்பை ஒடிப்பாள். இருந்தாலும்
அக்காள் அழமாட்டாள். இந்த இரண்டு பேரும்
இல்லாத இல்லம் இல்லையே?

– வில், உலக்கை

7. அக்காள் சப்பாணி, தங்கை நர்த்தனப்பெண்
இந்த இருவரும் இல்லாவிட்டால்
குடித்தனப் பெண் சிணுங்குவாள். அவள் யார்?

– உரல், உலக்கை

8. அக்காள் தங்கை உறவுண்டு
அண்டை அண்டை வீடுண்டு
கிட்டக்கிட்ட வந்தாலும்
தொட்டுக்கொள்ள முடியாது. அது என்ன?

– கண்

9. அக்காள் நெட்டச்சி அவள் தங்கை குட்டச்சி
அவர்களைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும்
பன்னிரெண்டு பேரும் பரட்டச்சி!

– கடிகாரம்

10. அக்காள் விதைத்த முத்து
அள்ளமுடியாத முத்து. அது என்ன?

– கோலம்

11. அக்காள் வீட்டில் மரம் இருக்க
அவள் தங்கை வீட்டில் பூப்பூக்கும்.

– கொடி அடுப்பு

12. அக்காள் வீட்டுக்குத் தங்கை போகலாம்
தங்கை வீட்டுக்கு அக்காள் போகமுடியாது.
அது என்ன?

– படியும், உழக்கும்

13. அக்கா வீட்டில் விளக்கேற்றினால்
தங்கை வீட்டில் தானே எரியும். அது என்ன?

– கொடியடுப்பு

14. அக்கிரகாரம் எப்படி அழிவது, ஆனபயிர்
எப்படிக் கெடுவது,

– பார்ப்பாரில்லாமல்

15. அக்கினிப் பழத்தைக் கக்கி விழுங்குதே
அது என்னடி கண்ணே?
வாலைப் பிடித்தால் வாயைப் பிளக்குதே
அதுதான் கண்ணாளா. அது என்ன?

– குறடு (பத்தக்)

16. அகட விகட கர்ணம்
சங்கிலி நாம கர்ணம்
நாலு மூலை கர்ணம்
நடுவிலே கும்ப கர்ணம். அது என்ன?

– தொட்டில்

17. அகத்திலே அகம் என்ன அகம்?

– புத்தகம்

18 அகல நெற்றியுண்டு
ஆணுமில்லை பெண்ணுமில்லை
அழகான பொட்டு உண்டு
சிவப்பும் கருப்புமல்ல..... அது என்ன?

– வானம், நிலா

19. அகன்ற வாய் அசுரன் ; ஆடிக்கொண்டே இருப்பான்;
அவனுக்குள்ளே கறுப்பர் கோடி அரைபட்டுச்
சாறாய் வடிவர். அவைகள் என்ன?

– எள், செக்கு, புண்ணாக்கு

20. அகன்ற வாய் உடையவன்
திறந்த வாய் மூடாதவன். அவன் யார்?-

– செக்கு

21. அகோரத் தாய்க்கு
ஐம்பது குஞ்சுகள்
பிஞ்சுகள் வாயெல்லாம்
நஞ்சுதான் மிஞ்ச நிற்கும். அது என்ன?

– தீப்பெட்டி

22. அங்கம் எல்லாம் வெண் சாம்பல் பூத்திருக்கு
அடிவேருங் கொடி இலையும் காத்திருக்கு
அதிகாலைப் பனியாலே வேத்திருக்கேன்
யார் வீடு போவேனோ. என் பேர் என்ன?

– பூசணிக்காய்

23. அங்கம் குலுக்காமல் ஆங்காங்கே
ஆடுபவள் தங்கநிறக் காசுகளை தேகம்
எல்லாம் பூசியவள். கண்ணாடிக் கழுத்தசைய
கண்ணாட்டி வாராளே!

– மயில்

24. அங்கமுத்து வாசலில்
தொங்குமுத்து ஆடுது
அதையெடுத்து வாயில் போட்டால்
திக்கு முக்காடுது. அது என்ன?

– மிளகாய்ப்பழம்

25. அங்கிட்டுப் போகுது, இங்கிட்டுப் போகுது,
ஆய்றது, ஆய்ந்து பார்த்தாலும் அத்தனைக்கும்
அடி தெரியவில்லை.

– எறும்பு

26. அங்கிடி இங்கிடி அலையும் அடுக்குமாடி வீடு. அதில்
அன்னம்மாளும் இருப்பாள். அவளுடன் வத்தல்காரியும்
இருப்பாள். பொத்தல்காரியும் இருப்பாள். அந்தப்
பல்லாக்கு வீட்டை அவளும் சுமப்பாள் இவளும்
சுமப்பாள். ஆனாலும் அவர்கள் அன்னல் பொண்ணை
அலுக்காமல் குலுக்காமல் கொண்டு செல்லக்கூடாதோ?

– அடுக்குச் சட்டிக்குள் அன்னம்,
வற்றல், வடை முதலியன.

27. அங்கும் இங்கும் அலைவதிரண்டு
பக்கம் பக்கமாய்ப் பார்ப்பதிரண்டு
கிண்ணொலி தன்னைக் கேட்பதிரண்டு
எட்டியெடுத்துக் கொள்வதிரண்டு. அவை யாவை?

– கால்கள், கண்கள், காதுகள், கைகள்

28. அங்குல மாட்டுக்கு
அரை மைல் வால். அது என்ன?

– ஊசி, நூல்

29. அங்கே சிலுக்குவாள், இங்கே பிலுக்குவாள்
கதவுமூலையில் ஒண்டிக்கொள்வாள். இவள் யார்?

– விளக்குமாறு

30. அச்சு இல்லாத சக்கரம், அழகு
காட்டும் சக்கரம். அது என்ன?

– வளையல்

31. அச்சு வண்டி ஓடுவதேன்
அக்காள் புருஷன் மச்சானாவதேன்?

– அக்காளையிட்டு

32. அசைந்து அசைந்து வருகிறது
ஆறு சக்கரம் உருண்டு வருகிறது
குதிரை பாய்ந்துவர, கொடிகள் பறந்துவர
நாதசுரம் ஊதிவர, நாலாயிரம் பேர்
'ஹர ஹர' என்று கூறிவர வருவது. அது என்ன?

– தேர்

33. அசை போட்டு தின்னும் என்னை யானை.
இசைப்பாட்டு ஒலியோடு தீயோ தின்னும்.
வசைப்பட்டோர் என்னைச் சமைப்பார்.
யார் நான் சொல்லு?

– விறகு

34. அசையும் யானையைவிட அசையாமல் தீனியை
அதிகம் தின்னும் பேர்வழி யார் சொல்லத் தெரியுமா?

– அடுப்பு

35. அஞ்சா அஞ்சரப்பெட்டி
அய்யாத கைத்துப்பெட்டி
மூடித்திறக்க முப்பதுநாள் ஆகும். அது என்ன?

– நோன்பு, பண்டிகை

36. அஞ்சுவிரல் அமர்ந்தாடப்
பத்துவிரல் பந்தாட
சூரியனுடன் வாதாட
எமனுடன் போராட அது என்ன?

– வறட்டி

37. அஞ்சூருப் பாவத்திலே அமைந்த பத்துக்
கொடியையும் அசைத்துப் பார்த்தால்
அசையுது ஆனால் பிடுங்கமுடியலை.

– விரல்கள்

38. அட்டைக்க்ரிப் பெண்ணுக்கு
உச்சந்தலை மஞ்சள். அது என்ன?

– பனங்காய்

39. அட்டைக்கு ஆயிரம் கண்கள்
முட்டைக்கு மூன்று கண்கள்
நான் வளர்த்த சிங்கத்துக்கு
ஒரே ஒரு கண். அவை யாவை?

– சல்லடை, தேங்காய், ஊசி

40. அடங்கிக் கிடப்பான்
எடுத்துக் காதில் வைத்தால்
கதை ஆயிரம் அளப்பான். அவன் யார்?

– தொலைபேசி

41. அடர்ந்த கருங்காட்டில் அடக்க ஆள் இல்லாமல்
தன் விருப்பம்போல் வேட்டையாடி உலாவுகிறான்.
அவன் யார்?

– பேன்

42. அடர்ந்த காட்டின் நடுவே ஒரு பாதை. அது என்ன?

– வகிடு

43. அடர்ந்த காட்டுக்குள் அலைந்து திரிந்து
அழகு படுத்துவான். அவன் யார்?

– சீப்பு

44. அடி அடி என்று அடித்து
உரி உரி என்று உரித்து
உள்ளிருப்பதை எடுத்துக்கொண்டு
மேலே இருப்பதை எறிந்துவிட்டேன். அது என்ன?

– புளியம்பழம்

45. அடிக்கடி தாவுவான் அரசியல்வாதியல்ல. அவன் யார்?

– குரங்கு

46. அடிக்காத பிள்ளை
அலறத் துடிக்கிறான். அவன் யார்?

– சங்கு

47. அடிக்கும் பாரமில்லை கொடிக்கும் பாரமில்லை.

– குழந்தை

48. அடி காட்டில் நடுமாட்டில்
நுனி வீட்டில். அது என்ன?

– நெல்

49. அடிச்சவருக்கும் காசு அளித்திடும் கலைமகள்
படிச்சவர்க்கு மனதில் பதிந்த கலைமகள்

– அச்சுப்புத்தகம்

50. அடி சிவப்பு நடு பச்சை உச்சி வெள்ளை
அந்தக் கதை என்ன?

– வெங்காயச்செடி

51. அடித்த இடத்தில் இருக்கும்
அனைவரும் பார்த்து ரசிப்பர். அது என்ன?

– நாட்காட்டி

52. அடித்தால் அம்மம்மா ருசித்தால்
நல்ல அம்மா. அது என்ன?

– கரும்பு

53. அடித்தால் அழுவான்.
பிட்டால் சிரிப்பான். அவன் யார்?

– தேங்காய்

54. அடித்தால் வலிக்கும்
சுவைத்தால் இனிக்கும். அது என்ன?

– கரும்பு

55. அடித்தால் விலகாது .
அணைத்தால் நிற்காது., அது என்ன?

– தண்ணீர்

56. அடித்தாலும் ஓடாது சண்டிமாடு
குத்தினாலும் சாவாது நொண்டிமாடு. அது என்ன?

– வீடு

57. அடித்துக் கொண்டிருப்பார்கள்; ஆனால் சண்டையல்ல
அது என்ன?

– கண் இமைதுடித்தல்

58. அடித்து நொறுக்கி
அனலில் போட்டால்
ஆவியாகத் தோன்றும்
அழகாய் மணக்கும். அது என்ன?

– சாம்பிராணி

59. அடிதடி சண்டை போல சத்தம் வரும்
அரும்பரும்பாய் முத்து உதிரும்
அதிகமானால் எல்லாம்
அடித்துச் செல்லும். அது என்ன?

– மழை

60. அடி தடித்து முடி சுருக்கி அவள் தலையும் தான்
விரித்து சடைச்சியாய் நிற்கின்றாள்.

– தென்னை

61. அடி, தொடை, கடி அது என்ன?

– மாங்காய்

62. அடிப்பார் அடிப்பார் அய்யாச் சாமி,
ஆனாலும் வாயால் கடிக்காரே அய்யா சாமி,
துடிக்கத்தான் செய்வாரு அய்யச் சாமி,
அடிச்ச அடி தாங்காமல் அடிபட்ட சாமி.

– தேள்

63. அடிப்பார் பிடிக்க மாட்டார். அது என்ன?

– தேள்

64. அடிபட்டாள் உதைபட்டாள்
சிறுக்கியவள் அந்தரங்கள் பல உரைத்தாள்
சிறுக்கியவள் அத்தான் என்று அணைய வந்தாள்
சிறுக்கியவள் கைதொட்டேன் கட்டியணைத்தேன்
முத்தமிட்டேன் முழுமதியை. அது என்ன?

– காதல் கடிதம்

65. அடி பருத்த அக்கா. அவள் கட்டிய சேலை
அடியில் சாயும் அக்கா. முடிதலில்
ஊசிக்கொண்டை முடித்தவள். பூ வடித்தவள்.
காற்றோடு கைகள் மோதி கைவிரல் கிழித்துக்
கொள்வாள். கல்யாண மங்கல வீட்டில்
வாசல் காப்பாள்!

– வாழை

66. அடி பெருத்தேன் குந்தாணியானேன்
தலை விரித்தேன் சடைச்சியானேன்.

– தென்னைமரம்.

67. அடி மத்தளம், இலை பர்வதம்,
குலை சிறிது, காய் துவரு, பழம் தித்திப்பு.

– வாழை

68. அடி மலர்ந்து நுனி மலராத பூ. என்ன பூ?

– வாழைப்பூ

69. அடிமேல் அடிபட்டும் அசராத சின்னப்பையன்
குறிவைத்த இடம் பார்த்துத் தப்பாமல்
சேருகிறான். அவன் யார்?

– கடிதம்

70. அடிமேல் அடி வாங்கி
அனைவரையும் சொக்க வைப்பான். அவன் யார்?

– மிருதங்கம்

71. அடியடா பிடியடா என்பான்
அறையை விட்டு வெளியேவரமாட்டான். அவன் யார்?

– நாக்கு

72. அடியில்லாத அடி என்ன அடி?

– சந்தடி

73. அடுக்கடுக்காய் அடுக்கியிருக்கும்
ஆயிரங்கால் மண்டபம்
கொக்கியாய் வளைந்திருக்கும்
குதிரைக்கால் மண்டபம். அது என்ன?

– வாழைத்தார்

74. அடுக்கடுக்காய் இலையுண்டு ஆதண்டையன்று;
கொத்துக்கொத்தாய் பூப்பூக்கும் முருங்கையன்று;
கோணச் சோணக்காய் காய்க்கும் புளியுமன்று.
அது என்ன?

– எருக்கஞ்செடி

75. அடுக்கடுக்காய்ப் பட்டு உடுத்தி
அமர்ந்திருப்பாள் கடைத்தெருவில்.

– வெங்காயம்

76. அடுக்கடுக்காய் வெள்ளை மரம்
அத்தனையும் முத்துமரம். அது என்ன?

– பற்கள்

77. அடுக்கு மாளிகை தாண்டினால் பளிங்கு மாளிகை
அதுவும் தாண்டினால் சுனைத் தண்ணீர். அது என்ன?

– இளநீர்

78. அடுப்பிலே ஏறுகிற அம்மாப் பொண்ணுக்கு
இடுப்பிலே எத்தனை சிற்றாடை

– வெங்காயம்

79. அடுப்பு சாதம் கொதிப்பதேன்
அரிசி அன்னமானதேன்
இலங்கை அழிந்ததேன்
இரும்பு உருகுவதேன்?

– நெருப்பினால்

80. அடுப்பு வெட்டி வாரி வெட்டி
வன்னி மரம் தோப்பாக்கிக்
காய் அறுத்துக் கணக்குப் பார்த்தால்
லட்சமோ லட்சம். அது என்ன?

– நெல்

81. அடே புடே என்பான்
வீட்டை விட்டு வெளியேற மாட்டான். அவன் யார்?

– நாக்கு

82. அடைக்காத கோட்டையில்
அரைக்கெஜம் கோபுரத்தில்
அங்குலத்தில் ஒளி ஒன்று
அமர்க்களமாய் ஜொலிக்குது. அது என்ன?

– குத்து விளக்கு

83. அடைமழை பெய்த அடுத்தநாள்
படை படையாய் வந்ததாம்
பிரங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம். அது என்ன?

– ஈசல்

84. அண்டம் வெள்ளை அண்டம், கண்டம் இரண்டு உள்ளே
காவல் காத்தால் போதும், குஞ்சு வந்து மோதும்.

– முட்டை

85. அண்டமென்ற பெயர் உண்டு
அடை காத்தால் குஞ்சுமுண்டு. அது என்ன?

– முட்டை

86. அண்டாவில் அண்டா என்ன அண்டா?

– மச்சாண்டா

87. அண்ணன் கிணற்றில் தம்பி இறங்கலாம்
தம்பி கிணற்றில் அண்ணன் இறங்கமுடியாது.

– ஆழாக்கு, படி

88. அண்ணன் தம்பி இரண்டு பேர்
அவர்களைச் சுற்றிப் பன்னிரண்டு பேர். அது என்ன?

– கடிகாரம்

89. அண்ணன் தம்பி இருபது பேருக்கும் ஆளாளுக்கு
ஒரு சின்னத் தொப்பி. அது எனன்?

– கை. கால், விரல் நகங்கள்

90. அண்ணன் தம்பி இருவர். அவர்கள்
சேர்ந்திருக்கும் நேரத்தை விட
பிரிந்திருக்கும் நேரமே அதிகம். அவை என்ன?

கடிகாரத்தின் சிறிய முள், பெரிய முள்.

91. அண்ணன் தம்பி இருவரும் ஒரு சைக்கிளில்
போய்க் கொணடிருக்கிறார்கள். ஒரு மரத்திலிருந்து
சில கிளிகள் பறந்து சென்றன. அதை அண்ணனிடம்
ஆயிரம் கிளி போகுது என்கிறார்.

கிளி சொல்லுது : எங்களும் எங்கள் ஒப்பந்தமும்
எங்கள் ஒப்பந்தத்தில் பேருபாதியும்
அதிலே பேருபாதியும் நீயும் சேர்த்து
'நூறுடா' என்றது.

எங்களும் :	**36**
எங்கள் ஒப்பந்தமும் :	**36**
பேரு பாதி :	**18**
அதிலே பேருபாதி :	**9**
நீயும் சேர்த்து :	**1**
	100

92. அண்ணன் தம்பி உறவுண்டு
அண்டை அண்டை வீடுண்டு
கிட்டக் கிட்ட இருந்தாலும்
தொட்டுப் பேச முடியாது. அவை என்ன?

– கண்கள்

93. அண்ணன் தம்பி ஐந்து பேர்
ஐந்து பேரும் வெவ்வேறு உயரம். யார் அவர்கள்?

– கைவிரல்

94. அண்ணன் தம்பி ஐவர்
அண்ணன் ஆதரவு இல்லாவிட்டால்
தம்பி மார் பாடு திண்டாட்டம். அது என்ன?

– கையின் பெருவிரல்

95. அண்ணன் தம்பி சேராவிட்டால்
ஊருக்கெல்லாம் கொண்டாட்டம். அவை என்ன?

– இரயில் தண்டவாளம்

96. அண்ணன் தம்பி பலபேர்
ஆளுக்கொரு ராகம் சொல்வார்கள். அவர்கள் யார்?

– ஆர்மோனியம்

97. அண்ணன் தம்பி மூவருக்கும் ஒரே முகம். அவர்கள் யார்?

– முதலை, உடும்பு, பல்லி

98. அண்ணன் தம்பி மூன்றுபேர்
ஒருவன் காட்டில் வசிப்பான்
ஒருவன் வீட்டில் வசிப்பான்
ஒருவன் நீரில் வசிப்பான். அவர்கள் யார்?

– உடும்பு, பல்லி, முதலை

99. அண்ணன் தோட்டத்திலே
பச்சைப்பாய் விரிந்திருக்கிறது.

– **கீரை**

100. அண்ணன் வீட்டில் விளக்கெரிந்தால்
தம்பி வீட்டிலே தெரியும். அது என்ன?

– **கொடியடுப்பு**

101. அண்ணன் வீட்டுக்குத் தம்பி போகலாம்
தம்பி வீட்டுக்கு அண்ணன் போக முடியாது. அது என்ன?

– **உழக்கு, நாழி**

102. அண்ணனுக்கு எட்டும் தம்பிக்கு எட்டாது.

– **நாக்கு**

103. அண்ணனுக்கு எட்டாதது தம்பிக் கெட்டும்
ஆணுக் கெட்டாதது பெண்ணுக் கெட்டும்

– **உதடு**

(அண்ணன், ஆண் என்ற சொல்லை உச்சரிக்கும்போது உதடு இரண்டும் ஒன்றுசேராது. தம்பி, பெண் என்ற சொல்லை உச்சரிக்கும்போது உதடு இரண்டும் ஒன்றுசேரும்.)

104. அண்ணனுக்கும் தம்பிக்கும் சண்டையாம்
இடையில் ஒரு சுவர் இருக்குமாம். அது என்ன?

– **மூக்கு**

105. அண்ணனும் தம்பியும் இரண்டு பேர்
அவர்களைச் சுற்றிலும் பன்னிரண்டு பேர்.

– **கடிகாரம்**

106. அண்ணனும் தம்பியும் அளந்து விடுவார்கள்.
அளந்து முடித்ததும் அண்ணன் குடலுக்குள்
தம்பி போய்த் தூங்குவான்!

– **நாழியும் உழக்கும்**

107. அண்ணனும் தம்பியும் விர்னு போகிறார்கள். அவர்கள் யார்?

– **வடக்கயிறும், வால்கயிறும்**

108. அண்ணாவைக் கண்டால் வெறுப்பு
தம்பியைக் கண்டால் சந்தோஷம். அவர்கள் யார்?

– **சூரியன், சந்திரன்**

109. அணில் ஏறாத கொம்பு என்ன கொம்பு?

– **மாட்டுக்கொம்பு**

110. அணில் பிள்ளையைப் பிதுக்கித் தின்போம்
நாங்க ஒரு சாதி. மூங்கிலையே வெட்டித் தின்போம்
நாங்க ஒரு சாதி. கூழாங்கல்லை உடைத்துத் தின்போம்
நாங்க ஒரு சாதி. என்ன?

– வாழைப்பழம், கரும்பு, பாக்கு

111. அத்தம் உச்சம் ஆவதேன்,
மச்சி வீடு இடிவதேன்?

– உத்தரம் சாய்வதால்

112. அத்தவரைக் காட்டிலே
அம்மாயி கொடை பிடிக்கிறா. அது என்ன?

– காளான்

113. அத்தானக் காட்டுக்குள்ளே
ஐயர் குடை பிடிக்கிறார். அது என்ன?

– காளான்

114. அத்தானக் காட்டுக்குள்ளே
ஐயர் குடை பிடிக்கிறார்.

– சோளக்கதிர்

115. அத்தானக் காட்டுக்குள்ளே
சாரைப்பாம்பு தொங்குது. அது என்ன?

– புடலங்காய்

116. அத்தானக் காட்டுக்குள்ளே
தலையை விரித்து ஆடுது. அது என்ன?

– சோளக்கதிர்

117. அத்தானக் காட்டில் அண்ணன்
குடை பிடித்து நிற்கிறான். அது என்ன?

– காளான்

118. அத்தானக் காட்டிலே பாட்டி குணுக்குப்
போட்டு ஆடுகிறாள். அது என்ன?

– உடைமரத்தின் காய்

119. அத்தானில்லா அத்தான் என்ன அத்தான்?

– மொடக்கத்தான்

120. அத்தானைத் தேடி காட்டிலே அக்காள்
குடை பிடிக்கிறாள். அத்தான் நொடியில்
மடிஞ்சுது அவ கதையும் முடிஞ்சுது.

– காளான்

121. அத்திக்கட்டை முள் எடுத்து
அடைப்பாரும் இல்லை. அழகான பூ எடுத்து
முடிப்பாரும் இல்லை. அது என்ன?

– சேவல்

122. அத்துவான ஆலங்காட்டில்
அங்கம்மாள் ஊஞ்சலாடுகிறாள். அவள் யார்?

– புளியங்காய்

123. அத்துவான ஆலங்காட்டில்
அண்ணாமலை ஊஞ்சலாடுகிறான்.

– புளியங்காய்

124. அத்துவான ஆலங்காட்டிலே
வித்துவான் குடைபிடிக்கிறான். அவன் யார்?

– நாய்க்குடை

125. அத்துவானக் காட்டில் பொங்கல் இட்டு
இறக்கியிருக்கிறது. நாயும் தின்னவில்லை,
நரியும் தின்னவில்லை.

– சுண்ணாம்பு

126. அத்துவானக் காட்டிலே அதோ தெரியுது சின்னத்தேர்
கொத்தர் வந்து பிடிக்கலை கொல்லர் தச்சர் முடிக்கலை
அந்தர் சித்தர் ஆக்கல்லை. அதுவாகக் கிளர்ந்து
பாக்கலை ; மண்கலையின் மாய்கலை!

– புற்று

127. அத்துவானக் காட்டிலே ஒரு துளி இரத்தம். அது என்ன?

– தம்பலப்பூச்சி

128. அத்துவானக் காட்டிலே ஒரு வேல் கம்பி

– கம்பு

129. அத்துவானக் காட்டிலே சொக்கன் பந்தடிக்கிறான்.
அவன் யார்?

– எலி

130. அத்துவானக் காட்டிலே
வித்துவான் குடைபிடிக்க
கத்துவானேன் கார்மேகா
கொட்டுவானேன் கார்மேகா

–காளான், இடி, மழை

131. அத்துவானக் காட்டுக்குள்ளே
அம்மா பொரி பொரிக்கிறாள்.

– பருத்தி

132. அத்தை மகள் முந்தானை அடிக்கின்ற காட்டிலே அடிப்பது போல அரக்கி அவள் அரும்பு ரம்ப முளையாலே அவள் விழித்த வேளையிலும் அறுக்கின்றாளே!

– கண் இமை

133. அத்தையில்லா அத்தை என்ன அத்தை?

– சித்தரத்தை

134. அதிசயக் குளத்திலே
அற்புதக் குருவி ஒன்று
வாலினால் தண்ணீரை
வற்ற வற்றக் குடிக்குது. அது என்ன?

– விளக்குத் திரி

135. அதிர்புதிர் போட்ட மன்னப்பன் தாயாருக்கு
முதுகிலே முந்நூறடி. அது என்ன?

– சல்லடை

136. அது ஓர் அழகு தேவதை
ஆடும் தேவதை. அது என்ன?

– மயில்

137. அதோ ஓடுகிறான் ஒருவன்
அவன் காலடி தெரியவில்லை

– ஈ

138. அதோ போகிறான்
இதோ போகிறான்
ஆள் தெரியவில்லை
அசைவு தெரிகிறது. அது என்ன?

– காற்று

139. அதோ போகிறான் சித்தாண்டி
அவன் போகும் தடம் தெரியாது. அவன் யார்?

– எறும்பு

140. அந்தகார இருட்டிலே ஆலந்தூரு ரோட்டிலே
பத்திரகாளி சாடுவாள் பந்து விளையாடுவாள்

– ஈசல்

141. அந்தப் பெட்டிக்கு மூடி இல்லை ; கீல் இல்லை; சாவியும் இல்லை ;ஆனால் தங்கப் பொக்கிஷம் மறைந்திருக்கிறது. அது என்ன?

– முட்டை

142. அந்தரங்க அரண்மனை, அழகான அரண்மனை,
முத்துக்கோட்டை அரண்மனை, அதற்குள்
ஒரு மோகினி ஆடிப் பாடிக் கிடக்கிறாள்.

– நாக்கு

143. அந்தரத்தில் அங்கவஸ்திரம் ஐயோ!
பட்டுப் பட்டுண்ணு கிழியுதே.

– வாழை இலை

144. அந்தரத்தில் தொங்குவது
செம்பும் தண்ணீரும். அது என்ன?

– இளநீர்

145. அந்தரத்தில் தொங்கும் அழகான வீடு எது?

– தூக்கணாங்குருவிக் கூடு

146. அந்தரத்தில் நான்கு அழகான பிள்ளை. தந்திரமா மேடை
போட்டு தற்காத்துக் கொண்டார். சுந்தரம்பிள்ளைக்கு
அந்த நாலுபேரும் சொந்தம்தான். தெரியுமே அன்பு
சுரக்கிறபோதே.

– பசுவின் மடி.

147. அந்தரத்தில் பறந்திடும் பருந்து அல்ல,
அழகான வாலுண்டு அனுமார் அல்ல,
விந்தையான கட்டு உண்டு மூட்டை அல்ல. அது என்ன?

– பட்டம்

148. அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல
அழகான வாலுண்டு குரங்குமல்ல. அது என்ன?

– பட்டம்

149. அந்தரான காட்டிலே
நாலுபேர் நனையாமல் நிற்கின்றார். அது என்ன?

– பசுவின் பால்மடி

150. அந்தரான காட்டிலே பச்சைப்பாம்பு
தொங்குது. அது என்ன?

– புடலங்காய்

151. அந்தரான கானகத்தில் ஆனை வீரிடுகிறது. அது என்ன?

– ஏற்றம்

152. அந்தரான குகையிலே
சுந்தரமான பெண் ஆடுகிறாள். அவள் யார்?

– நாக்கு

153. அந்த வீட்டுக்கும் இந்த வீட்டுக்கும் டப்டப் அது என்ன?

– முறம்

154. அந்த வெள்ளக் களஞ்சியத்துக்கு இரண்டு கூரை. அது என்ன?

– முட்டை

155. அந்தாப் போகுது இந்தாப் போகுது
அடியைப் பார்த்தால் தெரியவில்லை.

– எறும்பு

156. அந்தி இருட்டும்போது
ஆலங்குளம் டாக்டர் வீட்டுக்கு வந்து
விலாவிலும் கையிலும் விருட்டென்று ஊசி போட்டார்.

– கொசு

157. அந்தி கிழக்கே அதிகாலை மேற்கே. அது என்ன?

– வானவில்

158. அந்தி கிழக்கேயும், அதிகாலை மேற்கேயும்,
வண்ணங்களில் மின்னுவான். தரிசிக்கும்போதே
காணாமல் போனான். அவன் யார்?

– வானவில்

159. அந்திப் பொழுதாகி அப்பொழுதே சூடாகி
பொழுது விடிகிறபோது புத்திரனைப் பெற்றெடுத்தாள்.
அவள் யார்?

– வெண்ணெய்

160. அந்திமான் குளத்திலொரு மான்வந்து மேயுது
அடியடா பிடியடா சுத்திவளை யடா
கூப்பிடாமல் விழுங்கடா. அது என்ன?

– வடை

161. அந்தி வரும் நேரம் ; அவளும் வரும் நேரம். யாரவள்?

– நிலா

162. அநேகக் கொடி இருக்கும்
அழகான பூவும் இருக்கும்
ஆனால் செடி அல்ல. அது என்ன?

– ரூபாய்

163. அப்பச்சிக்குத் தெரியாது குப்பச்சி பிறந்ததும்
இல்லிக்கண் திறந்தாள் எழுந்து நடந்தாள்
நடந்துபோய் நாலுபேரைக் கௌவிப் பிடித்தாள்
முட்டிக் கடித்ததும் எட்டிக் குதித்தாள். இவள் யார்?

– மாடு கன்றுக்குட்டி

(அதற்குத் தாய் தெரியும். தகப்பன் தெரியாது).

164. அப்பத்தாளோ தொப்பை ஆத்தாள் குட்டைக் கழுத்தி
மகளோ அடி பருத்தவள்.

– அண்டா, குடம், செம்பு

165. அப்பன் ஊர் சுத்துகிறான்; ஆத்தாள்
பிள்ளைத்தாய்ச்சி. அவை என்ன?

– சுரைக்காய்

166. அப்பன் செந்தலை; ஆத்தாள் முழு மொட்டை
முழு மொட்டை வயிற்றிலே கொழுக்கட்டை
கொழுக்கட்டை வயிற்றிலே 'கீச்சு' 'கீச்சு'. அது என்ன?

– கோழிக்குஞ்சு

167. அப்பன் சொரியன்
ஆத்தாள் சடைச்சி
அவர்கள் பிள்ளையோ
சர்க்கரைக்கட்டி. அது என்ன?

– பலாப்பழம்

168. அப்பன் தொந்தி வயிறன்
மகன் கருத்தாணி
பேரன் செலவாளி.

– அண்டா, குடம், செம்பு

169. அப்பனுக்கு முன்னே அவனியில் நிற்பான்.

– விநாயகர்

170. அப்பனே பறங்கிக்காயே
அடுப்பிலே ஏறினாயே
ஏறியிறங்கினாலும்
என்னை நீ மறந்திடாதே. அது என்ன?

– வெல்லம்

171. அப்பா காசை எண்ண முடியாது
அம்மா புடவை மடிக்க முடியாது. அவை என்ன?

– நட்சத்திரங்கள், வானம்

172. அப்பாடா என்ற காய் காய்க்கும். அது என்ன?

– நெருஞ்சிமுள்

173. அப்பாவிச் சிறுவர்களின் சிப்பாய் சீர்நடை

– எறும்பு

174. அம்பலகாரர் வீட்டு முற்றத்தில்
ஐந்து தூண்கள் நட்டிருக்கிறதாம்.

– உள்ளங்கை, விரல்கள்

175. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு
அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி. அது என்ன?

– மயில்

176. அம்பலூர் ரோட்டிலே கம்பளி விரிச்சிருக்கு
அம்பலகாரர் மகளைக் கைபிடித்து இழுக்கிறான்
அவள் ஐயோ என்கிறாள்
அவன் சித்தெபொறு என்கிறான் என்ன?

– வளையல் போடுதல்

177. அம்புகள் பாய்ந்தன அல்லிக் குளத்திலே

– மழை

178. அம்புலிய வாசலிலே கம்பளியை விரிச்சு
அதிகாரி மகளைக் கையைப் பிடித்து
நோகுது நோகுது போவுது போவுது. அது என்ன?

– வளையல் போடல்

179. அம்மா, அம்மா, எங்கே போகிறாய்?
நேற்றுக் கழுத்தறுபட்டவனைப்
பிழைக்க வைக்கப் போகிறேன். அது என்ன?

– நெல்நாற்று

180. அம்மா அழகாத்திலே
மகள் கிளிக்கூண்டிலே

– புளியங்காய், புளி

181. அம்மாக் குட்டிப் பொண்ணுக்கு
அல்லும் பகலும் அளக்கிறதுதானே வேலை

– நாழி

182. அம்மா கொடுத்த தட்டிலே
தண்ணீர் விட்டால் நிற்கவில்லை. அது என்ன?

– தாமரை இலை

183. அம்மா சத்திரத்தில் வெள்ளைக்காரன் பூக்க,
வெகுநேரம் பலபேர் வெளித்திண்ணையில்
காத்திருந்தனராம்.

– சோறு

184. அம்மா படுத்திருப்பாள்
மகள் ஓடிக்கொண்டிருப்பான். அவர்கள் யார்?

– அம்மி, குழவி

185. அம்மா புடவையை மடிக்க முடியாது
அப்பா பணத்தை எண்ண முடியாது.

– வானம், விண்மீன்

186. அம்மா வயிற்றிலே ஆடுகிற பிள்ளை.

– ஆட்டு உரல்

187. அம்மாவுக்கு ஒரே பிள்ளை செல்லப்பிள்ளை
அல்லும் பகலும் அவள் மடியில் கிடப்பாள்
ஆத்திரம் வந்தாலோ அவள் முதுகையே
உடைப்பாள் அவர்கள் யார்?

– அம்மியும், குழவியும்

188. அம்மான் அகத்துக் கொல்லையிலே
பட்டாக்கத்தி தொங்குகிறது. அது என்ன?

– வாளவரங்காய்

189. அம்மிக்குழவி போல் பூப்பூக்கும்
அரிவாள் பிடிபோல் காய் காய்க்கும். அது என்ன?

– வாழைமரம்

190. அம்மியின் கீழே கும்மி அடிப்போம்
கப்பல் ஏறிக் கூத்துப் பார்ப்போம்
பட்டுப்புடவைக்குப் பொத்தல் போடுவோம்.
நாங்கள் யார்?

– எலிகள்

191. அம்மைக்கு அதிகாரம், பிள்ளைக்குத் தலைசுற்றல்.
அது என்ன?

– எந்திரம்

192. அய்யாக்குட்டி தோப்பிலே ஆகா ஓஹோ மரத்திலே
ஐம்பத்தாறு செம்பிலே அமிர்தம் வார்த்து வச்சிருக்கு.

– இளநீர்

193. அயத்திலே விளையாப்பூ அகத்திலே விளையும் பூ
நயத்திலே விளையும் பூ நாட்டோர்கள் நாடும்பூ
இகத்திலே பூக்கும் பூ இட்டர் கொண்டாடும் பூ
காலிலே பூக் காப்பு அதுவென்ன பூவே?

– அன்பு

194. அர்த்த சாமப் பயணம் ஏன்?
ஆலிலை உதிர்வதேன்?

– பறிப்பார் இல்லை

195. அர்த்த ராத்திரி ஆட்டம்
அஞ்சாறு பேர் வந்தால் ஓட்டம். அது என்ன?

– மழை

196. *அர்த்த ராத்திரியிலே*
ஆருமில்லா வேளையிலே
மழையில்லா நேரத்திலே
மாப்பிள்ளை குடை பிடிச்சிருக்காரு. அது என்ன?

– காளான்

197. *அர்த்த ராத்திரி வேளையிலே*
ஆயிரம் பேர் கூடயிலே
ஆட்டம் பாட்டம் போடயிலே
அவளும் அவனும் படுக்கையிலே. அது என்ன?

– நாடகம்

198. *அரக்கர்கள் நடுவே அழகி*
பவனி வருகிறாள். அவை என்ன?

– நிலா, நட்சத்திரங்கள்

199. *அரக்கன் தலை அந்தரத்திலே தொங்குது. அது என்ன?*

– திருஷ்டிப் பூசணிக்காய்

200. *அரக்கன் தலைபோல*
விலைக்கு வந்திருக்கு
வாசலில் கட்டி வைத்தால்
வராது திருஷ்டியும். அது என்ன?

– திருஷ்டி பூசணி

201. *அரக்குப் பட்டு அழகான பட்டு*
கண்டவர் கண்பட்டு கலங்குதய்யா சின்னப்பட்டு.
அது என்ன?

– பட்டுப்பூச்சி

202. *அரக்குபொன் நிறமாவதேன்?*
அனுமார் இலங்கைக்குப் போனதேன்?

– அரிதாரம், அரி தாரம்

203. *அரசர்களில் ஒருவர் பெயர்*
கொண்டவளின் பெயர்
ஒரு நதியின் பெயர்
உடலின் பெயர்
ஒரு மரத்தின் பெயர் - இந்த ஐந்து பெயர்களின் நடு
எழுத்துக்களை ஒன்றுசேர்த்தால் விநாயகர் வரவேண்டும்.

– யயாதி, மனைவி, யமுனை தேகம், தென்னை

204. அரசர் தூங்க அமைச்சர்களும் தூங்க
அலுவலர்களும் தூங்க அரபிக்கடல் தூங்க
அண்ணா மட்டும் தூங்கவில்லை
அண்ணா தமிழுக்கும் அண்ணா.

– மூச்சு

205. அரசியல்வாதிகளைப் போல் அங்கவஸ்திரமாம்.
பச்சைப் பட்டை பளிச்செனப் போர்த்தி
பருத்த தொந்தியோ பார்க்க நேர்த்தி.
வினாக்குறி வாலால் விவேகி என்று காட்டினாய்
சரி வேலம் சிறு முள்ளு வேண்டாமே உனக்கு ஏன்?

– கத்தரிக்காய்

206. அரண்மனை அந்தப்புரத்தில் ஆடுகிறாள் அல்லிராணி.

– நாக்கு

207. அரன் வீதிவர மரமிரண்டும்
கரந்தனிலேந்திச் சென்றனனே

– ஆராத்தி

208. அரிசி பணத்துக்கு ஒரு படி
ஆக்கித்தின்ன ஆள் இல்லை. அது என்ன?

– உப்பு

209. அரிசி போல் பூப்பூக்கும் அம்மாடி என்ற
காய் காய்க்கும். அது என்ன?

– மிளகாய்

210. அரிசியிலும் அவன் சிறியன். அறியாது நாம்
அவனைத் தொட்டாலும் அல்லது நம் கால்
அவன் மேல் பட்டாலும் ஆற்றாமல் அலறாமல்
அனல் துண்டு வாயால் 'சுள்' என்று கடித்து
விடுபவன் யார்?

– எறும்பு

211. அரிசியை மாவாக்குவது எப்படி?
உறவினர் புத்தி சொல்லுவது எப்படி?

– இடித்து இடித்து

212. அரியகுடி பெரியாத்தா அவளே கெட்டிக்காரி
பால் கொடுக்காமல் பிள்ளை வளர்ப்பாள்
பலே கெட்டிக்காரி. அது என்ன?

– கோழி

213. அரிவாள் போல் இலைவிடும்
கவரிமான் போல் பூப்பூக்கும்
தின்னுகின்ற பழம்பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும். அது என்ன?

– வேம்பு

214. அருகில் வருவான் உணர முடியும்.
ஆளைக் காண முடியா்து. அவன் யார்?

– காற்று

215. அருங்கோடைத் தொழிலாளர்
ரம்பத்துக்கு இருபுறமும் பற்கள். அது என்ன?

– கற்றாழை

216. அருணகிரி திருணகிரி மேடை
அறுநூற்றுக் காதவழி கற்பூர வாடை
இதை விடுவித்தவர்க்குப் பூவினால் மாலை.

– மரிக்கொழுந்து

217. அருணன் உதிக்கும் வேளை யாரு செய்த வேலை?
அத்தை மகள் வீட்டு முன்னே அழகுரதம் ஓடுது
ஓடுகிற ரதத்தின் மேல் உட்கார்ந்து ஓட்ட ஆள் இல்லை.
அந்தி சாயும் நேரத்திலே, அழகு ரதத்தின்மேலே,
அத்தான் வண்டி ஏறுச்சி ரதத்தின் முகம் மாறிச்சி

– கோலம்

218. அருமைப்பிள்ளை வால் தடுக்கினால்
அற்பப் பிணங்களெல்லாம் கூத்தாடும். அது என்ன?

– தேள்

219. அருமை ருசி எல்லாம் ஒரு கல்லுக்குள்ளே
ஆடை அணி உடை எல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே.

– உப்பு

220. அரைக்கால் தண்ணீருக்குள் ஆடு நீச்சல் போடுது.

– தவளை

221. அரைக்கிற ஆலைதனில்
அடைத்துக் கிடக்கும் ஒரு பாம்பு
அசைந்து புரண்டு உழன்றாலும்
அகப்படல் சற்றேனுமில்லை. அது என்ன?

– நாக்கு

222. அரைக்கீரைச் சிறுபாத்தி
அழகுண்டு மணமில்லை. அது என்ன?

– பச்சைகுத்துதல்

223. *அரை கஜம் குழியிலே அரைப்படி முல்லைப்பூ.*

– நெருப்பு

224. *அரைச்சாண் குள்ளனுக்கு கால் சாண் தொப்பி.*
அது என்ன?

– பேனா

225. *அரைச்சாண் ராணி, அவளுக்குள்ளே*
ஆயிரம் முத்துக்கள். அது என்ன?

– வெண்டைக்காய்

226. *அரைத்தது முளைக்கும்; பொரித்தது நடக்கும்.*
அவை யாவை?

– பருத்திவிதை, கோழிக்குஞ்சு

227. *அரை நீலப் பூப்பூக்கும் அல்லியும் அல்ல.*
அவுரி போல் காய் காய்க்கும். ஆவரையும் அல்ல.

– எருக்கஞ் செடி, பூ

228. *அரைப்படி அரிசி பொங்கி*
ஆயிரம் பேர் உண்டு, அரைச்சட்டி மிச்சம். அது என்ன?

– சுண்ணாம்பு

229. *அரைப்படி நெல் குத்தி*
ஐயனாருக்குப் பொங்கல் இட்டு
சின்னி தின்று சின்னி மக்களெல்லாம் தின்று
பொழுது விடிய அரைப்பானை பழையது. அது என்ன?

– சுண்ணாம்பு

230. *அரைப்பணத்துக்குப் பெண்டாட்டி கட்டி*
அடிக்கப் போனால் சிரிக்க வருகிறாள். அவள் யார்?

– தேங்காய்

231. *அரையடிப் புல்லில் ஏறுவான் இறங்குவான். அவன் யார்?*

– பேன்

232. *அல்லிக்குளத்தில் ஆமை வந்து மேயுது*
கட்டடா பிடியடா கள்ளக்கயிறு போடடா
குத்தி எடடா, கூசாமல் தின்னடா. அது என்ன?

– தாமரை மொட்டு

233. *அலறி அலறிக் கூப்பிடுவான்*
அசந்தால் அடங்கி விடுவான்.

– தொலைபேசி

234. *அலறுவான். அலற வைப்பான். அவன் யார்?*

– இடி

235. அலுக்குக் குலுக்கு ஆஞ்சி, அம்மை வார்த்த மூஞ்சி,
வருவார் போவாரைக் கடிச்சி வலிக்க வைக்குது சீச்சீ!

– நெருஞ்சிமுள்

236. அலை அலையாய் ஆடிவரும் ; கடலும் அல்ல.
நிலையாக இருக்காது; நிலவும் அல்ல. அது என்ன?

– மேகம்

237. அலை அலையாய் ஆடிவரும் ; கடலும் அல்ல.
நிலையாக இருக்காது; நிலவும் அல்ல. அது என்ன?

– புகை

238. அலைகடலும் சிறுகடலும் பெருகிவர
அலைகளெல்லாம் தத்தளிக்க
நடுவே இருக்கும் முத்துக்களெல்லாம் குதித்துவிட
வழியில் போகும் தச்சன் வந்து வழிமறைக்கவே.
அது என்ன?

– உலையில் கொதிக்கும் சாதமும் அகப்பையும்.

239. அலைவீசி இரையாத
அகிலப் பெருங்கடலில்
வெள்ளைக் கப்பல் ஒன்று
வெளிச்சமிட்டு வருகுது. அது என்ன?

– நிலவு

240. அவரோ பெரியவர் அவர் இலையோ சிறிது
அவர் பெற்ற பிள்ளைகள் எல்லாம் கோணல்.

– புளிய மரம்.

241. அவள் ஒரு பாடகி
ஆனால் அவள் பெண் அல்ல.

– குயில்

242. அவள் குளித்தால் இறந்து போவாள். அவள் யார்?

– நெருப்பு

243. அவள் தலைவிரித்தாடாவிடில் இவர் தலைசுற்றும்.
அவள் யார்?

– மின்விசிறி

244. அவளைப் பார்த்தா மினுக்குது
அவ சாண்டக் குடிச்சா புளிக்குது. அது என்ன?

– எலுமிச்சம்பழம்

245. அவன் நிறம் நீலம் ; அவன் எல்லை நெடுந்தூரம்.
அது என்ன?

– கடல்

246. அவன் பறக்கும்போது தீப்பொறி பறக்கும். அது என்ன?

– மின்மினிப் பூச்சி

247. அவனுக்குத் தழுவவும் தெரியும். நழுவவும் தெரியும்.
அவன் யார்?

– காற்று

248. அவிழ்த்த தலை முடியாத சிறுக்கி
அவள் பெற்ற பிள்ளைகளுக்கு
வகைவகையாகப் பெயராம். அவள் யார்?

– பனைமரம்

249. அவுத்து விட்ட மாடு
தொற தொறன்னு கழியுது. அது என்ன?

– நெற்கதிர்

250. அவுத்து விட்ட மாடு
படுத்திடுச்சு. அது என்ன?

– கயிறு

251. அழகு அழகாய்ப் பூப்பூக்கும்
அம்மாடி என்று காய் காய்க்கும். அது என்ன?

– நெருஞ்சி

252. அழகு அழகு தோப்பு ஆல விருது
பக்க கதவு பதினாறு வாசல்

– ரயில்

253. அழகு சுந்தரர் கோயிலில்
அருமையான மேளம்
ஆனால் சத்தம் இல்லையே. அது என்ன?

– கண்கள்

254. அழகழகாய் வெள்ளரிக்காய் அடுக்கி வைத்த
வெள்ளரிக்காய். அது என்ன?

– பற்கள்

255. அழகான நெட்டை ராசாவுக்கு
ஆயிரம் அடி அடித்தாலும்
வலிக்கவே வலிக்காது. அது என்ன?

– நூல்

256. அழுத்தி மிதித்தால்
அலறிக்கொண்டு ஓடும். அது என்ன?

– மிதிவண்டி

257. அழுதபிள்ளைக்கு ஆறுதல் கூறி
அங்கும் இங்கும் சாய்ந்தாடி
உயிரில்லாதவன் உறங்கச் செய்திடுவான். அவன் யார்?
– தாலாட்டுத் தொட்டில்

258. அள்ள அள்ளப் பெரிதாகும். அது என்ன?
– பள்ளம்

259. அள்ளலாம் கிள்ள முடியாது. அது என்ன?
– தண்ணீர்

260. அள்ளவும் முடியாது. கிள்ளவும் முடியாது. அது என்ன?
– காற்று

261. அறிவில்லாமல் புத்தி சொல்வான்
அனைத்துக்கும் வழியைச் சொல்வான்
வயிற்றில் ஈரம் குறைந்தால்
வார்த்தையின்றி விழிப்பான். அவன் யார்?
– பேனா

262. அறிவின் மறுபெயர் இரவில் வருவது. அது என்ன?
– மதி

263. அறுக்க அறுக்கச் சவுக்க மரம்
அது பாட்டுக்கு வளருது!
– தலைமுடி

264. அறுக்க உதவாத கருக்கு அரிவாள். அது என்ன?
– பிறைச்சந்திரன்

265. அறுகீரைச் சிறுபாத்தி
அழகுண்டு மணமில்லை. அது என்ன?
– கண்ணாடி

266. அறுவகை உண்வோடு இலையிலே சோறு போட்டு,
இலையை எடுத்துவிட்டு இலையிலே சாப்பிடு. அது என்ன?
– கருவேப்பிலை

267. அறைக்கீரை சிறுபாத்தி
அழகு மணமில்லை. அது என்ன?
– செவ்வந்திப்பூ

268. அறைக்கு மேலே கீழே ஐந்தைந்து அடுக்குகள்.
– விரல்கள்

269. அறைகள் அறுநூறு; அத்தனையும் ஒரு அளவு.
– தேன்கூடு

270. அறை நிறைய நாற்காலி. அது என்ன?
– பற்கள்

271. அன்புடன் ஒரு பறவை
தென்புடன் வந்தெய்தி
இன்புடன் பாடியதைத்
துன்புடன் துரத்தினேன். அது என்ன?

– எச்சியிலை

272. அன்றாடம் தீப்பிடித்தும் அழியாத மாளிகையில்
அறுசுவை விருந்தாகிறது. அது என்ன?

– அடுப்பு

273. அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும். அது என்ன?

– கோலம்

274. அன்று அவிழ்த்த கூந்தலை அள்ளி முடிக்கத்
தெரியலை. அவளோ பிள்ளை பெத்தாச்சு
அதுக்குப் பேரும் பத்தாச்சு.

– பனைமரம்

275. அன்னதான சத்திரத்தில் வால் நீண்ட குருவி. தான் உண்ணாது மற்றவர்க்கு அள்ளிக்கொடுக்கும். அந்த வள்ளல் யார்?

– அகப்பைக் கரண்டி

276. அன்னைக்கு அகன்ற முகம்.
பிள்ளைக்கு உருண்டைமுகம்.

– அம்மி, குழவி

277. அனல்மேல் கறுப்புக் குதிரை
அதன் மேல் வெள்ளையான்
ஏறி ஏறி குதிக்கிறான். அவை என்ன?

– தோசைக்கல், தோசை

278. அனலிலே பிறப்பாள்
ஆகாயத்தில் பறப்பாள். அவள் யார்?

– புகை

279. அனைவருக்கும் அடங்காதவன்
ஆதவனுக்கு அடங்குவான். அது என்ன?

– குளிர்

280. அஸ்திவாரத்தோடு நடக்கும்
ஒரு அழகான மாளிகை
அந்த மாளிகைக்குப் போக
சக்கரமில்லாத வண்டி. அது என்ன?

– தோணி

281. அஸ்திவாரம் இல்லாமல் அரண்மனை கட்டினேன்.
அது என்ன?

– கப்பல்

282. ஆக்கூர் மலைமேலே ஓர் ஆந்தை
அந்த ஆந்தைக்கு ஆயிரம் கண்கள்
இந்த வெடியை வெடிப்போருக்கு
இரண்டு கண்கள். அது என்ன?

– சல்லடை

283. ஆகாசத்துக்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி. அது என்ன?

– மழை

284. ஆகாசந் தனில்பறக்கும் கருடனல்ல
நீண்ட வாலுங் கொம்பிரண்டுண்டு ரிஷபமல்ல
மதகிரிபோலோசையிடும் யானையல்ல. அது என்ன?

– பட்டம்

285. ஆகாசந் தனில் பறக்கும் பருந்துமன்று
அதிகமாகப் பிளிறிவரும் யானையன்று
அதிகநீள வாலுண்டு குரங்குமன்று
அதிகமாகக் கொம்புண்டு மானுமன்று. அது என்ன?

– காற்றாடி

286. ஆகாசம் போவதும் சட்டையை விரிப்பதும் வௌவால்
அயிரங்குஞ்சு பொரிப்பதும்
நீரும் அதற்குள்ளே நீராழிமண்டபமும் அதற்குள்ளே
காராம்பசுவு கட்டும் கயிறும் அதற்குள்ளே. அது என்ன?

– தென்னைமரம்

287. ஆகா நல்ல மரத்திலே அழகு உச்சிக் கொப்பிலே
பச்சை ஓட்டு முட்டைக்குள் பசை பிசைந்து இருக்குது.

– விளாம்பழம்

288. ஆகாயத்தில் அரிவாள்கள். அவை யாவை?

– புளியங்காய்

289. ஆகாயத்தில் ஊஞ்சலாடுது அழகுமயில்
அத்தை வீட்டுக்கு விருந்துக்கு வருது அழகுமயில்
போட்டதெல்லாம் திங்குது புள்ளிமயில்
போற போக்குத் தெரியல்லே புள்ளிமயில்.
அது என்ன?

– வாழைஇலை

290. ஆகாயத்தில் பறக்கிற பட்சியை
அடியும் நுனியும் தறித்துவிட்டு
மூக்கணாங்கயிற்றைக் குத்திவிட்டால்
முன்னே வந்து பேசுமாமே. அது என்ன?

– ஓலைச்சுவடி

291. ஆகாயத்திலிருந்து அன்னக்கிளி கொண்டுவந்தேன்
குத்துகுத்தென்று குத்தினேன் கோதையை
பாலும் சாதமும் போட்டேன் பாவைக்கு
தெருவில் விட்டுவிட்டேன் தேவைமுடிந்து. அதுஎன்ன?

– தையல் இலை

292. ஆகாயத்திலே அங்க வஸ்திரம்
ஆறப் போட்டிருக்கிறது.

– வாழை இலை

293. ஆகாயந் தனில்நின்று சரமாரி யுதிரும்
அதில் நின்று முட்டைகள் அநேகமாய்த் தோன்றும்
ஏககாலத்தில் ஈடழிந்து போகும்
இன்பமுடன் இக்கதையை இங்குரை செய்வீரே.

– நீர்க்குமிழி

294. ஆகாயமட்டும் அளாவி வளர்ந்திடுவார்
காய்காயென் பாரதன்மேல் காத்திருப்பார்-போகாமல்
வந்தவர்க்குத் தண்ணீர் வகையாகத் தந்திடுவார்
சொந்தமாய் இவர் பேரைச் சொல்.

– தென்னை

295. ஆகாரத்திலேயும் ஆகாரம் என்ன ஆகாரம்?

– நீராகாரம்

296. ஆச்சாரிக்கு அர்த்தம் ஆசான்
அதனால் ஆசாரியைக் கனம் பண்ண
ராசாதி ராஜாக்களும் தலை வணங்குகிறார்கள்.

– வாசற்படி

297. ஆசாரி செய்யாத கூண்டு
அது மூடித் திறப்பதும் உண்டு.

– கண்

298. ஆசாரி பண்ணிய அவமானத்திற்கு
ராசாதி ராசனெல்லாம் தலைகுனிகிறார்கள். அது என்ன?

– வாசற்படிநிலை

299. ஆசைக்கு அவளைக் கட்டி
அழகுக்கு மகளைக் கட்டி
சேர்ந்து வாழச் சின்னம்மாவைக் கட்டி
கூடிவாழக் கொழுந்தியாளைக் கட்டி
நாலுபேரையும் கட்டி
நாசமாய்ப் போனேன்: அவை என்ன?

– வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு

300. ஆசைக்கும் பூசைக்கும் அடியேன் தேவை
விழுகின்ற குழந்தைக் கென்நேசம் வேண்டும்
பசிப்பிணியன் கண்டாலோ விடவே மாட்டான்
அடியேனும் ஒருதாய்க்கோர் பிள்ளையப்பா. நான் யார்?

– வாழைப்பழம்

301. ஆசை வந்தது அப்ப
கரு வந்தது இப்ப
பாதி நுழைந்தது அப்ப
முகம் சுழிச்சது இப்ப
சரியா நுழைந்தது அப்ப
சந்தோஷப்பட்டது இப்ப. அது என்ன?

– வளையலணிதல்

302. ஆட்டம் போடுவாள் ; ஆடி முடிந்ததும்
மூலையில் சேருவாள். அது யார்?

– துடைப்பம்

303. ஆட்டமும் பாட்டமும் அதனாலே
தேட்டமும் ஊட்டமும் அதனாலே
கூட்டமும் நாட்டமும் அதனாலே

– காற்று

304. ஆட்டிவிட்டால் ஆடுவது
அந்தரத்தில் தொங்குவது. அது என்ன?

– ஊஞ்சல்

305. ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரட்டைக்கொம்பு
இந்த அய்யாவு மாட்டுக்கோ ஒத்தைக் கொம்பு
அத்தைப் பிடிக்கப் போனேன் ஐய்யய்யோ காணலை.

– நத்தை

306. ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு
அந்த அற்புத மாட்டுக்கு மூன்று கொம்பு
ஆனாலும் ஒற்றை ஒரு கொம்பு கொண்டே
யாரையும் வெட்டுமாம் கேளு பெண்ணே!

– **நெருஞ்சிமுள்**

307. ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு
அய்யங்காருக்கு மூன்று கொம்பு.

– **நெற்றியில் போடும் மூன்றுநாமம்**

308. ஆட்டுக்கும் மாட்டுக்கும் ரெண்டு கொம்பு
அம்மன் பிடாரிக்கு மூணு கொம்பு. அது என்ன?

– **தாலி**

309. ஆடச்சொல்லி சட்டை போடுவான்
ஆடும் முன்பே கழற்றிவிடுவான். அவன் யார்?

– **பம்பரம்**

310. ஆடாடுந் தேவடியா
அழுந்தாடுந் தேவடியா
ராசாவின் மடியிலே
இருந்தாடுந் தேவடியா

– **ஈ**

311. ஆடாத அழகி ஆடு என்று பெயர் பெற்றாள். அவள் யார்?

– **ஆடு**

312. ஆடி அசைந்து வர, அடியில் சிந்தி வர,
கூடிய பெண்கள் குடுமியை ஆட்டி வர. அது என்ன?

– **திருகை**

313. ஆடி அசைந்து வர அதன்மீது குதிரை வர
கூடி ஊரெல்லாம் கொட்டோடு இழுத்துவரும்
கூண்டே பெருங் கூண்டுதான்.

– **இரதம்**

314. ஆடி அசைந்து வரும்; அங்கம் வளைந்து வரும் ;
தங்கநிற மணிக்கொத்தாய் தலைசாயும் நேரத்தில்,
கண்டார் களிப்படைவார் காசினியிலே. அது என்ன?

– **நெற்கதிர்**

315. ஆடி அசைந்து வரும்
அங்கம் வளைந்து வரும்
தலைசாயும் நேரம் பார்த்து
காத்திருப்பான் விவசாயி. அது என்ன?

– **கதிர்**

316. ஆடி ஆடி அசைந்து வரும்
ஆத்திரம் வந்தால் பொங்கிவரும். அது என்ன?

– கடல் அலை

317. ஆடி ஆடி நடப்பான். அரங்கதிர நடப்பான். அவன் யார்?

– யானை

318. ஆடி ஓடி தேடிய பொருளை,
அதிதியாக அன்று வந்தவன்,
ஆட்டைத் தின்று மாட்டைத் தின்று
ஆளைக் கொன்று போட்டானே.

– மதுக் குடி, கள் குடி

319. ஆடி ஒய்ந்ததும் அம்மணி வருவாள். அவள் யார்?

– ஆவணி

320. ஆடியில் விதைத்து, ஆற்றுக்கால் பாய்ச்சி
அளந்த நாளுக்கு அப்புறம் ஆளானாள் பொண்ணு.
அவளுக்குத் தாலி யாரும் கட்டவில்லை. ஆயினும்
பிள்ளை ஆத்தாள் பெற்றாள்
பெற்றவள் வீதியிலே பிறந்தவளோ கொலுவிலே

– வைக்கோல், நெல்

321. ஆடினால் அசருவான். அவன் யார்?

– தொட்டில், குழந்தை

322. ஆடிவரும் ஆனாலும் தாசியல்ல; ஆடுகையில்
சீறிவிழும்; இடத்தில் போகும்; மூடித்திறந்துவிட்டால்
முகத்தைக் காட்டும்; முக்கண்ணனான
சிவன் உடம்பில் வாழும். அது என்ன?

– நாகப்பாம்பு

323. ஆடும்போது சீறும். ஆடிக்
குடத்தில் அடையும். அது என்ன?

– எண்ணை

324. ஆடு மேய்கிறது; கறி வேகிறது; தோல் காய்கிறது.

– முட்டை

325. ஆடு மேயுது; தோல் காயுது. அது என்ன?

– பாம்பு

326. ஆடுவதும் ஓரழகு அசைவதும் ஓரழகு
அதன் வாசலில் அழகுப் பெண் கைகள்
போடுவதும் ஓரழகு. பூவாய்ச் சுற்றிச்
சிந்துவதும் அழகே அழகு!

– திருகை

327. ஆடை உடுத்திருக்கும் பெண்ணும் அல்ல
அதனுள்ளே முத்திருக்குஞ் சிப்பியல்ல
தாடியுண்டு மீசையுண்டு கிழவனல்ல
தக்கதோர் உணவாகும் மக்களுக்கே. அது என்ன?

– மக்காச்சோளம்

328. ஆடையில்லாத கறுப்பழகி
ஆடிச் சுழன்று பாடுகிறாள். அவள் யார்?

– இசைத்தட்டு

329 ஆண்டவனுக்கு வேண்டியவன் சிதறிப் போனாலும்
சிறப்புத்தான் அவனுக்கு. அவன் யார்?

– தேங்காய்

330. ஆண்டுக்கு ஆண்டு அழகாய் உரு மாறிவரும். அது என்ன?

– காலண்டர்

331. ஆண்டுக்கு ஆண்டு அழகாய் உரு மாறிவரும். அது என்ன?

– உருவம்

332. ஆண்டுக்கு ஆண்டுக்கு வரும் வரி
அடுத்தடுத்து வரும் வரி.

– ஜனவரி, பிப்ரவரி (ஆண்டுதோறும் போடும் விற்பனை வரி, வருமான வரி, வீட்டுவரி முதலியன)

333. ஆணியை எதில் அடித்தால் இறங்கும்?

– அதன் தலையில்

334. ஆத்தாள் சடைச்சி அப்பன் சொறியன்
நானோ சர்க்கரைக் குட்டி.

– பலாப்பழம்

335. ஆத்தாள் பிள்ளைத்தாச்சி
அப்பன் ஊர்சுற்றி.

– பரங்கிக்காய், பரங்கிக்கொடி

336. ஆத்தி மரத்தடியில் கல்லுக்கும் முள்ளுக்கும்
வேலி அடைக்கிறான் ஒருவன். அவன் யார்?

– செருப்பு

337. ஆத்திலே குளத்திலே அந்தி நேரம் விடியல்லே
சீக்கோ ஜுரமோ இல்லையாம். சின்னப்பொண்ணு
மல்லவே சிறுக அனத்தல் செய்வதார்?

– சலவைத் தொழிலாளி

338. ஆத்துக்குக் குடம் எடுத்துப் போறவளே
உம் ஆம்படையானை எங்கே - அவுக
செத்தவுகளைக் கொண்டு வித்துப்புட்டு வருவாகளாம்
– கருவாடு

339. ஆத்துமணலை அள்ளித்தின்போம் நாங்க ஒரு சாதி
கல்லை உடைத்து தின்போம் நாங்க ஒரு சாதி
ஒணானை உரிச்சித் தின்போம் நாங்க ஒரு சாதி.
நாங்கள் யார்?
– சீனி, கற்கண்டு, வாழைப்பழம்

340. ஆத்தோரம் கோலமணிப் பூச்சு
அஞ்சாறு மைலுக்கு அத்தர் மணவீச்சு,
இதைக் கண்டுபிடிச்சாச்சு என்றால்
ஏழறிவு நமக்கு வந்தாச்சு!
– தாழம்பு

341. ஆதவன் உதித்தால் மறைந்திடுவான்
ஆயிரம் விளக்கை அணைத்திடுவான். அது யார்?
– இருள்

342. ஆதார ஊரில் ஆனை செத்துக் கிடக்குது
அஞ்சு ஆள் போய் இரண்டு ஆள் இழுத்து வருது.
– மூக்குச் சளி

343. ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே
பச்சைப்பாம்பு தொங்குகிறது.
– புடலங்காய்

344. ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது. அது என்ன?
– எலுமிச்சம்பழம்

345. ஆயிரஞ் சரக்கில் அக்கா என்கிற சரக்கு
என்ன சரக்கு?
– சீயக்காய்

346. ஆயிரம் கண்கொண்ட அழகுக்குதிரை
கோயில் குளக்கரை கூவும் குதிரை
மேகத்தைப் பார்த்ததும் மினுக்கும் குதிரை
மெதுவாகத் தலை ஆடி நடமாடும் குதிரை.
– மயில்

347. ஆயிரம் கண்ணழகி
அசந்த நேரத்தில் உறங்க வைப்பாள். அவள் யார்?
– நார்க்கட்டில்

348. ஆயிரம் கம்பிக்கு அடிக்குட்டி ஒன்று.

– வாரியல் (துடைப்பம்)

349. ஆனை அசைந்து தின்னும்
அடுப்பு அசையாமல் தின்னும்.

– விறகு

350. ஆயிரம் குழந்தைகளுக்கு அரைஞாண் ஒன்று.

– துடைப்பம்

351. ஆயிரம் தச்சர் கூடி
அழகான மண்டபம் கட்டி
ஒருவன் கண்பட்டு
உடைந்ததாம் மண்டபம். அது என்ன?

– தேன்கூடு

352. ஆயிரம் நூல் பின்னலில் சுவையான பலகாரம். அது என்ன?

– இடியாப்பம்

353. ஆயிரம் பணம் பெறும் குதிரைக்கு அது இல்லை
அண்ணன் மனைவிக்கு இது இல்லை.

– கொம்பு, மீசை

354. ஆயிரம் பேர் அணிவகுத்துப் போனாலும்
வந்த சுவடு தெரியாது. அவர்கள் யார்?

– எறும்பு

355. ஆயிரம் பேர் அணிவகுப்பிலும்
பொட்டுத் தூசி கிளம்பாது. அது என்ன?

– எறும்பு

356. ஆயிரம் பேர் கட்டிய மணிமண்டபம்
ஒருவன் கண்பட்டால் அழியும் அந்த மண்டபம்.

– தேன்கூடு

357. ஆயிரம் பேர் கூடிவரும் அழகர் மலை. அது என்ன?

– தேர்

358 ஆயிரம் பேருக்கு நேரே
ஆத்தங்கரை ஓரத்திலே
கட்டிப்பிடிக்கிறான் கள்ளப்பயல்
கன்னத்தைக் கடிக்கிறாள் கன்னியவள். அது என்ன?

– திரைப்படம்

359. ஆயிரமாய்க் கூடச் செய்யும்
ஆரவாரம் எழுப்பச் செய்யும்

ஆடிப்பாடி விளையாடும்
அடங்கிவிடும் பெட்டிக்குள். அது என்ன?

– திரைப்படம்

360. ஆரஞ்சிக் காட்டிலே ஈரைந்து விட்டேன்
வந்தால் பதினைந்து வராவிட்டால் ஒரைந்து. அது என்ன?

– நண்டு

361. ஆரம்ப எழுத்து ஏழு. அதுக்கு அடுத்தது கால்.
காலுக்குப் பின்னால் ஐந்து போட்டால்
யார் என்று தெரியுமே.

– எவர்?

(தமிழ் எண் 7க்கு ‘எ’ வரும் கால் என்பதை ‘வ’ என்று எழுதுவர்.)

362. ஆரம்பத்தில் உப்புவான்.
அப்புறமாய் தினமும் மெலிவான். அவன் யார்?

– தினசரி காலண்டர்.

363. ஆராக் கோத்திருக்கு
கொழம்பு நீத்திருக்கு
கூழு பேத்திருக்கு. அது என்ன?

– செக்கு, எண்ணெய், பிண்ணாக்கு

364. ஆராசூர் ஏரியிலே
அறுபத்தி எட்டுத் தென்னைமரம்
காயும் இல்லை பூவும் இல்லை
காக்கை உட்கார நிழலும் இல்லை.

– கண் இமை

365. ஆராலோடிய குளத்திலே
அழகுச் சதுர வயலிலே
ஏரும் இல்லாமல் கலப்பையும் இல்லாமல்
எட்டு நாளைக்கு ஒரு வெள்ளாமை

– உப்புப்பாத்தி

366. ஆருமில்லா இடத்தில் அங்கம்மா குடைபிடிக்கிறாள்.

– காளான்

367. ஆலமரத் தடியிலே ஓர் ஆந்தை
அதற்கு ஆயிரங்கண் அதைக் கண்டுபிடித்தவனுக்கு
ஒரு பெண். அது என்ன?

– சல்லடை

368. ஆலமரம் தூங்க
அவனியெல்லாம் தூங்க
ஸ்ரீ ரங்கம் தூங்க

திருப்பாற்கடல் தூங்க
ஒருவன் மட்டும் தூங்கவில்லை. அவன் யார்?

– மூச்சு

369. ஆலிலை உதிர்வதேன்
இராவழி நடப்பதேன்?

– பறிப்பாரில்லாமல்

370. ஆவணி பிறப்பது எதனால்?
நாடகம் முடிவது எதனால்?

– ஆடி முடிவதால்

371. ஆவோ
செங்கால் நண்டே
செவ்வந்திப் பூவே
அட்டிகை மணியே
அந்தி வேளையிலே
பெட்டியிலே அடை. அது என்ன?

– சூரியன்

372. ஆழ்கடலில் கண்டெடுப்பர் ; யானை விலைதான் பகர்வர்.
அரிவையின் மணிக் கழுத்தில் அதைக் கோர்த்தே
அணிவர். அது என்ன?

– முத்து

373. ஆழ்கடலில் தோன்றும்
இதற்கு விலையோ ஆயிரமாயிரம். அது என்ன?

– முத்து

374. ஆழக் குழிபறித்து நீள விதைபோட்டு
வருஷம் ஐந்தாகியும் முளைத்து வரவில்லை.

– பிணம்

375 ஆழக் குழி வெட்டி
அதிலொரு முட்டையிட்டு
அண்ணாந்து பார்த்தால்
ஆயிரம் முட்டை.

– தேங்காய்

376. ஆழக் குழி வெட்டி
அதிலே ஒரு முட்டையிட்டு
அண்ணாந்து பார்த்தால்
தொண்ணூறு முட்டை.

– பனைமரம்

377. ஆழம் காணாக் கடல் எனக்கு ஆழமில்லை
அல்லும் பகலும் உழைத்திட்டாலும் அலுப்புமில்லை

ஆயிரம் பேர் உதைத்திட்டாலும் நோயுமில்லை
அக்கரையோ எக்கரையோ கவலை இல்லை. நான் யார்?

– கப்பல்

378. ஆள் இரண்டுக்கு ஆசனம் ஒன்று.

– கருவேலமுள்

379. ஆள் இறங்காத கிணற்றில்
மயிலிறங்கி ஆடுது. அது என்ன?

– அகப்பை

380. ஆள் இறங்காத கிணற்றிலே
மயில் இறங்கி தண்ணீர் குடிக்குது.

– நீர் இறைக்கும் வாளி

381. ஆள் இறங்காத கிணற்றுக்குள்
மரம் இறங்கிக் கூத்தடிக்குது.

– தயிர்கடையும் மத்து

382. ஆள் ஏறாத மலையில்
ஆயிரம் பூப் பூத்திருக்கு.

– விண்மீன் (நட்சத்திரம்)

383. ஆள் ஏறும் குதிரைக்கு
அங்கம் எல்லாம் கண். அது என்ன?

– நார்க்கட்டில்

384. ஆளில்லாத வீட்டில் கண்ணில் படுவான். அவன் யார்?

– பூட்டு

385. ஆளில்லாத வீட்டில் கண்ணில் படுபவன். அவன் யார்?

தூசு

386. ஆளில்லாத வீட்டிலும் அழகான தோரணம் கட்டுவான்.
அவன் யார்?

– சிலந்தி

387. ஆற்றங்கரை ஓரமாக ஆடை ஏதும் இல்லாமல்
ஐயோ அந்தத் தவசி ஏன் ஒற்றைக்காலில்
அரும் தவம் செய்கிறான்?

– கொக்கு

388. ஆற்றங்கரையினிலே ஒரு பாம்பு
அசைந்து அசைந்து புரண்டாலும்
கரையைக் கடப்பதில்லை. அது என்ன?

– நாக்கு

389. ஆற்றில் விழுந்தாலும் நனையாது.
குளத்தில் விழுந்தாலும் நனையாது. அது என்ன?

– சூரிய ஒளி

390. ஆற்றிலே இரண்டு மரம் கொக்கரிக்குது
அலையனூர் தேர்வந்து நிலை நிக்குது
வெள்ளைக்காரன் சீமையிலே விளக்கெரியுது
விடிய விடியக் கூத்துப் பார்த்துக் கண்ணெரியுது.
அது என்ன?

– புகைவண்டி

391. ஆற்றிலே பத்து மரம்
அசையுது பிடுங்க முடியவில்லை.

– விரல்கள்

392. ஆற்றிலே மேயுது அண்ணே! அண்ணே!
அழுக்கெல்லாம் விழுங்குது அண்ணே! அண்ணே!
அது என்ன?

– மீன்

393. ஆற்றிலே ரெண்டு பிள்ளை தத்தளிக்குது
அக்கரையில் தேர்வந்து நிலைக்கு நிற்குது
வெள்ளைக்காரன் சீமையிலே விளக்கெரியுது
விடிய விடியக் கூத்துப் பார்த்துப் பூத்துப் போச்சு கண்.
அது என்ன?

– கப்பல்

394. ஆற்றுக்கு அக்கரையில்
ஐந்தாறு தென்னைமரம்
காய்க்காது பூக்காது
கண்ணுக்கு எட்டாது. அது என்ன?

– புருவம்

395. ஆற்றுமணல் போலே
ஐயனார் பூதம் போலே
தேங்காய்த் தண்ணீர் போலே
எருமைச் சாணம் போலே. அவை என்ன?

– எள், செக்கு, எண்ணெய் பிண்ணாக்கு

396. ஆற்று மணலை
அள்ளி அள்ளித் தின்போம்

பாராங்கல்லைக்
கடித்துக் கடித்துத் தின்போம்.

– சர்க்கரை, கற்கண்டு

397. ஆற்று மணலை அள்ளித் தின்கிற
நாங்கள் ஒரு சாதி
ஓணாய் கொடியை ஒடித்துத் தின்கிற
நாங்கள் ஒரு சாதி.

– சர்க்கரை, பனங்கிழங்கு

398. ஆற்று மணலோ மணல்
அரசன் கோட்டையோ கோட்டை
கறந்த பாலோ பால்
கருப்பட்டியோ கருப்பு கருப்பு.

– எள், செக்கு, எண்ணெய், பிண்ணாக்கு

399. ஆற்றைக் கலக்கும்
அக்கரை போகும்
தண்ணீரில் கலக்காது
தானும் நனையாது. அது என்ன?

– குரல்

400. ஆற்றைப் பறிக்கிறது ஒன்று
ஆற்றைத் தாண்டுவது இரண்டு
செடியை வளைக்கிறது மூன்று
செடிக்குள்ளே புகுவது நான்கு

– நண்டு, மீன், அலக்கரிவாள், வெள்ளாடு

401. ஆற்றோரம் ஏகதாளம், ஆர்ப்பாட்ட ஆரவாரம்
இடைப்பட்ட வேளையிலே எச்சில் இரைக்கு ஆளாகி
ஏமாந்து போனீர்களோ.

– மீன்

402. ஆற்றோரம் பிறந்து அழகழகாய் விரிந்து
சந்தைக்கு வந்து, மாமன் வாங்கிப் போனால்,
மங்கை நல்லாள் சிரிப்பாள்! அது என்ன?

– கோரைப்பாய்

403. ஆற்றோரம் போகும் கடாவுக்கு
கிள்ளிப்பிடிக்க மயிர் இல்லை.

– ஆமை

404. ஆறடி உயரத்தில் ஆடும் தொட்டில். அது என்ன?

– குருவிக்கூடு

405. ஆறடிமேல் அடித்தூங்கி
அருகடல் மீன் தூங்கி
சீரகமும் தூங்கி
திருப்பாற் கடல் தூங்கி
பாலும் தூங்கி, பழமும் தூங்கி
பாதி நிலாவும் தூங்கி
ஊரெல்லாம் தூங்கி
ஒருவனுக்குத் தூக்கமில்லை. அது என்ன?

– மூச்சு

406. ஆறான், தூறான் ஏரியில்
அறுபத்தியெட்டு தென்னைமரம்.
காயும் இல்லை, பூவும் இல்லை
காக்கா உட்கார நிழலும் இல்லை. அது என்ன?

– கண்புருவம்

407. ஆறில்லா ஆறு, அழகான ஆறு
ஊருப்பேரு பாரு உரைக்கலாமா கூறு?

– கோட்டாறு

408. ஆறு அடி நிலத்திலே ஆண்டாண்டு முந்தியே
ஆழநீளம் விதைச்சது அதுவும் இன்னும் முளைக்கலை.

– பிணம்

409. ஆறு எழுத்துள்ள ஒரு உலோகப் பெயர்
அதன் கடை மூன்று எழுத்துக்கள் சேர்ந்தால்
ஒரு கொடிய பிராணி. அந்த உலோகத்தின் பெயர் என்ன?

– துத்தநாகம்

410. ஆறு எழுத்துக்களடங்கிய ஒரு ஊரின் பெயர்
1,5,6 எழுத்துக்களைச் சேர்த்தால் தலையாகும்.
5, 6, 4, 3 எழுத்துக்களைச் சேர்த்தால் தச்சர் கருவியாம்
4, 2, 3 எழுத்துக்களைச் சேர்த்தால் வெந்தது பார்க்கும் முறையாம்
2,3,4,6 எழுத்துக்களைச் சேர்த்தால் தூணாகும்
2, 5, 6 எழுத்துக்களைச் சேர்த்தால் வகுப்பாம்
4, 5, 6 எழுத்துக்களைச் சேர்த்தால் ஆதிகடவுளாம்
இந்த ஊரின் பெயர் என்ன?

– சிதம்பரம்

சிரம், ரம்பம். பதம்

தம்பம், தரம், பரம்

411. ஆறு எழுத்துக்கள் உள்ள ஒரு பொருள்.
அதை வாசித்தால் இனிமையாயிருக்கும்.
அதன் கடை நான்கு எழுத்துக்கள் சேர்ந்தால்
ஓர் உலோகம். முதல் இரண்டு கடை நான்கு
எழுத்துக்கள் சேர்ந்தால் விலங்கின் வேறு பெயர்.
அது என்ன?

– மிருதங்கம்

412. ஆறு கால் கோழி அடா அதற்கு
எள் போல் கண்களடா.

– ஈ

413. ஆறு கால் நாலு ரெக்கை
அடிக்கடி மேலே பாயும்
ஈ என்று இளிச்சவாயா
இக்கதையை விளம்புவாயே!

– ஈ

414. ஆறு பைசாவுக்கு ஆறேழு காதம்பறந்து
அடிபட்டுக் குத்துப்பட்டு வீடுவந்து கிடக்கும்.

– தபால்கார்டு

415 ஆறு மதில் கோட்டை அழகு பச்சை மூட்டை
ஊறுகாய்க்கு உதவான் பிழி சாறு பீறிடும்!

– ஆரஞ்சுப்பழம்

416. ஆறு மாத பெண்ணுக்கு
அடி வயிற்றில் கர்ப்பம்
எண்ணிப் பார்த்தால்
எழுபது பிள்ளை. அது என்ன?

– நெல்

417. ஆன்றோர் பரம்பரையில்
அழியாத ஓவியம்
சான்றோர் போற்றும்
சிறப்பான பெட்டகம். அது என்ன?

– தாஜ்மகால்

418. ஆஜானுபாகு அண்ணாச்சி
அடி அடி என்று அடித்தாச்சு,
அண்ணாச்சியோ அசைந்து கொடுக்கலியே.

– தூள்

419. ஆனை அசைந்துவர
அருமிளகு சிந்திவர
கொத்தளத்துப் பெண்களெல்லாம்
கூடிக்குலவையிட அவை யாவை?

– **மேகம், மழைத்துளி, தவளை**

420. ஆனை சேனை அறுபது பேர் கூடி
வாளறுத்துக் கூறுபோட்டு வன்னிமரம் பிளந்து
நாலு கால் சிலம்பு கட்டி
நடுத்தெருவில் போற பெண்ணே

– **இரதம்**

421. ஆனை ஏறாத மலையிலே
ஆடு ஏறாத மலையிலே
ஆயிரம் பூப் பூத்திருக்கு. அது என்ன?

– **விண்மீன்**

422. ஆனைக்காது தண்டி
ஆயிரந்தோசை தின்றாலும்
பச்சிலை பசியடங்காது. அது என்ன?

– **வெற்றிலை**

423. ஆனைக்குத் தின்பண்டம் அனைவரும் விரும்பும் இதனால்
அடிபட்டால் வலிக்கும் கடிபட்டால் இனிக்கும்.

– **கரும்பு**

424. ஆனைக்கும் குதிரைக்கும் எட்டாத தண்ணீர்
தொண்டைமான் குதிரைக்கு தொடையளவு தண்ணீர்.
அது என்ன?

– **தவளை**

425. ஆனைக் கொம்பு இரண்டு
அதோடு திரிகிற இந்த யானை
எந்த யானைக்கும் முந்தி
எப்போதும் போகாத யானை.
இது எந்த ஆனை?

– **முந்தானை**

426. ஆனைகிரி மலைமேலே
ஆடுகின்ற பச்சைமயில்
கள்ளர்கையில் குத்துப்பட்டுக்
கலங்கும் அந்தப் புள்ளிமயில். அது என்ன?

– **தையல் இலை**

427. ஆனை சேனை அறுபது
வாளறுத்துக் கூறுபோட்டு வன்னிமரம் பிளந்து
நாலுகால் சிலம்பு கட்டி
நடுத்தெருவில் போற பெண்ணே. நீ யார்?

– தேர்

428. ஆனை போகிறது . தரை தெரியவில்லை. அது என்ன?

– பரிசல்

429. ஆனை போட்ட முட்டையா அம்மாம்ம பெரிசு இருக்குது?
ஏனோ அதுவும் கயிற்றிலே இப்படிக் குந்தி வாடுது?

– பூசணிக்காய்

430. ஆனை போய் ஆறு மாதம்
ஆய்தாரை அப்படியே இருக்கிறது. அது என்ன?

– வாய்க்கால்

431. ஆனை போல அசையும் ஆமை போல நடக்கும்
ஊமை உருளாவிட்டால் ஊருக்கு வழியே கரடாம்!

– ரோடு இஞ்சின்

432. ஆனைமலைப் பக்கத்திலே யாருமில்லாக் காட்டிலே
கொய்யாப்பழம் பலப்பல குவிந்து நிறையக் கிடக்குது.

– கும்மட்டிக்காய்

433. ஆனையில்லா ஆனை என்ன ஆனை?

– முந்தானை

434. ஆனை விரும்பும், சேனை விரும்பும்
அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும்.

– கரும்பு

435. இனிமை மாறி ஏக்கம் வந்தது.
குணம் மாறி குற்றம் வந்தது. அது என்ன?

– தனிமை, பணம்

436. இக்குனிப் பிள்ளைக்குத் துக்குணி நாமம். அது என்ன?

– உளுந்து

437. இங்கிருந்து பார்த்தால் இங்கிலீசுக் கோட்டை
புட்டுப் புட்டுப் பார்த்தால் புளியங்கொட்டை

– கற்றாழைக்காய்

438. இங்கிருந்து பார்த்தால் இரும்பாய் இருக்கும்
கிட்டப் போனால் தங்கநிறமாய் இருக்கும்.

– பனம்பழம்

439. இசைத்தால் வணங்கும்
இம்சை செய்தால் வஞ்சிக்கும். அது என்ன?

– நல்லபாம்பு

440. இட்டேன் எடுக்க முடியவில்லை. அது என்ன?

– **கோலம்**

441. இட்டேன் எடுக்க முடியவில்லை
பூசினேன் புட முடியவில்லை.

– **கோலம், மஞ்சள்**

442. இடிபிடி கப்பல் பொறுக்கி
அரண்மனை வாசல் கட்டிப்
பார்க்க வந்த ராசாக்கள்
பளபளவென்று சிரித்தார்கள்: அது என்ன?

– **மீன்வலை**

443. இடியும் மின்னலும் இங்கே உண்டு
முடிவில் வருவது மழையல்ல புகை. அது என்ன?

– **பட்டாசு**

444. இண்டம் புதரிலே இடிவிழுந்த இடத்திலே
நான் வைத்த பணியாரம் நையவே இல்லை. அது என்ன?

– **தேன்கூடு**

445. இணைபிரிய மாட்டார்கள் நண்பர்கள் அல்ல
ஒன்று சேரமாட்டார்கள் பகைவர்கள் அல்ல.

– **ரயில் தண்டவாளம்**

446. இணையான நண்பர்கள், இணையாத நண்பர்கள்.
அவர்கள் யார்?

– **ரயில் தண்டவாளம்**

447. இத்தனூண்டு சிட்டுக்குருவி
இழுத்து இழுத்து முள் அடைக்கிறது.

– **ஊசி**

448. இத்தனூண்டு சிட்டுக்குருவிக்கு
எட்டு சுத்துப் பாவாடை! அது என்ன?

– **வெங்காயம்**

449. இத்தனூண்டு பையன் ஓடி ஓடி வேலி நடுறான்.
அவன் யார்?

– **ஊசி**

450. இத்தனை தண்ணியிலே சித்திரைப் பூ.

– **எண்ணெய் விளக்கு**

451. இத்தனையுண்டு பூனைக்குட்டி
வைத்ததெல்லாம் சுமக்குது.

– **அடுப்பு**

452. இத்தினி இத்தினி மண்டைக்காரன்
ஊரெல்லாம் சண்டைக்காரன்.

– தீக்குச்சி

453. இத்தினி புத்தரிசி இருந்து கொழுந்துவிடும்
எங்க அண்ணனுக்கும் அண்ணன்
தேவிக்கும் கடலாசிக்கும் பரதேசிக்கும். அது என்ன?

– மரிக்கொழுந்து

454. இத்தினியுண்டு சிட்டுக்குருவிக்கு
ஏழு முழம் சித்தாடை.

– வெங்காயம்

455. இத்தினியோண்டு பையனுக்கு
இத்தினியோண்டு முண்டாசு அது என்ன?

– தீக்குச்சி

456. இத்துாண்டு கிட்டாருக்கு ஏழு சுற்றுக் கண்டாங்கி.
அது என்ன?

– வெங்காயம்

457. இதயம் போல் துடிதுடிக்கும்
இரவு பகல் விழித்திருக்கும்.

– கடிகாரம்

458. இதயம் போல் துடிப்பிருக்கும்.
இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன?

– கடிகாரம்

459. இது அசுத்தமாக இருக்கும்போது
வெள்ளையாக இருக்கும், சுத்தமாக இருக்கும்போது
கருப்பாக இருக்கும். இது என்ன?

– கரும்பலகை

460. இது வரையில் இல்லாதது; எப்போதும் இருப்பது;
யாரும் பாராதது. அது என்ன?

– நாளையதினம்

461. இதுவரையில் நீ ஒருநாளும் இல்லாதவிடத்தில்
நான் உன்னைப் பலதரம் கண்டேன்;
இனிமேலும் நீ ஒருநாளும் அவ்விடத்திற்கு
வரமாட்டாய், ஆயினும் எந்நாளும் அவ்விடத்தில்
நான் உன்னைக் காண்பேன். நான் யார்?

– நேற்று

463. இதை மேசையின் மீது போட்டு வெட்டுவார்கள்
ஆனால் இது துடிக்காது இதன் உயிர் போகாது. இது என்ன?

– சீட்டுக்கட்டு

464. இந்த ஊரில் தாளித்தால்
ஈரோட்டில் மணக்குமாம். அது என்ன?

– தந்தி

465. இந்த ஊரிலே அடிபட்டவன்
அடுத்த ஊரிலே போய்ச் சொல்லுகிறான். அவன் யார்?

– தந்தி

466. இந்தக் கறை இருந்துவிட்டால்
வாழ்க்கை முழுவதும் இன்பமயம்தான்
அது எந்தக் கறை?

– அக்கறை

467. இந்தப் பிள்ளை பெரியவனானால்
படிக்காமலேயே பலன் தருவான். அவன் யார்?

– தென்னம்பிள்ளை

468. இந்து மறைவதேன்?
இலங்கை அழிவதேன்?

– இரா மந்தாரம்
இராமன் தாரத்தால்

469. இப்ப குதிச்சவன் எப்போதும் இளிப்பவன்.

– சோளப்பொரி

470. இமயத்தில் உள்ள முனி இரண்டு கட்டிக் கொடுத்தார்.
ஒன்று கொளுத்தினேன் நின்று எரியுது.
மற்றொன்றை எரித்தேன் மக்கிப்புகை வீசுது. இவை என்ன?

– சூடம், சாம்பிராணி

471. இரட்டைக் கிளையில் ஒற்றை ஓணான். அது என்ன?

– இரயில்

472. இரட்டைக்குதிரை கோடி
கல்லுமுள்ளு நாடி
களைக்காமல் ஓடி
காலைப் பார்த்து வாடி. அது என்ன?

– செருப்பு

474. இரட்டை மதகுப் பாலத்தில்
யாரும் போக முடியல்லை

– மூக்கு

475. இரண்டாம் புதரிலே இடி விழுந்த இடத்திலே
நான் வைத்த பணியாரம் நையவே இல்லை.

– தேன்கூடு

476. இரண்டு எழுத்தில் ஒரு வார்த்தை ; இல்லாளுக்கு அம்மா இவளோட போட்டு எவர் என்று மிரட்டி மரியாதை கொடய்யா.

– மாமியார்

477. இரண்டு எழுத்துக்களால் ஆகிய ஒரு ஊரின் குறுகிய பெயர். முதலெழுத்து கண்டத்திற்கு மேற்பட்ட சிரசிலுள்ள ஒன்றையும் இரண்டாவதெழுத்து அந்த ஊரின் பெயரை எழுதுவதற்கு வேண்டிய ஒன்றையும் குறிக்கும். அந்த ஊரின் பெயர் என்ன?

– நாகை

478. இரண்டு கண் படைத்திருக்கும் இரண்டு காலுண்டு
வயிற்றிலே கத்தியைக் கட்டிக்கொண்டு
வந்தவர்களை வெட்டி விழுங்குவான்.
இவனைப் பாக்குத்தின்னும் பித்தன் என்று
அழைப்பது பொருந்தும். இவன் யார்?

– பாக்குவெட்டி

479. இரண்டு கால் உண்டு
எட்டிப் பிடிக்க முடியாது.
நான்கு கால் உண்டு
நடந்து செல்ல முடியாது.
முதுகு உண்டு, முகம் இல்லை.

– நாற்காலி

480. இரண்டு காலுக் குதிரை இரயிலைப் போல ஓடும்
இறக்கை இருந்தும்கூட ஏனோ பறக்க முடியலை?
என்ன இது?

– தீக்கோழி

481. இரண்டு கிணற்றுக்கு ஒரே பாலம். அது என்ன?

– மூக்கு

482. இரண்டு குகை ஒரு சிகரம்.

– மூக்கு

483. இரண்டு குண்டு தோண்டினேன்
ஒரு கம்பு நாட்டினேன். அது என்ன?

– அகப்பை

484. இரண்டு கையுண்டு
எட்டிப் பிடிக்க முடியாது
நான்கு கால் உண்டு

நடந்து செல்ல முடியாது
முதுகு உண்டு முகம் இல்லை. அது என்ன?

– நாற்காலி

485. இரண்டு தட்டுக்காரி அவள்
என்றும் நியாயம் பேசுவாள்.

– தராசு

486. இரண்டு தோட்டம் நான்கு வேலி
பூப் பூத்தால் பூந்தோட்டம் பாழ்.

– கண்

487. இரண்டு நாள் மழைக்குள் குடை பிடிப்பான். அது யார்?

– காளான்

488. இரண்டு பெண்கள்
இரட்டைப் பிறவிகள்
ஒருத்தி கீழே வந்தால்
ஒருத்தி மேலே போவாள்.

– தராசுத் தட்டுக்கள்

489. இரண்டு பொருளும் வெண்மை இவை நீரில் கலந்தால்
வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்த ஏற்படுத் தன்மை

– உப்பு, சர்க்கரை

490. இரண்டும் ஒரு நிறம் பார்க்கிறது வெகுதூரம்
அன்னம் தண்ணி அருந்தாது ஒரு கூட்டில் அடையாது.

– கண்

491. இரண்டு மாடு இழுத்துவர, ஒருவன் ஓட்டிவர
'ணொய்' என்று கத்திவர, நெய் உருகி வர
சக்கையெல்லாம் சேர்ந்துவர வருவது. அது என்ன?

– செக்கு

492. இரண்டு மாடுண்டு நாலு காலுண்டு
கண்ணுண்டு கறப்பதில்லை. அது என்ன?

– கயிற்றுக்கட்டில்

493. இரண்டு வீட்டிலும் அண்ணன் தம்பிகளாய் ஐவர்
வணங்கும்போது ஒன்று சேர்வர். அவர்கள் யார்?

– பத்து விரல்கள்

494. இரண்டு வீட்டுக்கு ஒரு விட்டம்.

– மூக்கு

495. இரண்டு வீட்டிற்கு ஒரு தண்டியம். அது என்ன?

– மூக்கு

496. இரண்டே தோலில் முத்து வரும். அது என்ன?

– பூண்டு

497. இரணியனைப் பிளந்தவனை
அறுத்தெடுத்து வருவாயேல்
மனமகிழ இரு கைக்கும்
வெகுமானம் தருவேன். அது என்ன?

– நகம்

498. இரத்தத்திலே வளர்வது இரத்தம் இல்லாதது.

– நகம்

499. இரத்தம் குடிப்பான் கண்ணுக்குத் தெரியாதவன்.
அவன் யார்?

– மின்சாரம்

500. இரத்தினமும் மாணிக்கமும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்
இரத்தினத்திற்கு மாணிக்கம் சகோத்ரன். மாணிக்கத்திற்கு
இரத்தினம் சகோதரன் அல்ல.

– சகோதரி

501. இரப்பிலே முடக்கியே எச்சில்
நூல் ஏணியில் உச்சியில் பாலத்தில்
அந்தர் அடிக்கிறாள், சுந்தரி ஒருத்தி.
யார் சொல்லுங்கள்?.

– சிலந்தி

502. இரவல் கிடைக்காதது
இரவில் கிடைப்பது.

– தூக்கம்

503. இரவில் எட்டிப்படுப்பான்
போர்வைக்குப் பயப்படுவான். அவன் யார்?

– குளிர்

504. இரவில் சுமந்திடுவான்
பகலில் சுருண்டிடுவான்

– பாய்

505. இரவில் திண்ணையில் மேய்வான்
இனி விடிஞ்சதும் ஓய்வான்.

– பாய்

506. இரவில் தோற்றம் இருளி வெட்டும்.

– மின்னல்

507. இரவிலே பிறந்த ராஜகுமாரனுக்குத் தலையிலே குடை.

– காளான்

508. இரவு பெய்த மழைக்கு
காலையில் சிவப்புக் கம்பளம். அது என்ன?

– பட்டாம்பூச்சி

509. இரவு பகல் விழித்திருக்கும் ; எப்போதும்
ஒலித்திருக்கும். அது என்ன?

– இதயம்

510. இரவும் பகலும் ஓய்வு இல்லை
படுத்தால் எழுப்ப ஆள் இல்லை.

– இதயம்

511. இரவும் பகலும் துடிப்பவன்
துடிப்பதை நிறுத்திவிட்டால் மற்றவர்கள் துடிப்பார்கள்.
அவன் யார்?

– இதயம்

512. இரவு வந்தால் பூந்தோட்டம்,
விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம். அது என்ன?

– வானம், நட்சத்திரங்கள்

513. இரவு விழித்திருப்பான் காவல்காரன் அல்ல.
பகலில் தூங்குவான் சோம்பேறி அல்ல. அவன் யார்?

– விளக்கு

514. இரவெல்லாம் கூவும் கோழி எது?

– சுவர்க்கோழி

515. இரவெல்லாம் பூக்காடு
பகலெல்லாம் வெறுங்காடு.

– வானம்

516. இரவெல்லாம் முழிப்பு பகல் எல்லாம் ஒளிப்பு.

– விண்மீன்

517. இராசா மகள் கோபித்துப் போனாள்
அழைக்க நாதி இல்லை.
மல்லியப்பூச் சிந்திக் கிடக்கு
பொறுக்க நாதி இல்லை.

– சந்திரன், நட்சத்திரம்

518. இராசாத்தி ராசவடிபிள்ளை
அவள் பூசுறது கெந்தகப் பொடியில்லை
அவள் வயிற்றிலே ஆறுமாதம் பிள்ளை. அது என்ன?

– தாழம்பூ

519. இராசாமகள் பூ இல்லாமல் சடை போடமாட்டாள்.

– முருங்கைக்காய்

520. இராத்திரி நேரம் இராஜா கஜானாவைத் திறந்து
கண்டபடிக் காசை இறைக்கிறதினாலே
ராசாத்தி தன் நீளப் புடவையை
தாராளமாகவே விரித்துக் கிடத்தினாள்.

– வானமும், நட்சத்திரங்களும்

521. இராமனும் அரசு செய்வான் அயோத்தியில் அல்ல
இராவணனும் சண்டை செய்வான் போர்க்களத்தில் அல்ல
சீதையும் பூ முடிப்பாள் சிங்காரிப்பாள்
சிந்தை மகிழ்ந்திடும் மாந்தரும் மது உண்பர் மனையில்
அல்ல. அது என்ன?

– இராமாயணப் புத்தகம்

522. இராவணன் சிரசற்றதேன்?
இராவெள்ளி மறைவதேன்?

– இராமன் தாரத்தால்
இரா மந்தாரத்தால்

523. இரு கடல் நடுவில் இலங்கும் பாலம்.

– மூக்கு

524. இரு கண்கள் தோண்டி,
ஒரு கம்பை நட்டேன். அது என்ன?

– அகப்பை

525. இரு குதிரைகள் மீது ஒரு ராசா. அது எது?

– மிதியடி

526. இருகை இறக்கைக்காரன்
காற்றினால் சுகம் தருவான். அவன் யார்?

– மின்விசிறி

527. இரு கைக்கு ஒரு வளையல்
இழுத்து மாட்டும் பெரும் வளையல்.

– கைவிலங்கு

528. இரு கொம்புகள் உண்டு; மாடல்ல . . .
வேகமாய் ஓடும் ; மானல்ல ....
கால்கள் உண்டு ; மனிதனில்லை. அது என்ன?

– சைக்கிள்

529. இருட்டான் இருட்டிலே இங்கிலீஷ் ரோட்டிலே
பாதாள லெட்சுமி பந்து விளையாடுகிறாள். அது என்ன?

– ஊசல்

530. இருட்டில் கதை பேசுவான். அது யார்?

– திரைப்படம்

531. இருட்டிலே எழுவார் எங்கள் தாத்தா
உருட்டிடுவார் பானையை எங்கும் தாத்தா. அவர் யார்?
– பூனை

532. இருட்டு அறையில் முத்துவரிசை. அது என்ன?
– பற்கள்

533. இருட்டு அறையில் முரட்டுத் திருடன். அது என்ன?
– குதிர்

534. இருட்டுக் காட்டில் குருட்டுப் பன்றி மேயுது. அது என்ன?
– பேன்

535. இருட்டுக்குச் சொந்தக்காரன்
எழுந்து பறந்து சுற்றுவான்
ஓரிடத்திலும் உட்காரமாட்டான்
தலைகீழாய்த் தொங்குவான். அது என்ன?
– வௌவால்

536. இருட்டுக்குள் வந்து கள்வன்
உருட்டுவான் பானை சட்டி.
– பூனை

537. இருட்டுப் புதரிலே இடிபாடு இடத்திலே
யாரு வைத்த ஐஸ்கிரீம் இப்படி நெய் ஒழுகுது
– தேன்கூடு

538. இருட்டுப் புதையிலே
இடி விழுந்த பாறையிலே
நான் வைத்த கட்டுச் சோறு
நனையாமல் இருக்குது.
– தேன்கூடு

539. இருட்டு வீட்டில் டொம்பக்கூரடி. அது என்ன?
– பேன்

540. இருட்டு வீட்டில் முரட்டுச்சிப்பாய். அது என்ன?
– பூட்டு

541. இருட்டு வீட்டிலே
குருட்டெருமை மேயுது. அது என்ன?
– பெருச்சாளி

542. இருட்டு வீட்டுக்குள் முரட்டுக்கிடா. அது என்ன?
– பத்தாயம்

543. இருண்டதோர் காட்டில் மிரண்டது பன்றிகள்
பத்துபேர் கூடி இரண்டுபேர் குத்தினர்.
–பேன்

(தலையில் உள்ள பேன்களை இரண்டு விரல்களாலும் குத்துவது)

544. இருதலைக் கூறான்பொறியல்
இன்னிசை பாடுவான் கூட்டு
தாயைக் கொன்றான் வறுவல்
அத்திக்காய்க் கூட்டு அவியல்
குதிரைச்சட்டிக் குழம்பு. அது என்ன?

– பாகற்காய்

சுரைக்காய், வாழைக்காய், அத்திக்காய், முந்திரிக்கொட்டை

545. இருதலை நாகம் பொரியல்
இனியபாக்கள் பச்சடி
குதிரை லாடம் குழம்படி
அவர்கள் அப்பன் ஊறுகாய். அது என்ன?

– புடலங்காய், பாகற்காய், புளியங்காய், எலுமிச்சங்காய்

546. இருந்த விடத்திருப்பார் இருவர்
இலேசு இலேசாய் உண்டு உதிர்ப்பார்
எடுப்பார் கைப்பிள்ளையாய் எங்கும் செல்வர்
இரு ஆப்புடையார். யார்?

– விடையில்லை.

547. இருந்தாலும் இறந்தாலும் பறந்தாலும்
இறக்கை மடக்காதது எது?

– தட்டாரப்பூச்சி

548. இருப்பது இரண்டு கால்
ஓடுவது குதிரை வேகம்
இறக்கை உண்டு பறக்காது. அது என்ன?

– நெருப்புக்கோழி

549. இருப்பது இருவர், பார்ப்பது ஓரிடம். அவன் யார்?

– கண்கள்

550. இருபுறமும் கறுப்புக்காடு ;
நடுவில் ஒரு வெள்ளை ரோடு. அவை என்ன?

– தலையில் வகிடு

551. இரும்பில் ஏழுந்த மரம், எல்லோரும் போகிற மரம்,
புகை கக்கிக் கொண்டே புனலைத் தடவும் மரம்.
என்ன மரம்?

– கப்பல்

552. இரும்புக்கால் இரண்டு உள்ளவன்
உருண்டோடுவான், உயிர் இல்லாதவன், அவன் யார்?

– சைக்கிள்

553. இரும்புச் சட்டிக்காரிக்கு எத்தனை கண் ஆயிரம்
துரும்புச் சட்டைக்காரிக்கோ தோன்றியது மூன்று கண்.
– சல்லடை, தேங்காய்

554. இருவர் கட்டிய மாளிகை
ஒருத்தருக்குத் தெரியும்
ஒருத்தருக்குத் தெரியாது. அது என்ன?
– வயிற்றுக்குள் வளரும் சிசு

555. இருளன் கொண்டது இரண்டெருது
படுத்திருக்கும் பாரினில் ஒன்று
அதனை அடுத்து மற்றது திரியும். அது என்ன?
– ஆட்டுக்கல்

556. இரைச்சல் எரிச்சலுடன் எத்தனை வால் பட்டங்கள்?
வீட்டிற்குள்ளே இரண்டு வெளிமுற்றம் மூன்று
மோட்டிலே இரண்டும் மூலை முகையோடு நாலாம்.
என்ன இவை?
– கோழிக்குஞ்சுகள்

557. இரைச்சலோடு செல்லும் விமானம் அல்ல,
இடியோசை தரும் வானமும் அல்ல. அது என்ன?
– வானவெடி

558. இலுக்கான் முலுக்கான் பூ பத்து
சிப்பிலி தட்டிலே வாரி வைத்து
போறவங்க வருகிறவங்க எல்லாம்
ஐய்யோ ஐய்யோ என்கிறாங்க.
– நெருஞ்சிமுள்

559. இலை இல்லாத மரம்
கலகல என்று ஆடுது. அது என்ன?
– கைத்தறி

560. இலை உண்டு, கிளையில்லை
பூ உண்டு, மணமில்லை
காய் உண்டு, விதையில்லை
பட்டை உண்டு, கட்டையில்லை
கன்று உண்டு, பசு இல்லை. அது என்ன?
– வாழை

561. இலை சன்னக பின்னக
பூ மஞ்சக பிஞ்சக
காய் கச்சக பிச்சக. அது என்ன?
– பாகற்காய்

562. இலை நாலு தண்டு ஒருவன் கண்டையா ராஜா?
அது யாரு சொன்னா அறிவுகெட்ட முண்டம்?

– ஆலக்கீரை

563. இலையில்லாத மரத்திலே எத்தனையோ
கிளிகள் தொங்குது.

– தென்னை மரம்

564. இலையுண்டு கிளையில்லை
பூ உண்டு காய் இல்லை. அது என்ன?

– கரும்பு

565. இலையைச் சுருட்டும் மரம், ஏறினால் வழுக்கும் மரம்
காயோ துவர்க்கும் மரம், கனியாய் இனிக்கும் மரம்.

– வாழை மரம்

566. இவ்வளவூண்டு சிற்றாண்டி
வயிற்றைப் பிதுக்கின்னு செத்தாண்டி. அது என்ன?

– நெல்

567. இவ்வளவூண்டு இருப்பாண்டி
வாய்க்கு ருசியாய் இருப்பாண்டி
வயிறு கிழிந்து செத்தாண்டி. அது என்ன?

– மொச்சை

568. இவ்வளவூண்டு ராமனுக்கு
அவ்வளவூண்டு நாமம். அது என்ன?

– உளுந்து

569. இவ்வூரிலே தாளித்தால்
ஈரோட்டில் மணக்குமாம். அது என்ன?

– தந்தி

570. இவர்கள் ஓசை இல்லாமல்
அடித்துக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் யார்?

– இமைகள்

571. இவன் அதிகமாக வந்தாலும் கேடு
வராமலே இருந்தாலும் துன்பம். அவன் யார்?

– மழை

572. இவன் அழுதால்தான் உலகம் சிரிக்கும். யாரவன்?

– வானம்

573. இவன் கறுப்பாக இருந்தால் மட்டுமே அழகு. அவன் யார்?

– தலைமுடி

574. இவன் துடிப்பைக் குறித்து
யாருக்குமே கவலை இல்லை. அவன் யார்?

– இதயம்

575. இழுக்க இழுக்க நீளும்
இழுத்தாலும் அந்துவிடும்
விடவிடச் சுருங்கும்
விட்டுவிட்டால் ஒடுங்கும். அது என்ன?

– ரப்பர்

576. இழுவோ இழு ரப்பர் இழு, மத்தி மரக்கலம் ஆட
இழுவாய்ப்பாட்டுப் பின்னணி கேட்டு இழு.

– தயிர்கடைதல்

577. இளஞ்சிவப்பு ராணிக்கு
இருபதினாறு வெள்ளையர்கள்
இரவும் பகலும் காவல். அது என்ன?

– நாக்கு

578. இளமையில் கொம்பு; வளர்ந்ததும் இல்லை. அது என்ன?

– நிலா

579. இளிச்சா இளிக்கும் சுழிச்சா சுழிக்கும்
எறிஞ்சு பார்த்தாலே எத்தனை சில்லுகள்.

– கண்ணாடி

580. இறக்கை இல்லாத குருவிக்கு
இரும்பினால் மூக்கு
பாய்ந்து செல்லும் குருவிக்கு
பஞ்சினால் வாலு.

– ஊசி

581. இறக்கை இல்லாதவன்
ஊர் ஊராய்ப் பயணம் செய்வான். அவன் யார்?

– தபால்

582. இறக்கை உண்டு பறக்காது;
ஓடுவதோ மிகவும் வேகம். அது என்ன?

– நெருப்புக்கோழி

583. இறந்த மாட்டை
அலற அலற அடிக்கிறான். அவன் யார்?

– மத்தளம்

584. இன்றுவரை இல்லாதது எதிரே இருப்பது
எப்படியோ ஒரு சமயம் யாரும் பாராதது!

– நாளை

585. இனித்தவன் புளித்ததும்
இனிப்பான சுவை பெறுவான். அவன் யார்?
– பால் தயிர்

586. இனிப்புக்கு எதிரி இதழுக்கு உவமை. அது என்ன?
– கோவைப்பழம்

587. இனிப்புக் கோட்டைக்கு
எட்டாயிரம் காவலாளிகள். அவர்கள் யார்?,
– தேன்கூடு, தேனீக்கள்

588. ஈக்கி ஈக்கி நெடும் ஈக்கி. அது என்ன?
– மழை

589. ஈட்டி படை வென்று
காட்டுப் புதர் கடந்து
கனக்மண் புதையலைக்
கண்டுபிடிக்கலாம். அது என்ன?
– பலாப்பழம்

590. ஈர்க்குப் போன்ற தம்பிக்கு
பந்து போல தலை. அது என்ன?
– தீக்குச்சி

591. ஈரடுக்கு மாளிகைக்கும்
இதமான நீருக்குள்
இருக்கிறான் வெள்ளையப்பன். அவன் யார்?
– தேங்காய்

592. ஈரப் புடவைக்காரி
இருபத்திஎட்டுச் சுற்றுக்காரி. அது யார்?
– வெங்காயம்

593. ஈரப் பெட்டியிலே நாறமீன்.
– நாக்கு

594. ஈரேழு பதினாலு இறகு மயிலாட
முந்நான்கு பன்னிரண்டு முத்துமயிலாட
வராத பெண்களெல்லாம் வந்து விளையாட. அது என்ன?
– பல்லாங்குழி

595. ஈரேழு பதினாலு லோகங்கள் அதிலே
இருபுறமும் தச்சர் அமைந்திட்டது அதிலே
மாமேரும் புளியம்விதை அதிலே
வந்தாடும் பெண்களுக்குச் சச்சரவு அதிலே. அது என்ன?
– பல்லாங்குழி

597. ஈனாது புரளாது இழுத்துக் கட்டினால்
குடத்தளவு பாலைக் கொடுத்துதவி நிற்கும். அது என்ன?

– பனைமரம்

598. உக்காந்து பேசறான்; நின்னாப் பேசமாட்டான்.
அவன் யார்?

– நாக்கு

599. உங்க அக்கா குளித்தும் கறுப்பு ;
எங்க அக்கா குளிக்காமல் சிவப்பு. அவை என்ன?

– கரி, நெருப்பு

600. உங்களை என்பதற்கு ஒப்பான வார்த்தை
திங்களைச் சுமக்கிற சிவன் மனைவி பேர்தான்.

– உமை

601. உச்சங்கிளையில் முழங்கோல் இருக்கும்
நச்சி இதன்பேர் அறிவிப்பீரே.

– முருங்கைக்காய்

602. உச்சத்தில் உலாவும் மணி, உலகத்தைச்
சுற்றும் மணி, உயிர்வாழச் செய்யும் மணி,
ஒற்றை மணிப்பேர் உரையுங்களேன்.

– சூரியன்

603. உச்சாணிக் கிளையிலே
பிச்சாண்டி தொங்குகிறான். அது என்ன?

– விளாம்பழம்

604. உச்சாணிக் கொப்பிலே உட்கார்ந்த நிலையில்
கோடாலி மூக்கன் கொட்டைப் பாக்கை வெட்டுகிறான்.

– அணில்

605. உச்சாணிக் கொப்பிலே உறிகட்டித் தொங்குது.

– பலாப்பழம்

606. உச்சாணிக் கொம்பிலே
உரங்கட்டித் தொங்குது. அது என்ன?

– பலாக்காய்

607. உச்சாணி மரத்திலே உயர்ந்த கிளையிலே
பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது. அது என்ன?

– அணில்

608. உச்சாணி மரத்திலே ஒலக்கை கட்டித் தொங்குது.
அது என்ன?

– அணில்

609. உச்சாணி வாதுல மச்சான் கொழல் ஊதுறான். அது என்ன?

– அணில்

610. உச்சிக் கிளையில் சாட்டை தொங்குது. அது என்ன?

– முருங்கைக்காய்

611. உச்சிக்கிளையிலே
ஒரு முடிக்குச்சி
ஊசல் ஆடுதே. அது என்ன?

– முருங்கைக்காய்

612. உச்சிக் குடும்பனும் சந்தைக்குள்ளே
ஊளைமூக்கனும் சந்தைக்குள்ளே
வாய்நாறியும் சந்தைக்குள்ளே
வழிச்சி நக்கியும் சந்தைக்குள்ளே. அவை யாவை?

– தேங்காய், களச்சக்கை, உள்ளி, கருப்புச்சட்டி

613. உச்கிக்குடும்பி ஒன்று
ஊளைக்காது ஒன்று
ஊர்சுத்தி ஒன்று
மடையிலே விழுந்தது ஒன்று
செடியிலே விழுந்தது ஒன்று. அது என்ன?

– தேங்காய், வாழைப்பழம், கழுதை, மண்வெட்டி, வெள்ளாடு

614. உச்கிக்குடுமி நம்பூதிரி ஊர்ச்சந்தைக்குப் போவான்
உடனே அவன்கூட ஊளைக் காத்தானும் போனான்.

– தேங்காய், பழம்

615. உச்சக்குடுமிப் பாப்பாள்,
உருண்டை முகத்துப் பாப்பாள்,
நீர்க் குட்த்தையும் சேர்ப்பாள்
நெற்றிக்கண் கொண்ட பாப்பாள்

– தேங்காய்

616. உச்சிக்குடுமியான் சந்தைக்குப் போனான்
ஊளை மூக்கன் சந்தைக்குப் போனான்
சப்பட்டைக் குண்டியான் சந்தைக்குப் போனான்.
அது என்ன?

– தேங்காய், வாழைப்பழம், பூசணிக்காய்

617. உச்சிக்கு மச்சி இவளைக் காற்றுத்தான் கைது செய்யும்,
சுட்டியே இழுத்துப் போகும். கடும் வெயில் உலர்த்திப் போகும்.

– மழை

618. உச்சிக்கோட்டையில் உறுமாத பன்றியைக்
குச்சியில்லாமல் குத்தியே குருதி சொட்டிப் பாயுதே

– பேன்

619. உச்சி சலசலக்கும்
உடல் நீண்டு இருக்கும்
நிறம் கருத்து இருக்கும்
நின்று பார்த்தால் கழுத்து வலிக்கும்.

– பனைமரம்

620. உச்சியில் ஓடின தங்கக் கம்பி - அதை
உருட்டவும் முடியாது சுருட்டவும் முடியாது.

– மின்னல்

621. உச்சியில் குடுமியுண்டு மனிதர் அல்ல
உடம்பெல்லாம் ரோமமுண்டு குரங்கும் அல்ல
உருள்விழிகள் மூன்றுண்டு சிவனும் அல்ல. அது என்ன?

– தேங்காய்

622. உச்சியில் தொங்கின பச்சைக்குடுவையைப் பறித்து
ஒரே பாதியாய் வெட்டினால் உள்ளே உறங்கிற்று மொச்சை.

– மாங்காய்

623. உச்சியில் பச்சைத் தோகை
உள்ளங்காலில் ரோமம் அது என்ன?

– கரும்பு

624. உச்சியில் பூத்திருக்கும் ஊரணிக்கரையிருக்கும்
வெள்ளம் புரண்டு வந்தாலும் இந்த வீரனை
வீழ்த்தமுடியாது.

– நாணல்

625. உச்சியிலே கிரீடம் வைத்த மகாராணிக்கு
உடம்பெல்லாம் கண். அது என்ன?

– அன்னாசிப்பழம்

626. உச்சியிலே குடுமி உண்டு மனிதனல்ல
உருண்டையாக வடிவம் உண்டு முட்டையல்ல
நீர்ததும்பி நிறைந்திருக்கும் குளமல்ல
நெற்றியிலே கண் இருக்கும் சிவனும் அல்ல.அது என்ன?

– தேங்காய்

627. உச்சியிலே பூப்பூக்கும் சங்கத்தாரே
உம்மை உள்ளங்கை மூக்கனார் கொல்ல வாரார்
கழுத்தில்லாக் குயவரே உமக்கு எப்படித் தெரியும்?
பல்லில்லா நாக்கனார் சொல்லக் கேட்டேன்.

– தாழம்பூ, யானை, நண்டு, மணி

628. உச்சியிலே பூப்பூத்த சொக்கநாதா
உள்ளங்கை மூக்கனுன்னைத் தின்னவாரான்
தலையில்லாச் செட்டிமகனே யுனக்கார் சொன்னார்
குடலில்லாக் கோமுட்டிமகன் கூவிச் சொன்னான்.
அவர்கள் யார்?
– நாணல், யானை, நண்டு, மணி

629. உச்சியிலே பூ முடிவாள்
அணங்கும் அல்ல
உயரப்போய்த் தொங்குவாள்
வெளவாலும் அல்ல. அது என்ன?
– புகையிலை

630. உச்சியை வெட்டுவார் கிள்ளுவார் கடிப்பார்
முகத்திற்கும்கூட முலாம் பூசி விட்டாலும்
நான் ஒருபோதும் அழேன் உவகையோடு இருப்பேனே.
– நகம்

631. உச்சியோ கறுப்பு உடம்போ சிவப்பு
உள்ளுக்குள்ளே பருப்பு உண்டு, பார்த்தால் கசப்பு.
– குன்றிமணி

632. உச்சி வாதில் ஓசந்த வாதில்
சாட்டைக்கொம்பு தொங்குது. அது என்ன?
முருங்கைக்காய்

633. உட்கார்ந்திருக்கிற குந்தாணி மேலே
உருட்டுப் பன்றி படுத்துக் கிடக்குது.
– அம்மிக்குழவி

634. உடம்பால் சிவப்பு, உள்ளமோ ஆழம்
கடும் நெருப்பிலும் இருப்போம், கல்பட்டால் இறப்போம்
– சட்டி, பானை

635. உடம்பு சொரியனுக்கும் அதுதான் பேரு
ஒவ்வொரு சாமானையும் சலிப்பதற்கும் அதுவே பேரு.
– அரிப்பு

636. உடம்பெங்கும் நகம் வளர்த்தாள்,
ஊருக்குள் செதில் வளர்த்தாள், வளர்ந்து
வழி எல்லாம் வாசம் வீசி வரவழைப்பாள்
தொட்டவுடன் பாய்ந்து முட்டும் தாதி.
– தாழம்பூ

637. உடம்பெல்லாம் உரோம அடை,
ஒய்யாரத்திலே ராமபாண நடை,
தலையிலே பேன் பிடிப்பான் வாயாலே தான்முடிப்பான்
பழம் திண்ணிச் சுழிப்பான் பல்லையும் இளிப்பான்.

– குரங்கு

638. உடம்பெல்லாம் ஒட்டை உட்காரும் பரட்டை.

– நாற்கட்டில்

639. உடம்பெல்லாம் கண் கொண்டவருக்கு
உச்சியிலே குடுமி. அவள் யார்?

– அன்னாசிப்பழம்

640. உடம்பெல்லாம் சிவப்பு ; அதன் குடுமி பச்சை. அது என்ன?

– தக்காளிப்பழம்

641. உடம்பெல்லாம் சொறி சொறி.
உள்ளே எட்டிப் பார்த்தாலோ உப்பு மஞ்சள்
அடைபொறி. ஊர்க்குளத்தார் கரையிலே உட்கார்ந்
திருப்பாள் படை சொறி.

– தாழம்பூ

642. உடம்பெல்லாம் ரோமம், கரடி அல்ல.
உயரத்தில் தாவிடுவான், அணிலும் அல்ல.
பழம்தின்பான் பல்லை இளிப்பான், மனிதன் அல்ல.
மரங்களிலே தொங்குவான், வௌவால் அல்ல.

– குரங்கு

643. உடம்பை உரித்து உயிரை எடுத்ததும்
தசையில் கொஞ்சத்தை சட்டியிலே போட்டனர்
பாதியை எடுத்துப் பாய்தனில் போட்டுப் பின்
பாதையில் வைத்ததும் வெயிலில் காய்வது என்ன அது?

– புளி

644. உடல் இல்லாதவன் ஊரெல்லாம் திரிவான். அவன் யார்?

– புகை

645. உடல் உண்டு தலை இல்லை
கை உண்டு கால் இல்லை
தானாகவே ஓடும். அது என்ன?

– கடிகாரம்

646. உடல் எல்லாம் ரோமம் உண்டு
வால் அடர்ந்திருக்கும் கீரியல்ல
மரமேறிக் கிளை தாவும் குரங்குமல்ல
உடம்பிலே வரிகள் உண்டு புலியல்ல.

– அணில்

647. உடல் சிவப்பு வாய் அகலம்
உணவு காகிதம் அது என்ன?

– தபால்பெட்டி

648. உடலுண்டு உயிரில்லை
ஓடி ஓடிப் போய்ச் சேர்ந்தான் ஊருக்கே. அது என்ன?

– சைக்கிள்

649. உடலுயிர் கொண்டூர் திரிவார் மனிதரல்ல
ஓயாமற் பேசிடுவார் வாயுமில்லை
வாரத்தில் ஒருதரம் உண்டிடுவார் யோகியல்லர்
வன்மையுடன் இக்கதையை வழுத்துவாயே.

– கடிகாரம்

650. உடன் பிறந்தது
ஒளி இன்றி மறையும். அது என்ன?

– நிழல்

651. உடுத்த சீலையை உரித்து
உள்ளே கிடப்பதை நுள்ளி
உனக்குப்பாதி எனக்குப்பாதி. அது என்ன?

– பனங்கிழங்கு

652. உடைந்த வெள்ளிக்கு
ஒக்குட ஆசாரி இல்லை. அது என்ன?

– அரிசி

653. உண்டதை நினைப்பான்
உதையை மறப்பான்
உயிரையும் கொடுப்பான்
வழியும் நடப்பான்.

– நாய்

654. உண்டி சுவைக்கிற ஊமைச்சி
ஒன்றுசேர்ந்தால் ஒரு கட்சி,
உரசியும் பிரியாத பல கட்சி
பாண்டவர்க்கு எண்ணினால் தங்கச்சி.

– கைவிரல்கள்

655. உண்டியை ஊருக்கெல்லாம் கண்டிப்பாய்
கொடுக்கும் பையன். கடுகேனும் உண்ணாதிருந்தே
காலத்தைக் கழிப்பான். நீரில் குளிப்பான்.
பாண்டவர்க்கு எண்ணினால் தங்கச்சி.

– கைவிரல்கள்

656. உருட்டுத் திரட்டு
உயரப்பள்ளி ஏறுவான் அது என்ன?

– அகப்பை

657. உணவாகிறவனுக்கு உடம்பெல்லாம் பல். அவன் யார்?

– சோளம்

658. உணவுக்கு வேண்டியவனைத் தனியாக ருசித்துப்பார்த்தால்
முகம் சுளிக்க வைப்பான். அவன் யார்?

– உப்பு

659. உணவு கொடுத்தால் வளரும்,
நீர் கொடுத்தால் அழியும். அது என்ன?

– நெருப்பு

660. உணவை எடுத்திடுவாள்
உண்ணாமல் வைத்திடுவாள்
உடல்மெலிந்த பெண். அவள் யார்?

– அகப்பை

661. உத்தியோக சத்தயோகமில்லாமல்
ஊரைச் சுற்றி ஓடியோடித் திரிகிறான் ஒருவன். அவன் யார்?

– நாய்

662. உதிர்த்தால் ஓடிடுவான்
காற்றடித்தால் பறந்திடுவான்
வெய்யில்பட்டால் உலர்ந்திடுவான். அவன் யார்?

– மழைநீர்

663. உதைத்தால் உறுமுவான் நாய் அல்ல. அவன் யார்?

– ஸ்கூட்டர்

664. உப்பினை உண்டவன்
உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

– கடல்

665. உப்புப்பூத்த மலைமேல்
உருண்டைக் கல்லு கிடக்குதாம்
வெள்ளைமாடும் கறுப்புமாடும்
வேணபடி மேயுதாம்
உருண்டைக் கல்லைக் கண்டவுடனே
ஊற்று ஜலம் சுரக்குமாம். அது என்ன?

– லட்டு

666. உமி போல் பூப்பூக்கும்
சிமிழ்போல் காய்காய்க்கும். அது என்ன?

– நெல்லிக்காய்

667. உயர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ எது?

– குடை

668. உயர்ந்த திண்ணை ஏறி
கனிந்த பழம் தின்னும் பெண்ணே!
சோற்றைக் கறி தின்கிறது.

– கோழி

669. உயர்ந்த பாப்பான் விழுந்து விழுந்து
கும்பிடுகிறான். அவன் யார்?

– ஏற்றம்

670. உயர்ந்த மரத்திலே உச்சாணிக் கிளையிலே
மூணுகண்ணுப் பாப்பாத்தி முக்காடு போட்டிருக்கா
அது என்ன?

– நுங்கு

671. உயர்ந்த மலை நடுவே
உடன்பிறப்பு இருவர்.
ஒருவரையொருவர் பார்ப்பதும் இல்லை
பேசுவதும் இல்லை. அவர்கள் யார்?

– கண் , மூக்கு

672. உயர்ந்த மனிதன்
தோகை விரித்து ஆடுவான். அவன் யார்?

– தென்னை

673. உயர்ந்த மாடிக்காரி
கறுப்புச் சேலைக்காரி
மஞ்சள் ரவிக்கைக்காரி. அவள் யார்?

– பனம்பழம்

674. உயர்ந்த வீட்டில் இருக்கும்
ஊரார் தாகம் தீர்க்கும். அது என்ன?

– மழைநீர்

675. உயர உயர சிறக்கும்
உயர்ந்துவிட்டால் எரிக்கும். அது என்ன?

– சூரியன்

676. உயரத்தில் இருக்கும் ராஜா
ஊர் பூராவும் இருக்கும் ராஜா
உயிரைக் கொடுக்கும் ராஜா
உடலெல்லாம் தொடும் ராஜா.

– சூரியன்

677. உயரத்தில் இருப்பான்
உடைத்துக் குடித்தால் தாகம் தீர்ப்பான். அவன் யார்?

– இளநீர்

678. உயரத்தில் ஒரு ரோஜா
உலகெங்கும் அதே ரோஜா. அது என்ன?

– நிலா

679. உயரத்தில் காய்க்கும் காய், ஊரெல்லாம் கிடைக்கும் காய்
சாமி வேண்டும் காய், சகலமும் விரும்பும் காய்.

– தேங்காய்

680. உயரத்தில் குடியிருக்கும் பருந்தும் அல்ல
ஊர்கூட்ட ஊளையிடும் நரியும் அல்ல
உண்ணாது தின்னாது கூச்சல் போட்டு
உழைப்பவரை அழைப்பவர்தான். இவர்பேர் என்ன?

– ஆலைச்சங்கு

681. உயரத்தில் பறப்பவனுக்குத் தரையில் பிரேக். அது என்ன?

– பட்டம்

682. உயரப் பறக்கும்
ஊன்றுகோல் நிற்கும். அது என்ன?

– கொடி

683. உயரப் பறக்கும் ஊர்க்குருவி. அது என்ன?

– வானவூர்தி

684. உயரப்போனால் கீழே வருவான்
கீழே எறிந்தால் மேலே வருவான். அவன் யார்?

– பந்து

685. உயரே கீழே பறக்கும் கை,
இடப்புறத்திற்கு எதிர்க்கை,
கன்னி பெயரில் கை,
வங்காளத்தை வளமாக்கும் கை.

– உலக்கை, வலக்கை, மங்கை, கங்கை

686. உயிர் இல்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்குது.

– கடிதம்

687. உயிர் இல்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்கிறது. அது என்ன?

– வானவூர்தி

688. உயிர் இல்லாமல் ஓடித்திரிவான்
மூக்கு இல்லாமல் மூச்சுவிடுவான்.

– புகைவண்டி

689. உயிர் இல்லாமலே
உயரப் பறப்பவன். அவன் யார்?

– காற்றாடி

690. உயிர் இன்றி ஊரெல்லாம் திரியும்
உருவம் இன்றி ஓடித்திரியும்
கைகள் இன்றித் தொட்டு விளையாடும்
கால்கள் இன்றி கண்ட இடமெல்லாம் வரும்.

– காற்று

691. உயிரில்லா உடலுள்ள ஊமையாம் தோழா
உயர்வான உண்மைகளை
உரைத்திடுவான் தோழா
கையின் மேல் காசளித்தால்
வந்திடுவான் தோழா. அது என்ன?

– புத்தகம்

692. உயிரில்லாக் குதிரைமீது
மயிரில்லா மான் பிடிக்கப் போனான்.

– செருப்பு, மீன்

693. உயிரில்லா மனிதன் தொட்டாலும் விட்டாலும்
பிடிக்கிறான். அது என்ன?

– மின்சாரம்

694. உயிரில்லை ஊருக்குப் போனான்
காலில்லை வீட்டுக்குப் போவான்
வாயில்லை வார்த்தைகள் சொல்வான். அது யார்?

– கடிதம்

695. உயிருள்ளவரை ஊமையாய்க் கிடப்பான்
உயிர் போனபின் ஊளையிட்டுக் கத்துவான். அது என்ன?

– சங்கு

696. உயிருள்ளவரை ஊரைச் சுமப்பான்
பேச்சு இல்லை - பெருமூச்சுவிடுவான். அது என்ன?

– புகைவண்டி

697. உயிரோடு இருந்தால் சிவப்பு ;
இறந்ததும் கறுப்பு. அது என்ன?

– நெருப்பு

698. உரசினால் போதும் அழிந்துவிடும். அது என்ன?

– தீக்குச்சி

699. உரசினால் போதும் ஒட்டிக்கொள்ளும். அது என்ன?

– நாயுருவி

700. உரிக்க உரிக்க ஒன்றுமில்லாதவன்
ஒன்றுமில்லாமலேயே கண்கலங்க வைத்திடுவான்.

– வெங்காயம்

701. உரிக்க உரிக்கத் தோல். அது என்ன?

– வெங்காயம்

702. உரிச்ச ஆடு ஊர்வழி சுத்துது.

– தலைநகர் (ஒருவகைப் பட்டை)

703. உரிச்ச குருவி சந்தைக்குப் போகுது. அது என்ன?

– தேங்காய்

704. உரித்த கோழி ஊரெல்லாம் சுற்றி வருகிறது. அது என்ன?

– பனைநார்

705. உரித்துவிட்ட குருவி ஊருக்குப் போகிறது. அது என்ன?

– புளி

706. உருக்கிக் குடித்த நெய்யுக்கும்
உள்ளே கட்டின வெள்ளாடைக்கும்
வாரி முடித்த கொண்டைக்கும்
வகை சொல்லடா ராசாவே

– தேங்காய்

707. உருக்குச் சட்டியிலே ஊர்கோலம் போறவளுக்கு
இடையிலே இத்துநூண்டு இருக்குதே ஓட்டை.

– வடை

708. உருட்டுவான் புரட்டுவான் ஓங்கிக் கூச்சல்
போட்டாலும் வீட்டைவிட்டு ஒருநாளும்
வெளியே ஓடிப் போகானே!

– நாக்கு

709. உருண்ட முக ஒய்யாரி சிங்காரி
ஊருக்கெல்லாம் உதவும் நாரி
பிடித்துக் கசக்கிப் பிழிந்து எடுத்தாலே
பித்த மெல்லாம் தீர்த்திடுவாள் பேருபகாரி

– எலுமிச்சம்பழம்

710. உருண்டிருக்கும் பாறை மேலே
திரண்டு நிற்குது சோலைப்புல். அது என்ன?

– தலைமுடி

711. உருண்டு சுருண்டு பிறப்பான் பின்
மருண்டும் பறந்தும் மரிப்பான்.

– வாழை இலை

712. உருண்டை வடிவமாயிருக்கும் உலகமல்ல
உடம்பெல்லாம் உரோமம் உண்டு குரங்குமல்ல
உச்சிக் குடுமியுண்டு அந்தணனுமல்ல
மூன்று கண்ணுமுண்டு சிவனேயல்ல
உடைத்தால் வெளுத்து இருக்கும்
ஒரு குளம் ஜலம் தேங்கியிருக்கும். அது என்ன?

– தேங்காய்

713. உருண்டை வடிவாயிருக்கும் உலகமன்று
உண்மையதைக் கண்டவர்க்கு உருக்கள் தோன்றும்
பளபளப்பும் ஒளியுமுண்டு நிலாவுமன்று
பண்புடனே இக்கதையைப் பகருவீரே.

– இரசகுண்டு

714. உருப்படியாய் ஒரு பிள்ளை பெற்று
உயிரை விடுவான். அவன் யார்?

– வாழை

715. உருப்படியில்லாத கல், கல், கல், கல், கல், சொல்.

**– வானத்திலே கருக்கல், பூமியிலே சறுக்கல்,
தொண்டையிலே விக்கல், கொடுக்கல், வாங்கல்**

716. உருவத்தில் சிறியவன்
உழைப்பில் பெரியவன். அவன் யார்?

– எறும்பு

717. உருவம் இல்லாத மனிதன்
உலகம் எல்லாம் சுற்றுகிறான். அவன் யார்?

– காற்று

718. உருவம் இல்லாதவன். ஆனால் சொன்னதைத்
திருப்பிச் சொல்லுவான். அவன் யார்?

– எதிரொலி

719. உருவம் இல்லான் ; நிறம் இல்லான் ;
கத்துவான் ; பேசமாட்டான் ;
ஓடுவான் ; தலைகீழாய் விழுவான் ;
உயரத்தில் இருப்பவன். யார் அவன்?

– அருவி

720. உருவம் உண்டு உயிர் இல்லை. அது என்ன?

– சட்டை

721. உருவமில்லாத கல் ஐந்து என்ன?

– கருக்கல், சறுக்கல், விக்கல், கொடுக்கல், வாங்கல்

722. உருவமில்லாதவன்
சொன்னதைத் திருப்பிச் சொல்லுவான். அவன் யார்?
– எதிரொலி

723. உருவமோ வெள்ளிக்குப்பி
உள்ளுக்கோ தங்கச் செம்பு.
– முட்டை

724. உருவிலே பெரியவன்
ஊருக்கு உயர்ந்தவன். அது என்ன?
– கோபுரம்

725. உருளுது புரளுது தத்தளிக்குது
தாளம்போடுது. அது என்ன?
– நாக்கு

726. உலகம் உறங்கினாலும் அவன்
ஓடிவிளையாடுவான். அவன் யார்?
– கடிகாரம்

727. உலகமெங்கும் படுக்கை விரித்து
உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
– கடல்

728. உலகமெல்லாஞ் சுற்றுவான். ஆனால்
ஊரறியத் தோன்றாதவன். அவன் யார்?
– காற்று

729. உலகமெல்லாம் ஒருகல்லுக்குள்ளே
மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே
மந்திரமெல்லாம் ஒரு முட்டைக்குள்ளே. அவை என்ன?
– உப்பு, பருத்தி, எருமுட்டை

730. உலகில் மெலிந்தவன்
உடுப்பைக் காப்பவன். அவன் யார்?
– ஊசி

731. உலகிலேயே மிக விலையுயர்ந்த பூவிற்குச் சொந்தக்காரி
இவளே காஷ்மீர் அரசி. அது யார்?
– குங்குமப்பூ

732. உலகுக்கெல்லாம் ஒரே துப்பட்டி. அது என்ன?
– வானம்

733. உலகுணர்த்தும் ஒரெழுத்தும், ஒரெழுத்து
உடல்உறுப்பும் ஒன்றாய்ச் சேர்த்துக் காண்பீரே
கடல் ஓடும்துறை என்று கூறல் காண்பீர். அது யாது?
– வைகை

734. உலர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ. அது என்ன?

– குடை

735. உலைமூடி போட்ட உருண்ட பானைமேல்
உலர்ந்து கிடக்குது கோரைப்புல்லு.

– தலைமுடி

736. உழவன் விதைக்காத விதை
கொத்தன் கட்டாத கட்டடம்
வண்ணான் வெளுக்காத வெள்ளை
சிற்பி செதுக்காத கல். அது என்ன?

– பல்

737. உழவுண்டு விளைவில்லை
உயிர் உண்டு பேச்சில்லை
கன்றுண்டு கறவையில்லை
பூவுண்டு மணமில்லை.இவை என்ன?

– கோழி, முட்டை, குஞ்சு. கொண்டை

738. உழைக்க உழைக்க
உடம்பெல்லாம் தோன்றும். அது என்ன?

– வியர்வை

739. உழைப்பே இல்லாமல் உழவு ஏழு கூட்டாமல்
இருந்த இடத்தில் இருந்தே கறந்த பால் கிடைக்குதே.

– பனைமரம்

740. உள் அரங்கில் முத்துச்சிப்பிகள். அது என்ன?

– பற்கள்

741. உள்ளங்கைச் சர்க்கரை
ஊருக்கெல்லாம் சர்க்கரை. அது என்ன?

– உப்பு

742. உள்ளதைச் சொல்லுவான்
சொன்னதைக் கொள்ளுவான். அவன் யார்?

– டேப்ரிக்கார்டர்

743. உள்ளூர் உத்தமிக்கு
உள்ளங்கையில் ஒட்டை. அது என்ன?

– எடை

744. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான்
வெளியில் வந்தால் விரைவில் மடிவான். அவன் யார்?

– மீன்

745. உள்ளே உள்ளவர்களுக்கு வெளியே இருந்து
பாதுகாப்பு தருவான். அவன் யார்?

– பூட்டு

746. உள்ளே வெள்ளிப்பூட்டு
வெளியே நார்ப்பூட்டு. அது என்ன?

– தேங்காய்

747. உறவுக்குக் காலையில் வந்தவரும்
துறவுக்கு மாலையில் போனாரே?

– சூரியன்

748. உறுமுவான் குமுறுவான் ஆள்மட்டும்
கண்ணில் படமாட்டான். அவன் யார்?

– இடி

749. உறைக்குள் இருக்கும், உயிரைப் பறிக்கும். அது என்ன?

– கத்தி

750. உறையாத நீர் எது?

– வெந்நீர்

751. உன்மேலும் உன்னெதிரில் உட்காரும் பூச்சி
உன்பார்வை படும்போது பல்கடிக்கும் பூச்சி
உன்னுயிரை ஓயாமல் உறிஞ்சிவரும் பூச்சி
உனக்கிதமாம் பூச்சியுமாம் அதுவென்ன பூச்சி.

– கடிகாரம்

752. உன்னிடம் வருவேன்
உன் காலைத் தொட்டுப் பார்ப்பேன்.

– கடல் அலை

753. உன்னுடன் ஒருவன்
ஓடிக்கொண்டே இருக்கிறான்.

– நிழல்

754. உன்னை ஒருத்தன்
பிடித்திருக்கிறான். அது என்ன?

– அழுக்கு

755. உன்னைப் பிடித்தவன் பெரியவன். என்ன அது?

– நிழல்

756. உனக்கும் எனக்கும் தெரியாமல்
குண்டுக்குள்ளே தண்ணீர் இருக்குது.

– தேங்காய்

757. ஊசல் ஆடின குருவி ஊமைக்குருவி
உரிச்சுப்போட்ட பின்னர்
ஊர்ச்சந்தை மேய்கிற குருவி என்ன குருவி?

– புளி

758. ஊசி இலைக் காட்டிலே
உருத்திராட்சம் தொங்குது.

– சவுக்குமரம்

759. ஊசி எப்படி பாம்பையொக்கும்?

– கண்ணும் காதும் ஒன்றாயிருத்தலால்

760. ஊசி எப்போது செவிட்டரையொக்கும்?

– காது போனபோது

761. ஊசி நுழையாத காட்டில்
ஒரு துரை போகிறான். அவன் யார்?

– புகை

762. ஊசி நுழையாத கிண்ணத்தில்
ஒரு ஆழாக்குத் தண்ணீர்.

– தேங்காய்

763. ஊசி நுழையாத கிணற்றில்
ஒரு படி தண்ணீர். அது என்ன?

– இளநீர்

764. ஊசி நுழையாத கிணற்றிலே
ஒரு சொம்பு நீர் கொணர்ந்தேன்.

– பசுவின்மடி

765. ஊசி போட்டதும் கறுப்பாயி ஓடிச்சுற்றியே பாடுவாள்.

– கிராமபோன்

766. ஊசி போட்ட வைத்தியர்
ஊமைபோல் போகிறார். அவர் யார்?

– தேள்

767. ஊசி போல் இருப்பான் ; ஊரையே எரிப்பான். யார்?

– தீக்குச்சி

768. ஊசிபோல் இலை இருக்கும்
உருத்திராட்சம் போல் காய் காய்க்கும். அது என்ன?

– சவுக்குமரம்

769. ஊசி போல் வால் இருக்கும்
உப்பினாற் போல் வயிறிருக்கும்
பாசிபோல் இறக்கை இருக்கும்
பந்துபோல் ஆட்டம் ஆடும். அது என்ன?

– தும்பி

770. ஊசி போல மரம் காசு போல இலை. அது என்ன?

– ஆலக்கீரை

771. ஊசி மூக்கன் ; உள்ளங்கைத் தட்டையன்;
ஊருக்கே செல்லப்பிள்ளை. அது என்ன?

– வெற்றிலை

772. ஊசி மூக்கன் சந்தைக்குப் போகிறான். அவன் யார்?

– இறால்மீன்

773. ஊட்டுக்கும் பொறத்தாண்ட
சட்டி கமித்தியிருக்கிறது. அது என்ன?

– கொண்டை

774. ஊணாங்கொடியை உரித்துத் தின்போம் நாங்கள் ஒருசாதி
வெள்ளைக்கல்லைக் கொட்டித் தின்போம் நாங்கள் ஒருசாதி
ஆற்றுமணலை எடுத்துத் தின்போம் நாங்கள் ஒரு சாதி.
நாங்கள் யார்?

– கரும்பு, கற்கண்டு, சீனி

775. ஊதாச் சேலைக்காரி ஓயாமல்தான் குதிப்பாள்,
உலுக்கி குலுக்கி ஓடி ஓசை செய்வதை நிறுத்தாள்.

– கடல்

776. ஊர் ஓரம் பார்த்தால் தேரோட்டம் தினம்தான்.

– ரயில்வண்டி ஓட்டம்

777. ஊர்க்கோடி போனேன்
மலைப்பாம்பைக் கண்டேன்
இரும்பாலே அடித்தேன்
வெகுதூரம் போனது. அது என்ன?

– புகைவண்டி

778. ஊர் நாடு சுற்றி ஊளைவாய்ப் பையன்
எச்சில் பொறுக்கியை எங்கும் இவனைக் காணலாம்.

– நாய்

779. ஊரில் இருந்து வாங்கிவந்த மாட்டுக்கு
உரிக்க உரிக்க தோல். அது என்ன?

– வெங்காயம்

780. ஊரிலிருந்து வாங்கிவந்த மாட்டை
உரிக்க உரிக்க வெறுந்தோல்.

– வெங்காயம்

781. ஊருக்கு அழகு எது என்றேன்.
ஒன்றோடு சேர்ந்த ஐந்து என்றார். அது என்ன?

– ஆறு

782. ஊருக்கு உழைக்கும் உத்தமன்
உரக்க ஊதி எழுப்புவான்.

– சங்கு ஒலி

783. ஊருக்குக் கிழக்காலே உயர்ந்த தோப்பிலே
செம்பருத்தி பூக்குது. குங்குமத்தைக் கொட்டுது
கொள கொள என்று பல வண்ணம் சங்கமம் ஆனதும்
கோட்டை திறக்குது கெம்பு வண்ணம் பறக்குது.

– சூரியன்

784. ஊருக்கு நடுவே உயர்ந்திருக்கும் ;
உருவங்கள் பலவும் சுமந்திருக்கும். அது என்ன?

– கோபுரம்

785. ஊருக்கு நாட்டாண்மைக்காரர்
சாப்பிட்டால் இலை எடுக்கமாட்டார்.

– நாய்

786. ஊருக்குப் பொதுமனிதன்
அடிக்கடி சலசலப்பான். அவன் யார்?

– வானொலி

787. ஊருக்கு மேற்கே ஆல்
ஆல் நிறையக் கூடு
கூடு நிறைய முட்டை
குஞ்செல்லாம் கறுத்தகுஞ்சு. அது என்ன?

– எள்

788. ஊருக்கு வெளியே தூர உதிர்ந்து கிடந்தது கூடு.
கூட்டைக் குத்திப் பார்த்தால்
கூட்டுக்குள்ளே முத்து கறுத்துக் கிடந்தது கொத்தாய்

– எள்

789. ஊருக்கெல்லாம் ஒரு துப்பட்டி.

– ஆகாயம்

790. ஊருக்கெல்லாம் ஒரே கல்

– உப்புக்கல்

791. ஊருக்கெல்லாம் ஒரே கூரை. அது என்ன?

– வானம்

792. ஊருக்கெல்லாம் ஒய்ச்சல், உழைப்பவர்க்கெல்லாம் ஒழிவு,
என்றைக்காவது ஒருநாள் இருக்கத்தானே வேண்டும்.
இவனுக்கோ ஓய்வு இல்லை. ஓய்வு இவனுக்குக்
கொடுத்தால் உலகம் முடிந்துவிடும்.

– மூச்சு

793. ஊருவிட்டு ஊரு வந்து
சேதி சொல்லும்
சின்னப் பொண்ணு அவள். யார் அவள்?

– கடிதம்

794. ஊரெங்கும் நிறைந்திருப்பான்
உலகெங்கும் நிறைந்திருப்பான். அது என்ன?

– காற்று

795. ஊரெல்லாம் சுற்றிவரும்
தண்ணீர் குடிக்காது. அது என்ன?

– செருப்பு

796. ஊரெல்லாம் மூடி இருக்கும்
ஊறுகாய் பானை திறந்திருக்கும்.

– கிணறு

797. ஊரெல்லாம் வம்பளப்பான்
ஒரு அறையில் அடங்குவான். அவன் யார்?

– நாக்கு

798. ஊரைச் செழிக்கவைத்து
உல்லாச நடைபயின்று
வளைந்து குலுங்கி
வையமெல்லாம் சுற்றி
வருகிறாள் ஒரு வனிதை. அவள் யார்?

– நதி

799. ஊரைப் பெருக்கிடும் தோட்டி
ஊதியம் வாங்காத தோட்டி
உச்சிக்கொண்டையை நீட்டி
குச்சி மேலே ஏறி
கூடப் பிறந்தோரைத் தேடி
கிச்சுக் கிச்சுண்ணு பேசிக் கிடப்பவன்
மூக்கோ ஊசி. இவன் யாரோ?

– சேவல் கோழி

800. ஊளை மூக்கன் சந்தைக்குப் போகிறான். அது என்ன?

– நுங்கு

801. ஊளையிடும் ஊரைச் சுமக்கும். அது என்ன?

– புகைவண்டி

802. ஊற்றினால் தேக்கும் உதறினால் தெறிக்கும்.

– பேனாவும், மையும்

803. ஊன்றிய கால் எட்டோடு ஓரிரு கால்
தூக்கியே உச்சிக் குடை போட்டு
ஊர்வலமாய் வரும் அழகை உரைக்க
நூறு நா வேண்டும்.

– நண்டு

804. எங்கம்மா சின்னம்மா
சேலை கட்டாத பொன்னம்மா. அது என்ன?

– படி

805. எங்க அம்மான் ஆத்துக் கொல்லையிலே
பச்சைத் துலுக்கன் பாய்போட்டுப் படுத்திருக்கான்.

– கீரைப்பாத்தி

806. எங்க அம்மான் வீட்டுக் கொல்லையிலே
மதயானை செத்துக் கிடக்கிறது.

– வைக்கோல்போர்

807. எங்க ஊர் காவல்காரனுக்கு எட்டு வீட்டு சாப்பாடு.
அவன் யார்?

– நாய்

808. எங்கம்மாள் பிள்ளைத்தாச்சி
எங்கப்பன் சுவர் ஏறிக்குதிப்பான்.

– பூசணிக்காய்

809. எங்கம்மாள் வீட்டுத் தோட்டத்திலே
பச்சைப்பாம்பு தொங்கலாடுது. அது என்ன?

– புடலங்காய்

810. எங்க மாமாவுக்கு நாலு கண். அது என்ன?

– கண்கள், கண்ணாடி

811. எங்க வீட்டுக் கொல்லையிலே
பச்சை சாமியார் பாய்விரித்துப் படுத்திருக்கிறார்.

– கீரைப்பாத்தி

812. எங்கள் அக்கா இடுக்கி அக்கா
ஏறி இறங்கி வகிர்ந்தெடுப்பா
புகுந்து கறுத்த போர் அடிப்பாள்,
வகுந்து பலபேரைப் பாழ் அடிப்பாள்.

– ஈர்க்கொல்லி

813. எங்கள் அப்பன் அடித்தான், அம்மா துடைத்தாள்,
எல்லோரும் கூடி இளவெயில் காய்ந்தோம்,
அக்கினியில் குதித்து அகத்துக்கு வந்தோம். நாங்கள் யார்?

– சட்டிபானை

814. எங்கள் அப்பன் ஊர்சுற்றி
எங்கள் அம்மாள் குந்தாணி.

– பூசணி

815. எங்கள் அப்பா சப்பாணி
எங்கள் அம்மா குந்தாணி.

– முந்திரிப்பழம்

816. எங்கள் அப்பா பட்டணம் போய்
ஒரு கட்டுச்சாதம் கொண்டுவந்தார்
சாப்பிடுகிறோம் சாப்பிடுகிறோம்
முடிந்தபாடில்லை. அது என்ன?

– சுண்ணாம்பு

817. எங்கள் அப்பா பணத்தை எண்ண முடியாது
எங்கள் அம்மா புடவையை மடிக்கமுடியாது.

– நட்சத்திரம், வானம்

818. எங்கள் எருமைக்கும் காய்ச்சல்
என்றைக்கு வருமோ அன்று விடுப்போம்
அதற்கு மேய்ச்சல்.

– கூரை

819. எங்கள் கன்றுக்குட்டி
தண்ணீர் பட்டால் செத்துப்போகும். அது என்ன?

– நெருப்பு

820. எங்கள் தம்பி குள்ளத்தம்பி
பந்தடிப்பான் பயிரடிப்பான்
நூறுபேரை நொறுங்கடிப்பான்.

– ஈர்க்கொல்லி

821. எங்கள் தோட்டம் பெரிய தோட்டம்
ஏறி விளையாட இடம் இல்லை.

— வானம்

822. எங்கள் மாட்டுக்கு மூன்று கொம்பு
அது பின்னால் பாயும். அது என்ன?

– ஊகமுள்

823. எங்கள் மாடு சாட்டைக்கொம்பு
கத்தாது கனைக்காது
இருந்த இடத்தில் இரு கலப்பால் கறக்கும்.

– கள்ளி

824. எங்கள் விளை (தோட்டம்) பெரிய விளை
ஏறிச்சாட வழியில்லை. அது என்ன?

– வானம்

825. எங்கள் வீட்டில் ஒரு பெண்ணுக்கு
வாய்நிறையப் பல் இருக்கிறது.

– துருபலகை

826. எங்கள் வீட்டுக் கிணற்றிலே
வெள்ளிக் கிண்ணம் மிதக்குது.
இறங்கி எடுக்கப் போனால்
கிண்ணத்தைக் காணவில்லை. அது என்ன?

– நிலவொளி

827. எங்கள் வீட்டுக்கும் எதிர்த்த வீட்டுக்கும் ஒரே கண்ணாடி
உங்கள் வீட்டுக்கும் ஊரார் வீட்டுக்கும் ஒரே கண்ணாடி
எட்ட எட்டத் தூரப்போகும் இணையில்லாக் கண்ணாடி
வட்ட வட்டக் கண்ணாடி அது மழையில் தோன்றும்
கண்ணாடி. அது என்ன?

– நிலா

828. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஐந்து வாழை மரங்கள்
அவைகளை ஆட்டினாலும் பிடுங்கமுடியாது. அது என்ன?

– கைவிரல்கள்

829. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
காய்ச்சுக் கிடக்குது ஓரத்திலே
எடுத்து எடுத்து நறுக்கினாலே
எட்டுக் கல்லுத் தோடுதானே.

– வெண்டைக்காய்

830. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் குருவி ஊஞ்சல் ஆடுகிறது.

– எலுமிச்சம்பழம்

831. எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் யானை நிற்கும். அது என்ன?

– வைக்கோல்போர்

832. எங்களப்பன் செந்தலை, செந்தலை
எங்கள் ஆத்தாள் முழுமொட்டை, முழுமொட்டை
முழுமொட்டை வயிற்றிலே கொழுக்கட்டை
கொழுக்கட்டை வயிற்றிலே கீச்சுமூச்சு. அது என்ன?

– கோழிக்குஞ்சு

833. எங்காத்துக் கொல்லையிலே
மொட்டையாண்டி எட்டி எட்டிப் பார்க்கிறான்.

– நிலா

834. எங்கக்கா கொள்ளியக்கா
எதை வைத்தாலும் தாங்குமக்கா.

– அடுப்பு

835. எங்க வீட்டெருமைக்கு வருசத்துக்கொரு மேய்ச்சல்.
அது என்ன?

– சுவரை

836. எச்சி முத்தம் வைக்கவே
கச்சை கட்டிக் காற்றும்தான்
கடுமையாய் முயன்றும் பச்சை நிலாத்
தட்டிலே வாய்ந்த எச்சில் முத்தத்தைப்
பதித்தும் அவை பதியலை.

– தாமரை இலை

837. எட்டாக் கொம்பிலே
மிட்டாய்ப் பொட்டலம்.

– தேன்கூடு

838. எட்டாத ஆழத்தில் இருப்பான்
தேடிப் பிடித்தால் ஜொலிப்பான். அவன் யார்?

– முத்து

839. எட்டாத உயரத்தில் ஏறிப் பறித்தால்
தாகம் தீர்ப்பான். அவன் யார்?

– இளநீர்

840. எட்டாத உயரத்தில் குட்டித்தொட்டில். அது என்ன?

– குருவிக்கூடு

841. எட்டாத கிளையிலே இனிப்புச் சாறு.

– தேன்

842. எட்டாத கோட்டை அதில் ஏராளம் மணிகள்
கொட்டாவி விட்டுத் தூக்கம் போட்டவரே
கண்டதுண்டு புகல்வீரே. இது என்ன?

– மனக்கோட்டை

843. எட்டாத தூரத்தில் இருந்து
கறுப்புப் பொட்டுக் கட்டின பொம்பளை
புறப்பட்டு வருகையில் வழியில் சிதறின
காசுகளையெல்லாம் மடக்கி அமுக்கிக் கொண்டாளே!

– முழுமதியும், விண்மீன்களும்

844. எட்டாத தூரத்திலே
எவரும் இல்லாத காட்டிலே
எழிலான பெண் ஒருத்தி
இரவெல்லாம் சிரிக்கிறாள். அவள் யார்?

– நிலவு

845. எட்டாத தூரத்திலே
தொட்டில் கட்டி ஆடுது.

– குருவிக்கூடு

846. எட்டாத தேசத்தில் ஒரு முட்டாள்
கழுதை வேலி காவல் இருக்க
வெள்ளாமையைத் தின்றுவிட்டுப் போகிறான்.

– எமன்

847. எட்டாத ராணி இரவில் வருவாள்.
பகலில் மறைந்துவிடுவாள்.

– நிலா

848. எட்டாவது கொம்பில் எட்டாயிரம் பேர்,
இனிப்புக்கோட்டை கட்டி பலமான கட்டுக்காவல்
அது என்ன?

– தேன்கூடு

849. எட்டி நின்று பார்ப்பான்.
பெட்டியில் போட்டுக் கொள்வான். அவன் யார்,?

– கேமரா

850. எட்டிப் பார்த்ததுமே
புலம்பத் தொடங்கிவிடுவான். அவன் யார்?

– நாக்கு

851. எட்டிப் பார்த்தால் முகம் தெரியும்
எடுத்துக் குடித்தால் தாகம் தீரும். அது என்ன?

– தண்ணீர்

852. எட்டி வரும்போது இருந்தது
எண்ணிப் பார்த்தாயோ எண்ணடி நாலே கால்தான்!

– யானை

853. எட்டு ஆறு குடித்தேன்
கொட்டாங்கச்சி நிறையவில்லை. அது என்ன?

– கொசு

854. எட்டு எழுத்தில் ஓர் ஊரின் பெயர்
ஒன்றும் இரண்டும் சேரில் மேன்மை
மூன்றும் நான்கும் சேரில் எதிர்மொழி
ஐந்தும் ஆறும் சேரில் வாசனை
ஏழும் எட்டும் சேரில் வேர்

– திருவிடைமருதூர்

(திரு–மேன்மை, விடை–எதிர்மொழி, மரு–வாசனை, தூர்–வேர்)

855. எட்டு ஏர் ஓட்ட, இரண்டு ஏர் தள்ள,
கொங்கை பறக்க, கிளிவாய் திறக்க. அது என்ன?

– கம்பு

856. எட்டுக் கட்டுக் கட்டி இடைக்கட்டும் கட்டி
இடைத்தெருவே போகிற பெண்ணே
நீ என்ன விலை பெறுவாய்?
நான் சொன்ன விலை பெறுவேன்? நான் யார்?

(முறம் (சுளகு)

857. எட்டுக் கட்டுக் கட்டி
இடைக்குக் கட்டுக் கட்டி
தெற்கே போகிற மாப்பிள்ளை
திரும்பிவர மாட்டாரு. அது என்ன?

– பிணம்

858. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுத்து
மட்டக்குடை பிடித்து வருகிறார் துரைமகன்.

– நண்டு

859. எட்டுக்கால் பதிபாட இருகால் குதிபோட
திட்டக்குழி மகரான் தெருவீதி உலாவர
தென்றல் குடைபிடிக்க திரைகடல் வரவேற்போம்!
எட்டுக்காலும் கட்டி எடுத்த பல்லக்கிலே
திரேகம் பட்டி சுற்றி தெற்கே போன வரனும்
திரும்பியும் வாரானாம்.

– பிணம்

860. எட்டும் எட்டும் பதினாறு சாலை
இரு பக்கமும் தச்சரின் வேலை
இதை வெடித்தவர்க்கு நவரத்தினமாலை. அது என்ன?

– பல்லாங்குழி

861. எட்டு மொட்டெலும்பு
ஒரு கடைச் சிறுகுடல்.

– கட்டில் ; கயிறு

862. எடுத்துக் கிழித்தால் நெருப்பு
இல்லாவிட்டால் இருப்பு.

– தீக்குச்சி

863. எண்ண எண்ண 'வார்த்தை'களோ?
எண்ணும்போது காசுகளோ! எது?

– தந்தி

864. எண்ணற்ற பழுவுகள் பண்ணாத ஏணி
எட்டாத உயரத்தில் கட்டாத கோட்டை
சாயாத செம்புக்குள் பேயாத தண்ணீர். அது என்ன?

– இளநீர்

865. எண்ணிற் கூடையன் எழுத்தில் சிறியவன்
மண்ணிற்கு உதவான் மதிப்பில் உயர்வான் மதிபோல்
அமைவான். அது என்ன?

– சூனியம்

866. எண்ணும்போதே இனிக்கும் தண்ணீருக்குள் மிதக்கும்
தீண்ட தாவும் இனிக்கும் தேகம் பூராவும் சிலிர்க்கும்.

– தேன்

867. எண்ணெய் இல்லாத விளக்கு
எலெக்ட்ரிக் விளக்குமல்ல - அது
கண்ணைப் பறிக்கும் சோதி விளக்கு
கடையில் வாங்காத விளக்கு.

– சந்திரன்

868. எண்ணெய் இல்லை ; திரியும் இல்லை ;
ஏற்றிவைக்க ஆளும் இல்லை
அந்தரத்தில் பந்துபோல
இரவில் அழகாய்த் தொங்கும் விளக்கு. எது?

– நிலா

869. எண்ணெய் இல்லை ; திரியும் இல்லை ;
ஏற்றிவைக்க ஆளும் இல்லை
ஆனாலும் வெளிச்சம் தரும். அது என்ன?

– சூரியன்

870. எண்ணெய்க் குளத்திலே ஏறின சூட்டிலே
இடிச்சு வெடிச்சு எகிறும் முட்டை என்ன முட்டை?

– கடுகு

871. எண்ணெய் வேண்டாத விளக்கு
எடுப்பார் கை விளக்கு
கண்ணீர் விட்டுக் கலங்கிடும் விளக்கு
தன்னைத்தானே விழுங்கிடும் விளக்கு.

– மெழுகுதிரி விளக்கு

872. எண்ணெயில் குளிப்பான் சாப்பாட்டில் இருப்பான்
அது என்ன?

– அப்பளம்

873. எண்ணெயில்லாமல் விளக்கு இரவில் எத்தனை எரியுது? ஏற்றிவிட்ட விளக்கை எவராலும் அணைக்க முடியாது.

– விண்மீன்கள்

874. எண்ணெயே வேண்டாது எரிகிற விளக்கு.

– மின் விளக்கு, சூரியன்

875. எத்தனை தேயஞ் சுற்றினாலும் தித்திக்காத பழம் ஒன்றுண்டு. அது மலை நிலம் காடுகளிலும் விளைவதில்லை. அந்தப் பழத்தை நான் சுவை பார்த்திருக்கிறேன். நீங்களும் பார்த்திருப்பீர்கள். அது என்ன?

– ஆலங்கட்டி

876. எத்தனை பேர் ஏறினாலும் சலிக்காத குதிரை.

– திண்ணை

877. எத்தனையோ கொடி சுற்றி எம்புட்டுப் பூ அழகும் எத்தனையோ இருந்தாலும் இந்த வட்ட ராஜாத்தி இடம்பெயர்ந்து கொண்டிருப்பாள்.

– ரூபாய்

878. எத்தனை வேகமாய்ச் சுற்றினாலும் தலைசுற்றாது அவனுக்கு. அவன் யார்?

காற்றாடி

879. எதிர்க்கதை போட்ட ராவணனுக்கு முதுகிலே முந்நூறு வடு . அது என்ன?

– சல்லடை

880. எதிர் புதிர் போட்ட ஏகாவிப்பயலுக்கு முதுகிலே மூன்று சுழி.

– அணில்

881. எந்த எழுத்து இரக்கும்?

– தா

882. எந்த எழுத்து உசுப்பும்?

– சூ

883. எந்த எழுத்து உமிழும்?

– தூ

884. எந்த எழுத்து எழுத உதவும்?

– மை

885. எந்த எழுத்து எழுதும்?

– கை

886. எந்த எழுத்து ஏட்டில் இல்லை?

– தலையெழுத்து

887. எந்த எழுத்து சுடும்?

– தீ

888. எந்த எழுத்து பறக்கும்?

– ஈ

889. எந்த எழுத்து பொருட்களைப் போட்டுக்கொள்ள உதவும்?

– பை

890. எந்த எழுத்து மணக்கும்?

– பூ

891. எந்த எழுத்து வாயைப் பிளக்கும்?

– ஆ

892. எந்த எழுத்து விரட்டும்?

– போ

893. எந்த குட்டிக்கு வால் இல்லை?

– ஐயாக்குட்டி

894. கைக்குழந்தைக்குப் பலம்?

– அழுகை

895. எந்தத் தாளம் எல்லாவற்றிற்கும் அடி?

– பாதாளம்

896. எந்தத் தானம் எவற்றிலும் சிறந்தது?

– அன்னதானம்

897. எந்தப் பாத்தியில் முள்ளே முளைக்கும்?

– சப்பாத்திக்கள்ளி

898. எந்த மரத்துக்குக் காய்களில்லை?

– காயாமரம்

899. எந்த மாலை தரிக்கமுடியாது?

– கண்டமாலை

900. எந்த மானுக்குக் கொம்பு கிடையாது?

– அம்புலிமான்

901. எந்நேரமும் கொட்டும், சத்தம் கேட்காது.

– கண் இமை

902. எம்பி எம்பிக் குதிக்கும்
எங்க வீட்டு ராசா
தண்ணீர்ப் பக்கம் போனால்
தாவிக் குதிப்பார் ராசா. அவர் யார்?

– தவளை

903. எரிந்தால் கல் கரைந்தால் தண்ணீர். அது என்ன?

– பனிக்கட்டி

904. எரிப்பவன் - ஆனால் அவன் எரியாதவன்.

– சூரியன்

905. எரியும் ; ஆனால் குளிரும். அது என்ன?

– நிலா

906. எரிவான் ; மணப்பான்; உற்சாகம் கொடுப்பான். எது?

– ஊதுபத்தி

907. எருக்கமுள் தைத்தால்
பொறுக்க முடியவில்லை
காட்டுப் புளியங்கொட்டையைக்
கடிக்க முடியவில்லை.
கமால் வெற்றிலை
மடிக்க முடியவில்லை. அவை என்ன?

– தேன், சுளாங்கல், வானம்

908. எருக்கிலை பழுப்பதேன்?
எருமைக்கன்று சாவதேன்?

– பாலற்று

909. எருதும் பசுவும் இரதமும்
ஒரு யானையின் மேலேறி
ஒழுங்காயிருப்பதை ஓது.

– நந்தியாவட்டை

910. எல்லப்ப நாயக்கருக்கு ஏகப்பட்ட விருந்து
இருந்துதான் அவரும் விருந்து சாப்பிட்டும்
இலை எடுக்க மாட்டாராம் ஏனோ போயிட்டார்?

– நாய்

911. எல்லா ஊருக்கும் மழை பெய்தாலும்
கப்பலூருக்கு மழை பெய்யாது.

– பசுமடி

912. எல்லா குரங்குக்கும் ஒரே வால்.

– வாழைக்காய்

913. எல்லாச் சட்டியும் மூடி இருக்க
ஊறுகாய்ச் சட்டி திறந்து கிடக்கு.

– கிணறு

914. எல்லாத் திசைகளிலும் பயணிக்கும்
மண்ணிலும் இல்லை; விண்ணிலும் இல்லை. அது என்ன?

– மீன்

915. எல்லையில்லா அழகி எட்டி நிற்கும் இரும்பையும்
கவர்ந்து தன்பால் இழுப்பான். அவள் யார்?
– காந்தம்

916. எல்லோர் வீடும் சாத்திக் கிடக்க
கங்கையம்மன் கோயில் திறந்து கிடக்குது.
– கிணறு

917. எல்லோருக்கும் கிடைக்காத மதி
எல்லோரும் விரும்பும் மதி.
– நிம்மதி

918. எல்லோரையும் கூவி அழைப்பான். ஆனால்
எவர் அழைத்தாலும் நகரமாட்டான். அவர் யார்?
– மணி

919. எலும்பில்லாத மனிதன்
கணுவில்லாத மரத்தில் ஏறுகிறான். அது என்ன?
– பேன், மயிர்

920. எலும்பு இல்லாத மனிதன்
எட்டு ஆறு நீந்துவான். அவன் யார்?
– அட்டை

921. எவ்விடத்தில் சுகத்தை எப்போதும் காணலாம்?
– அகராதியில்

922. எவனுக்கும் தெரியாத பொருள்
எல்லையெல்லாம் கடக்கும் பொருள். அது என்ன?
– காற்று

923. எழுத்துத் தமிழுக்கு இறுதி எழுத்தாம்
'இன்'வில் முடியும் மூன்று பேர். தோழர்கள்
ஒருவன் காட்டில், மின்னல் ஒருவன் வீட்டில்,
கன்னல் ஒருவன் நீரில். மன்னன் உரைப்பீர்
இவர்கள் பேரை இனிதே.
– மான், தேன், மீன்

924. எழுந்து அருகில் சென்றால் - காலில்
விழுந்து வணங்குவாள்
எழுந்து அணைத்துக்கொள்வாள். அவள் யார்?
– கடல்அலை

925. எழுந்திரு குண்டா ஊருக்குப் போகலாம். அது என்ன?
– கட்டுச்சோற்றுமூட்டை

926. எழில் எழிலாய்ப் பூக்கும்
அம்மாடியோய் எனக் காய்க்கும்.

– மிளகாய்

927. கணவன் : எள்ளிலே பொறந்து
எள்ளிலே வளர்ந்த இளவாணியப் பெண்ணே
எள்ளுக்கும் சிறிய இலை என்ன இலை?
மனைவி : பூவிலே பொறந்து பூவிலே வளர்ந்த
ராஜாமகனே பூவுக்கும் சிறிய பூ என்ன பூ?

– விடத்தளை இலை, விடத்தளைப் பூ

928. எள்ளினும் சிறிய இலை என்ன இலை?

– விடவராம் இலை

929. எள்ளுப் போல பொன்னாட்டி
இடிபட இசைந்தே செத்தாண்டி.

– நெல்

930. என் காளை குட்டைக்காளை
கிட்டவந்தால் முட்டித்தள்ளும். அது என்ன?

– நெருஞ்சிமுள்

931. என் குதிரை கறுப்புக்குதிரை
குளிப்பாட்டினால் வெளுப்புக்குதிரை. அது என்ன?

– உளுந்து

932. என் தகப்பன் பச்சை
என் மகள் சிவப்பு
என் மகன் கறுப்பு. அது என்ன?

– தர்பூசிப்பழம் (தர்பூசணிப்பழம்)

933. என் தங்கச்சி சின்னத் தங்கச்சி
என்னவச்சாலும் சுமப்பாள். அவள் யார்?

– அடுப்பு

934. என் தம்பி சின்னத்தம்பி
ஓடியோடி முள்ளடைக்கிறான். அவன் யார்?

– தையல்ஊசி

935. என் தாயோ கடல், தந்தையோ சூரியன் என்னை
விரும்பாத வீடே இல்லை. அது என்ன?

– உப்பு

936. என் பெயரில் மூன்றெழுத்து உண்டு
முதல் எழுத்து நான் பசு ஆவேன்
கடை எழுத்து பெண்களுக்கு கண்களுக்கு இடும்
பொருளாவேன். நான் யார்?

– கோதுமை

937. என்மேல் ஒரு குண்டு
குண்டுமேல் ஒரு பாறை
பாறைமேல் கோரை
அந்தக் கோரைக்குள் மீன்
அது கால், வயிறு, தலை. அது என்ன?
– தலை, மயிர், பேன்

938. என்றைக்குப் பிறந்ததோ அன்று முதலாக
இன்று வரைக்கும் இடுப்பு வயிற்றாலே போவது எது?
– பாம்பு

939. என்றைக்கும் மூடாத தொட்டி, எடுக்க எடுக்க
நீர் குறையாத தொட்டி, இது என்ன தொட்டி?
– கிணறு

940. என்ன கேள்வி? உன்னைப் பார்க்கணுமா
என்னைப் பார்?
– கண்ணாடி

941. என்ன சொல்லி அழைத்தாலும் வரமாட்டாள் ;
ஏழு அறைக்குள் இருக்கும் இந்திரப் பெண் ;
பட்டு மேல் பட்டுடுத்தி, பல்லக்கில் வைத்து,
சுற்றி இழுத்தவுடன் துள்ளி வெளியே வருவாள். அது யார்?
– வரகு அரிசி

942. என்னதான் அடிச்சாலும் இனிய நாதத்தை
இம்மியும் விடாமல் எடுத்துக் கொடுப்பாளே!
– மத்தளம்

943. என்னம்மா சின்னம்மா அன்னம்மா மயங்கிவிட்டாள்.
அவளை ஆசுவாசப்புடுத்தலாமா?
அன்னம்மாளைத் தள்ளுங்கள். அடிச் சிரியாச் சிறுக்கி
வீட்டுக்காரர் வந்ததும் அவளை வெளுத்துக் கிடத்துவார்கள்.
– நெல்

944. என்னிடத்தில் சிறுவன் ஒருவன் இருக்கிறான்
அவனுக்கு உறுப்புகளெல்லாம் உண்டு
எனக்குத் தெரியாது மற்றவர்களுக்குத் தெரியும். அது என்ன?
– கண்மணி

945. என்னிடத்திலிருக்கிறான் ஒருவன்
அவனை நான் நன்றாய்ப் பார்க்கிறேன்
மற்றவரை அவன் பார்க்கமாட்டான். அவன் யார்?
– மூக்குக்கண்ணாடி

946. என்னைக் கடிக்கி என் முனையைச் சூப்பி
பத்தாக்குறைக்கு பருப்பைக் கடிக்கி. அது என்ன?

– மாம்பழம்

947. என்னைச் சுற்றி ஒரு கோட்டை இருக்கிறது.
நான் கிட்டப்போனால் அது எட்டப்போகும். அது என்ன?

– வானம்

948. என்னைச் சுற்றித் தீ. நான் யார்?

– சூரியன்

949. என்னை நீ நம்பு
உனக்கு ஊட்டுவேன் தெம்பு. நான் யார்?

– இணை உணவு

950. என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன். நான் யார்?

– கண்ணாடி

951. என்னை வெட்டினால் உன்னை அழவைப்பேன். நான் யார்?

– வெங்காயம்

952. என்னோடு இருக்கும் சிறுமணி எனக்குத் தெரியாது
ஆனால் உனக்குத் தெரியும். அது என்ன?

– கண்மணி

953. எஸ் எஸ் கன்றுக்குட்டி இங்கிலீஷ் கன்றுக்குட்டி
தண்ணீர்பட்டால் செத்துப்போகும். அது என்ன?

– நெருப்பு

954. ஏணி மேலே கோணி, கோணிமேலே குழாய்
குழாய்மேலே குண்டு, குண்டு மேலே புல்லு
புல்லு மேலே பூச்சி. அது என்ன?

– மனிதனின் கால், வயிறு, தலை, முடி, பேன்.

955. ஏய் மாமா என்னைப் பாரு
ஒசக்கே ஏறு கீழே தள்ளு
மூன்றையும் தண்ணியைக் குடிச்சது போலக்குடி. அது என்ன?

– நுங்கு

956. ஏர் இல்லாமல் உழுவார்
எங்க சின்னராசா. அவர் யார்?

– மண்புழு

957. ஏர் வடிகாலில் இறைச்ச தண்ணீர்
வடிந்ததுமே சேரிக் குதிரையது செக்காய் உப்புதடி.

– பணியாரம்

958. ஏரிக்கரை உயர்ந்திருக்கும்
எட்டிப்பழம் சிவந்திருக்கும்
காகம் கறுத்திருக்கும்
காக்கைக்குஞ்சு வெளுத்திருக்கும். அது என்ன?

– அடுப்பு, நெருப்பு, கரி, சாம்பல்

959. ஏரித்தண்ணீர் வற்ற வற்ற
எருமைக்கடா உப்ப உப்ப.

– பணியாரம்

960. ஏழு அறைக்குள் இருக்கும் இந்திரப்பெண்ணே
என்ன சொல்லி அழைத்தாலும் வந்திடாப் பெண்ணே
பட்டுமேல் பட்டுடுத்திப் பல்லாக்கில் ஏற்றிவைத்துச்
சுற்றி இழுத்தவுடன் துள்ளிவருவாளே. அவள் யார்?

– வரகரிசி

961 ஏழு அறைக்குள் இருக்கும் பெண்ணே
என்ன கொடுத்தால் வருவாய்
பத்துப் போட்டு பன்னீர் தெளித்தால் வருவேன். நான் யார்?

– வரகரிசி

962. ஏழு எழுத்துக்களடங்கிய ஒரு ஊரின் பெயர்
அதன் முதல் நான்கு எழுத்துக்கள் சேர்ந்தால்
கல்லின் ஒருவகை, கடை மூன்று எழுத்துக்கள் சேர்ந்தால்
ஒருவகைத்துணி. அவ்வூரின் பெயரென்ன?

– செங்கல்பட்டு, செங்கல் – பட்டு

963. ஏழும் ஏழும் பதினான்கு
சோலைத்தச்சன் செய்த வேலை. அது என்ன?

– பல்லாங்குழி

964. ஏழு ஏழு முத்துமயில் ஏழு
இருபுறமும் கல்லிழைத்த தங்கமயில் ஏழு
வாதாடிச் சூதாடி வந்தமயில் ஏழு
வரிசையுள்ள அத்தைமக்கள் பதினான்குபேர். அது என்ன?

– பல்லாங்குழி

965. ஏழு கறியும் சோறும் ஆக்கியிருக்கு
இலையை எடுத்துவிட்டு உண்ண வேணும். அது என்ன?

– கருவேப்பிலை

966. ஏழுமலைக்கும் அந்தாண்ட எருமைக்கடா கத்துது. அது என்ன?

– இடி

967. ஏழேழும் பதினாலு சிறகிரண்டாட
இருபுறமும் எண்ணிறந்த முத்துமயிலாட
வாராத பெண்களெல்லாம் வந்து விளையாட. அது என்ன?

– பல்லாங்குழி

968. ஏழேழும் பதினாலு சோலை
இருபக்கம் தச்சருடைய வேலை
இதை விடுவித்தோர்க்கு
நவரத்னமாலை. அது என்ன?

– பல்லாங்குழி

969 ஏழைப் பூ நிறத்தாள்
ஒரு அடி வளர்ந்தாள்
கோட்டை ஏறிப் பார்த்தாள்
குத்துப்பட்டுச் செத்தாள். அவள் யார்?

– நெற்கதிர்

970. ஏழை படுக்கும் பஞ்சணையை
எடுத்துச் சுருட்ட ஆளில்லை. அது என்ன?

– பூமி

971. ஏற்றத்தின்மேல் இளம்பாம்பு. அது என்ன?

– வடக்கயிறு

972. ஏற்றி வைத்து அணைத்தால்
எரியும் வரை மணக்கும். அது என்ன?

– பத்தி

973. ஏற ஏற இதமாயிருக்கும்
ஏறினவுடனே எரிவாயிருக்கும்
புகுத புகுதப் புதுமையாயிருக்கும்
புகுந்தவுடனே பயமாயிருக்கும். அது என்ன?

– சூரியன்

974. ஏறமுடியாத இடத்தில்
எட்டப் பறக்கும் பனிக்கட்டி. அது என்ன?

– மேகம்

975. ஏற முடியாத மரம்
எட்டாயிரம் காய் காய்க்கும். அது என்ன?

– கேழ்வரகுக்கதிர்

976. ஏறமுடியாத மரம்
இலை விடும் மரம்.

– வாழை

977. ஏறாத கொடியிலே ஏழாயிரம் மணி.

– கேழ்வரகுக்கதிர்

978. ஏறாத மரம் அடியோ, இரை ஆகும் மரமடியோ,
இருக்கிறது அதற்குள்ளே எண்ணூறு காயடியோ.

– கேழ்வரகுக்கதிர்

979. ஏறினால் வழுக்கும்
இலையென்றால் சுருக்கும்
காய் என்றால் துவர்க்கும்
பழம் என்றால் இனிக்கும்.

– வாழைமரம்

980. ஏறினால் வழுக்கும் மரம்
இனிய கனியைக் கொடுக்கும் மரம்
எங்கும் இருக்கும் மரம்.

– வாழைமரம்

981. ஏறு ஏறு சங்கிலி
இறங்கு இறங்கு சங்கிலி
எட்டாத கொம்பெல்லாம்
தொட்டுவா சங்கிலி. அது என்ன?

– அணில்

982. ஏறும் சங்கிலி இறங்கும் சங்கிலி
கொட்டாம் பெட்டி முடையும் சங்கிலி. அது என்ன?

– மிசுறும் கூடும்

983. ஏறுவான் இறங்குவான்
வாழ்க்கைத் தத்துவம் விளக்குவான். அவன் யார்?

– ஏற்றம்

984. ஏனைக் கோணல் மூன்று, கண் ஆறு, கால் பத்து,
அது என்ன?

– கலப்பை

985. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு. அது என்ன?

– விரல்கள்

986. ஐந்து இலைக்கு ஒரு காம்பு உண்டோ மந்திரி
அது நல்ல வேளைதான் ஸ்வாமி. அது என்ன?

– வேளைச்செடி

987. ஐந்து ஊர்களுக்கு ஒரே மந்தை. அது என்ன?

உள்ளங்கை

88. ஐந்து காசுக்கு ஐம்பது காதம் பறப்பாள்
அடிபட்டுக் குத்துப்பட்டு ஓடிவந்த சேதி சொல்வாள்

பகலில்லை இரவில்லை வெயிலில்லை மழையில்லை
ஊரூராக ஓடித்திரிந்தே ஒருவனையே கைபிடிப்பாள்.
அது என்ன?

– கடிதம்

989. ஐந்து தலைப் பாம்பு
அதன் வாய் எங்கும் நெருப்பு

– அடுப்பு

990. ஐந்து நதிக்கு ஒரே பாலம்.

– உள்ளங்கை

991. ஐந்துபேர் குண்டுருட்ட பதினாறுபேர் தாங்க
உள்ளேயொருவன் தள்ள'டும்' என்று போய்
'டுங்' என்று விழ. அது என்ன?

– சோறு

992. ஐந்து பேரில் இளையவன்
கலியாணத்துக்கு மூத்தவன். அவன் யார்?

– சுண்டுவிரல்

993. ஐந்து விரல் அமர்ந்தாட
பத்து விரல் பந்தாட
வெயிலுடன் வாதாட
எமனுடன் போராட. அது என்ன?

– வறட்டி

994. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்.

– உள்ளங்கை

995. ஐம்பது பிள்ளைகளுக்கும் இடுப்புக்கயிறு ஒன்றே.

– துடைப்பம்

996. ஐயங்கோவணம் நெடுங்கோவணம். அது என்ன?

– சாலை

997. ஐயனைவிட்டுப் பையன் போகமாட்டான்.
பையனைவிட்டு ஐயனும் பிரியமாட்டான். அது என்ன?

– நிழல்

998. ஐவருடனே பிறந்தான்
தருமன் அல்ல
அதில் ஒருவன் சாட்சி சொல்வான். அவன் யார்?

– சுட்டுவிரல்

999. ஒட்டி வளர்ந்தாலும் அவனை வெட்டி
எறிவோம். அது என்ன?

– நகம்

1000. ஒட்டி உறவோடு கட்டிய கணவனை
விட்டவள் கெட்டாளே! கட்டுப்படாததால்
சுட்டுப் பொசுக்கெனச் சொல்வார்கள் அனைவரும்.

– நெல் உமி

1001. ஒட்டுத் திண்ணையில் தடுக்குப் போட்டேன்
எடுக்க முடியவில்லை. அது என்ன?

– கோலம்

1002. ஒட்டுத் திண்ணையில் பட்டுப் பாவாடை.
அது என்ன?

– தோடு

1003. ஒட்டுத் திண்ணையில் பட்டுக் காயுது. அது என்ன?

– மூக்குத்தி

1004. ஒட்டுவது ஒருவன் ; பிரிப்பது ஒருவன். அது என்ன?

– கடிதம்

1005. ஒடிசல் உடம்புக்காரன்
வீட்டுக்கு மேலே அவன் கூட்டம்
ஒளியை வாங்கி உள்ளே அனுப்புவான். அவன் யார்?

– டிவி ஆண்டெனா

1006. ஓடுக்காமல் பறப்பது எது மந்திரி?
சிமிட்டாமல் விழிக்கும் அது அரசே!

– பட்டாம்பூச்சி

1007. ஒண்ணும் இரண்டும் கலப்பு
உள்ளங்கையில் அடைப்பு
ஆவியிலே நடிப்பு
ஆண்டவர்க்குப் படைப்பு. அது என்ன?

– கொழுக்கட்டை

1008. ஒத்தக்காத்தான் ஒல்லிப்பிச்சான்
ஒரு நீள வாலோடு மடிச்ச துணிமீது
மல்யுத்தம் செய்கிறான்.

– ஊசிநூல், தையல்துணி

1009. ஒத்தே ஒத்த அப்பம், ஒரு காசு அப்பம்,
ஒண்ணே ஒண்ணு வாங்கி ஊருக்குத்தான் கொடுத்தேன்.

– சந்திரன்

1010. ஒத்தைக்கண்ணுக் காட்டேரி
ஒல்லிப் பிச்சி கச்சேரி
ஊடு பாவு நடத்துவாள்.

– ஊசி

1011. ஒத்தைக்கால் குருவியை உரிச்சுப் பிரிச்சுப்
பார்த்ததும் உள்ளற உழக்கு முட்டைகள்
உதிர உதிர தெரிக்குதே.

– சோளம்

1012. ஒத்தைக்கால் குள்ளனுக்கு எட்டுக்கை. அது என்ன?

– குடை

1013. ஒரு அகப்பை மாவாலே
ஊரெல்லாம் கலியாணம்.

– நிலா

1014. ஒரு ஆண்டு உயிர் வாழ்வான்
ஒயிலாகக் காட்சி தருவான். அது என்ன?

– காலண்டர்

1015. ஒரு ஊருக்கு ஐந்துவழி. அது என்ன?

– உள்ளங்கை

1016. ஒரு கட்டுத் துறையில்
முப்பத்திரண்டு வெள்ளைப்பசுக்கள்.

– பற்கள்

1017. ஒரு கரண்டி மாவு
ஊர் எல்லாம் தோசை. அது என்ன?

– நிலா

1018. ஒரு கற்றை ஓலையை ஒன்றாய் வந்தாலும்
தந்தாலும் வாத்தியார் யாருக்கும்
வாசிக்கத் தெரியலை. அதுதான்
ஏனென்று யோசிக்கவும் முடியலை.

– தலைமுடி

1019. ஒருகாசுக்கு வடை வாங்கி
உலகத்துக்கே கொடுத்தேன். அது என்ன?

– நிலா

1020. ஒரு காய் இல்லாமல் மானம் கெட்டது.
ஒரு கல் இல்லாமல் சுவை கெட்டது. அது என்ன?

– பருத்தி, உப்பு

1021. ஒரு கால் நான்கு கீத்து
ஒரு பந்தல். அது என்ன?

– ஆலக்கீரை

1022. ஒரு கால் மனிதனுக்கு
வயிறு நிறைய முட்டை. அது என்ன?

– மிளகாய்

1023. ஒருகிணற்றில் ஒரே தவளை. அது என்ன?

– நாக்கு

1024. ஒரு குட்டை. அதைச்சுற்றி ஐந்து கழி,
அசையும் ; ஆனால் பிடுங்கமுடியாது. அது என்ன?

– கை

1025. ஒரு குடிசைக்கு இரண்டு வாசல்.

– மூக்கு

1026. ஒரு குதி குதித்தான் திம்மப்பன்
பல்லை இளித்தான் திம்மப்பன். அது என்ன?

– பொரி

1027. ஒரு குப்பிக்குள்ளே இரண்டு எண்ணெய்.

– முட்டை

1028. ஒரு குருவிக்கு ஒரே கால் நாலு இறக்கை.
அது என்ன?

– அரைக்கீரை

1029. ஒரு குளத்தில் ஒரு தட்டு
நனையாமல் கிடக்கிறது. அது என்ன?

– நிலா

1030. ஒரு குழிக்கு ஒரே சாதி
அச்சாதி பத்தேகால், பத்தேகாலுக்கு
எட்டேகால் போகக்
கலத்தல் இரண்டே கால். அது என்ன?

– நண்டு

1031. ஒரு குளத்தில் ஒரே மீன்.
எட்டிப் பார்த்தாலும் வேறு குளம் போகாது. எது?

– நாக்கு

1032. ஒரு கேணியில் ஓர் ஆமை. அது என்ன?

– நாக்கு

1033. ஒரு கொத்து ஓலையைத்
திருமுடி ராசா
வாசிக்கமுடியாம
மலையேறப் போகிறார். அது என்ன?

– தலைமயிர் எண்ணிக்கை

1034. ஒரு சாண் இரு பலகை
இரு நூறு தலைவாசல்.

– தேன்குழல் பிடி

1035. ஒரு சாண் உடம்பு
உடம்பு நிறையப் பற்கள். அது என்ன?

– சீப்பு

1036. ஒரு சாண் கட்டைக்கு அரைச்சாண் மூடி.

– பேனா

1037. ஒரு சாண் குச்சிக்குள்ளே
ஒளிந்திருக்கான் கறுப்பு மனிதன்.

– பென்சில்

1038. ஒரு சாண் முட்டையிலே ஒரு முழ வால்.

– நாக்கு

1039. ஒரு சாண் குதிரைக்கு உடம்பெல்லாம் பல்.
அது என்ன?

– சீப்பு

1040. ஒரு சாண் குள்ளனுக்குக் குடுமி மட்டும்
அரைசாண். அவன் யார்?

– தேங்காய்

1041. ஒரு சாண் பட்டைக்கு உடம்பெல்லாம் முள்ளு.

– ரம்பம்

1042. ஒரு சாண் மீனுக்கு உடம்பெல்லாம் பல்லு.

– சீப்பு

1043. ஒரு சிமிழியில் மூன்று பெண்கள். அது என்ன?

– ஆமணக்கு

1044. ஒரு சிறு சிப்பிக்குள் அறுநூறு கிளிஞ்சல்கள்.

– வாழைப்பூ

1045. ஒரு சுளகரிசியில் ஓரரிசி பெரிசு. அது என்ன?

– நிலா

1046. ஒரு சொட்டுப் பட்டதும் ஊரெல்லாம் ஈரம்.

– விளக்கு

1047. ஒரு துரைக்கு இரண்டு தொப்பி. அவன் யார்?

– வறுத்தபட்டாணி

1048. ஒரு தோட்டத்திலே பத்துமரம்
அசைக்கமுடியும் பிடுங்க முடியாது.

– விரல்கள்

1049. ஒரு நாடு 'போ' என்கிறது.
அதன் தலைநகரோ 'வா' என்கிறது. அவை என்ன?

– 'போ' லந்து, 'வா'ர்சா.

1050. *ஒரு நெல் எடுத்துக் குற்றினால்*
வீடு முழுவதும் பொறி. அது என்ன?

– **விளக்கு**

1051. *ஒரு பக்கம் கறுப்பு ; மறுபக்கம் சிவப்பு ;*
உள்ளே வெள்ளைப்பருப்பு. அது என்ன?

– **குன்றிமணி**

1052. *ஒரு பக்கம் செய்தி*
ஊர் எங்கும் கியாதி. அது என்ன?

– **வானொலி**

1053. *ஒரு பக்கம் பல்லால்*
ஒன்றை ஒன்பதாக்கும்.

– **ரம்பம்**

1054. *ஒரு 'படம்' எடுத்தபோது*
ஒருவனை 'அவுட்' ஆக்கினான். அவன் யார்?

– **நல்ல பாம்பு**

1055. *ஒரு படி அரிசி போட்டு*
ஊருச் சனங்களுக்குப் போட்டு
மீந்து கிடக்குது ஏராளமாக. அது என்ன?

– **சுண்ணாம்பு**

1056. *ஒரு படி தண்ணீரில்*
ஒய்யாரி ஆட்டம் போடுகிறாள். அவள் யார்?

– **மோர், மத்து**

1057. *ஒரு பிள்ளை பூமூனு. பூ சொல்லு?*

–– **இனிப்பு, பொறுப்பு, கசப்பு**

1058. *ஒரு பிள்ளை பெத்ததும் தள்ளை*
செத்துப்போனாள். அது என்ன?

– **வாழை**

1059. *ஒரு பூவைத்தான் பூக்கும்*
நூறுக்கு மேல் காய் காய்க்கும்
விருந்தென்றால் இலைகள் தரும்
தெரிந்திருந்தால் நீர் கூறும்?

– **வாழை**

1060. *ஒரு பெட்டியில் இரண்டு முத்துக்கள். அது என்ன?*

– **மணிலா**

1061. *ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை. அது என்ன?*

– **அடுப்பு**

1062 ஒரு பெரிய மரம், இதற்குப் பன்னிரண்டு கிளை,
ஒவ்வொரு கிளையிலும் முப்பது இலை
அவற்றுள் பதினைந்திலை கறுப்பு
பதினைந்திலை வெளுப்பு. அது என்ன?

– வருடம், மாதம், நாட்கள், அமாவாசை, பௌர்ணமி

1063. ஒரு பொரி பொரிக்க
ஊரெல்லாம் பொரி. அது என்ன?

– விளக்கு

1064. ஒரு மரத்திலே ஐந்து பூக்கள். அது என்ன?

– பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்

1065. ஒரு மரத்திற்கு மூன்று கிளைகள்
மூன்று கிளைக்கும் ஒரே காய்
அந்தக் காய்க்குள் கணக்கில்லா விதைகள். அது என்ன?

– அடுப்பு

1066. ஒரு மரம் ஏறி, ஒரு மரம் பூசி
ஒரு மரம் வீசிப் போகிறாள். அவை என்ன?

– பாதக்குறடு, சந்தனம், விசிறி

1067. ஒரு முழக்கயிற்றில் உரிமை வந்துவிடும். அது என்ன?

– தாலி

1068. ஒரு முழக் கயிறுக்கு ஓராயிரம் வாழ்த்துக்கள்.

– தாலி

1069. ஒரு முழக் குழியிலே
கால் படி மல்லிகைப்பூ.

– நெருப்பு

1070. ஒரு முழ மூங்கிலில் ஒய்யார கீதம். அது என்ன?

– புல்லாங்குழல்

1071. ஒரு லிட்டர் தண்ணீரில்
ஒய்யாரி ஆட்டம் போடுகிறாள். அது என்ன?

– மோர், மத்து

1072. ஒரு வண்டி வெண்ணெய் உருக்கிப் போட்டு
ஊருக்கெல்லாம் கொடுத்தாலும்
இன்னும் வெண்ணெய் மிச்சம்தான்.

– சுண்ணாம்பு

1073. ஒருவன் ஓட்டிவர
இரண்டு இழுத்துவர
நெய் திரண்டுவர
நெருப்பு அருகில்வர.

– செக்கு

1074 ஒருவன் சுழன்றுண்பான்
ஒருவன் இருந்துண்பான். அது என்ன?

– நிரிகை

1075. ஒருவனுக்குத் தேகத்தில் எலும்பு சதையில்லை
சிரசில்லை, கையுண்டு, விரலில்லை
நித்தியபுருஷ ஆகாரம், தினம் கிராம சஞ்சாரம்.
அது என்ன?

– சட்டை

1076. ஒருவனுக்குத் தேகமுண்டு எலும்பேயில்லை
ஓங்கி வீசக் கையுண்டு விரல்களில்லை
நிதம்புருடா காரமுண்டு சூரனன்று
நிர்ணயமாயிக் கதையை நிகழ்த்துவீரே.

– சட்டை

1077. ஒருவனை அழைத்தால் ஊரையே கூட்டுவான். அவன் யார்?

– காகம்

1078. ஒரே ஓர் அப்பம் சுட்டு ஊருக்கெல்லாம் வழங்குகிறாள்.

– வானமும் நிலவும்

1079. ஒரே ஒரு தாளம், எல்லாவற்றுக்கும் அடித்தளம்.
அது என்ன?

– பாதாளம்

1080. ஒரே குருவிக்கு நான்கு இறக்கை
ஒரே கால். அது என்ன?

– ஆரக்கீரை

1081. ஒரே சிப்பிக்குள் மூன்று முத்து.

– ஆமணக்குவிதை

1082. ஒரே புட்டி இரண்டு தைலம்.

– முட்டை

1083. ஒரே விட்டத்தில் ஒன்பது கலயம்.

– கத்தரிக்காய்

1084. ஒரே வீச்சில் 'சர்ர்ரக்'. அது என்ன?

– தீக்குச்சி

1085. ஒல்லி உடம்புக்காரிக்கு ஒருமுழ நீள ஜடை,
ஜடையில் ஒரு கல். அவள் யார்?

– புடலங்காய்

1086. ஒல்லி மனிதனுக்கு ஒற்றைக்கண். அவன் யார்?

– ஊசி

1087. ஒலி கொடுப்பான், பின் தகவல் கொடுப்பான்.
அவன் யார்?

– டெலிபோன்

1088. ஒல்லியாய் இருப்பவராம்
ஒற்றைக்கண் உடையவராம்
உடம்பிலே பட்டாலே
உஸ் என்று கத்திடுவோம். அது என்ன?

– ஊசி

1089. ஒல்லியான மனிதன், ஒரு காது மனிதன்,
காது போனால் தொடமாட்டார்கள். அது என்ன?

– ஊசி

1090. ஒளி கொடுக்கும் விளக்கு அல்ல
சூடு கொடுக்கும் தீ அல்ல
பளபளக்கும் தங்கம் அல்ல. அது என்ன?

– சூரியன்

1091. ஒளி தந்த உத்தமன்
உருக்குலைவான் அதனாலே.

– மெழுகுவர்த்தி

1092. ஒளி தருவது, உலகம் புகழ்வது,
உனக்குள் இருப்பது. அது என்ன?

– பகுத்தறிவு

1093. ஒளியில் தொடர்வான். இருளில் மறைவான். யார் அவன்?

– நிழல்

1094. ஒளியும் இருளும் ஒத்து வாழ்வன
வெளிநிகர் இடையாய் விளம்பாய் இதுவென்?

– நரையும், கருமுடியும்

1095. ஒளியைத் தரும்
ஒலியாகவும் மாறும். அது என்ன?

– மின்சாரம்

1096. ஒளி வீசுவான், கண்ணையும் பறிப்பான். அவன் யார்?

– மின்னல்

1097. ஒற்றைக்காது சிங்காரி ஊடு பாவு நெய்கிறாள்!

– ஊசி

1098. ஒற்றைக்கால் குருவி
உழக்கு முட்டை இடும்.

– சோளம்

1199. ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக்கை.

– குடை

1100. ஒற்றைக்கால் கோழிக்கு
வயிறு நிறைய முட்டை.

– மிளகாய்

1101. ஒற்றைக்கால் தபசிக்கு ஒரு நூறு கை.

– மரம்

1102. ஒற்றைக்கால் நாராயணன்
ஓடையிலே மீன் பிடிக்கிறான். அவன் யார்?

– கொக்கு

1103. ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக்கை. அது என்ன?

– குடை

1104. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கைகள். அது என்ன?

– மரம், கிளைகள்

1105. ஒற்றைக் காலில் ஆடுவான்
ஓய்ந்து போனால் படுப்பான்.

– பம்பரம்

1106. ஒற்றைக்கோழிக்கு வயிறு நிறைய முட்டை. அது என்ன?

– மிளகாய்

1107. ஒற்றைத்தலையனுக்கு இரட்டைப்பல். அவன் யார்?

– முள்

1108. ஒற்றைத்தனம் உடையாள் ஒருச்சாய்த்துப்
படுத்தவள்போல் கற்றை நரம்படியோ!
நரம்பைத் தொட்டாலே நாதப் பிறம்படியோ!

– வீணை

1109. ஒன்பது பிள்ளைக்கும் ஒரே குடுமி. அது என்ன?

– வெள்ளைப்பூண்டு

1110. ஒன்றானவர்கள் பிரிந்தே இருப்பார்கள்
காவல் நேரங்களில் மட்டும். அவர்கள் யார்?

– பூட்டு,சாவி

1111. ஒன்றிரண்டானால் தலையில்,
கூட்டாக அமைந்தால் கழுத்தில். அது என்ன?

– பூ, மாலை

1112. ஒன்றில்லாமல் உலகம் கெட்டது
ஒரு காய் இல்லாமல் மானம் கெட்டது
ஒரு கல் இல்லாமல் உயிர்போனது. அது என்ன?

– மழை, பருத்தி, உப்பு

1113. ஒன்றை ஒருவனுக்குக் கொடுக்கிறாய்
அதையே நீயும் வைத்துக்கொள்கிறாய்.

– வார்த்தை

1114. ஒன்னுக்குப் பின்னாலே ஒரு காலைப் போட்டு
இலையில் இருக்கிற ஈயை விரட்டு
இப்படிப் படிக்கையில் வருத்தமா வருது!

– கவலை (இலையில் உள்ளது 'இ' – 'ஈ' என மருவியது.)

1115. ஓ ஓ அண்ணா உயர்ந்த அண்ணா
தோளிலே என்ன தொண்ணூறு முடிச்சு?

– பனைமரம்

1116. ஓ ஓ உயர்ந்த மரமே
உருவினால் பிடி காணாது.

– புகை

1117. ஓ ஓ மரமே ஓசந்த மரமே
ஒரு பிடி தழைக்குக் கெதி கட்ட மரமே. அது என்ன?

– சதுரை மரம்

1118. ஓ ஓ மரமே உயர்ந்தமரமே
ஒரு பிடி தழைக்கு விதியற்ற மரமே.

– போஸ்ட்கம்பம்

1119. ஓகோ இராசா உயர்ந்த இராசா
தோளிலென்ன தொண்ணூறு முடிச்சு. அது என்ன?

– தென்னை மரம்

1120. ஓகோ ஓகோ மலையே உயர்ந்த பனிமலையே
ஒருநாளும் ஏறமுடியாத மலையே!

– புகை

1121. ஓகோ கிழக்கே ராவணன் தோப்பே
செங்கால் நண்டே செவந்திப் பூவே
சட்டுனு வந்து பெட்டியில் அடங்கே. அது என்ன?

– சூரியன்

1122. ஓகோகோ மரத்திலே உச்சாணிக் கிளையிலே
டம்மார அம்மனுக்கு மகமாரி போட்டிருக்கு.
அது என்ன?

– பலாப்பழம்

1123. ஓகோகோ மரத்திலே
உச்சாணிக் கிளையிலே
வைகுண்ட ராஜனுக்குக்
கழுத்திலே வெள்ளை. அது என்ன?

– கருடன்

1124. ஓகோ தடியா உயர்ந்த தயாளா
உடம்பைச் சுற்றி ஏன் நூறு தழும்பு?

– தென்னை மரம்

1125. ஓகோ மரத்திலே
உச்சாணிக் கிளையிலே
ஒட்டுச் சட்டியிலே
களிமண் இருக்கிறது. அது என்ன?

– விளாம்பழம்

1126. ஓகோ மரமே உயர்ந்த மரமே
ஒரு கொத்து வெற்றிலைக்கு வக்கத்த மரமே.
அது என்ன மரம்?

– கள்ளி

1127. ஓங்கி உயர்ந்தாள் ஒரு பிள்ளை பெற்றாள்
உடனே செத்தாள். அவள் யார்?

– வாழை

1128. ஓங்கி உயர்ந்து வளரும் மரமேயல்ல
இலையுண்டு கிளையில்லை தென்னையல்ல
நடுநடுவே கணுக்கள் உண்டு மூங்கிலுமல்ல
தோலைச்சீவி மென்றால் தித்திக்கும்
பொங்கல் அன்றைக்குக் கடையில் வந்து நிற்பான்.
அவன் யார்?

– கரும்பு

1129. ஓங்கிய உருவமுண்டு குறுகிய கையுமுண்டு
நிமிர்ந்தால் பச்சைக்கண் குனிந்தால் சிவப்புக்கண்
ஆரவாரமாய்ப் பேரிரைச்சலுடன்
வருகின்ற ஒருவனை வந்து பாரென்று
நிமிர்ந்து எதிர்த்து நின்று அட்டகாசத்தை
அடக்கி அவனை 'கீ - கீ' என்று கூச்சலிடும்படி
செய்திடுவான். அவன் யார்?

– கைகாட்டி

1130. ஓங்கி வளர்ந்தவன்
ஒருபக்கம் சாய்ந்தான். அவன் யார்?

– மூங்கில்

1131. ஓங்கி வளர்ந்தவன்
தாகம் தீர்க்கத் தயங்காதவன். அவன் யார்?

– தென்னை

1132. ஓசையிட்டு அழைப்பான்
இரகசியம் காதுக்குள். எது?

– தொலைபேசி

1133. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு.
அது என்ன?

– இரத்த ஓட்டம்

1134. ஓட்டாலே வீடுகட்டி உள்ளாலே பழுப்பதோடு
வாட்டமுடன் சுற்றூரம் வளமாக வேலிகட்டித்
தேட்டமொடு சுந்தரம்போல் செழுமையுடன் காய்காய்த்து
நாட்டார்கள் எல்லார்க்கும் நன்கறியாகுமென்பார்.
அது என்ன?

– புளியம்பழம்

1135. ஓட்டிலே அன்னம் உண்ணும் பரதேசியல்ல
ஓரமதில் நீர் குடிக்கும் குதிரையல்ல
பாட்டுமே கேட்குமது மனிதரல்ல
பாலையரைச் சேர்ந்தணையும் புருடரல்ல
தாட்டிகமாய் அடிதாங்கும் திருடர் அல்ல
சாணி மண்ணில் புரளுமது வண்டுமல்ல
நாட்டினிலே எல்லார்க்கும் உரியதாகும்
நலமுடனே இதன்பயனை நவிலுவீரே.

– வண்ணான் துணிதுவைத்தல்

1136. ஓட்டிலே வீடு கட்டி
உள்ளே உரிகட்டி
நாட்டாருக்கெல்லாம்
நல்ல வஸ்து என்ன?

– புளி

1137. ஓட்டை டப்பாவுக்குள் ஒருகோடி விஷயம். அது என்ன?

– காது

1138. ஓட்டைப் பிள்ளையார் கோவிலிலே
விழுந்து விழுந்து கும்பிடுவான். அது என்ன?

– அடுப்பு

1139. ஓட்டைப் பிள்ளையார் கோவிலுக்கும்
பூட்டுமில்லை, சாவியும் இல்லை. அது என்ன?

– அடுப்பு

1140. ஓட்டை வாயனுக்கு
விழுந்த பல் முளைக்கவில்லை. அது என்ன?

– சீப்பு

1141. ஓடமாட்டான் சாடமாட்டான்
ஒற்றைக்காலில் நிற்பான். பராக்குப் பார்த்து
நிற்கும் பரட்டைப் பயல்தான். இருந்தாலும்
கூட இருந்த இடத்தில் இருந்தபடி எப்படியும்
ஒரு குடம் நிறையவோ இல்லை. குறையவோ
உடைமைக்காரருக்கு கொடாமல் இரான்!

– பனைமரம்

1142. ஓடாத கோழி ஓசந்த கோழி
நாகம் படமெடுக்கும் நடுநடுவே முட்டைபோட்டு
நாற்பத்தைந்து நாட்கள் வரை நன்றாக
அடைகாக்கும் நாச்சியாரை
நீங்கள் நாடெங்கும் பார்க்கலாமே.

– தென்னை

1143. ஓடி ஆடித் திரியாமல்
கண்டு உண்டு மேயாமல்
நின்ற நிலையில் ஒரு குடம் பால். அது என்ன?

– பனைமரம்

1144. ஓடிப் படர்வேன் கொடி அல்ல
ஒளி மிகவுண்டு நிலவு அல்ல
மனைகளை அலங்கரிப்பேன் மலர் அல்ல. நான் யார்?

– மின்சாரம்

1145. ஓடியாடி கத்தும்
உடலைத் தேடிக் குத்தும். அது என்ன?

– கொசு

1146. ஓடியாடி சேமித்து ஒரே நாளில்
பறி கொடுப்பார்கள். அவர்கள் யார்?

– தேன், தேனீக்கள்

1147. ஓடி வருவதும் "ஓ"வெனக் கத்துவதும்
தான் இவனுக்கு வேலை. அவன் யார்?

– கடல் அலை

1148. ஓடுகின்ற குதிரைக்கு விலாவெல்லாம் ஓட்டை.
அது என்ன?

– புகைவண்டி

1149. ஓடுகின்ற முயலுக்கு விலாவிலே மச்சம். அது என்ன?

– வண்டிச்சக்கரம்

1150. ஓடுது ஓடுது ஒரே தடத்தில் ஓடுது. அது என்ன?

– இரயில் என்ஜின்

1151. ஓடுது குதிரை ஒளியுது குதிரை
தண்ணீரைக் கண்டால் தவிக்குது குதிரை. அது என்ன?

– செருப்பு

1152. ஓடும் ஆனால் இருக்கும் இடத்தைவிட்டு
அசையாது. அது என்ன?

– கடிகாரம்

1153. ஓடும் என்பார்கள். அது ஓடாது.

– கடிகாரம்

1154. ஓடும் ஓடும் சங்கிலி உருண்டு ஓடும் சங்கிலி
பள்ளத்தைப் பார்த்தால் பதுங்கி ஓடும் சங்கிலி.

– தண்ணீர்

1155. ஓடும் குதிரைக்கு வால் தேய்கிறது. அது என்?

– ஊசி நூல்

1156. ஓடுமாம் குதிரை ஒளியுமாம் குதிரை
தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம் குதிரை.
அது என்ன?

– நெருப்பு

1157. ஓடுமாம் சாடுமாம் ஒற்றைக்காலில்
நிற்குமாம். அது என்ன?

– கதவு

1158. ஓடுவான் சாடுவான்
ஒரு இடத்தில் நிற்கமாட்டான். அது என்ன?

– நிழல்

1159. ஓடுவான் நிற்க மாட்டான்
ஒளிந்துகொள்வான் வெளிவருவான். அவன் யார்?

– நிலா

1160. ஓடுவான் பறப்பான் ஒற்றைக்காலில் நிற்பான்.
அவன் யார்?

– கொக்கு

1161. ஓடையில் ஓடாத நீர்
ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?

– கண்ணீர்

1162. ஓடையில் ஓடும் நீர் உப்புக்கரிக்கும் நீர்.
அது என்ன?

– கண்ணீர்

1163. ஓயாது இரையும் இயந்திரம் அல்ல
உருண்டோடி வரும் பந்தும் அல்ல. அது என்ன?

– கடல்

1164. ஓர் எழுத்து ; அது நம் உயிர் எழுத்து. அது என்ன?

– தலையெழுத்து

1165. ஓர் எழுத்து உமிழும். அது என்ன?

– தூ

1166. ஓராண்டு உழுதவனுக்கு ஒரு வார அறுவடை. அது என்ன?

– தேர்வு

1167. ஓரெழுத்து பறக்கும். அது என்ன?

– ஈ

1168. ஓலைப்பூ நிறத்தாள் ஒரு அடி வளர்ந்தாள்
கோட்டையேறிப் பார்த்தாள்
குத்துப்பட்டுச் செத்தாள். அவள் யார்?

– நெற்பயிர்

1169. கங்கையிலே பிறந்து வளர்ந்து
கடைகளிலே வந்து போயி
மங்கையின் உடலிலே மருவி
மங்காமல் ஜொலிப்பாள் ராணி. அவள் யார்?

– முத்து

1170. கட்டக் கொம்பு கிட்டி மாடு
கிட்டப்போனா முட்ட வருது. அது என்ன?

– நெருஞ்சிமுள்

1171. கட்டப்பட்டு நான் கடலில் மூழ்கிக்
கண்டெடுத்த முத்தைக் கடிக்க மனம் வரவில்லை.
ஒடிக்க மனம் வரவில்லை.

– ரூபாய் நாணயம்

1172. கட்டாத சுவருக்குள்ளே
வற்றாத ஊற்றுக்குள்ளே
எலும்பில்லாத மனிதன்
எகிறி எகிறி குதிக்கிறான். அவன் யார்?

– நாக்கு

1173. கட்டாந்தரையிலே விதை ஊணி
கடலேழுபக்கம் கொடியோடி
பரஞ்சனூருலே பழம்பழுத்து
பரமேஸ்வரனுக்கு ஏத்தபழம் என்ன பழம்?

– குடம்

1174. கட்டாமல் கறக்காமல் காடேறி மேயாமல்
நின்ற இடத்திலே ஒரு படி பால்.

– இளநீர்

1175. கட்டான உடல் உண்டு உயிர் இல்லை
சங்குக் கழுத்துண்டு தலையில்லை.

– சட்டை

1176. கட்டிக் கல்லை நாம் கடித்துக் கடித்து
உண்போம். அலையும் நதி மணலை
அள்ளி அள்ளித் தின்போம்.

– கற்கண்டு, சீனி

1177. கட்டிப் படுத்திருந்த மகளை
விட்டுப் பிரிந்து வந்தேனே. நான் யார்?

– உமி

1178. கட்டுக் கட்டென்று கனைக்குமாம் குதிரை
காதம் ஆயிரம் கணத்திற் போகுமாம்
வாயுவும் அல்ல தோழா! மனமும் அல்ல தோழா,
வகையாய் நீ இதைச் சொல்வாய் தோழா!

– கடிதம்

1179. 'கட்டுக் கடகட' என்று பேசும்
கம்பி வழியாகப் பறந்து வரும்
பன்னிரண்டு வார்த்தைக்குப் பதின்மூன்றணாக் கட்ட
பன்னிரண்டு காதமானாலும் பாய்ந்துவந்து
சேதி சொல்லும். அது என்ன?

– தந்தி

1180. கட்டுக்கடகடா சத்தம்,
கயத்தாற்றுச் சத்தம்
பாப்பாக்குடியில் போட்ட சத்தம்
பம்பாய் மட்டும் என்ன
பல ஊரிலும் கேக்குதே?

– தந்தி, தொலைபேசி

(கயத்தாறு–கம்பிவழி என்று பொருள்)

1181. கட்டுப்பெட்டிப் பொண்ணு கண் சிமிட்டினாள்.
என்னைத் தொட்டுப் பார்க்கும்போது
தூர நிற்கச் சொன்னாள்.
கிட்ட நெருங்க நெருங்க
கமகமக்கிறது மூக்கு. கெட்டுப்போவோம்
என்று கெட்டிக்காரப் பொண்ணு
கூட்டத்தோடே முள்ளுவேலி கட்டி நிற்கிறாள்.

– தாழம்பூ

1182. கட்டெறும்பு முட்டை
கழுத்தைச் சுற்றிப் பட்டை,
தொட்டுக்கொண்டே ஏறுது,
ஏறித் துறுதுறுண்ணு பாக்குது!

– கழுத்து, முத்து, அட்டிகை

1183. கட்டைக்காளை
குட்டைக்கொம்பு
கிட்டப்போனால்
முட்ட வருகிறது. அது என்ன?

– முள்

1184. கட்டைக்குட்டிச் செங்கோடா,
கழுத்தசைக்கும் செங்கோடா,
பொட்டுக் கட்டிக் கொண்டையில்
பூவு சுற்றிய செங்கோடா,
கெட்டிக்காரத் தங்கமடா,
நீ கிழக்கு வெளுத்ததும் எழுப்பேண்டா.

– சேவல்

1185. கட்டைக்குடிசையில் களநெல் சேர்ப்பான்
காடு மேடு சுற்றி வருவான். அவன் யார்?

– எலி

1186. கட்டை கிடக்கிற களத்தில்
கருப்பனும் இருக்கிற களத்தில்
தொட்டால் சுடுகிற சிவப்பி
பட்டால் பாழாய்ப் போமே!

– கரி விறகு சேர்ந்த அடுப்பில் நெருப்பு

1187. கட்டைப்பனையில் எட்டுக் கலயம்.

– கத்தரிக்காய்

1188. கட்டைப்பிரித்தார் சத்தை எடுத்தார்
சருகைவிடுத்தார் என்ன சருகு அது?

– உமி

1189. கடக்கா முடக்கான் சந்தைக்குப் போறான். அது என்ன?

– வண்டி

1190. கடகட என்று குதிக்கும், படபட என்று உதறும்,
சடசட எனக் கதறும், இடி இடிக்கப் பதறும்.

– வெடி

1191. கட கடா குடு குடு
நடுவிலே பள்ளம். அது என்ன?

– ஆட்டுக்கல்

1192. கடல் நடுவே விதையூன்றி, நான்கு பக்கம்
கொடி படர்ந்து, திண்டிவனத்தில் பூ பூத்து,
திருவண்ணாமலையில் காய் காய்த்து,
பரமனூரில் பழம் பழுத்து, பரமனுக்கு
ஏற்ற பழம். அது என்ன?

– கற்பூரம்

1193. கடல் நீரில் வளர்வேன்
மழைநீரில் மடிவேன். நான் யார்?

– உப்பு

1194. கடலில் குளிப்பான், காலை தரிசனம் தருவான்,
மாலை வரையில் ஆட்சி புரிவான். அவன் யார்?

– சூரியன்

1195. கடலைக் கலக்குகிறது ஒன்று
கடலோரம் போகிறது ஒன்று
செடியை முறிக்கிறது ஒன்று
செடியோரம் போகிறது ஒன்று. அது என்ன?

– கணவாய்மீன், நண்டு, வெள்ளாடு, பாம்பு

1196. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து,
தெருவிலே திரியும் பூ எது?

– உப்பு

1197. கடலிலே முளைத்து இலையிலே புகுந்து
குகையிலே அடையும் கட்டழகி யார்?

– கிளிஞ்சல்சுண்ணாம்பு

1198. கடலினில் பிறப்பாள், வீதிக் கடைகளில் சிறப்பாள்,
விற்கக் கன்னியின் கழுத்தில் ஏழு கதிர் ஒளி
பரப்புவாளே! அது யார்?

– முத்து

1199. கடலை அடுத்த களத்திலே,
கால் வரத்துத் தளத்திலே,
கலப்பை ஏரும் இல்லாமல்,
வெள்ளை விவசாயம் நடக்குது.

– உப்பு

1200. கடலைக் கலக்குது ஒரு குருவி
கடலோரம் போகுது ஒரு குருவி
செடியைத் தின்பது ஒரு குருவி
செடியோரம் போகுது ஒரு குருவி
அது என்ன?

– நண்டு, ஆடு, பாம்பு

1201. கடலோரம் பச்சை மரம்
கன்னி கழியாத வன்னிமரம். அது என்ன?

– தாழம்பூ

1202. கடலோரம் மல்லியப்பூ பூத்துக் கிடக்கிறது
அள்ளுவாரும் இல்லை அதைக் கொள்ளுவாரும் இல்லை

– உப்பு

1203. கடவுள் தந்த பரிசு காசில்லாத பரிசு
இல்லை இது என்றால் இந்த உலகம் தரிசு!

– காற்று

1204. கடிகாரம் ஓடுவது எதனால்?கனத்த பூட்டு
கைபட்டு திறப்பது எதனால்?

– சாவி கொடுப்பதனால்

1205. கடித்தால் கடிபடாக் கானல் அல்ல
பிடித்தால் பிடிபடாப் பேயும் அல்ல.

– தண்ணீர்

1206. கடித்தால் கடிபடாது, பிடித்தால் பிடிபடாது. அது என்ன?

– செருப்பு

1207. கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும். அது என்ன?

– செருப்பு

1208. கடுகு சிறிது காரம் பெரிது. அது என்ன?

– தீக்குச்சி

1209. கடுகு போல் கண்ணு
ஊசிபோல ஆறுகாலு
ஈயடா இளிச்சவாயா
இன்னும் தெரியலையாடா பொக்கைவாயா!

– ஈ

1210. கடுகு மடிக்க இலை இல்லை ;
யானை படுக்க நிழலுண்டு. அதுஎன்ன?

– சவுக்குமரம்

1211. கடுகு மிளகு சீரகம்
கார்க்குறிச்சி வெங்காயம்
இளைய கொழுந்தன் இல்லாமல்
என்ன கறி வைக்கட்டும்?

– உப்பு

1212. கடும் வெயிலைத் தாங்கும் நான் கல்தூண் அல்ல
கொடும் குளிரைத் தாங்க ஒரு கம்பளி அல்ல

பெருமழையைத் தாங்க வரும் குடையும் அல்ல
பிரம்பாலே அடிபட்டால் பெயர்ந்து போவேன். யார் நான்?

– கள்ளிக்கோட்டை ஓடு

1213. கடைக்குப் போனேன் ஒருவனைக் கண்டேன்
கண்டவுடன் கொண்டேன் கொண்டவுடன் அடித்தேன்
அடித்தவுடன் அழுதான் அழுதவுடன் சிரித்தான்
சிரித்தவுடன் கடித்தேன். அது என்ன?

– தேங்காய்

1214. கடையம் ஊரிலே விதை ஊன்றி,
கம்பும் கவருமாக வேரோடி,
காயாமொழியில் பூப்பூத்து,
காவேரிப்பட்டினத்தில் காய் காய்த்து,
பாப்பாகுடியிலே பழம் பழுத்து,
அந்தப் பழத்தை எடுத்துத்தான் அரசவை
அமைச்சருக்கும் கொடுப்பார்,
ஆண்டவருக்கும் அபிஷேகம் செய்வார்கள்.

– எலுமிச்சம்பழம்

1215. கடையிலே விற்கிற சாமான்களில்
அத்தை ஒன்று, ஆணி ஒன்று. அது என்ன?

– சித்தரத்தை, சாம்பிராணி

1216. கண் இல்லாத நான்
குருடருக்கு வழி காட்டுகிறேன்.

– கைத்தடி

1217. கண் உடம்போட கடலில் குளிக்கையில்
மண்பட பல ஜீவனை மடித்து இழுத்து
வருபவள் புண்பட நம் மனம் பிறந்த
போக்கிரி இவன்.

– மீன் வலை

1218. கண் உண்டு காது இல்லை ;
கண்டிடும் கேட்டிடும். அது என்ன?

– பாம்பு

1219. கண் உண்டு பார்க்காது
கால் உண்டு நடக்காது. அது என்ன?

– கட்டில்

1220. கண் கண்ணாய் இருப்பவன்
டன்டன்னாய் அகம் தருவான். அவன் யார்?

– நார்க்கட்டில்

1221. கண்களைச் சிமிட்டிடும் காமாட்சி
கைக்குள் கிடந்தால் பேர் மீனாட்சி.

– மின்விளக்கு, கை பாட்டரிலைட்

1222. கண்காண உருவம் உண்டு
கட்டிப்பிடிக்க உடல் இல்லை. அது என்ன?

– புகை

1223. கண் சிமிட்டி, மணி அடித்து
கண்ணீர் வடிப்பார்கள். அது என்ன?

– மின்னல், இடி, மழை

1224. கண் சிமிட்டி ஒளி தருவான். அவன் யார்?

– டியூப்லைட்

1225. கண்டக்கல் கருக்கல் நிலக்கல்
நீள் விசும்புக்கல் எவை?

– விக்கல், கொடுக்கல், வாங்கல், சறுக்கல், சுருக்கல்.

1226. கண்டது இருவர் ; எடுத்தது பத்துபேர் ;
உண்டது ஒருவர். அவர்கள் யார்?

– கண், கைவிரல்கள், வாய்

1227. கண்ட துண்டமாகக் கரியைத் தின்பேன்
கண்கள் இல்லாமல் காதம் நடப்பேன்
தாகம் இல்லாமல் தண்ணீர் குடிப்பேன்
குரல் இல்லாமல் கூச்சல் போடுவேன்.

– புகைவண்டி

1228. கண்டதை எல்லாம் தின்றான்
காசைக் கொடுத்துக் கடையில் வாங்கினான்
அமுக்கி அடித்துக் குடித்தான்
அப்பாட என்று சொன்னான்.

–சோடா

1229. கண்டவர்க்குக் கண்கூசும் கதிரோனும் அல்ல
கொம்பு இல்லாமல் நடக்காது எருதும் அல்ல
கொண்டவர்கள் உணவதனைக் கொடுக்காவிட்டால்
கோமளமும் கண்ணுறங்கிக் கோணுவாளே.

–குத்துவிளக்கு

1230. கண்டவர் கண்ணைக் கவர்வாள் கலாவல்லி
எடுத்தவர் இதயத்தைக் கவர்வாள் இசைவல்லி
கற்றவர் கருத்தைக் கவர்வாள் கனகவல்லி

–வீணை

1231. கண்டவரை மயக்கிடும் கலைமடந்தை
எடுத்தவரை மயக்கிடும் இசைமடந்தை
கற்றவரை மயக்கிடும் கான மோகினி
களித்தவரை மயக்கிடும் கலாமோகினி.

–வீணை

1232. கண்டால் பதுங்குவான்
கங்குவில் வருவான்
உரத்துள்ளிருப்பான்
உதிரம் பருகுவான். அவன் யார்?

–விடையில்லை

1233. கண்டு காய் காய்க்கும்
காணாமல் பூப்பூக்கும்.

–அத்திமரம்

1234. கண்டு பூப்பூக்கும்
காணாமல் காய் காய்க்கும்.

–நிலக்கடலை

1235. கண்ணங் கருத்தவனே
காலோடு கால்பின்னி
மார்போடு மார்பணைத்துக்
கட்டு கட்டுனு அடித்தால்
சும்மா சொட்டுச் சொட்டுனு வடியும். அது என்ன?

–பனைமரம், பதநீர்

1236. கண்ணாட்டி வந்து கலந்தால்தான்
கறியும் சோறும் மணக்குமாம்!

–கறிவேப்பிலை

1237. கண்ணாடித்துண்டு காற்றிலே பறக்குது
கையாலே தொட்டால் காணாமல் போகுது.
அது என்ன?

–நீர்க்குமிழி

1238. கண்ணாடிப் பரப்பில் காக்கைகள் பத்து.

–படகு

1239. கண்ணால் பார்க்கலாம்
கையால் பிடிக்கமுடியாது. அது என்ன?

–நிழல்

1240. கண்ணால் பார்க்கும் கண்டதைப் பதிக்கும்
பதித்ததைக் கொடுக்கும். அது என்ன?

–கேமரா

1241. கண்ணால் பார்த்தாளாம் கன்னிப்பொண்ணு
போவதை கிட்டவந்து மோதியும்
எட்டிப் பிடிக்க முடியலையாம்!

–நிழல்

1242. கண்ணான கண்ணழகி கதிர் கம்பி நெட்டழகி
கார்மேகம் தொட்டிழுக்கக் கண்சிமிட்டும்
ஓர் நொடிக்குள் கடந்து செல்வாள் பலகாதம்!

–மின்னல்

1243. கண்ணில்லாத குருடனுக்குக் கபோதி
வழிகாட்டுகிறார்.

–கைத்தடி

1244. கண்ணிலே வாசம் காற்று சுவாசம்.

–மூக்கு

1245. கண்ணிற்குக் கறுப்பழகி, நாவிற்கு இனிப்பழகி.
அது என்ன?

–நாவற்பழம்

1246. கண்ணிற்கு வடிவானவன்;
பார்வைக்குத் தெரியாதவன். எது?

–கண்கண்ணாடி

1247. கண்ணுக்குக் கண்ணாகும்
கண்ணுக்குப் புலப்படாது. அது என்ன?

–கல்வி

1248. கண்ணுக்குக் கருப்பு அழகி
நாவுக்கு இனிப்பு அழகி

–கரும்பு

1249. கண்ணுக்குத் தெரியாததை
கணப்பொழுதில் காட்டிக்கொடுக்கும். அது என்ன?

–பூதக்கண்ணாடி

1250. கண்ணுக்குத் தெரியாதவன்
உயிருக்கு உகந்தவன். அவன் யார்?

–காற்று

1251. கண்ணுக்குத் தெரியாதவன்
கண்ணை மறைப்பான். அவன் யார்?

–கண் இமை

1252. கண்ணுக்குத் தெரியாதவன்
ரத்தம் குடிப்பான். அவன் யார்?

–மின்சாரம்

1253. கண்ணுக்குத் தெரியாமல் பாய்வது
அவன் தொழில். அவன் யார்?

–மின்சாரம்

1254. கண்ணுக்குத் தெரியாமல் பூப் பூக்கும்
கொத்துக் கொத்தாய் காய் காய்க்கும்.

–அத்தி

1255. கண்ணுக்குள்ளே குச்சி குத்திக்
கதறுதாம் காளைக்கன்று. அது என்ன?

–தவில்

1256. கண்ணுண்டு செவியில்லை
கண்டிடும் கேட்டிடும் . அது எது?

–பாம்பு

1257. கண்ணெதிரே அட்டூழியம்
கண்கள் கலங்கினாலும் தடுக்க முடியவில்லை.
அது என்ன?

–சினிமாகாட்சி

1258. கண்தெரிய ஓடும் கள்ளன் கைப்பிடிக்குள்
அகப்பட்டான்.

–புகை

1259. கண்பிடிங்கித் தின்னும் கன்னநொடி ஒன்று
பிச்சுப்பிச்சுத் தின்னும் பித்தநொடி ஒன்று
வேர்பிடுங்கித் தின்னும் வெந்தநொடி ஒன்று.
அவை யாவை?

–கிழங்கு

1260. கணக்குப்பிள்ளை பெண்டாட்டி
கிணுக்குப் போட்டு ஆடினாள். அவள் யார்?

–ஆவரங்காய்

1261. கணவன் இல்லாத வெள்ளிப் பெண்ணுக்கு
ஏழுஎட்டு பத்துப் பிள்ளைகள். அது என்ன?

–வெள்ளைப்பூண்டு

1262. கணுக்கால் நீரில்
கரடி நீச்சல் போடுது. அது என்ன?

–தவளை

1263. கணுவில்லாத மரத்திலே
எலும்பில்லாத மனிதன் ஏறுகிறான்.

–பேன்

1264. கணுவுள்ளான் வளைந்து வளைந்தவனும் நீண்டு
கலையுடுத்துப் பூ முடித்துக் குச்சுக் கட்டிக்
கயிற்றினாற் கட்டுண்னு ககன மேறிக்
கரணங்கள் போடுகின்றான். கண்டு சொல்லே.
(கலை-ஆடை, குச்சு-குச்சி, ககனம்-விண்)

–காற்றாடி

1265. கத்தாழைக்குள் கருநாகம்
கூப்பிட்டால் ஓய் என்னும்
இழுத்தால் வரமாட்டேங்குது.

–நாக்கு

1266. கத்தி என்றால் கத்தி சின்னக்கத்தி,
காலைச் சுற்றிக் கிடக்கிற கத்தி,
காக்கா கூட்டினைக் காவல் செய்யும் கத்தி,
ஊர் ராசா போனாலும் உரசாமல் இருக்காத கத்தி.

–முள்

1267. கத்திக்கொண்டே சுமக்கும்
காததூரம் கடக்கும். அது என்ன?

–ரயில்

1268. கத்திபோல் இலையிருக்கும்
கவரிபோல் பூப்பூக்கும்
பிஞ்சுதான் துவர்த்திருக்கும்
பெருங்காயும் புளித்திருக்கும்
பழுத்தவுடன் தித்திக்கும்
பார்த்தவரே பகருவீரே

–மா, பூ, பிஞ்சு, காய், கனி

1269. கத்திபோல் இலை இருக்கும்
கவரிமான் பூப்பூக்கும்
தின்னப்பழம் பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும். அது என்ன?

–வேம்பு

1270. கத்தி போல் இலை இருக்கும்
கவரிமான் போல் பூப்பூக்கும். அது என்ன?

–கரும்பு

1271. கத்தியை எடுத்தேன்
கண்ட துண்டமாக வெட்டினேன்
துளிரத்தம் சிந்தவில்லை
ஒருவரும் அழவில்லை. அது என்ன?

–நகங்கள்

1272. கத்திரித்தோலுக்குள்ளே கண்சிமிட்டும் பூ என்ன பூ?

–வாழைப்பூ

1273. கதவு சாத்தி இருக்க, கைவிளக்குக் கொலு இருக்க,
நட்ட நடுச் சாமத்திலே நாட்டியம் ஆடுகிற
ராசாத்தி யாரு?

–கொசு

1274. கதவுத் தாழ்ப்பாளுக்குக் கீழே
நெளிகிறான் கடுக்காய் சாமி.

–தேள்

1275. கதிர் ஒளி தொடாத கங்கை,
கறந்த பாலில் இல்லாத வெள்ளை,
களிமண்ணால் செய்யாத பாண்டம்,
காற்றும் நுழையாத வீடு. எது?

–தேங்காய்

1276. கதிரவன் கிரணத்தைத் தாக்கும்
வானத்தைத் தடுக்கும்
காற்றைக் கண்டால் கவிழ்ந்து போகும்
மாட்டையும் ஓட்டும் மாநிலத்தில்
கைத்தடியும் ஆகும் கனவான்களுக்கே.

–குடை

1277. கந்தைத் துணியைக் கட்டிக்கொண்டு
முத்துப்பிள்ளைகள் பெற்று மகிழ்ந்தாள். அது என்ன?

–சோளக்கதிர்

1278. கந்தையைச் சுற்றிக்கொண்டாள்
கடல்முத்தைப் பற்றிக் கொண்டாள்
காட்டில் இப்படி இருந்தவள்
வீட்டுக்குள்ளே வந்தாச்சு.

–முத்துச் சோளக்கதிர்

1279. கப்பலுக்குத் திசைக்கருவி
கன்னியர்க்கோ விசைக்கருவி.

–ஊசி

1280. கப்பலுக்குத் திசைகாட்டும் காரிருளில் ஒளிவீசும்.

–கலங்கரைவிளக்கம்

1281. கப்பலோ கப்பல் கால் இல்லாத கப்பல்,
காசு கொடுத்தாக் கிடைக்கும்,
கட்டி அனுப்பினால் பறக்கும்,

அடியும் குத்தும் படுவான், அல்லும் பகலும் திரிவான்,
அழைத்த வீட்டுக்குப் போய்த் தான்
அகல வாயைத் திறப்பான்.

–கடுதாசி

1282. கம்பர் தலையெடுக்கக் கடைமுதலைந்தாகும்
நம்பன் அடியார்கள் மூன்று நான்கென்பர்
உம்பர்தொழு தஞ்சைமுத லாறிரண்டாம் உண்ண
அம்புவியில் வாய்செவியால் ஆந்தாம் அவாவாரே.

–பஞ்சாமிர்தம்

1283. கம்பளத்தில் ரோட்டிலே என்பது புளியமரம்
காய் இருக்குது இலை இல்லை. அது என்ன?

–சப்பாத்தி

1284. கம்பான கம்பு கறுத்த கம்பு
கண்ணால பார்க்க ஒரு ஓட்டைக் கம்பு
கண்டதும் எடு, படு பின் சுடு!

–துப்பாக்கி

1285. கம்பியிலே நடப்பான், காணமுடியாது,
வீட்டுக்குள் வீடு புகுந்து விளையாடுவான்,
தொட்டு விளையாட முடியாது. அது என்ன?

–மின்சாரம்

1286. கயிற்றில் தொங்கியவனைக் கல்லால் அடித்தார்கள்,
புல்லில் கிடத்தினார்கள். போக்கிரிப்பயலா அவன்?

–துவைக்கப்படும் ஆடைகள்

1287. கர்ப்பபூமி தந்த கருவயிரம் எது?

–நிலக்கரி

1288. கரிக்காளைப் பிடிக்கப் போனால்
கொக்கரக்கொம்பல் இடிக்க வருகிறான். அவன் யார்?

–சூரிக்காய்

1289. கரிச்சட்டி வயிற்றிலே வெள்ளை முத்துகள். அது என்ன?

–சாதம்

1290. கரிசல் நிலத்திலே வெள்ளைக்குதிரை ஓடும்,
புரளும், ஒவ்வொன்றாய் ஏறும், இறங்கும்.

– தோசை

1291. கரிய வான் முகப்பின் கீழ் இரண்டு பிறை.

–ஆனைக்கொம்பு

1292. கரியன் வந்தால் விரைந்தழைப்பார்
கதிரவன் வந்தால் விரைந்தோட்டுவார். அது என்ன?

–விளக்கு

1293. கரியைக் கரியைக் கொட்டணும்
கருத்த உடம்பைத் தட்டணும்
நீரை நெருப்பில் சுட்டதும்
நீளப் புகையை விட்டதும்
வேகம் போகும். நானே யார்?

–இரயில் வண்டி

1294. கருக்கலிலும் முதுகு இருக்கையில் அமர்ந்து
'நறுக்' கென்று ஒரு மிதி நாம் கொடுத்ததும்
பருக்கைக் கல்லென்றாலும் பாராமல்
கொள்ளாமல் பாய்ந்தோடும் பரியின்
பெயரைத் தெரியுமோ உங்களுக்கு?

–சைக்கிள்

1295. கருகரு மணலில் காரான மணலில் கருத்த பழம்
புளிபோல குருத்தைத் துருத்திக் குடல்வாழை எகிறி
சிம்பு சிலுக்கோடே இருந்தாலும் சிட்டுக்குருவி கூட
நிற்கவும் சிறு இடமும் இல்லையே.

–நெல்பயிர்

1296. கருத்த கட்டிலின்மீதே காரிகையாம்
விரிக்கும் விரிப்பாம் எடுக்கும் விரிப்பாம். அது என்ன?

–தோசை

1297. கருத்த பாறைக்கு வெளுத்த வேர்.

–யானைத்தந்தம்

1298. கருநீலப் புடவைக்காரி
கண்டவர் மயங்கும் நாரி
கோலப் புள்ளிக்காரி
கொள்ளை அழகுக்காரி.

–இரவில் நட்சத்திரங்களுடன் தோன்றும் வானம்

1299. கருப்பர்கள் மாநாடு போட்ட இடத்தில்
கண்ணீர்ப்பிரவாகம். அது என்ன?

–மேகம், மழை

1300. கருப்பாயி ஆத்தா பெற்றெடுத்த
கருப்பு ராணிப் பெண்ணுக்கு
உச்சந்தலையிலே மகுடம் நிறம் மஞ்சள்.
மங்காத்தாளைப் புடம் போட்டால்
மைல் கணக்கில் மணப்பாள்.

–பனம்பழம்

1301. கருப்புக் குதிரையில்
வெள்ளையன் நடனம் ஆடுகிறான். அவன் யார்?
-தோசைக்கல்

1302. கருப்புக் குதிரையும் வெள்ளைக்குதிரையும்
ஆற்றுக்குப் போகின்றன.
கருப்புக்குதிரை ஆற்றுடன் செல்கிறது
வெள்ளைக்குதிரை வீட்டுக்குத் திரும்புகிறது.
-மேல்தோல் விடாத கருப்பு உளுந்தும்.
தோல்விட்ட வெள்ளை உளுந்தும்

1303. கருப்புச் சட்டை அணிந்தவன்
கபடம் அதிகம் உள்ளவன்
கூவி அழைத்தால் வந்திடுவான்
தன் கூட்டம் அனைத்தும் சேர்த்திடுவான்.
-காகம்

1304. கருப்புச் சட்டைக்காரன், காவலுக்குக் கெட்டிக்காரன்.
-பூட்டு

1305. கருப்புத்தாள் வெள்ளைக்குதிரை
ஒருவன் ஏறுவான் இறங்குவான்
-தோசை

1306. கருப்பு வயலிலே இருக்கும் கருப்பி அக்கா நீ சாக்கி
சிங்கார வயலிலே இருக்கும் சிகப்பி அக்கா நீ சாக்கி
பள்ளத்துக்குள்ளே இருக்கும் பாப்பி அக்கா நீ சாக்கி
அது என்ன?
-பேன், மிளகாய்ப்பழம், கரட்டான்

1307. கரும்புத் தோட்டத்துக்குள் கருப்புச் சிப்பாய்கள்
கையால் நசுக்க இஷ்டம். ஆனால் கண்ணில் படுவது
கஷ்டம். அவர்கள் யார்?
-பேன்

1308. கரும் வயலில் யானைகள் மேய்ச்சல். அது என்ன?
-தலை, பேன்கள்

1309. கருமணியாய் சிறுமணியாய்
கண்டெடுத்துக் கோர்ப்போருக்கு
நாடு தரேன், நகரம் தரேன்
திருப்பத்தூரைத் திருப்பித் தரேன்
வானம்பாடியை வளைச்சித் தரேன்
பொன்னும் தரேன், பவுனும் தரேன், நான் யார்?
-சிறு கீரை விதை

1310. கருமை நிறத்தழகி
காடெல்லாம் சுற்றி வருவாள்
கண்டவுடன் ஓடுகிறாள்
கானமழை பொழிகிறாள்.

–குயில்

1311. கருவமணி இருசரம்
கண்டெடுத்துக் கோர்ப்பவர்க்கு
நாடு தருவோம் நகர் தருவோம்
நல்லமுத்துச் செட்டி மகளைத் தருவோம்.

–கீரைவிதை

1312. கருவமணிக்குலத்தை கழுத்துக்குச் சரமாகக் கட்டித்
தருவாரேல் கோட்டையில் பெரியராசா கொண்ட
பதவியும் அதுகூட குடியிருக்க மாளிகையும்
கிடைக்குமே.

–கீரைவிதை

1313. கருவில் இருக்கும்போது வந்து கைபிடிச்ச தோழன்
மரிக்கும்வரையில் அவள் மறக்காத தோழன்.

–மூச்சு

1314. கரைகரையாய் ஓடுதாம் ஒரு குருவி
கங்கணம் கட்டுதாம்ஒரு குருவி
முந்நூறு முட்டையிடுதாம் ஒரு குருவி
மூக்குச் சிவக்குதாம் ஒரு குருவி. அது என்ன?

–நீர், மண்வெட்டி, சோளக்கதிர், மிளகாய்

1315. கரையிலே போகிற கன்னிமார் பெண்களுக்கு
முதுகிலே மூன்று சுழி, அது என்ன?

–அணில்

1316. கரையும் உப்பு அல்ல
தண்ணீரில் குளிப்பான்
மனிதனும் அல்ல. அது யார்?

–சோப்பு

1317. கல்கட்டி மதிலோரம் கொல்லை
அவள் பேரு தில்லை
அவளுக்கு ஒருவருமில்லை
அவளுக்கு ஆறு மாதப் பிள்ளை. அது என்ன?

-சோளம்

1318. கல் கண்டு எடுத்து வாய்க்குள் போட்டேன்.
இனிக்க சுவைத்தேன். அது என்ன?

–கற்கண்டு

1319. கல்கண்டு பாறையது கைபட்டதும் உருகும் அது.
கைபட்டவுடன் துவண்டு விடுவாள் பட்டும் அல்ல.

–பனிக்கட்டி

1320. கல்யாணம் ஆகாத வெள்ளைக் கன்னிப்
பெண்ணுக்குக் கூட கையில் பத்துக் குழந்தைகள்
கேட்பார் இல்லையா? உண்ம மீட்பார் இல்லையா?
கைபட்டவுடன் துவண்டு விடுவாள் பட்டும் அல்ல.

–வெள்ளைப்பூண்டு

1321. கல்லால் ஆன குதிரைக்கு
மரத்தாலே மூக்கணாங்கயிறு. அது என்ன?

–மாவு அரைக்கும் திருகை

1322. கல்லாலும் மண்ணாலும்
கட்டப்படாத வீடு
காற்றிலே ஆடும் வீடு
கதவில்லாத வீடு. அது என்ன?

–தூக்கணாங்குருவிக்கூடு

1323. கல்லில் காய்க்கும் பூ
தண்ணீரில் மலரும் பூ. அது என்ன?

–சுண்ணாம்பு

1324. கல்லிலே இருப்பேன், சிற்பம் அல்ல
உழவர்க்கு நண்பன், மண்புழு அல்ல
நஞ்சுள்ளவன் என்பர், பாம்பும் இல்லை.
நான் யார்?.

– தேரை

1325. கல்லிலே காய்க்கும் பூ என்ன பூ?
அது காய்த்தால் மலரும் பூ என்ன பூ?
பூவிலே வெள்ளைப்பூ என்ன பூ?

–சுண்ணாம்பு

1326. கல்லிலே காய்ப்பது, தண்ணீரில் மலர்வது. அது என்ன?

–சுண்ணாம்புக்கல்

1327. கல்லிலே மேய்ந்து
கயத்திலே நீராடி
புல்லிலே படுத்தான்
புவனத்து ராசா. அவன் யார்?

–காயவைக்கும் துணி

1328. கல்லிலே விதைபோட்டு
காந்தவனத்திலே வேரூன்றி
திருக்கணங்குடியிலே காய்காய்ச்சி
மருதையிலே பழம்பழுத்து
மகாதேவனுக்கு அடிமைப்பட்ட கனி என்ன கனி?

–சாம்பிராணி

1329. கல்லிலே விளையும் பூ, காசிநீர் கொள்ளும் பூ
எல்லோரும் தொடும் பூ. என்ன பூ?

–சுண்ணாம்பு

1330. கல்லு எடுத்தால் கால்தெறிக்க ஓடும். அது என்ன?

–நாய்

1331. கல்லு உடம்புக்காரன்
எரியும்போது மணப்பான். அவன் யார்?

–சாம்பிராணி

1332. கல்லுக்கு அடியில் வில்லு.

–தேள்

1333. கல்லுக்குக் கீழே கலச்சாம்பல். அது என்ன?

–கேழ்வரகு

1334. கல்லுக்குத்தி சோறாக்கி
கைபோட்டுக் குழம்பு வைத்து
மரைபோட்டு விருந்தாம்
மாப்பிள்ளை அவருக்கு.

–புழுங்கல்(புழுங்கல் அரிசி)
–முருங்கை(முருங்கக்காய்)
–தாமரை (தாமரை இலை)

1335. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன்
பள்ளத்து நீரைக் கண்டு பதைக்கிறான். அவன் யார்?

–செருப்பு

1336. கல்லும் கரடும்
முள்ளும் முரடும்
வேரும் விறகும். அது என்ன?

–கற்கண்டு, பலாப்பழம், கரும்பு

1337. கல்லுறங்கும் புல்லுறங்கும்
கான மாயிலுறங்கும்
கண்கள் இரண்டும் உறங்கவில்லை. அது என்ன?

–மூக்குத்துவாரங்கள்

1338. கல்லைச் சுமந்த கல்வி
நெடு நெடுவென வளர்ந்தாள் நீண்டு. அவள் யார்?
–புடலங்காய்

1339. கல்லைத் தூக்கிச் சட்டியில் போடுகிறோம்
கல் உடைகிறது சட்டி உடையவில்லை. அது என்ன?
–உப்புக் கல்

1340. கலம் பிடிக்கும் சாலு பதினாறுமுழம் வாலு. அது என்ன?
–செக்கு

1341. கலர்ப்பூ கொண்டைக்காரி,
காலையிலே எழுப்பி விடுவாள். அது என்ன?
–சேவல்

1342. கவிதா ஒருவனை நறுக்கினாள், அவளை
அவன் கண்ணீர் சிந்தவைத்தான். அது என்ன?
–வெங்காயம்

1343. கவிழ்ந்து பூப்பூத்து நிமிர்ந்து காய்காய்க்கும். அது என்ன?
–எட்செடி

1344. கழனியில் விளைந்த கதிரை
கத்திரிப் போட்டு வெட்டுவார். அது என்ன?
–தலைமுடி

1345. கழுத்து உண்டு தலையில்லை
உடல் உண்டு, உயிர் இல்லை
கையுண்டு விரலில்லை. அது என்ன?
–சட்டை

1346. கழுத்துண்டு, கையில்லை
நாக்குண்டு, பேச்சில்லை
வாயுண்டு, அசைவில்லை
தொப்பியுண்டு, தலைமயிர் இல்லை. அது என்ன?
–பவுண்டன் பேனா

1347. கழுத்துண்டு தலையில்லை.
கரம் உண்டு விரல் இல்லை
–சட்டை

1348. கழுத்தண்டு தலையில்லை, கையுண்டு விரல் இல்லை
உடல் உண்டு உயிரில்லை, இடுப்புண்டு கால் இல்லை,
இவர்தான் யாரோ?
–சொக்காய்

1349. கழுத்தை அறுத்தால் கண் தெரியும்
–நுங்கு

1350. கழுத்தைச் சீவினால்தான்
தாகம் தீர்ப்பான். அது என்ன?

–இளநீர்

1351. கழுத்தை வெட்டுவான் கையை வெட்டுவான்
அவனை ஏனென்று கேட்பார் ஒருவரும் இல்லை
அவன் யார்?

–தையற்காரன்

1352. கழுதையோ முட்டி காலோ முப்பது.

–ஊமத்தங்காய்

1353. கள்ளச் சிறுக்கி மெள்ள பின்னாலே
தள்ளித் தள்ள நினைத்தாலும்
தாசி தொடர்ந்து வாராளே.

–நிழல்

1354. கள்ளத்தனம் இல்லாமல் கணக்கின்றி வழக்கின்றி
பிள்ளைக்குட்டி பெறுவாள். ஊரார் சொத்திலே
ஊட்டி வளர்ப்பாள். வெள்ளி முளைக்குமுன் விழித்து
அழைக்கிற வேலைக்கு ஒருநாளும் விலை கேட்க
மாட்டான். உத்தம காண்டி ஆயினும் ஊர்ச் சுரண்டி.

–கோழி

1355. களத்து மேட்டானும் குளத்து மேட்டானும்
சண்டை போடக்
கூட இருந்த மூங்கில் மேட்டானும்
தேங்காய் மேட்டானும் விலக்கிட. அது என்ன?

–சாதமும், அகப்பையும்

1356. களம் கிட்ட காளி எட்ட.

–உள்ளங்கை

1357. கள்ளமான் ஏரியிலே மால்வந்து நிற்கிறது
கட்டடா பிடியடா கள்ளக்கயிறு போடடா. அது என்ன?

–கப்பல்

1358. கள்ளவுள்ளங் கொண்டிரவு வேட்டையாடும்
கடிதடைந்து காதினில் மந்திரங்களோதும்
துள்ளராகம் பாடிச் சுற்றிவரும்
துணைக்கரத்தால் தள்ளிடினும் போகாது
விள்ளுமெய்யிற் குறிப்படுத்தும் வீணைசெய்யும்.

–கொசு

1359. களத்தில் இருந்தபடியே 'களுக்' கென்று
அந்த வெள்ளை வேட்டிப் பண்டாரம்
வீதியைப் பார்த்து வேண்டுமென்றே சிரிக்கிறானே?

–பருத்தி

1360. களம் கிட்ட காணி எட்ட. அது என்ன?

–உள்ளங்கை

1361. களம் பதுங்கிப் பாயும் இவர் சிப்பாய் இல்லை
கெளவி இரை பிடிப்பார் இவர் கருடன் இல்லை
வீட்டிற்குள் திரியும் இவர் குழந்தை இல்லை
பூட்டின வீட்டிற்குள் புகுவார் இவர் தென்றல் இல்லை.
கேட்கிறேன் இவர் பெயரைச் சொல்லல் ஆகுமோ?

–பூனை

1362. களிமண்எடுத்துஉருட்டிகண்டதும்கழியதும்
போட்டேன்.கைவிரல்களைப்
பதித்தேன். கடும்வெயிலில் இதைக்காட்டி
கங்கு மங்கைக்குக் கொடுத்தேன்.

–வரட்டி

1363. கற்றவர் மனத்தை மயக்கிடும் கலைமகள்
விற்றவர் பணத்தைப் பெருக்கிடும் விலைமகள்.
அது என்ன?

–புத்தகம்

1364. கற்றாழை மடல் நிறத்தாள்
காமனுடன் பிறந்தாள்
வெற்றிலை தின்றறியாள்
உதடோ சிவந்திருக்கும்.

–கிளி

1365. கறிக்குக் கறி பதம் தப்பி
சோழ ராஜா மகளைக் கண்டு
சோறு சோறு என்குதே தம்பிரானே. அது என்ன?

–சுரைக்குடுக்கை

1366. கறியைக் கட்டி வைத்தாலும்
காயும் வெட்டிக்கொண்டாலும்
இளைய கொளுந்தியா இல்லாட்டி
எனக்கு எதுவும் ருசிக்காது.

–உப்பு

1367. கறுக்கு இருட்டிலே குருட்டுப் பண்ணி.

–பேன்

1368. கறுத்த காட்டில் துளி இரத்தம். அது என்ன?

–குன்னிமுத்து

1369. கறுத்த சதுரக் கட்டை
கருத்துப் பூக்கும் குட்டை. அது என்ன?

–சிலேட்டு

1370. கறுத்த பாறைக்கு வெளுத்த வேர். அது என்ன?

–யானைத்தந்தம்

1371. கறுத்த புடலங்காய்
கறிக்கு உதவாத காய்
கொடியிலிருந்து பறித்துவிட்டால்
அழகைக் கெடுக்கும் காய். அது என்ன?

–சடை

1372. கறுத்த புல் புதரில் சிறுத்தைக் குட்டி மேயுது.

–பேன்

1373. கறுத்த பெட்டியின் கதவை உடைத்ததும்
சிறுக்கி ஒருத்தி சிரிக்கிறா பாரு.

–நுங்கு

1374. கறுத்த மலையில் கதிர்வாள் இரண்டு.

–யானைக்கொம்பு

1375. கறுத்த மேகம் கண்ணீர் விடும்போது
கறுத்த காளான் கம்பியில் படருது. அது என்ன?

–குடை

1376. கறுத்தமேனியன் காலாறுடையோன்
உருக்குமண்டையின் ஓட்டில் உண்பவன்
பெருத்த பாரம் சுமக்கும் பித்தனை
இருவர் கொண்டுமே ஈட்டினார் அதை. அது என்ன?

–பேன்

1377. கறுத்த ரோஜா மொட்டு
கனத்த மேகம் கண்டு
கணத்தில் இதழ் விரித்து
காத்திடும் பின் காய்ந்திடும். அது என்ன?

–குடை

1378. கறுத்தவன் வளர்ந்தவன்
படர்ந்த தலைக்காரன்
எனக்குப் பெட்டி கொடுத்தான்
மரம் கொடுத்தான்.

–பனைமரம்

1379. கறுத்திருக்கும் அரங்கத்தில்
வெண்பந்து விளையாடுது

–கறும்பலகை, சாக்கட்டி

1380. கடல்கடந்து பெருமைபெறும். அது என்ன?

–மிளகு

1381. கறுப்பாக இருக்கும் வரை
இவனுக்கும் கம்பீரம். அது என்ன?

–தலைமுடி

1382. கறுப்பான மெத்தையில்
வெள்ளையன் காய்கிறான். அவன் யார்?

–தோசை

1383. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு
வெள்ளைக்காகம் நிற்குது. அது என்ன?

–உளுந்து

1384. கறுப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன். அது என்ன?

–பூட்டு

1385. கறுப்புச் சட்டையைக் கழற்றினால்
வெள்ளையப்பன் இருப்பான். அவன் யார்?

–உளுந்து

1386. கறுப்புப் பாறையில் வெள்ளைப்பிறை. அது என்ன?

–யானைத்தந்தம்

1387. கறுப்புப் புதரில் மேயும் கறுப்பி கதை ஒண்ணு,
சித்திரைத் தோப்பிலே நித்திரை செய்கிற சிவப்பி,
கண் ரெண்டும் முத்திரை போட்டு மூடி இருக்கிறா,
விடையை எடுத்துவிடுங்கள் பார்க்கலாம்.

–பேன், மிளகாய்ப்பழம்

1388. கறுப்பு மாடு படுத்திருக்க
வெள்ளைமாடு மேலே போகிறது. அது என்ன?

–கரியும், தீக்கொழுந்தும்.

1389. கறுப்பு, வைரம், பளபளவென்று மின்னுது. அது என்ன?

–கீரைவிதை

1390. கன்னங் கருத்த பழம் கருநாவற் பழம் அல்ல
சுற்றி வெளுத்திருக்கும் சுண்ணாம்புக் கண்டமல்ல
காசு கொடுத்தாலும் வாங்கமுடியாத பழம். என்ன பழம்?

–கருவிழி

1391. கன்னங் கருப்பழகி கட்டான முத்தழகி
வரிசைப் பல்லழகி வந்திருப்பாள் கடையிலே.

–சீப்பு

1392. கன்னங் கருப்பழகி நான்
கட்டான முத்தழகி நான்
வரிசைப் பல்லழகி நான்
வாரி என்னைவாழ்த்திடுவார் காண்.

–சீப்பு

1393. கன்னங்கரேல் என்றிருக்கும் - இருட்டுமல்ல
கானம்பாடித் திரியும் - வானம்பாடியுமல்ல
கொட்டினால் தலை வீங்கும்
கூடுகட்டிக் குடியிருக்கும். அது என்ன?

– கருவண்டு

1394. கன்னங் கறுப்பானவன்
குரலில் இனிப்பானவன். அவன் யார்?

–குயில்

1395. கன்னத்தில் கண் இல்லாதவள் கர்குர் என்று
கத்தினாள்,
இதைக் காதுகள் இல்லாதவள் கேட்டாள், கேட்டதும்
கவ்விப் பிடித்தாள், சிரசில்லாதவள் இதைப் பார்த்ததும்
சிரித்துக்கொண்டே ஓடி ஒளிந்தாள்.

–தவளை, பாம்பு, நண்டு.

1396. கன்னி கடைவீதிக்குப் போனாள்
கண்டாள் ஒரு கட்டழகனை
காசையும் கொடுத்து வாங்கினாள்
கழுத்திலே கைபோட்டுக் கட்டிவந்தாள் வீட்டுக்கு.
அது என்ன?

–மட்குடம்

1397. கன்னிமுனையிலிருந்து காசிக்குக் காசினிமேல்
தன்னிலையிற் செல்வதை நீ சாற்று.

–நடைவழிப்பாதை

1398. கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலும்
கைநீட்டிப் படுத்த பாம்பு என்ன பாம்பு?

–ரஸ்தா, சாலை

1399. கன்னியே! கரியன்
கதை அழித்தேன். கரியன் யார்?

–விடையில்லை.

1400. கனங்கன மரத்தில் ஏறுமாம் மயில்
கையினால் குத்துப்பட்டுச் சாகுமாம் மயில்
கலிங்கஞ் சோறு தின்னுமாம் மயில்
புறக்கடையில் இழுபட்டுக் கிடக்குமாம் மயில்.
அது என்ன?

–வாழைஇலை

1401. கனதனத்தாளைக் கடையிலே கண்டேன்
கண்டவுடனே கொண்டேன்
கொண்டவுடனே அடித்தேன்
அடித்தவுடனே நகைத்தாள்
நகைத்தவுடனே கடித்தேன். அது என்ன?

–தேங்காய்

1402. கனல் கனியைக் கடித்து விழுங்குதே
கண்ணா என்ன கண்ணா,
காலைப் பிடித்ததும் வாயைப் பிளக்குதே
கண்ணே அதுவே கண்ணே.

–குறடு

1403. கனலை ஏந்தியதும் கண்ணீர் வடிப்பாள்:
கண்ணீர் வடித்ததும் கரைந்துமே போவாள். அது
என்ன?

–மெழுகுவர்த்தி

1404. கனிக்கெல்லாம் கனி
திகட்டாத கனி.

–பிள்ளைக்கனி

1405. காக்காக் கறுத்த வண்டி, கள்ளுக் குடிச்ச வண்டி,
தேக்கிய தித்திப்பைத் திரட்டித் தருவாண்டி,
வெப்ப வேனலுக்கு விசிறி கொடுத்தாண்டி,
முள்ளும் வாழ வழி மட்டையில் விடுத்தாண்டி.

–பனைமரம்

1406. காக்கிச் சட்டைக்காரன் காவலில் கெட்டிக்காரன்.

–போலீஸ்காரன்

1407. காக்கையைப் போல் கருமைநிறம்
கையால் விண்டால் ஊதாநிறம்
வாயால் மென்றால் நீலநிறம்
பாம்பின் பெயரே அதற்குண்டு. அது என்ன?

–நாவற்பழம்

1408. கா கா என்று கத்துவான்
கானகமெல்லாம் சுற்றுவான்.

–காகம்

1409. காகிதத்தைக் கண்டால் கண்ணீர்விடும்
முக்காடு போட்டால் மூலையில் அமரும். அது என்ன?

–பேனா

1410. காசிக்குப் போனாலும் கடைவழி திரும்பாத கப்பல்.

–பிணம்

1411. காசியிலிருந்து கல்கத்தா வரையில்
அசையாமல் போகிறது என்ன?

–சாலை

1412. காசிராஜன் பெண் அவள் பேர் தில்லை
அவள் பூசுவது கந்தப்பொடி பில்லை
வயிற்றிலே ஆறுமாசப் பிள்ளை
ஒருவருடன் பேசுவதும் இல்லை. அவள் யார்?

–தாழம்பூ

1413. காசுக்கு கொம்பு முளைத்தால் கடிக்கும். அது என்ன?

–கொசு

1414. காசு கொடுத்து வாங்குகிற பொருளில்
ஓசி கொடுக்காத பொருள் என்ன பொருள்?

–பச்சைகுத்தியது

1415. காசுபோல் இலை இருக்கும்
கவரிமான் பூப்பூக்கும்
தின்னக் காய் காய்க்கும்
தின்னாத பழம் பழுக்கும். அது என்ன?

–முருங்கை

1416. காசைக் கொடுத்துக் கடையில் வாங்கினாள் கள்ளி
பையிலே போட்டு பவிசாக வைத்திருந்தாள் பள்ளி
வாயிலே போட்டு வர்ணம் காய்ச்சினாள் வள்ளி
பச்சிலைத் தோப்புக்குள்ளே பார்த்தால் தெரியும்.
அது என்ன?

–வெற்றிலை

1417. காட்டில் இருக்கிற கள்ளுப்பானையைக்
கண்ணால் பார்த்தும் என்னால் கையால்
எடுக்க முடியவில்லை!

–தேன்கூடு

1418. காட்டில் இருக்கும் கண்ணம்மாள்
வீட்டில் வந்து விளையாடுகிறாள். அவள் யார்?

–துடைப்பம்

1419. காட்டில் இருப்பான். வீட்டிலும் மணப்பான். அது என்ன?

–சந்தனக்கட்டை

1420. காட்டில் ஒரு கலைமான் கால் ஒடிந்து நிற்கிறது.
பிடிப்பாரும் இல்லை. அதை அடிப்பாரும் இல்லை.

–நெருப்பு

1421. காட்டில் ஒரு தூக்கு வெல்லம் வைத்தேன்
ஈயும் தொடவில்லை எறும்பும் தொடவில்லை.
அது என்ன?

–நெருப்பு

1422. காட்டில் கரிப்பானை கவிழ்ந்திருக்கிறது.

–பனங்காய்

1423. காட்டில் கள்ளன் கயிறு திரிக்கிறான்.

–எறும்பு

1424. காட்டில் கறுப்பன் கயிறு போடுகிறான். அவன் யார்?

–கட்டெறும்பு

1425. காட்டில் கிடைத்த கட்டை கானமழை பொழிகிறது.
அது என்ன?

–மூங்கில்

1426. காட்டில் தொங்கும் பொட்டலம்
காவல் நிறைந்த பொட்டலம்.

–தேன்கூடு

1427. காட்டில் பச்சை, கடையில் கறுப்பு,
வீட்டில் சிவப்பு. அவை என்ன?

–மரம், கரி, தீ

1428. காட்டில் வாழும் காளைக்கு
முதுகில் மூன்று சூடு. அது என்ன?

–அணில்

1429. காட்டிலே இருக்கிற கண்ணம்மாள்
வீட்டிலே வந்து விளையாடுகிறாள்.

–துடைப்பம்

1430. காட்டிலே இருக்கும் குடை
வீட்டிலே இருக்காது.

–காளான்.

1431. காட்டிலே ஒரு தூக்கு வெல்லம் வைத்தேன்
ஈயும் தொடவில்லை எறும்பும் தொடவில்லை.

–நெருப்பு

1432. காட்டிலே கட்டை வெட்டி
கடலோரம் ஆட்டம் போட்டு
நாட்டுக்குச் சீட்டு எழுதி
நடக்கிறார் தர்மராசா. அது எது?

–கப்பல்

1432. காட்டிலே கந்தல் பந்தடிக்கிறான். அவன் யார்?

–பஞ்சு

1433. காட்டிலே கம்பி எண்ணின கள்ளி
வீட்டிலே விளையாடுகிறாள் துள்ளி.

–துடப்பம்

1434. காட்டிலே கருங்கண்ணி முளைத்தது பார்
கப்பு விட்டுக் கிளை விட்டுத் தழைத்தது பார்
கூட்டிலே கிளிவந்து அடைந்தது பார்
குப்பைமேனித் தேவடியாள் ஆடுவதைப் பார்.
அது என்ன?

–கழக்கோடி

1435. காட்டிலே கருஞ்சோலையிலே புதுப்
பானையிலே கரி தீட்டியிருக்கிறது. அது என்ன?

–குன்றிமணி

1436. காட்டிலே கரும்புச் சோலையிலே
வீட்டிலே புதுப்பானையிலே. அது என்ன?

–வெல்லம்

1437. காட்டிலே கிடந்த புல்லாரெட்டி
வீட்டுக்கு வந்ததும் சுத்தக்கெட்டி

–புல் விளக்குமாறு

1438. காட்டிலே சிந்தியுள்ள கரும்புள்ளி இரத்தினம்.

–குன்றிமணி

1439. காட்டிலே சிரித்து நிற்பாள் கன்னியும் அல்ல
கைபட்டவுடன் துவண்டு விடுவாள் பட்டும் அல்ல.

–தொட்டச்சிணுங்கிச் செடி

1440. காட்டிலே சுத்துற காக்கா காலைப் பிடிக்கிற காக்கா
மேட்டிலே சுத்தறபோதும் மேனி நுடங்காத காக்கா
ஓடுகிற தண்ணீரைப் பார்த்தால் ஓடி ஒளிவதேன் ஆத்தா?

–செருப்பு

1441. காட்டிலே துளி ரத்தம். அது என்ன?

–குன்றிமணி

1442. காட்டிலே பச்சை
கடையிலே கறுப்பு
வீட்டிலே சிவப்பு. அது என்ன?

–மரம், கரி, நெருப்பு

1443. காட்டிலே பெண்பிறந்து கள்ளர் கையிற் குத்துப்பட்டு
வீமனுக்குச் சோறெடுத்து வெளியிற் கிடக்கும் நாயகியே
நாயகம்வந்து நக்கிவிட்டான். அது என்ன?

–எச்சிலிலை

1444. காட்டிலே பெண்பிறந்து
கன்னியர் கையாலே குத்துப்பட்டது. அது என்ன?

–பேன்

1445. காட்டிலே வளர்ந்தவனுக்கு வீட்டிலே அடைக்கலம்.
அவன் யார்?

–நெல்

1446. காட்டிலே வளர்ந்து
கள்வர் கையிலே அகப்பட்டு
கோவில் மண்டபமெல்லாம் சுற்றிப் பார்த்து
சண்டைக்கு முன்னே பாடிநிற்பான். அது என்ன?

–விளக்குமாறு

1447. காட்டிற்குள் பறவைகள் கண்ணாடி பார்ப்பது எதில்?

–குளம்

1448. காட்டுக் கருப்பாயி ககனத்தில் சிறகடித்து
கண்டத்தேன் மழைபொழியும் கறுப்புக்கிளி நீ பாடாய்.

–குயில்

1449. காட்டுக் கருவப்பிள்ளை
வளைத்து ஒடிக்கமுடியவில்லை. அது என்ன?

–தலைமுடி

1450. காட்டுக்கும் மேட்டுக்கும் ஒரே சங்கிலி. அது என்ன?

–எறும்பு

1451. காட்டுக்குள்ளே அரைச்சட்டி ரத்தம்.

–குன்றிமணி

1452. காட்டுக்குள்ளே ஒருத்தி குணுக்குப் போட்டிருக்கிறாள்.
அவள் யார்?

–உடங்காய்

1453. காட்டுக்குள்ளே ஒரு வழி கன்னிப்பெண்ணே உன் வழி.
அது என்ன?

–தலைவகிடு

1454. காட்டுக்குள்ளே நடக்கையில் கால்கள்
பட்டுக் கதறியே சலசலக்கும்,
சப்தத்தைச் செய்யும் கூட்டம். பேர் எது?

–சருகுகள்

1455. காட்டுக்குள்ளே நிற்பாள், கள்ளர் உடன்பிறந்தாள்
பிள்ளை எடுக்கத்தெரியும், ஆனால் பிள்ளையை
ஆராட்டத் தெரியாது. அவள் யார்?

–இசக்கியம்மை

1456. காட்டுக்குள்ளே நெல் விரித்திருக்கிறது.
காக்கையும் தின்னவில்லை குருவியும் தின்னவில்லை.
அது என்ன?

–உப்பு

1457. காட்டுக்குள்ளே போகிற கள்ளக் கடாவுக்குக்
கிள்ளிப் பிடிக்க மயிரில்லை. அது என்ன?

–ஆமை

1458. காட்டுக் கருவப்பிள்ளை
வளைத்து ஒடிக்க முடியவில்லை.

–தலைமுடி

1459. காட்டுப் பிள்ளையை வீட்டில வளர்த்துப்
பாட்டுப் படிப்புகள் கற்றுக்கொடுப்பது
அப்பர், அக்கா, அண்ணா, மாமா
நீ யாரடா வெளியேறடா என்கவோ. அது என்ன?

–கிளி

1460. காட்டு மூட்டு எருவு கலகலங்குது
கப்பலேறி மஞ்சம் மீதுறங்குது
அப்படிப்பட்ட அத்தானுடன்
எப்படி நான் பேசுவது, அது என்ன?

–நெருப்பு

1461. காட்டையும் மேட்டையும் காணாத தண்ணீர்
கவரிமான் கால்விளிம்புக் குளம்பளவுத் தண்ணீர்
வெள்ளோட்டுக் கூண்டுக்குள் விளையாடும் தண்ணீர்
போட்டு உடைக்க ஓடும் புத்தம்புதுத் தண்ணீர்.

–தேங்காய்

1462. காட்டோரம் போகிற கள்ளக் கடாவுக்கு
கிள்ளிப் பிடிக்க மயிர் இல்லை.

–ஆமை

1463. காட்டோரம் போகிறவளைக்
கையால் பிடிக்க முடியவில்லை.

–புகை

1464. காடும் கருங்காடு கரும்பும் கருங்கரும்பு
குத்துவாருண்டு தின்பாரில்லை.

–பேன்

1465. காடு மேடெல்லாம் கிடக்கும்
கால் வைத்தால் கத்த வைக்கும். அது என்ன?

–முள்

1466. காடு மேடெல்லாம் கிடக்கும்
கால் வைத்தால் குத்தும். அது என்ன?

–முள்

1467. காடுவெட்டிக் களம் பார்த்து
கடும் உழைப்பிற்கு ஆளானால்
கால் காடி பட்டு பனி கைமாறு செய்யுமடி.

–நெல்பயிர்

1468. காடெல்லாம் சுற்றிவரும் கண்டலப்பசு
கண்ட தண்ணீர் குடியாத வெண்டலப்பசு.

–செருப்பு

1469. காடேறி மேயாத கருப்புப் பசு
கன்று சுத்தாமல் குடிக்காமல்
கட்டாமல் கறக்காமல்
ஒரு பானை பால் தருகிறது. அது என்ன?

–தென்னமரம்

1470. காண்பதற்கு இலையுண்டு கிளையுண்டு நிழல் உண்டு
காயோ காய்க்காது பூவும் பூக்காத மரம்
புகல்வாய் நீ என்ன மரம்?

–கிளுவைமரம்

1471. கான உருவம் உண்டு
கட்டிப்பிடிக்க உடல் இல்லை. அது என்ன?

–புகை

1472. காணக்கா கோணக்கா கதையடா மைத்துனா
கதையை விடுவித்தேன் சொல்லுடா மைத்துனா.

–காணம்

1473. காணப் பூப்பூக்கும்
காணாமற் காய் காய்க்கும். அது என்ன?

–நிலக்கடலை

1474. காணாது பூப்பூக்கும்
கண்டு காய் காய்க்கும்.

–பலாக்காய்

1475. காணாதேசத்துக் கள்ளிகள் நாங்கள்
சீனா தேசத்துச் சிங்காரிகள் நாங்கள்
சீக்கிரம் வந்து கதவைத் திறப்போம். நாங்கள் யார்?

–ஈசல்

1476. காதவழி போனாலும்
கைகடுக்காச் சுமை என்ன சுமை?

–வயிற்றுப்பிள்ளை

1477. காதில்லாத செவிடு, கண்ணில்லாத குருடு,
கைபட்டாலும் நிரடு, தன்னாலேதான்
என்றும் சேர்க்கமுடியாது சரடு.

–ஊசி

1478. காதில்லாமல் செவிடன் ஏன் காடு மேடும் சுற்றுகிறான்?
காலில்லாத நொண்டி இவள் தலை இல்லாத கரண்டி.

–பாம்பு

1479. காதில்லை கேட்பதற்கு
கண்கள் இல்லை பார்ப்பதற்கு
வாயுமில்லை பேசுவதற்கு
வந்தவர்க்கு நிதி உண்டு என்னிடத்தில். நான் யார்?

–தராசு

1480. காதுமில்லை இறகுமில்லை
கணப்பொழுதில் கோடி காதமோடும்
ஆறுக்கு அஞ்சாது மலைக்கு மயங்காது
எதற்குஞ் சலிக்காது இதென்ன உரைப்பீரே.

–காற்று

1481. காதோடுதான் நான் பேசுவேன். நான் யார்?

–டெலிபோன்

1482. காம்பு இல்லாத காய் என்ன காய்?

–பொரிவிளங்காய்

1483. காய் என்றால் துவர்க்கும் பழம் என்றால் இனிக்கும்.

–வாழை

1484. காய் இல்லாமல் மானம் கெட்டது
கல் இல்லாமல் உணவு கெட்டது. அது என்ன?

–பருத்திக்காய்/உப்புக்கல்

1485. காய் என்று கண்டது உண்டு
கனி என்று தின்றது இல்லை.

–இலவங்காய்

1486. காய்க்காது கனியாது கடல் காட்டும் மரம்
என்ன மரம்?

–பாய்மரம்

1487. காய்க்கும் பூக்கும்
கலகலக்கும், ஆனால்
காக்காய் உட்கார இடமில்லை.

–நெற்கதிர்

1488. காய்க்கும் பூப்பூக்கும் இலை இல்லை.

–சப்பாத்திக்கள்ளி

1489. காய் கச்சக பிச்சக
பூ மஞ்சக பிஞ்சக
கொடி சன்னக பின்னக. அது என்ன?

–பாகற்காய்

1490. காய் காய்க்காத மரம்
பூப் பூக்காத மரம்.

–கிளுவமரம்

1491. காய் காய்க்கும்
பழம் பழுக்காத மரம் எது?

–முருங்கைமரம்

1492. காய் காய்க்கும், பூப் பூக்கும், இலையில்லை.

–நாகதாளி

1493. காய்த்த மரத்திலே கல்லெடுத்துப் போட்டேன்,
காவல்காரப் பையன் கோபப்பட்டு வந்தான்.
அது யார்?

–தேனீ

1494. காயான காய், கனியாத காய்,
கறியாகும் காய், நெட்டுக் கம்புக்காய்.

–முருங்கைக்காய்

1495. காயும் காய்க்கும் பூவும் பூக்கும்
காசுக்கொரு இலை இல்லை.

–கள்ளி

1496. காயும் கோணக்காய்
கொள்ளடா மைத்துனா
கதையும் விடுவித்தேன்
சொல்லடா மைத்துனா

—கொள்ளுக்காய்

1497. காயும் மரத்தின்மேல் முறுங்கிக் கிடக்குதாம்
கதையை விரிச்சாச்சு கருத்துப் புரிஞ்சாச்சா?

—முருங்கைக்காய்

1498. காயோ காய்! கருநிறப் பச்சைக்காய்
கடலோன் வேலுக்குக் கனிகொடுக்கும் காய் எது?

—விடையில்லை

1499. கார்காத்தார் வீட்டில் ஒரு கொல்லை,
காரிகையின் திருநாமம் இல்லை,
அவளுக்கோ அரவணைப்பிற்கு யாரும் இல்லை,
அவருக்கு ஐந்துமாதப் பிள்ளை.

—சோளம்

1500. கார்காலத்தில் மட்டும் வருகிற கறுத்த
பொடியனைக் கண்டால், கண்ணை சிமிட்டுகிறான்,
கைதட்டி அழைக்கிறான். மறுபடி நாம்
முறைக்கும் முன்பு கண்ணீர் சிந்தி விடுகிறானே!

—மின்னல், இடி, மழை

1501. கார்த்திகைத் திங்களிற் பூக்கும் பூ
கானகர் சோகர் பறிக்கும் பூ
மதிகொண்ட இராசா மதிக்கும் பூ
தனமுள்ள இரர்சா வாங்கும் பூ. என்ன பூ?
(கானகர்-காடு மலைகளிலுள்ளவர், சோனகர்-யவனர்)

—முத்து

1502. கார்த்திகை மார்கழி பூக்கும் பூ
கானகர்சோனகர் விற்கும் பூ
மன்னாதி மன்னன் மதிக்கும் பூ
மதியுள்ள மந்திரி கொள்ளும் பூ. என்ன பூ?

—முத்து

1503. கார்த்திகை முதல் காலங்காத்தாலே
கைகால் விறைப்பான். மார்கழி மடி ஏறி
தையில் தரையில் குதிப்பான். மாசியில்
மச்சைத் துளைப்பான். யார் இவன்?

—மூடுபனி

1504. காரம் குறையாத கறுப்புச் சிறு கோலி.

–கடுகு

1505. காராண கருமணலில்
கருத்த வாழை குருத்துவிட்டு
சிம்புவிட்டு சினுக்குவிட்டு
காக்காய் ஏறக் கொப்பில்லை. அது என்ன?

–நெற்கதிர்

1506. காரிக்காளை பிடிக்கப் போனால்
கொக்கரக் கொம்பன் இடிக்க வருகிறான்.

–சூரிக்காய்

1507. காரிகையின் பேரு, அது தேவி பேரு,
கண்ணோடு கைகோர்த்து சேர்ந்த பேரு,
கடலுக்குக் காதலியாள் அவளின் பேரு,
கழலுவீர் படித்தோரே உண்மைப் பேரை!

–கங்கை

1508. காரிமாடு, கீரிக்கொம்பு
கரைக்குப் போனால் துரத்திப் பாயுது. அது என்ன?

–தேனீ

1509. காரைக்கால் தெருவிலே கம்பளியைப் போட்டு
கப்பல்காரர் மகளை கையைப் பிடிச்சு இழுத்தார்.
இழுக்கப்பட்ட பெண்ணோ அம்மா அம்மா என்றாள்.
இழுத்தவனோ அவளை இரும்மா அம்மா என்றான்.

–வளையல்மாட்டுதல்

1510. காரோடி மணலிலே கப்புவிட்டு கவுருவிட்டு
காக்காய் நிற்க இடம் இல்லை. அது என்ன?

–உப்பு

1511. கால் அளவு மயிரிலே கறுப்பு எறும்பு மேயுது.

–பேன்

1512. கால் ஆறு இறகு இரண்டு
கடுகு போலக் கண் இரண்டு.

–ஈ

1513. கால் இரண்டு உண்டு, கண்ணும் உண்டு.
குண்டுப் பாக்குத் தின்னும் கோட்டிக்காரி யாரு?

–பாக்குவெட்டி

1514. கால் இரண்டுமுண்டு நடக்க வகையறியாள்
கண்ணுமுண்டு மேலே சிமிட்ட வகையறியாள்

பால்குடிக்க வகையறியாள் பாக்கும் தின்பாள்
ஆளை அறிந்து சொன்னவர்க்கு ஆயிரம் பொன்.

–பாக்குவெட்டி

1515. கால் இல்லாத கள்வன்
கால் உள்ளவனைப் பிடித்தான்
தலையில்லாதவன் அதைப் பார்த்துக்
கலகலவென்று சிரித்தான். அவர்கள் யார்?

–பாம்பு, தவளை, நண்டு

1516. கால் இல்லாத குண்டலம் கடகடவென்று ஓடுது.

–பாம்பு

1517. கால் இல்லாத பந்தலைக்
காணக் காண விநோதம்

–வானம்

1518. கால் இல்லாத மனிதன்
ஐந்து நிமிடத்தில் மறைகிறான். அவன் யார்?

–பாம்பு

1519. கால் இல்லாத மான், வேர் இல்லாத
புல்லைத் தின்னும். அவை எவை?

–மீன், பாசி

1520. கால் இல்லாதவன் ஆடி ஓடிப் பாடுகிறான்.

–இசைத்தட்டு

1521. கால் இல்லாதவன் ஆனையையும் அசர வைப்பான்.
அவன் யார்?

–மலைப்பாம்பு

1522. கால் இலலாதவன் உடல் வலிக்காமல் பயணம்
செய்வான். அவன் யார்?

–படகு

1523. கால் இல்லாதவன் கால் உள்ளவனைப் பிடித்தான்
அதைப் பார்த்துத் தலை இல்லாதவன் சிரித்தான்.

–பாம்பு, தவளை,நண்டு

1524. கால் இல்லாதவன் சற்று நேரத்தில் மறைகிறான்.

–பாம்பு

1525. கால் இல்லாதவன் தாவித்தாவி குதிப்பான். அவன் யார்?

–கடல் அலை

1526. கால் இல்லாமல் ஓடுவேன்
கண்டம் இல்லாமல் பாடுவேன்.

–கடிகாரம்

1527. கால் இல்லை, காதம் நடப்பேன்
உயிர் இல்லை, ஓடித் திரிவேன்
சாதம் இல்லை, நீர் குடிப்பேன்
கண்ட துண்டமாய் கறிதின்பேன். அது என்ன?

–புகைவண்டி

1528. கால் இல்லை கை இல்லை கண்கள் உண்டு
வால் உண்டு சிறகு உண்டு வலிமையாக.

–மீன்

1529. கால் இல்லை தாவுவான்
வாய் இல்லை கத்துவான். அவன் யார்?

–கடல்

1530. கால் கறுப்பு முக்கால் சிவப்பு
உடைந்தால் பருப்பு தின்றால் துவர்ப்பு.

–குன்றிமணி

1531. கால், கை இல்லை, காடும் மலையும் தாண்டுவான்.
அவன் யார்?

–மேகம்

1532. கால் நான்கு நடக்காது.
கண் ஆயிரம் இமைக்காது. அது என்ன?

–கட்டில்

1533. கால் படாத நிலத்தில்
கரு இல்லாத முட்டை. அது என்ன?

–காளான்

1534. கால்படி அரிசி போட்டுச் சமைத்து
ஊருக்கெல்லாம் தானமிடலாம். அது என்ன?

–சுண்ணாம்பு

1535. கால் பத்து; கண் ஆறு
வால் இரண்டு, தலை மூன்று
கை இரண்டு, கொம்பு நான்கு. அது என்ன?

–ஏர் உழும் மனிதன், மாடுகள்

1536. கால்வாயில் தண்ணீர் போக
கன்னிக் கோழி முட்டையிட. அது என்ன?

–கத்தரிக்காய்

1537. காலமெல்லாம் பலபேர் கூடிக் கட்டிய மண்டபம்,
கோலக் கருவரை நூறுகண் கொண்ட மண்டபம்,
கொடியவன் ஒருவனுடைய கண்பட்டுப் போனதும்
புண்பட்டுப் போகும் மண்டபம் என்ன மண்டபம?

–தேன்கூடு

1538. காலாகாலத்துப் பெண்கள் நாங்கள்
காலம் தெரிந்து வந்தோம் நாங்கள்
சீனிக்கதவைத் திறப்போம் நாங்கள்
சீவனையெல்லாம் மடிப்போம்நாங்கள். நாங்கள் யார்?

–புற்றீசல், புரட்டாசி மாதம்

1539. காலா காலப் பெண்டுக நாங்க
காலத் தெளிஞ்சா வருவோம் நாங்க
கீழாப் போட்டி நீக்குவோம் நாங்க
சீமை எடுகடை போவோம் நாங்க

– ஈ ச ல்

3ஆம் வரி - புற்றிலிருந்து வரும்
4ஆம் வரி - எங்கும் கத்தும்.

1540. காலால் உதைத்தால்
காற்றால் உருளும். அது என்ன?

–சைக்கிள்

1541. காலால் தண்ணீர் குடிக்கும் கம்பங்கோழி
கழுத்தால் முட்டையிடும் கம்பங்கோழி. அது என்ன?

–கத்தரிச்செடி

1542. காலால் நடவாத கால் என்ன கால்?

–முக்கால்

1543. காலால் மிதித்தால்தான் கடகட என்று ஓடுவான்.

–சைக்கிள்

1544. காலாறு கைநான்கு உடலிரண்டு
காதிரண்டு தலையொன்று கண்இரண்டு
மேலேறுவார் கூட அறியச் சொன்னேன்
மேன்மையுடன் இக்கதையை உரைத்திடீரே.

–நாற்காலி, மனிதன்

1545. காலாறு கையிரண்டு கண்ணோ நான்கு
கனமுள்ள தலையிரண்டு உடலிரண்டு
வாலொன்று ஓடுவது நான்கு கால்கள்
வகையாக உதைப்பதுவோ இரண்டு காலே. அது என்ன?

–குதிரைமேல் மனிதன்

546. காலாறும் கப்பல் கால்
கண்ணிரண்டும் கீரை விதை.

–ஈ

1547. காலில்லாத பந்தலைப் பார்க்கப் பார்க்க
விநோதம். அது என்ன?

–ஆகாயம்

1548. காலில்லா பாப்பா கடகடன்னு ஓடுது.

–பாம்பு

1549. காலிலே தூங்கும் கடிவாளக் குதிரை.

–செருப்பு

1550. காலு இல்லாத கையில்லாத சீவனக்கனம் செத்து
நக்கனம் கிடக்குது
நாலுகாலு சீவனக்கனம் மோந்து நக்கனம் பாக்குது
இரண்டுகாலு சீவனக்கனம் தூக்க நக்கனம் பாக்குது
அது என்ன?

–பாம்பு, நாய், கருடன்

1551. காலுமில்லை இறகுமில்லை
கணப்பொழுதில் கோடி காதமோடும்
ஆறுக்கு அஞ்சாது மலைக்கு மயங்காது
எதற்குஞ் சலிக்காது இதென்ன உரைப்பீரே.

–காற்று

1552. காலுமில்லை கைகளுமில்லையே
சாலுபோன்ற வயிறு தழைக்குமே
கோலக்கண்ணிற் சோறுண்டு குத்திடும்
ஓலம்செய்யும் ஒருவர்தனைத் தொட
அது என்ன?

–மத்தளம்

1553. காலைக் கடிக்கும் செருப்பல்ல
காவல் காக்கும் நாயல்ல.

–முள்

1554. காலைத் தழுவ ஓடிவருவான்
காரியம் மிஞ்சினால் வாரி
வாரிச் சுருட்டிக்கொள்வான். அவன் யார்?

–கடல் அலை

1555. காலைப்பனியில் வேர்த்திருக்கும்
கடாரங்காய் போல் காய்காய்க்கும்.

–பூசணிக்காய்

1556. காலை மடக்குவாள் காமாட்சி
மூலை முடுக்குத்தான் அவள் ஆட்சி.

–பாய்

1557. காலை மாலை நெட்டை
மற்ற நேரம் குட்டை.

–நிழல்

1558. காலையில் உதிக்கும் மாலையில் மறையும்.

—சூரியன்

1559. காலையில் உறவு மாலையில் துறவு.

—சூரியன்

1560. காலையில் ஊதும் சங்கு
கறிசமைக்க உதவும் சங்கு. அது என்ன?

—சேவல்

1561. காலையில் ஊதுவாள், கறி சமைக்க உதவுவாள்.
அது என்ன?

—சேவல்

1562. காலையில் கூவும் பட்சி,
கந்தன் கொடியில் காணும் பட்சி. அது என்ன?

—சேவல்

1563. காலையில் கோட்டை கட்டி, கடும்பகலில்
போர்செய்து, மாலையில் விரித்துப்
போடும் மாவீரன். யார்?

—சலவைத்தொழிலாளி

1564. காலையில் சுருண்டு கிடப்பாள்
இரவில் விரிந்து கிடப்பாள்.

—பாய்

1565. காலையில் தோன்றும்
கண்ணாடிபோல் பளபளக்கும்
பச்சைப்புல்லில் துவண்டு வரும்
பவளம்போல் உருண்டு வரும். அது என்ன?

—பனி

1566. காலையில் தோன்றுவான்
கடுங்குளிர் நீக்குவான்.

—சூரியன்

1567. காலையில் நான்கு காலோடே
பகலில் இரண்டு காலோடே
மாலையில் மூன்று காலோடே
முடிவில் எட்டுக் காலோடே.

—மனிதன்

(இங்கு காலை, பகல், மாலை என்பன முறையே குழந்தைப்பருவம், யௌவனம், விருத்தாப்பியம் எனப் பொருள்படும். குழந்தைப் பருவத்தில் இரு கைகளையும் ஊன்றித் தவழ்வதையும், யௌவனத்தில்

இரு கால்களுடன் நடப்பதையும், விருத்தாப்பியத்தில் ஒரு கோல் ஊன்றி நடப்பதையும் குறிப்பன. முடிவில் நால்வர் தூக்கிச்செல்ல நமனுலகம் செல்வது.)

1568. காலையில் மேலே
மாலையில் கீழே.

—வானவில்

1569. காலையில் வந்த விருந்தாளி
மாலையில் மறைந்துவிட்டார்.

—சூரியன்

1570. காலையில் வெள்ளை
மாலையில் மஞ்சள்.
அது என்ன?

—சூரியன்

1571. காலையில் வெறுங்காடு
இரவிலே பூக்காடு
அது என்ன?

—வானம்

1572. காலையிலும் மாலையிலும் நடுப்பகலிலும்
அழைத்தால் ஓடோடி வருவான், தன்
கூட்டம்சேர்த்து உணவு உண்பான்.

—காகம்

1573. காலையிலும் மாலையிலும் நடுப்பகலும் இராத்திரியும்
வேலையும் வாங்கிடுவார், கூலியும்தான் கேட்பார்,
கூலிதர மறுத்தால், கொதித்து நமை வாட்டுவார். யார்?

—வயிறு

1574. காலையிலே கூவும் பட்சி
கந்தன் கொடியில் காணும் பட்சி
குப்பையைக் கிளறும் பட்சி
கொண்டையொன்றை உடைய பட்சி. அது என்ன?

—சேவல்

1575. காலையும் கடிக்கும், காவலும் காக்கும். அது என்ன?

—முள்

1576. காலோ நாலு அதற்குக் கண்ணில்லை, வாலில்லை.

—நாற்காலி

1577. காவி உடை அணியாத கள்ளத்தவசி
கரைஓரத்தில் கடுந்தவம் செய்கிறான்.

—கொக்கு

1578. காவிரிக்கரையிலே காற்றாடி வளர்ந்த மயில்
கல்லுழிகள் கண்பட்டு புண்பட்ட புள்ளிமயில்
குலைநடுங்கிக் கிடக்குதே.

–தையல் இலை

1579. காளைக்கு கழுத்துமட்டும் தண்ணீர். அது என்ன?

–தவளை

1580. காளை கட்டிக் கிடக்குது
கயிறு ஓடிக்கிடக்குது.

–பரங்கிக்காய்

1581. காளை படுத்திருக்கு
கயிறு வீசியிருக்கு.

–பூசணி

1582: காற்றாடி பறப்பதேன்? கல்வி வளர்வதேன்?

–நூலினால்

1583. காற்றால் உயிர்பெறும், காதுக்கு இனிமை தரும்.

–நாதசுரம்

1584. காற்றிலாடும் வீட்டிற்கு கதவுகள் இல்லை.

–தூக்கணாங்குருவிக்கூடு

1585. காற்றிலே அலைபாயும் கலையன்.
ஆற்றிலே வாழுகின்ற அலையன்.
நீர்வாசி நீரின்மேல் நடப்பான்.
நீந்தியந்த நீர்மேலும் கிடப்பான்.
கரையேற்றி ஆட்களையே விடுப்பான்.
அவனோ கரையேறாது இருப்பான்.

–தோணி

1586. காற்றிலே பறக்கும், காற்றாடி அல்ல
சக்கரம் உண்டு, சைக்கிள் அல்ல
வர்ணங்கள் உண்டு, படம் அல்ல.

–நம் தேசக்கொடி

1587. காற்றிலே மிதப்பேன், காற்றாடி அல்ல
காதை வளர்ப்பேன், கழுதையும் அல்ல
குட்டிகள் சுமந்தேன், குரங்கும் அல்ல
உறக்கத்தில் ஆழ்வேன், கரடியும் அல்ல. நான் யார்?

–தூரிஞ்சல்

1588. காற்று இல்லாத கண்ணாடிக் கூண்டில்
மஞ்சக் கோழி மயங்கிக் கிடக்கு.

–முட்டை

1589. காற்று இல்லாத கண்ணாடிக் கூண்டில்
மயங்கிக் கிடக்கிறான் மஞ்சப்பன். அது என்ன?

–முட்டை

1590. காற்று சீவனம் கண்ணிடை வாசமாம். அது என்ன?

–மூக்கு

1591. காற்று நுழையாத காட்டிலும்
பார்த்து நுழைஞ்சிடுவான்.

–புகை

1592. காற்று வந்தால் ஆடுவான்
கம்பி இருந்தால் ஓடுவான்.

–படகு

1593. காற்று வீசும் அழகான மரம். அது என்ன?

–சாமரம்

1594. காற்று வீசுவதுபோல் பறந்துவந்தாள்
கடலெல்லாம் சுற்றிவந்தாள்.

–கடிதம்

1595. காற்றைக் குடித்து
கைகளில் தவழும்.

–பலூன்

1596. கானகம் சென்றிரண்டு
கன்னிகைகள் கொண்டு வந்தால்
ஒரு மகள் உழைப்பாளி
ஒரு மகள் சப்பாணி. அவர்கள் யார்?

–திருகை

1597. கானகர் சோனகர் விற்கும் பூ
மன்னாதி மன்னன் மதிக்கும் பூ
மதியுள்ள மந்திரி கொள்ளும் பூ என்ன பூ?

–முத்து

1598. காசைக் கொடுத்துக் கடையிலே வாங்கினாள்
பையிலே போட்டுப் பவிசாக வைத்திருந்தாள்
வாயிலே போட்டு வர்ணம் காய்ச்சினாள்
பச்சிலைத் தோப்புக்குள்ளே பார்த்தால் தெரியும்.

–வெற்றிலை

1599. கானடா போனாலும் கரை மீளாத கப்பல்.

–பிணம்

1600. கானமயில் விரித்திடுவாள், மாலையில் சுருங்குவாள்.
சூரியனின் காதலி என்பாள். அது யார்?

–தாமரை

1601. கிச்சா பிச்சா ஊதா ரவிக்கை. அது என்ன?

–கேழ்வரகு

1602. கிட்ட இருக்குது தாம்பூலம் தொட்டுப்
பார்க்க முடியவில்லை.

–முதுகு

1603. கிட்ட இருக்குது பட்டணம்
எட்டிப் பார்க்க முடியவில்லை. அது என்ன?

–முதுகு

1604. கிட்டத் தெரிபவன் நெருங்கினால்
எட்டிப் போவான். அவன் யார்?

–வானம்

1605. கிட்டத் தெரிபவை ஒன்றையொன்று
தொட்டுக்கொள்ள முடியாது.

–கண்கள்

1606. கிண்ணத்தில் ஒரு வெள்ளிக்கிண்ணம். அது என்ன?

–வானில் நிலா

1607. கிண்ணம் போல் பூப்பூக்கும்
கிள்ளி முடிக்கமுடியாது. அது என்ன?

–ஊமத்தம்பூ

1608. கிண்ணிப்பெட்டியில் ஒரு தண்ணீர்ப்பாம்பு
வளவள என்பதும் உண்டு. வம்புக்குப்
போவதும் உண்டு. ஆனாலும் பாருங்கள் அது
வாசலை விட்டு வழி தவறிப் போகாதே.

–நாக்கு

1609. கிண்ணிபோல் பூப்பூக்கும்
கிடாரத்துக்கு மேல் காய் பருக்கும்.

–பூசணி

1610. கிணத்து நிறையத் தண்ணி இருக்கு
குருவி குடிக்கத் தண்ணி இல்லை. அது என்ன?

–இளநீர்

1611. கிணற்றில் கிண்ணம் மிதக்குது. அது என்ன?

–நிலா

1612. கிணற்றிலே அம்புகள் போடுவரேயன்றி எடுப்பாரில்லை. அது என்ன?

–மழைத்துளிகள்

1613. கிணற்றுக்காரப் பாப்பாத்தி கீழும் மேலும்
ஓடுவாள். வெளியில் வந்து நின்றாலோ
செத்துத் தொலைந்து போயிடுவாள்.

–மீன்

1614. கிணற்றுக்குள்ளே கிண்ணி மிதக்கிறது.

–வெண்ணெய்

1615. கிணற்றுக்குள்ளே மொட்டைப் பாப்பாத்தி
எட்டிப் பார்க்கிறாள்.

–துலா

1616. கிணற்றுக்குள்ளே வட்டக்கிண்ணி மிதக்கிறது. அது என்ன?

–சந்திரன்

1617. கிணற்றைச் சுற்றி அகத்திமரம்.

–கண்புருவம்.

1618. கிணற்றைச் சுற்றிப் புல். அது என்ன?

–கண்ணைச் சுற்றி இருக்கும் ரோமம்.

1619. கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கற்கள். அவை என்ன?

–பற்கள்

1620. கிலுக்கான் முலுக்கான் பூ பூத்து
சிப்பித்தட்டிலே வாரி வைத்து
போரவங்க வருகிறவங்க எல்லாம்
ஐய்யோ ஐய்யோ என்கிறாங்க. அது என்ன?

–நெருஞ்சிமுள்

1621. கிள்ளலாம் கிழிக்கலாம்
கிளிக்கூட்டிற் போட்டு அடைக்கலாம்
ரத்தம் வரக் குத்தலாம்
வெளியே பிடித்து எத்தலாம். அது என்ன?

–தாம்பூலம்

1622. கிளிகள் மூன்று நிறம்
மூன்று கட்டுக்குள்ளே போனால் ஒரேநிறம். அது என்ன?

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

1623. கிளியாள்கிளியாளே பிள்ளை பெற்றாளே
தாங்கமாட்டாமல் சாய்ந்து போனாளே. அவள் யார்?

–நெல்

1624. கிளை இல்லாத சவுக்கு மரம்
வெட்ட வெட்ட வளருது.

–தலைமுடி

1625. கிளை இல்லாத மரத்தில் ஏறுகின்றான். அவன் யார்?

–பேன்

1626. கிளை இல்லை இலை உண்டு. மணம் இல்லை மலர் உண்டு. விதை இல்லை பழம் உண்டு. பயிராகும் செடி இல்லை. மரம் என்ன மரமே?

–வாழைமரம்

1627. கிளை உண்டு இலை இல்லை. அது என்ன?

–மான்கொம்பு

1628. கிளை உண்டு தலையில்லை. அது என்ன?

–சட்டை

1629. கிளையில்லாத சவுக்கு மரம்
வெட்ட வெட்ட வளருது. அது என்ன?

–தலைமுடி

1630. கிளையுள்ள மரத்தை தலையில் வைத்திருப்பான். அவன் யார்?

–மான்

1631. கிறுகிறுண்ணு சுத்துகிறான். விறுவிறுண்ணு படைக்கிறான்.

–குயவன்

1632. கீரைவிதை கொண்டு தூவியிருப்பார் பாத்தியல்ல
கிருஷ்ணனும் அங்கிருப்பான் கோகுலமல்ல
பேரும் ஒன்றுண்டு அதன் பெருமைதனை எடுத்துரைக்க
சீரும் சிறப்புமிக்க அதனைச் செப்புவாயே செட்டியாரே.

–புத்தகம்

1633. கீரை விதைப்பதேன்?
கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?

–பிடுங்கித்தின்ன

1634. கீழே எறிந்தால் மேலே போவான். அவன் யார்?

–பந்து

1635. கீழே விழுந்தால் கறுப்பு,
வாயில் போட்டால் சிவப்பு. அது என்ன?

–திராட்சை

1636. கீழேயும் அவன் மேலேயும் அவன். அவன் யார்?

–மழை

1637. குச்சி ஆன பையன், குச்சு வீட்டிற்குள்ளே
குடியிருக்கும் பையன், மெச்சும்படியாய்
வெளியே மேனி காட்டி வருவான், காட்டும் மேனி
வீட்டுச்சுவரில் தேய்த்துக்கொண்டால்
சுட்டெரிப்பான் எதையும்.

–குச்சியும் தீப்பெட்டியும்

1638. குச்சிக்குப்பின்னால் குப்பைமேட்டிலே
மச்சி வளர்ந்தவள் பச்சைப்பட்டு கட்டி
பள்ளி அறையிலே படுத்துக் கிடக்கிறாளே.

–கீரை

1639. குச்சி குச்சியாய் கட்டம் போட்டால்
உச்சிக்கொப்பிலே ஊஞ்சல் ஆடியே
ஊர்க்கதை பேசுதே?

–முருங்கைக்காய்

1640. குட்டப்பிள்ளைக்குக் குறுணி நகை. அது என்ன?

–கோழி மயிர்.

1641. குட்டிக் குட்டிப் பரி இது போட்டதெல்லாம்
தின்னுது. கிட்டே தொட்டதும் பார்த்ததும்
எட்டி உதை போடுது.

–அடுப்பும், நெருப்பும்

1642. குட்டிக் குதிரைக்கு எண்ணூறு கடிவாளம். அது என்ன?

–தறி

1643. குட்டி போட்டுப் பால்கொடுக்கும்
மட்டிப் பறவை. அது என்ன?

–வௌவால்

1644. குட்டியும் போடும், குவலயத்திலும் பறக்கும்.

–வௌவால்

1645. குட்டை அக்காள் குட்டை அக்காள்
குடிசைக்கு வர்றா. ஏனோ குப்பைக் கந்தையை,
கட்டிக்கொண்டு எங்கேயோ போறா?

–வாத்து

1646. குட்டைக் குட்டைப் பாப்பாத்தி
குளித்துக் குளித்துக் கரையேறுகிறாள். அது என்ன?

–கடகால்

1647. குட்டைக்கொம்பில் ஓட்டுச்சிட்டுகள்.

–கத்திரிக்காய்

1648. குட்டைச்சிறுக்கிக்குப் பெட்டிப்புடவைகள்.

–உள்ளிப்பூண்டு

1649. குட்டைச்சிறுக்கிகள்
குளித்துக் கரையேறுகிறார்கள்.

–தவளை

1650. குட்டைத் தண்ணீரில்
எட்டுக் கப்பல். அது என்ன?

–தவளை

1651. குட்டைத் தண்ணி வத்திப்போச்சு
பட்டணத்துக்காரன் செத்துப்போனான்.

–விளக்கின் எண்ணெய், திரி

1652. குட்டைப்பயல் குழியில் விழுந்தான்
நெட்டைப்பயல் எடுத்துவிட்டான்.

–பணியாரம்

1653. குட்டைப் பனையிலே எட்டுமுட்டி. அது என்ன?

–கத்தரிக்காய்

1654. குட்டைப் பெண்ணுக்கு எட்டு முழச்சேலை. அது என்ன?

–நீர் இறைக்கும் வாளி.

1655. குட்டைப் பெண்ணுக்குப் பெட்டிப் புடவைகள்.

–பூண்டு

1656. குட்டை மரத்தில் கொட்டாப்புளி.

–கத்தரிக்காய்

1657. குட்டை முன்கால் கையாக இருக்கும் குரங்கல்ல
குட்டி வாழ்வது பையாக இருக்கும். அது என்ன?

–கங்காரு

1658. குட்டையன் குட்டையன் குறுகிக்கிடக்கும் குட்டையன்
பார்த்தால் மிரளும் பருப்பு அளவு குட்டையன்
கட்டையன்தான் குறுகியும் காரம் ஏனோ குறையலை.

–மிளகு

1659. குட்டையான அழகிக்கு நெட்டையான சடை.

–கத்தரிக்காய்

1660. குட்டையில் பிறந்து குடிசையில் வளர்ந்து
சந்தையில் நின்று பந்தியில் இடப்பான்.

–பாய்

1661. குட்டையைக் குழப்பிடும் ஒரு குருவி
குட்டையோரம் போகும் ஒரு குருவி.

–எருமை, பசு

1662. குடிக்க உதவாத நீர் குளத்தில் தங்காத நீர்
கைகளால் தொடாத நீர். அது என்ன?

–கானல் நீர்

1663. குடிக்கத் தண்ணீர் உண்டு
குளிக்கத் தண்ணீர் இல்லை. அது என்ன?

–தேங்காய்

1664. குடிக்கத் தண்ணீர் குருவிக்கும் போதாது
அதிலே பாருங்கள் அல்லிப்பூ பூத்திருக்கு.

–தீபம்

1665. குடிக்கத் தேன் கிடைப்பதும்
கூந்தல் மணப்பதும் எதனால்?

–பூவால்

1666. குடிக்கலாம், அடிக்கலாம். அது எது?

–காப்பி

1667. குடிச்சிட்டுக் குடிச்சிட்டுக்
குத்தவைக்குது சுகப்பயபிள்ளை. அது என்ன?

–செம்பு

1668. குடித்தால் புளிக்கும் தொட்டால் மணக்கும்.

–தயிர்/நெய்

1669. குடியிருக்கக் கோட்டை கட்டும்
கோட்டையை உடைத்து வெளியேவரும்.

–பட்டாம்பூச்சி

1670. குடுக்கை நிறைய வயிரமணி.

–மாதுளம்பழம்

1671. குடுகுடுன்னு ஓடினான், மரத்தில் ஏறினான்,
காயைப் பறித்தான், முனையைக் கடித்தான்,
அதன் கோமியம் குடித்தான். அது என்ன?

–பனங்காய்

1672. குடுமிக்குள் மூன்று கண்கள் வைத்துள்ளான்.

–தேங்காய்

1673. குடுமியுள்ள தலையனுக்கு நெற்றியில் முக்கண்.

–தேங்காய்

1674. குடுமியுள்ள தலையனை
தலைதெறிக்க உடைப்பர்.

–தேங்காய்

1675. குடுவை நிறைய வயிரக்கற்கள்.

–மாதுளம்பழம்

1676. குடுவையில் சலங்கை குதிக்கும்போது ஒலிக்கும்.

–மிளகாய்வற்றல்விதை

1677. குடைபோல் உடலிருக்கும், குந்தித் குந்திதான் நடக்கும்.
நான்கு கால்கள் உண்டு, நடையோ பின் தங்கும்.

–ஆமை

1678. குண்டன் குழியிலே விழுந்தான். அவன் யார்?

–குழிப்பணியாரம்

1679. குண்டன் பலபேருக்கும் கொண்டையோ ஒண்ணு.

–பூண்டு

1680. குண்டுக்குள்ளனுக்கு உடல்முழுவதும் சட்டை.

–வெங்காயம்

1681. குண்டுக்குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்து நிற்கும்.

–தேங்காய்

1682. குண்டு குண்டாட குடலைப் பந்தாட
குப்பாந்து தாக்குடா குத்தி உயிர் போக்குடா.

–துப்பாக்கி

1683. குண்டு குண்டு ஈச்சம் முள்ளு
கோடாரி ஈச்சம் முள்ளு
மதுரைக்குப் போனாலும்
வாடாத ஈச்சம் முள்ளு. அது என்ன?

–பற்கள்

1684. குண்டு குழி ராசாவுக்கு
குடல் எல்லாம் பல். அது என்ன?

–மாதுளம்பழம்

1685. குண்டு குளத்திலே செண்டு முளைத்த குட்டிக்கதை ஒன்று.
அந்தி கிழக்கும் அதிகாலை மேற்கும் வளைக்கும்
கதை இரண்டு. நொண்டிக்குதிரைக்கு ஒரு கால்
நுட்பக்கதை மூன்றும் விளக்குக.

–நாக்கு, வானவில், ஊமத்தங்காய்

1686. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் அண்ணன் தம்பிகள்.

–கடிகாரம், சின்னமுள், பெரியமுள்

1687. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடுது. அது என்ன?

–மத்து

1688. குண்டுச் சட்டிக்குள் குதிரைவால் மேயுது.

–ஊசிநூல்

1689. குண்டுச் சட்டிக் கோட்டை,
கோட்டைக்குள்ளே பால்கோவா,
கோவாக்குள்ளே முத்தம்மா கூனிக்குறுகிக்
கிடப்பாளாம்.

–ஆரஞ்சுப்பழம்

1690. குண்டுச்சட்டி கொண்டாரம், கும்மிருட்டுப் பண்டாரம்
பகலிலே போக்கிடம் பொந்தோ சந்தோ
இரவிலே சாக்கடை இவருக்குப் பூக்கடை. யார் இவர்?

–பெருச்சாளி

1691. குண்டுச்சட்டி பிரட்டி உருட்டி
அடுக்களையைச் சுற்றுவான். யார் இவன்?

–பூனை

1692. குண்டுச்சட்டியிலே கெண்டைமீன். அது என்ன?

–நாக்கு

1693. குண்டுமணி தலையில் இரண்டே தொப்பி.

–பட்டாணி

1694. குண்டு மனிதனுக்கு இரண்டு முண்டாசு.

–பட்டாணிக்கடலை

1695. குண்டுமுத்தும் குண்டுமுத்தும் குதிச்சு விளையாட
வங்காளத்து ராசா வந்து மறிச்சுக்கிட்டாராம்.

–சோறு, அகப்பை

1696. குண்டு முழி ராசாவுக்கு
குடல் எல்லாம் பல். அது என்ன?

–மாதுளம்பழம்

1697. குண்டு விழி ராசாவுக்கு
குடல் எல்லாம் பல். அது என்ன?

–மாதுளம்பழம்

1698. குண்டோதரன் வாயில்
குள்ளன் நுழைந்தால்
குபேரபட்டினத்திற்கு வழி தெரியும். அது என்ன?

–பூட்டுச்சாவி

1699. குத்தக் குத்தக் குடையும் வெட்ட வெட்ட விரியும்.

–குழி

1700. குத்த வைத்துக்கொண்டிருக்குமாம் கூழப்பயபிள்ளை.

–செம்பு

1701. குத்துக்குருவிக்கு முழம்வால். அது என்ன?

–அகப்பை

1702. குதிகுதி எனக் குதிக்கிறான். கொட்டைப்
பல்லால் சிரிக்கிறான். அவன் யார்?

–சோளப்பொரி

1703. குதிகுதித்தான், பல்லை இளித்தான்.

–சோளப்பொரி

1704. குதித்துக்குதித்து ஓடிடுவாள் குறிதவறாமல்
பாய்ந்திடுவான்
முதுகில் மூன்று கோடுடையான் முன்னும்பின்னும்
மரம் ஏறிடுவான். அவன் யார்?

–அணில்

1705. குதிரை ஓட ஓட வால் குறைகிறது. அது என்ன?

–ஊசியும் நூலும்

1706. குதிரை பாய்ந்துவர கொடிகள் பறந்துவர
நானூறுபேர் இழுத்துவர நாலாயிரம் பேர் திரண்டுவர
அசைந்து அசைந்து வர ஆறுசக்கரம் உருண்டுவர.

–தேர்

1707. குப்பச்சி ஒருத்திக்கு கோல் அளவு பாருங்கள்.
அவளுக்குத் தெரியுதே குடத்தளவு சொருக்கு.

–சோளக்கதிர்.

1708. குப்பாந்து குளிச்ச குருவி சுட்டுக்
கொண்டதும் ஏனோ தட்டுப்பாயைத் தாவுது?

–வடை

1709. குப்பிக்குள் ஊற்றினால் குதிக்கும்
தப்பித்துப் போனாலோ தடுக்கமுடியாது.

–காற்று

1710. குப்பித்தலை இருக்கும். கூட ஒரு வால் இருக்கும்.
தம்பி இவன்தான் மரம் கொத்திப் பறவையின்
மறுபிறவி என்பதால் மரம் வாடித் தொட்டியாலேதான்
வாழ்க்கை நடத்துகிறான்.

–கோடாலி

1711. குப்பை பெருக்கும் கொல்லையில் இருக்கும்.

–துடைப்பம்

1712. குப்பை பெருக்கும் சொந்தக்காரக்கூட்டம்.

–கோழி

1713. கும்பகோணம் தேவடியாள் குலுங்கி குலுங்கி ஆடுவாள்
குளித்து முழுகி வந்தவுடன் கப்சிப்பென்று அடங்குவாள்.

–சோமாசி

1714. கும்பல் கும்பலே நாங்கள் தான்,
கூட்டம் போடுவதும் நாங்கள் தான்,
கொடியசைப்பதும் நாங்கள் தான்,
குண்டானை ஓட்டுவதும் நாங்கள் தான்,
தேக்கம் பெட்டிக்குள் சோப்புக்கட்டிக்குள்
சித்திரவேலைகள் செய்து பார்ப்பதும் நாங்கள் தான்.

–எலி

1715. குமரியைப் பிடிச்சா கத்த மாட்டேங்கிறாள்
கிழவியைப் பிடிச்சா கத்தறாள்.

–பச்சைமிளகாய், காய்ந்தமிளகாய்

1716. குமிழ் சட்டி கூழ்ப்பானை, விடிந்துபார்த்தால்
வெறும்பானை.

–வயிறு

1717. குமுறிக் குமுறி அழுதிடும்
நல்லுணவைப் படைத்திடும். அது என்ன?

–உலைநீர்

1718. குயவன் செய்யாக் குடமாம்
வண்ணான் வெளுக்கா மடியாம்
ஞாயிறு பாரா நீராம். அது என்ன?

–தேங்காய்

1719. குயவன் செய்யாத குடம், பற்பல கொல்லையில்
தொங்குது.
ஓட்டுப்பானைக்குள் ஒளிந்து அக்குடத்திற்குள் உயர்ந்த
பசும்பாலில் ஒப்பற்ற வெண்மையை உள்பூச்சுப்
பூசிவிட்டு
ஊற்றுநீரையும் அதில் ஊற்றி வைத்த வயதை
உளவு யார் சொல்வது?

–இளநீர், தேங்காய், நீர்

1720. குயவன் பண்ணாத பண்டம்
வண்ணான் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணீர். அது என்ன?

–தேங்காய்

1721. குயவனோ கள்ளனோ என்னைப் பெற்றான்
பெண்களோ என்கழுத்தைக் கட்டிக்கொள்வர்
ஆண்களோ தோளின்மேல் வைத்துக்கொள்வர்
கால்கையில்லாப் பாவிக்கு இரங்காருண்டோ. நான் யார்?

–குடம்

1722. குரங்கும் இறங்கமுடியாத குழியின் உள்ளே
கும்மிப்பூண் உலக்கை குதித்துக் குதித்து ஆடுது.

–தயிர்ச்சட்டி, தயிர் மத்து

1723. குரல் கொடுப்பான் வழி கிடைக்கும். அவன் யார்?

–ஹாரன்

1724. குரல் கொடுப்பான் புகை விடுவான்
கூட்டமெல்லாம் கொண்டு சேர்ப்பான்.

–புகைவண்டி

1725. குருதியில் குளிப்பவன் - நம்
சுருதியைக் காப்பவன். அவன் யார்?

–இதயம்

1726. குலைகுலையா முந்தரிக்கா
பழுக்க வைத்துக் கொண்டுவா. அது என்ன?

–வாழைப்பழம்

1727. குலைகுலையாய்க் காய்க்கும், கமுகும் அல்ல
கொடிமரம்போல் நிற்கும், அது வாழையும் அல்ல.

–தென்னை

1728. குவளை தண்ணீர் குறைவது எதனால்?
குப்புசாமி குளறியது எதனால்?

–குடித்ததனால்

1729. குழந்தைகள் பத்துக்கும் குடுமியோ ஒன்று.

–பூண்டு

1730. குழந்தைகளுக்கு எந்தக்கை பலமான கை?

–அழுகை

1731. குழியில் விழுந்த குண்டனைத்
தூக்க முடியவில்லை.

–யானை

1732. குழியிலே மலரும் குச்சியிலே தொடுக்கும்
கும்பிப்போகும். அது என்ன?

–பணியாரம்

1733. குள்ள அக்கா கூடை கந்தை கட்டியிருப்பாள்.

–கொக்கு

1734. குள்ள அக்காள், வெள்ளை வெளிநிறத்தாள்,
கூடைக் கந்தை கட்டியிருப்பாள். அது என்ன?

–வாத்து

1735. குள்ளக் குள்ளப் பொண்ணு, குலுங்கி நலுங்கி நடந்தால்
கூடக் கூடப் போகும் கூறுங்கள் அந்தப் பெண் யார்?

–நிழல்

1736. குள்ளக்கோழிக்கு குடலுக்குள் சலங்கை. அது என்ன?

–வேர்க்கடலை

1737. குள்ளப்பெண் குலுங்கிநடந்தால்
கூடக்கூடப் போகவேணும். அது என்ன?

–துடைப்பம்

1738. குள்ளமான கோழிக்கு குடலுக்குள் சதங்கை.

–வேர்க்கடலை

1739. குளத்தங்கரைக்காரி, கொண்டைக்காரி,
அவள் கொண்டையில் சுற்றுப்பூத் தண்டக்காரி,
பச்சைப் பசுமேனிச் சட்டைக்காரி,
பூஜை புனஸ்காரக் கட்டுக்காரி.

–கோரைப்புல்

1740. குளத்தங்கரையில் தவமிருக்கிறார்
குறிவைத்துப் பார்த்திருக்கிறார்.

–கொக்கு

1741. குளத்தில் அம்புகள் பாய்கிறது.

–மழை

1742. குளத்திலே இல்லாத நீர் குடிக்க உதவாத நீர்
அளத்து நீர் போல் இருக்கும். அந்த நீர் எந்த நீர்?

–கண்ணீர்

1743. குளத்திலே குமரிப்பெண் குளிக்கின்றாள்
பார்த்த கண் பூத்தது பையனிடம் காசில்லை.

–மீன்

1744. குளத்துநிறைய இருக்கும் தண்ணீர்
குருவி குடிக்க முடியாத் தண்ணீர்.

–இளநீர்

1745. குளத்து மேட்டு வீட்டிலே கொடுத்த பசுமைத்
தட்டிலே கொட்டத் தண்ணீர் நிற்கலை.

—தாமரை

1746. குளம் குட்டைக்குளம்
பாம்பு ரெட்டைப்பாம்பு
குருவி மஞ்சள் குருவி
குளம் வத்திப் போச்சு
பாம்பு செத்துப் போச்சு
குருவி பறந்து போச்சு.
அது என்ன?

—விளக்கு

1747. குளம்படிச் சத்தக்காரன்,
போருக்குக் கெட்டிக்காரன். அது என்ன?

—குதிரை

1748. குளிக்கரைத்தாகி, கூடைப் பிள்ளைக்காரி
பால் கொடுக்காமலேயே
பிள்ளை வளர்ப்பதில்
படா அகங்காரி.

—கோழி

1749. குளிச்சுக் குளிச்சுக் குத்தவைக்கும்
கோமாளிப் பயல் பிள்ளை.
அது என்ன?

—போகணி

1750. குளிச்சு முழுகிக்
கொண்டையில் பூவச்சுக்
கொல்லையில் நிற்கும்போது
பயல் நக்கவல்ல
வாடி வதங்கி
வாசலில் கிடக்கும்போது
வருவான் பய நக்க. அது என்ன?

—எள்

1751. குளிப்பாட்ட இரண்டு மாடு
கூட்டிக்கொண்டு போனேன்
கறுப்பு மாடு ஒன்று,
வெள்ளைமாடு ஒன்று,
கறுப்புமாடு ஆற்றோட போய்விட்டது.

வெள்ளைமாடு வீட்டுக்கு வந்துவிட்டது.
அது என்ன?

–உளுந்து

1752. குளிர் இல்லாமல் கூதல் இல்லாமல்
குளிர் காய்பவர் யார்?

–தட்டான்

1753. குளிர வைப்பான் நனையவும் மாட்டான்.
அவன் யார்?

–மழை

1754. குளிரைப் போக்கி இதமளிப்பான்
கிட்ட நெருங்கினால் சுட்டுவிடுவான். அவன் யார்?

–நெருப்பு

1755. குளிரையும் தாங்குவான் வெப்பத்தையும் தாங்குவான்
அவரவர் விரும்பும் குளிரையோ வெப்பத்தையோ
அப்படியே திருப்பித் தருவான். அவன் யார்?

–தெர்மாஸ் பிளாஸ்க்

1756. குளுகுளுத்தது என்ன சிங்கி?
கொண்டை வைத்தது என்ன சிங்கி?
பட்டம் விட்டது என்ன சிங்கி?

–வாழைப்பழம், மாம்பழம், தோசை

1757. குற்றம் இல்லாமல் குடுமி பிடிக்கிறாள்.
அவள் யார்?

–சலவைத்தொழிலாளி

1758. குறி தப்பாத முள், அங்குமிங்கும் ஆடினாலும்
சேரும்போது அளவைக் கணிக்கும். அது என்ன?

–தராசு

1759. குறுக்கிலும் நெடுக்கிலுமாய்க் கோடுகள்.
அதை எதிர்காலம் என்பவர் பலர்.
அது என்ன?

–கை ரேகை

1760. குன்றின்மேல் இருக்கும் கோழையின் கூந்தல் அது.
வளைந்தாலும் நெளிந்தாலும் சீவுவாரும் இல்லை.
அதைச் சிணுக்கெடுப்பார் யாரும் இல்லை.

–பாம்பு

1761. குனிந்த கிழவிக்குக்
கூனெல்லாம் பல்லு.
அது என்ன?

–கருக்கரிவாள்

1762. குனிந்து பூ பூக்கும்,
நிமிர்ந்து காய் காய்க்கும்.
அது என்ன?

–எள்செடி

1763. கூட்டத்தாள் கூப்பிடவராள்
குடுமியற்றால் ஓர் கொண்டையாள் யார்?

–விடையில்லை

1764. கூட்டம் என்றால் கூட்டம் கோடிப்
பூக் கூட்டம் அவை பூத்துக் கிடக்கிற
தோட்டம். பூலோகத்தில் இல்லை.

–நட்சத்திரங்கள், வானம்

1765. கூட்டுக்குள்ளே குடியிருக்கும்
குருவி அல்ல
கொல்லவும் பாயும்
வேங்கை அல்ல. அது என்ன?

–அம்பு

1766. கூடத்தில் குப்பை என்றால்
ஓரத்தில் இருக்கமாட்டான். அவன் யார்?

–விளக்குமாறு

1767. கூடத்தூர் குளத்தில் குமரிப்பெண் குளிக்கிறாள்
பார்த்தகண் பூத்துவிட்டது பையன் கையில்
காசு இல்லை. அவள் யார்?

–மீன்

1768. கூடவே வரும் உதவி செய்யாது. அது என்ன?

–நிழல்

1769. கூடிக் குலவையிட, ஆடி அசைந்து வர,
தண்ணீர் மேலே சாமி சதுராட்டம் போடுது.
அது என்ன?

–தெப்பம்

1770. கூத்தனூர்க் குளத்திலே
குமரிப்பெண்கள் குளிக்கிறார்கள்
பார்த்த கண்ணு பூத்துப்போச்சு
பையன் கையில் காசு இல்லை.

–மீன்கள்

1771. கூதலும் பனியும் போனாலும் நிதம் குளிர்
காய்கிற அண்ணாச்சி எந்த அண்ணாச்சி?

–தட்டான்

1772. கூந்தல் பனையிலே குடுகுடு கறுப்பன்.

–பேன்

1773. கூர்முள் இரண்டிருக்கும், கருவேல் அல்ல
கூசாமல் மணி அடிக்கும், கோயில்மணி அல்ல
இரவிலும் தூங்கான் பகலிலும் தூங்கான்,
எமன் அல்ல,
சுவரினிலே தங்குவான், பல்லி அல்ல
துணிந்து பொழுதினை உரைத்திடுவான், சூரியன் அல்ல,
அவன் யார்?

–சுவர்கடிகாரம்

1774. கூரத்துச் செம்மைப்புறா
கூட்டிவைக்கும் பச்சைப்புறா
நான் வளர்க்கும் வெள்ளைப்புறா
எல்லாம் ஒரே கூட்டுப்புறா - அது என்ன?

–பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு

1775. கூழைக் கொதிக்க வைக்கும்
கும்பியைக் குளிர வைக்கும்
கூரையில் ஏறினால்
குடியைக் கெடுத்து நிற்கும் - அது என்ன?

– தீ

1776. கூனல் முதுகாலே கரிய பற்களாலே
வேர்ப்பலா பட்டாலும் வெடித்துத் துடிக்குமடி,

–கருக்கரிவாள்

1777. கூனற் கிழவனுக்கு குதிகால் வரை
பற்கள் - அது என்ன?

–கருக்கரிவாள்

1778. கெண்டைவிழி மாதுக்குக்
கொண்டைகளோ மூன்று.

–அம்பு

1779. கேடயமுள்ள வீரனுக்கு வாள் இல்லை. அது யார்?

–ஆமை

1780. கேணியைச் சுற்றிக் கிடக்கிறது
சவுக்கை மரம், அது என்ன?

–கண் புருவம்

1781. கேணியைச் சுற்றிப் புதர், அது என்ன?

–கண்ணும் புருவமும்

1782. கைக்கணக்கு வாத்தியார்
வைக்கணக்குக் கூத்தியார்

–படி, நாழி

1783. கைக்குள் அடங்குவான்
கண்ணான ஒளி தருவான். அவன் யார்?

–டார்ச்லைட்.

1784. கைக்குள் அடங்குவான் கண்ணைச்
சிமிட்டுவான். அவன் யார்?

–டார்ச்லைட்

1785. கைக்குள்ளே கரணம் போட்டுக் கிடக்கிறார்
கணக்குப்பிள்ளை - அது என்ன?

–பேனா

1786. கைகள் உருவாக்க கால்கள் அழிக்கும்
அது என்ன?

–கோலம்

1787. கைகளுண்டு கால்களில்லை
உடலுண்டு தலையில்லை
கையை விட்டுக் கழற்றினால்
அது சுருங்கிப் போகும் - அது என்ன?

–சட்டை

1788. கைப்பிடிக்குள் கறுப்பன் மழைக்கும்
இருப்பான். அவன் யார்?

–குடை

1789. கை போட்டுக் கறக்காத பால்
இரண்டு பால் கொண்டு வா

–அப்பால், இப்பால்

1790. கையிரண்டும் பெற்றிருப்பேன்,
கண்ணாடி போட்டிருப்பேன்,
மெய்யெல்லாம் என்னிடம் அறிவாய். நான் யார்?

–கடிகாரம்

1791. கையிரண்டையும் ஆடவைக்கும்
கந்தல் எல்லாம் கட்டி வைக்கும். அது என்ன?

–தையல் ஊசி

1792. கையில் இருந்தபடி
காலம் காட்டுவான். அவன் யார்?

–கைக்கடிகாரம்

1793. கையில் தவழும்
பையில் உறங்கும். அது என்ன?

–பணம்

1794. கையில் பந்தாடும்
கதிரவனுடன் வாதாடும்
கனலுக்கு இறையாகும்
கரிசாம்பல் பொடியாகும்.

–வரட்டி

1795. கையில்லாதான் கடித மெழுதினான்
பார்வையில்லான் படித்துப் பார்த்தான்
செவியில்லாதான் செவ்வையாய்க் கேட்டான்.

–தந்தியடிக்கும் கருவி

1796. கையில்லாமல் நீந்துவேன்
கொம்பிருந்தும் குத்தமாட்டேன் - நான் யார்?

–படகு

1797. கையிலே அடங்கும் பிள்ளை
கதைநூறு சொல்லும் பிள்ளை. அது என்ன?

–புத்தகம்

1798. கையிலே கணக்குப்போடும் கணக்குப்பிள்ளை.

–படி

1799. கையினால் பிடிபடாத கறுப்பு நிழல் கற்றை.

–புகை

1800. கையுண்டு தலையில்லை
நெஞ்சுண்டு மூச்சில்லை.

–சொக்காய்

1801. கையும் இல்லை காலும் இல்லை
கட்டப் பெண்டாட்டி
கை எடுக்கும் நேரம் எல்லாம்
காரியக்காரி. அவள் யார்?

–படி

1802. கையும் காலும் இல்லாதவன்,
முகட்டைத் தாண்டி மேலே போவான்.
அது யார்?

–புகை

1803. கையும் பட்டுக் கசங்கியிருந்ததுவே
வாயும் பட்டு வதங்கியிருந்ததுவே

முத்தமிட்டவர் யாரோ முத்திரையிட்டவர் யாரோ
கறையுமேனோ கன்னியவள் பட்டிலே. அது என்ன?

–கடிதம்

1804. கையைப் பிடித்தார்; காசு கேட்டார்.

–டாக்டர்

1805. கையோடு போராடி கடும் வெயிலில் சூதாடி
குப்பை மேட்டில் கூத்தாடி வெறும் சாம்பல்
ஆத்தாடி. அது என்ன?

–வரட்டி

1806. கைலாசம்பிள்ளை கிணற்றிலே
கயிறு அறுந்து அறுந்து விழுகிறது.

–மலம்

1807. கொக்கு நிற்க நிற்க
குளம் வற்ற வற்ற. அது என்ன?

–விளக்கு

1808. கொச்சி மஞ்சளுடன் குங்கும வர்ணமிட்ட
கொள்ளே, கால்பட்டுடுத்தி பட்டுக்குள்
வைரமணி மொட்டைப் பதுக்கியவள்
சந்தைக் கடைமடியில் தர்பார் நடத்தும்
சக்கரவர்த்தினி யார்?

–மாம்பழம்

1809. கொச்சி மிளகு கோயமுத்துார் பருத்தி
தஞ்சாவூர் வாழைக்காய்
மூன்றுக்கும் ஒரே காம்பு. அது என்ன?

–இலவம்பஞ்சு

1810. கொச்சியிலே இடி இடித்தால்
கும்பகோணத்தில் மழை பொழியும்.

–தந்தி

1811. கொட்டத்துப் பானையைக் கோமகனாலும்
எடுக்கமுடியாது. எடுப்பிக்க முடியாது.

–கிணறு

1812. கொட்டாம் பெட்டி கூடைப் பெட்டி
வாழ்நாளு பூராவும் வாயைத் திறக்காத பெட்டி.

–வயிறு

1813. கொட்டைக் காட்டு மாடும்
குயவன் காட்டு மாடும்

பருத்திக் காட்டு மாடும்
ஒரே துறையில் தண்ணீர் குடிக்கிறது. அவை யாவை?

–எண்ணெய், விளக்கு, திரி

1814. கொட்டை கடிக்கிற குப்பன் பிள்ளைக்கு
முதுகில் மூன்று கோடு யாரு போட்டது சூடு?

–அணில்

1815. கொட்டை முத்து கொண்டு வந்துகிட்டுச்
சுட்டுப் போட்டதில் சொட்டு நீரு பட்டதும்
முட்டும் புகையும் மூளுமே வெண்ணெய்
திரண்டு ஆகுமே!

–சுட்ட சிப்பியும், சுண்ணாம்பும்

1816. கொட்டையைத் தின்றுவிட்டு
நாட்டையைப் போட்டுவிடுவது. அது என்ன?

–சோளத்தட்டை

1817. கொண்டை அலங்காரி கூடுவுடல் சாய்ந்துவிட்டால்
தண்டை சலங்கை விடும் தலை கால் முகம் சுருங்கும்.
அவளைத் தொட்டாலே அவதிப்பட்டாரே!

–காய்ந்த மிளகாய்

1818. கொண்டையில் அடிவாங்கி
கோட்டையைப் பிளந்து
கோயில் சிலை வடிக்கும்
கோடிக்கலை படைக்கும். அது என்ன?

–உளி

1819. கொண்டையில் பூ உண்டு
எடுக்க நாதியில்லை
காலில் முள் உண்டு
எடுக்க ஆளில்லை. அது என்ன?

–சேவல்

1820. கொண்டையில் பூ வைத்தவன்
கூவிடுவான் காலைப் பொழுதில். அவன் யார்?

–சேவல்

1821. கொண்டையிலே பூவிருக்கும் கோழி அல்ல
குறுணிபால் தனைக்கறக்கும் பசுவும் அல்ல
அண்டையிலே வரவொட்டாள் வேசி அல்ல
அவரவர்கள் திருடியென்றே சொல்லுவாரே
அது என்ன?

–கள்ளி

1822. கொத்தரோ தச்சரோ கட்டாத கோபுரம்
சின்னதாயிருக்கும் சித்திரக் கோபுரம்.
அது என்ன?

–புற்று

1823. கொத்தன் கட்டாத அறைகள் அதில்
கொட்டிக் கிடக்குது பன்னீரு.

–தேன் கூடு

1824. கொத்துக்கே வழிபார்ப்பான் பசியாலன்று
குளிர்நீருக்கே இசைவான் தவசியன்று
புத்திரனாலே இறப்பான் இரண்யனன்று
போற்றுநர்க்குக் காசளிப்பான் குபேரனன்று
புகழுடனிக் கதைப்பய னைப் புகலுவாயே.

–வாழைமரம்

1825. கொத்துக் கொத்தாய் காய் காய்க்கும்
கொடி முந்திரியும் அல்ல
கொடியிலே பிறந்து வளர்ந்து
கடையிலே வந்து விற்கும். அது என்ன?

–மிளகு

1826. கொத்துக்கொத்து ஈச்சங்காய்
கோடாலி ஈச்சங்காய்
மதுரைக்குப் போனாலும்
வாடாத ஈச்சங்காய்

–பற்கள்

1827. கொத்துக் கொத்துப்பூ கோடாலிப்பூ
மதுரைக்குப் போனால் வாடாமல்வரும்.

–கம்மல்

1828. கொத்துக் கோலிக்காய், கொட்டைமுத்து
நெல்லிக்காய், நாட்டை நாம் மறந்தாலும்
அவை கோட்டையை என்றும் துறக்காது.

–பற்கள்

1829. கொத்துக் கொத்து மாம்பழம்
கோடாலி மாம்பழம்
மதுரைக்குப் போனாலும்
வாடாத மாம்பழம். என்ன பழம்?

–தண்டட்டி எனும் காதணி

1830. கொதி எண்ணெயில் குதித்து
கொஞ்ச நேரத்தில் பறப்பான். அவன் யார்?

–அப்பளம்

1831. கொதிக்கும் கிணற்றில் குதித்து
குண்டாகி வருவான். அவன் யார்?

–பூரி

1832. கொம்படா கொம்படா புளியங் கொம்படா
நின்று தாக்கடா உயிரைப் போக்கடா.

–துப்பாக்கி

1833. கொம்பில் உண்டு, கிளையில் இல்லை
உலகத்தில் உண்டு, தேசத்தில் இல்லை
அம்மாவில் உண்டு, அப்பாவில் இல்லை
பஸ்ஸில் உண்டு, ரெயிலில் இல்லை. அது என்ன?

–கொலம்பஸ்

1834. கொம்பில்லா மரம் கோணல் உள்ள மரம்
குற்றம் பல இருந்தாலும் குணமும் மணமும் கூட
கொஞ்சமும் மாறாத மரம்.

–கரும்பு

1835. கொம்பு உசந்திருக்கும் கொவ்வைப்பழம்
சிவந்திருக்கும் குயிலோ கறுத்திருக்கும்
குயில்குஞ்சு வெளுத்திருக்கும். இவை என்ன?

–அடுப்பு, தீ, கரிசாம்பல்

1836. கொம்புக்காளை இறங்கி வருது
பிடிக்கப்போனால் கொம்பைக் காணோம். அது என்ன?

–ஊரும் நத்தை

1837. கொம்புள்ள கடாவுக்கு குதிகாலில் வேகம்?
அது என்ன?

–சைக்கிள்

1838. கொமரியைப் புடிச்சா கத்தமாட்டேங்கிறா
கிழவியைப் புடிச்சா கத்தறா. அது என்ன?

–பச்சைமிளகாய், காய்ந்தமிளகாய்

1839. கொல்லைப்புறத்தில் ஒரு கத்தைக் கேட்டேளோ!
மெல்ல ஒரு மொட்டச்சி கிணற்றை
எட்டிப் பார்த்தவள் 'தொப்' பென்று
விழுந்தாலும் தொனியும் எதுவும் கேட்கலை!

–நிலா

1840. கொல்லைப்புறத்திலே குண்டாலம் மலர்ந்து
கிடக்குது அதை அசைப்பாரும் இல்லை
அகற்றுவாரும் இல்லை.

–கிணறு

1841. கொல்லையில் திட்டி வாசல், கூப்பிடு தூரத்திற்குள்
கூடத்தில் செட்டி காவல், செட்டிக்குப் பட்டி
காவல், இத்தனைபேர் கண்ணைக் குத்தி எகிறி
நீ வந்த மாயம் என்னடி பேரைச் சொல்லு!

–பெருச்சாளி

1842. கொல்லையிலே சோறு ஆக்கி வைத்தேன்
காக்காய் தின்னவில்லை கழுகும் தின்னவில்லை.

–சுண்ணாம்பு

1843. கொள்ளுக் கொறிப்பதும்
கோபுரம் கட்டுவதும் எதனால்?

–கல்பார்த்து

1844. கொள்ளை அழகோடு பூப்பூக்கும்
கும்பி கொதிக்கவே காய் காய்க்கும்.

–மிளகாய்

1845. கொளிஞ்சிக் காட்டில் கொட்டாப்புளி

–முயல்

1846. கொளுத்தியபின் கோடிக் கும்பிடு. அது என்ன

–கற்பூரம்

1847. கோட்டை என்றால் கோட்டை,
அஞ்சு கல்லுக் கோட்டை, ஆகாசக் கோட்டை
அதற்கு ஆயிரம் கோடி ஓட்டை
ஓட்டைச் சட்டியில் ஒரு வண்டித் தண்ணீராம்
ஊற்றியாச்சு உண்மையாக ஒரு சொட்டு ஒழுகவில்லை!

–மனிதன், உடல்

1848. கோட்டையிலே குமுதவல்லி செட்டி
அவன் பெண்டாட்டி எருமைக்கடா மட்டி
அவள் பிள்ளை நவரத்தனக்கட்டி. அது என்ன?

–பலாப்பழம்

1849. கோட்டையிலே மணலைக்கொட்டி
குடம்பால் தனியே கறந்தால்
மிஞ்சுவது கருப்பாகத்தான். அது என்ன?

–பிண்ணாக்கு

1850. கோட்டையைக் கட்டினார் குப்பாம்பிள்ளை
தலைவாசல் இருக்குது புறவாசல் காணோம்.

–எலிப்பொறி

1851. கோட்டையைச் சுற்றிக் கொடுக்காப்புளி
மரம் குலுக்கினால் கலகலச் சத்தம்.

–வளையல்

1852. கோட்டையைச் சுற்றி மதில்சுவர்
உள்ளே மறைந்திருக்கான் வேட்டைக்காரன்.
அவன் யார்?

–நாக்கு

1853. கோடி கோடி கோலிக்குண்டு
குறுக்கும் நெடுக்குமாகக் கிடக்குது.
விடிய விடிய முழிக்குது விடிஞ்சதும்
எங்கே ஒளிக்குது.

–நட்சத்திரம்

1854. கோடி கோடி வெள்ளிப்பணம்
ஓடிவிடுது சாலைப்பயணம். அது என்ன?

–நட்சத்திரம்

1855. கோடு கிழிப்பது தெரியும். ஆனால்
கோடு இருக்காது. அவன் யார்?

–மின்னல்

1856. கோடையிலே ஆடி வரும்
வாடையில் முடங்கி விடும்.

–மின்விசிறி

1857. கோணக் கோணக் கோட்டைகளாம்
கோட்டைக்குள்ளே கோடிமுத்தாம்
முத்துக்குள்ளே ராஜாத்தி
முணுமுணுத்து அழுவாளாம். அது என்ன?

–ஆரஞ்சுப்பழம்

1858. கோணக் கோணப் புளியங்காய்!
எங்க நாட்டுக்கும் வருது. உங்கநாட்டுக்கும்
போகுது. அது என்ன?

–சாலை

1859. கோணக் கோணப் புளியங்காய்
கொங்கு நாட்டுப் புளியங்காய்
உங்கள் நாட்டிலே யிருந்து
எங்கள் நாட்டிற்கு வருகிறது.

–சாலை

1860. கோணக் கோண மூங்கில்
கொங்கு நாட்டு மூங்கில்
உங்கள் நாட்டிலிருந்து
எங்கள் நாட்டிற்கு வரும்.

–புகைவண்டிப்பாதை

1861. கோண மானத் தடி
கொங்கு நாட்டுத் தடி
எங்கள் நாட்டிலிருந்து
உங்களூர்க்கு வருவது.

–பாதை

1862. கோணல் பலவானாலும் குணமும் ருசியும்
மாறாது. அது என்ன?

–கரும்பு

1863. கோணல் மாணல் ஆனாலும்
குலத்தில் பெருமை குன்றாது.

–தம்ளர்

1864. கோணல் மாணலாய்க் கொடி இருக்கும்,
தாறு மாறாய் இலை இருக்கும், மஞ்சள் பூ
பூத்துச் சொறி சொறியாய்க் காய் காய்க்கும்.
அது எது?

–பாகற்காய்

1865. கோணி ஏகிக் கேணியில் விழுந்தது.
அது என்ன?

–ஏற்றுத் தோப்பரை

1866. கோத்த முத்துக் கோக்கலாம்
கோபுரங்கள் கட்டலாம் ஆனால்
அறுந்த முத்தைக் கோக்கமுடியாது.
அது என்ன?

–கம்பு

1867. கோயம்புத்தூர் லேடி
கொள்ளேசம் பளத்துக்காரி
பால் இல்லாமல் குழந்தை வளர்த்துற
பலே கெட்டிக்காரி.

–கோழி

1868. கோயில் குளம் இல்லாமல்
சொட்டி திரிகிறான் ஒருவன்.
அவன் யார்?

–குயவன்

1869. கோயிலுக்குப் போனாலும் எங்க தம்பி
தீர்த்தம் விட்டானாம் தங்கத்தம்பி.

–தேங்காய்

1870. கோயிலுக்குள் இருக்கிற சிவப்புக்குருவி,
கொண்டை ஆட்டிப் பேசும் அது - சின்னக்குருவி,
வந்தவரை வரவேற்கும் வண்ணக்குருவி,
வாசல்படி தாண்டாத சிட்டுக்குருவி.

–நாக்கு

1871. கோயிலைச் சுற்றி கறுப்பு
கோயிலுக்குள்ளே வெளுப்பு.

–சோற்றுப்பானை

1872. கோர்த்தமுத்துங் கோர்க்கலாம் கோபுரமும்
கட்டலாம்
குலைந்தமுத்துக் கோர்க்க யாராலும் முடியாது.
அது என்ன?

–கம்பங்கதிர்

1873. கோரை ஆத்தா மகள் கொண்டைக்காரி
கொண்டைமேல் பூச்சூடி ஆடக்கண்டேன்
பார்த்தாலும் அவள் மேனி பச்சைமேனி
வகுத்தாலும் அவள்வயிறு பாலுபோல.

–துடப்பம்புல்லுச்செடி

1874. கோல் அளவு பொண்ணுக்கு குடத்தளவு சொருக்கு.

–சோளக்கதிர்

1875. கோவிலுக்குப்போய் கும்பிடு போட்டேன்.
பூவில்லாத இலையைப் போற்றி வைத்தேன்.
பழுக்காத காயைப் பணிந்து வைத்தேன்.
விதையில்லா கனியை வேண்டி வைத்தேன்.
அது என்ன?

–வெற்றிலை, தேங்காய், வாழைப்பழம்.

1876. கோழிக் குஞ்சு பொறிப்பது எப்படி?
தாழி நெய்யை எடுப்பது எப்படி?

–முட்டையிட்டு

1877. கோழி மேயுது குடல் வேகுது. அது என்ன?

–முட்டை

1878. கோழியைக் கண்டவள் ஒருத்தி.
கோழியை வெந்தது இரண்டு.

கோழிக்குத் துணைப்பொருள் மூன்று.
சொல்லுங்கள் இவை என்ன என்று?

–அரிசியைப் பார்த்தவள் பெண்
அதைச் சமைத்தது இரண்டுகைகள்
சோற்றுக்குத் துணைப்பொருள்
பருப்பு, குழம்பு, கூட்டு.

1879. சக்கடா வண்டி ஒடிந்து கிடக்குது ஓட்டிட
ஆள் இல்லை.
மல்லிகைப்பூச் சிந்திக்கிடக்கு தொடுக்க
ஆள் இல்லை.
இராசாமகள் கத்திக்கிட்டுப் போகிறாள்.
கூப்பிட நாதியில்லை. அது என்ன?

–வானம், நட்சத்திரம், நிலா.

1880. சகட விகட கர்ணம்
சங்கிலி நாம கர்ணம்
நாலு மூலை கர்ணம்
நடுவிலே கும்பகர்ணம். அது என்ன?

–தொட்டில்

1881. 1. சகை நகரின் பெயர்
2. அனுமான் பெயர்
3. பார்வதிதேவியின் பெயர்
4. கொண்டவளின் பெயர்
5. ஒரு அவயவப் பெயர்
6. ஒரு இராகத்தின் பெயர். அவை யாவை?

–மிதிலை, மாருதி, பவானி,
மனைவி, மூக்கு, முகாரி,

1882. சங்கம் பொதைக்கடியிலே சவ்வாரி பொம்பளை
ஒரு படி பணம் கொடுத்தாக்கூட
வெளியே வரமாட்டேங்கிறா. அது என்ன?

–மூளை

1883. சங்கரன் கோயில் டப்பா
தாயும் மகளும் தேய்ப்பா.

–அம்மி, குழவி

1884. சங்கிலி சரப்பளி போட்டுக்கொண்டு
எங்கடி போனாய் இராமக்கா?
நீ தொட்டுக் கொண்டாய்
நான் பட்டுக் கொண்டேன்
நீ காதத்திலே நான் தூரத்திலே. அது என்ன?

–தேள்

1885. சங்கீத இசை இசைந்து வரும்
சனக்கூட்டம் கூடி வரும்
கொட்டிமேளம் கொட்டிவரும்
குதித்துக் குதித்து ஆடிவரும்.

–பொய்க்கால்குதிரை

1886. சங்கீதம் பாடும் சல்லாபம் செய்யும்
சமயத்தில் இரத்தம் குடிக்கும். அது என்ன?

–கொசு

1887. சங்குமுத்தும் நீர்முத்தும்
சண்டைக்கு நிற்கையிலே
மண்கலத்தார் வந்து
மறிச்சுக்கிட்டு நிற்கிறார். அது என்ன?

–சோறுசமைத்தல்

1888. சஞ்சல சல சல
சலநீர் விழ விழ
விழுந்தால் வெழுக்கும்
வெயில்பட்டால் சிவக்கும்
வறுத்தால் மணக்கும்
வாயில் போட்டால் தித்திக்கும். அது என்ன?

–இலுப்பைப்பூ

1889. சட்டிக்குள்ளே மிதக்குது குட்டிப் பனிமலை.

–வெண்ணெய்

1890. சட்டி களிச்சோறு, சடலம் எல்லாம் நாரு
கட்டாமல் கொள்ளாமல் - இவளை
பெட்டிக்குள் போட்டு மறைத்து வைத்திருக்கிறார்
மகேசன் ஏனோ?

–புளி

1891. சட்டை அவிழ்க்க அவிழ்க்க
மறுசட்டை வந்துகொண்டே இருக்கும். அது என்ன?

–வெங்காயம்

1892. சட்டைப்பை நிறைய சல்லிக்காசு. அது என்ன?

–மிளகாய்வற்றல்

1893. சட்டை போடாமலேயே சட்டையைக்
கழற்றுவார். அவர் யார்?

–பாம்பு

1894. சட்டையைக் கழற்றியதும்
சடக்கென்று உள்ளேவிழும்.

–வாழைப்பழம்

1895. சட்டையைக் கழட்டினான்
கிணற்றுக்குள் விழுந்தான்.

–பழம்

1896. சட்டையை விடுக்கும் சைன்யத்தை ஒடுக்கும்.

–பாம்பு

1897. சடசட சட்டைப்பாறை எமன் தொடுத்த பாறை
சட்டைப்பாறைக்கும் மேலே குண்டுப்பாறை
குண்டுப்பாறைக்கும் மேலே கோவரப்பூடு
கோவரப்பூட்டுக்குள்ளே குதிரக்குட்டி. அது என்ன?

–ஈறு, நெஞ்சு, தலை, மயிர், பேன்

1898. சடசட சட்டப்பாறை
சங்கிலி தொடுத்த பாறை
எமன் தொடுத்த பாறை
எவராலும் எடுத்து நிறுத்தமுடியாது. அது என்ன?

–நிழல்

1899. சடசட மாங்காய் சங்கிலிரோடு
விழுந்தால் கறுப்பு தின்றால் தித்திப்பு. அது என்ன?

–நாவற்பழம்

1900. சண்டை சச்சரவு இல்லாமல்
குடுமி பிடிப்பவன் யார்?

–நாவிதர்

1901. சத்தம் உண்டு கலகம் இல்லை
அடி உண்டு காயம் இல்லை
பூ உண்டு மணம் இல்லை
முள் உண்டு வேலி இல்லை. அது என்ன?

–சேவல்

1902. சதுரங்கப்பட்டணம் அதற்கு நாலு வாசல்
வாசலுக்கு வாசல் நாலு பேர் நர்த்தகிகள்

ஆகப் பதினாறு பெண்களையும் ஆட்டிப்
படைக்கிறவர்கள் இரட்டைப் பிறப்பு இராஜாக்கள்
இரண்டுபேர் தான். அனுபவிக்கப் போகிறவர்கள்
ஊராளப்பட்டவங்க.

–சொக்கட்டான், தாயக்கட்டை

1903. சந்தனம் புனுகுபோல் விதித்த கதை சொல்லவா
தகப்பனார் ஓடிவந்து அடித்த கதை சொல்லவா
செங்காடு தீப்பட்டு வெந்த கதை சொல்லவா
தேசமெங்கும் ஒருபுறமாய் மாண்ட கதை சொல்லவா.

–பானைசட்டிகள்

1904. சந்தனம் புனுகுபோல் பிசைந்தகதை சொல்லவா
தகப்பனா ரோடிவந்து அடித்த கதை சொல்லவா
செங்காடு தீப்பட்டு வெந்தகதை சொல்லவா
தேசமெங்கும் ஒருபுறமாய் மாண்டகதை சொல்லவா.

–சட்டிப்பானை

1905. சந்தனமரத்தின் மீது சௌகர்யமான மேடை
சாளரங்கள் பல உண்டு, அது சத்திரமும் அல்ல.
காவல் உண்டு, வீரர் உண்டு, காதல் ராணி
கொலுவும் உண்டு, கோட்டை கொத்தளமும் அல்ல.
பின் என்ன அது?

–தேன்கூடு, ராணித்தேனீ, உழைப்புத்தேனீக்கள்.

1906. சந்திரனே சூரியனே மாமா
மந்திரிமகள் மாண்டு கிடக்கிறாள்
அவள் கிடக்கிறாள் அறுத்துக்கட்டற சாதி
கோட்டைக்குள்ளே புகுந்தால்
குத்துப்பட்டு சாவாள். அது என்ன?

–நெல்

1907. சந்திலும் பொந்திலும் பாய்ந்து வருவார்
இடுப்பளவு தண்ணீரில்கூட நடந்து வருவார்
பட்டினி இருந்தோரைப் பரிவுடன் விசாரிப்பார்
விட்டால் ஊட்டியும் விடுவார். எப்போதும் இல்லை
இப்போது அப்படி. அவர் யார்?

–வேட்பாளர்

1908. சந்துக்குள் இருந்து சதிராடுவான்
சண்டைக்கும் சரி; சமாதானத்துக்கும் சரி...
இவன் யார்?

–நாக்கு

1909. சந்தை அரங்கூடே சந்தனத்து நிறத்தோட
ஒட்டுதோல் சிரங்கோடே உட்கார்ந்து இருந்தாளே
ஒருத்தி.

–மாங்கொட்டை

1910. சந்தையிலே கண்டேன்
கண்டதும் கொண்டேன்
கொண்டதும் பிளந்தேன்
பிளந்ததும் சிரித்தான். அவன் யார்?

–தேங்காய்

1911. சப்பட்டைக் கல்லைச் சுற்றி
ஐந்து அவரைக்காய். அது என்ன?

–கைவிரல்கள்

1912. சப்புள்வாளா துப்புள்வாளா. அது என்ன?

–முருங்கைக்காய்

1913. சப்தம் செய்யும் மரம்
சாய்ந்து வளரும் மரம்
கோபம் கொள்ளும் மரம்
கொண்டால் எரியும் மரம்.

–மூங்கில்மரம்

1914. சயனத்தில் இருப்பான் மாலோன் அல்ல.
சட்டை கழற்றுவான் சர்ப்பமும் அல்ல.
தலைக்கும் உயரம் என்பார் தலைவனும் அல்ல.

–தலையணை

1915. சர் சர் கிர் கிர் சாலையிலே போகிறான்.

–செருப்பு

1916. சரடு சேலைக்காரி
சண்டையில்லாமலே
கண்ணீரை வரவழைப்பாள். அவள் யார்?

–வெங்காயம்

1917. சரியாக வைத்தால் சரியாக எழுப்பும்.
அது என்ன?

–அலாரம்

1918. சருகு தின்பான் சவரி தின்பான்
சமையல் வேலையும் சரியாய்ச் செய்வான்
தண்ணீரைக் கண்டால் தவித்து நிற்பான்.

–நெருப்பு

1919. சருவும் சண்டும் சாப்பிடுமாம் எங்கள்
மயிலைக்காளை நீரைக் கண்டால்
செத்துக் கிடக்குமாம் எங்கள்
மயிலைக்காளை. அது என்ன?

–நெருப்பு

1920. சல்லடை முள்ளை எடுத்துக் கொள்ளிடம் கட்டி
மீதிமுள்ளை எடுத்துப் போட்டுக்கொள்ளலாம்.
அது என்ன?

–புடவை

1921. சலங்கை ஒலிக்கச் சதுராடும் மயிலுக்கு
ஒருபுறத்தில் ஏழுமுத்து ஒட்டிச்செய்த தங்கவடம்
மறுபுறத்தில் ஏழுகல்லு மாணிக்கச் சரடு
வடத்தோடே சரத்தோடே வட்டாடும் முத்துமணி
வார்த்தை ஆடிக்கொள்ளாமல் வைத்தாடிப்
பாருங்கள், மகிழ்வாய் போகும் நேரம் இனி.

–பல்லாங்குழி

1922. சலங்கை கட்டாத சதுக்காரி
'ஜல் ஜல்' என்று ஆடுகிறாள்.

–கைத்தறி

1923. சலசல என்குதாம் ஒரு குருவி
சாலாக்குப் போடுதாம் ஒரு குருவி
குத்தி எடுக்குதாம் ஒரு குருவி
கொண்டோடுதாம் ஒரு குருவி. அது என்ன?

–வடை

1924. சலசல என்னுமாம் ஒரு குருவி
சதுரப் பாயுமாம் ஒரு குருவி
மக்கட்டுக் கட்டுமாம் ஒரு குருவி
இராஜா மடிமேல் இருக்குமாம் ஒரு குருவி.
அவை யாவை?

–நெய், பொரி, தலைப்பாகை, எலுமிச்சம்பழம்.

1925. சலசலப்பான் சண்டைக்கு நிற்பான்
அவன் கிடக்கிறான் பொந்துக்குள்ளே. அவன் யார்?

–பாம்பு

1926. சலசல மரத்திலே சந்தனப் பொத்தியிலே
வெத்திலை மடிப்பிலே பத்தினி வவுத்திலே
பாலகன் பிறந்தான்.

–வாழைப்பழம்

1927. சலசலவென்று சத்தம் போடும்
பேசமட்டும் வராது.

–காய்ந்த இலைகள்

1928. சலசலவென ஓசை தரும்
சங்கீத இசையும் இசைந்து வரும்
கொட்டுமேளம் கொட்டிவரும்
குதித்துக் குதித்து ஆடிவரும். அது என்ன?

–முறுக்கு

1929. சலசலன்னு சந்திக்குப் போவா
அவ கிடப்பா பொந்துக்குள்ளே.

–நாக்கு

1930. சலசலா என்று வருகிறவரே
நானோ சாகாமல் சாகிறேன்
நீ வந்தால் மாண்டு போவாய்
உடையவன் காத்திருக்கிறான். நான் யார்?

– தூண்டிலில் மாட்டிக்கொண்ட மீன்

1931. சலவையில் பாராத வெண்மை
சந்திரனும் தொடாத தண்ணீர்
சிற்பிகள் செதுக்காத கண்கள்
சீப்புகள் அகப்படா சிக்கல் சிலும்புகள்.

–தேங்காய்

1932. சலுக்குப் புலுக்குச் சாட்டையில்லாக் குதிரை
ஜலத்தைக் கண்டதும் நின்றிடும் சப்பாணிக்குதிரை.

–செருப்பு

1933. சள்ளு வள்ளு நாய் குறைக்கும்
சாத்தப் பாடியான் தோப்பிலே
முட்டையிடும் குஞ்சு பொரிக்கும்
மூங்கிலடியான் தோப்பிலே. அது என்ன?

–தயிர்கடைதல்

1934. சளசளங்குமாம் சண்டைக்குப் போகுமாம்
வந்து கிடக்குமாம் பொந்துக்குள்ளே.

–நாக்கு

1935. சளிமூக்குக்காரன் சந்தைக்குப் போகிறான்.

–நுங்கு

1936. சன்னல் பின்னல் கயறு
சாதியில்லாக் கயறு

எண்ணைப் படாத கயறு
என்ன கயறு?

–பாம்பு

1937. சாக்கடைக் குதிரை சண்டப் பிரசண்டத்திடம்
கன்னத்தில் கண்ணுள்ள காவோலை சொல்லிச்சாம்
இரண்டு கால் சிவப்பி இறகுக் குதிரை இன்றிரவு
இறக்கும் என்று. என்ன இதெல்லாம்?

–பெருச்சாளி, தவளை, கோழி

1938. சாட்டையால் அடித்தது சத்தமிட்டு ஓடியது
அழுதபடி ஆடியது. அது என்ன?

–மின்னல், இடி

1939. சாட்டையால் உடலை மறைத்து
மேட்டினில் வீசிவிட்டால்
வாயால் மண்ணைக் கவ்வி
வகையாய்ச் சுழன்றிடுவான்.
அவன் யார்?

–பம்பரம்

1940. சாடி மேலே குரங்கு. அது என்ன?

–முந்திரிக்கொட்டை

1941. சாண் அளவு பிள்ளைக்குச்
சடலமெல்லாம் சொருக்கு.

–சோளக்கதிர்

1942. சாண் உயரப் பூனை
வைத்ததெல்லாம் சுமக்கும்.
அது என்ன?

–அடுப்பு

1943. சாண் உயரப் பையன்
வைத்ததெல்லாம் சுமப்பான் .
அவன் யார்?

–அடுப்பு

1944. சாண் கயிற்றுக்குள்ளே சித்திரச் சிமிழுக்குள்ளே
ரத்தினங் கண்டெடுத்தேன். அது என்ன?

–கற்பத்தினின்று பிரசவிக்கும் குழந்தை

1945. சாண் குழியிலே மானப் பழம். அது என்ன?

–நெருப்பு

1946. சாண் சாண் மரத்திலே
சாண் குருவி தொங்குது
கிள்ளி வாயில் போட்டால்
திக்கு முக்காலாடுது. அது என்ன?

–மிளகாய்

1947. சாத்திய கதவிருக்க, ஏற்றிய விளக்கிருக்க
இரவில் வந்தது யார்?
இரத்தத்தைக் குடித்தது யார்?

–கொசு

1948. சாந்து பூசின கோவிலுக்குள்
பூந்து புறப்பட வழியில்லை. அது என்ன?

–முட்டை

1949. சாம்பலாண்டி ஓமம் பண்ணுகிறான். அவன் யார்?

–பூசணிக்காய்

1950. சாம்பலாண்டியும் சந்தைக்கு வந்தான்
உச்சிக்குடும்பியும் சந்தைக்கு வந்தான்
ஒரு முதுகெலும்பனும் சந்தைக்கு வந்தான்.
அவை என்ன?

–பூசணிக்காய், தேங்காய், வாழைஇலை.

1951. சாய்ந்த மலை ஓரத்திலே
இருவர் நெருங்கியுள்ளார், ஒருவரோடு ஒருவர்
தொடுவதும் இல்லை, பேசுவதும் இல்லை.
அது என்ன?

–கண்கள்

1952. சாயங்கால நேரத்திலே
சமுத்திரக்கரை ஓரத்திலே
மாயமான கம்பு ஒன்று
மனிதன்போல் பேசுது.

–ரேடியோ

1953. சாலையிலே போகும் மரம்
சமுத்திரக் கரை ஓரத்திலே
மாயமான கம்பு ஒன்று
மனிதன் போல் பேசுவது. அது என்ன?

–பல்லக்கு

1954. சாலையிலே போகும் மரம்
தனஞ்செயன் ஏறும் மரம்

இருவாட்சி பூக்கும் மரம்
இருவர் கொண்டு போகும் மரம். என்ன மரம்?

–பல்லக்கு

1955. சாலையிலே வச்சமரம், சர்க்காரின்
சொந்த மரம். மேலே கீழே பார்த்தால்
இலையும் காணோம் தழையும் காணோம்.

–டெலிபோன் கம்பம்

1956. சாவடிக்குள்ளே ஒரு சப்பட்டைக் கல்.
அது என்ன?

–நாக்கு

1957. சிக்கல் இல்லாத கூந்தல்
சீப்புத் தேவையற்ற கூந்தல்

–தறி

1958. சிகப்பு மொச்சைக் கொட்டை
பகட்டும் பட்டுச்சட்டை. அது என்ன?

–பட்டுப்பூச்சி

1959. சிங்காரக் குதிரைமேல் ஏறமாட்டேன்
விலையில்லா மாணிக்கத்தை மதிக்கமாட்டேன்
ஆகாசப்புளியங்கொட்டையை எண்ணமாட்டேன்
எங்கள் அப்பா சோமனை மதிக்கமாட்டேன்.
நான் யார்?

–புலி, நெருப்பு, விண்மீன், மேகம்.

1960. சிங்காரப் பூப்பூத்து
வெங்காரக் காய் காய்த்துத்
தொங்காத காய் என்ன காய்?

–எள்ளுக்காய்

1961. சிங்காரப் பொட்டழகி சினிமாக் கட்டழகி
கண்ணைச் சிமிட்டுகிறாள் கண்மணி என் கட்டழகி
அது என்ன?

–விண்மீன்

1962. சிங்கார மண்டபத்தில் சங்கீதக் கச்சேரி
அங்கே போனால் அடியும் உதையும். அது என்ன?

–தேன்கூடு

1963. சித்திரப்பின்னல் கோட்டைக்குள்ளே
போக வழியுண்டு வர வழியில்லை. அது என்ன?

–எலிப்பொறி

1964. சித்திர மண்டபத்தில் சிங்காரி நடனம்
என்றனர். சென்றேன் அங்கே, எனக்கு
விழுந்தது அடியும் உதையும்.

–தேனீ, தேன்கூடு

1965. சித்திரையில் சிறுபிள்ளை
வைகாசியில் வளரும்பிள்ளை
ஆனியில் அழகுப்பிள்ளை
ஆடியில் விழும்பிள்ளை. அது என்ன?

–பனம்பழம்

1966. சித்தூர்ச் சிறுமணலிலே
காய்க்கும் கத்தரிக்காய்
கூட்டிப்பார்த்தால்
கொப்புக்கு முப்பது காய். அது என்ன?

–காப்பிச்செடி

1967. சித்தெறும்பு முட்டையிடும் சிவலோகந்தண்டி
அதுபோட்ட அலங்காரம் அழகுமலைத்தண்டி.
அது என்ன?

–கழுத்துரு

1968. சித்ரகூட மலைக்கூடத்தில் விருந்து நடக்குதாம்
சேவகமோ வந்த பேரை அடித்து மடக்குதாம்.

–தேன்கூடு

1969. சிப்பி சிப்பி மூடியிருக்கும்
சிரித்த கொண்டையும் போட்டிருக்கும்
அரைத்த மஞ்சள் பூசியிருக்கும்
அதன்மேலே கல் இழைத்திருக்கும். அது என்ன?

–மாதுளம்பழம்

1970. சிமிழியிலே தண்ணீர்; மேலே தனிக்கொடி;
கொடிமேலே சூரியன்....அது என்ன?

–விளக்கு

1971. சிமிழுக்குள் இருக்குது சிரிப்புமுத்து.

–மாதுளம்பழம்

1972. சிமிழுஞ் சிமிழுஞ் சேர்ந்தாற்போல்
செல்வியர் கொண்டை முடித்தாற்போல்
உமிழும் முத்துக் கோத்தாற்போல்
உடம்பில் மஞ்சள் பூசினாற்போல். அது என்ன?

–மாதுளம்பழம்

1973. சிரசிலே பூக்கும் பூ, சிலம்புக் கம்பிலே
சிரிக்கும் பூ, சிறிது கடித்துச் சுவைத்தாலும்
தித்திக்கும் தேன்பூ, சிங்காரப் பெண்டிர்
சிரசில் சூடாமல் வாயில் போடும்பூ என்னபூ?

–கரும்பு

1974. சிரம் இல்லாதவள் சிந்தை இல்லாதவள்
கரம் இல்லாதவள் கடுதாசி போட்டாள்.
கண்ணில்லாதவள் கண்டாள், கண்டு
கடுதாசி படித்துவிட்டு
கொண்டு இதைக் கொடுத்தவன் நொண்டி என்றால்
நம்புவீர்களா?

–தந்திக்கருவி

1975. சிரிக்காமல் கிடப்பான் காட்டுக்குள்
சிரித்தபின் வருவான் வீட்டுக்குள். அவன் யார்?

–பருத்திக்கொட்டை

1976. சிரித்தால் சிரித்து அழுதால் அழுவான்?
அவன் யார்?

–கண்ணாடி

1977. சிரித்தால் பல்லைப் பிடுங்குவார்கள். அது என்ன?

–முல்லை

1978. சில்லாடை தண்ணியிலே வெள்ளாடு மேயுது.
அது என்ன?

– உள்ளனான்குருகு என்னும் பறவை

1979. சிலுசிலுக்கிற சட்டி, அதில் சிரிக்கும் சிங்காரக்குட்டி,
குலு குலு என்று குலுங்கவே நலுங்கு உருட்டிடும் குட்டி,
அதன் நாக்கைத் தொட்டுப் பார்த்தால் நழுவுது,
வழுக்குது, கொளகொள வெள்ளைப் பனித்துளி பளபள!

–தயிர்மத்து, வெண்ணெய் துளிகள்

1980. சிலுசிலுங்குது ஒரு குருவி
சிதறிப்பாயுது ஒரு குருவி
ராசா மடியிலே இருக்குது ஒரு குருவி
மக்கட்டுக் கட்டுது ஒரு குருவி. அது என்ன?

–பணியாரம், பொரி, எலுமிச்சம்பழம், டர்பன்.

1981. சிலுசிலுத்த தண்ணீரில்
செம்மறியாடு மேயிது. அது என்ன?

–எண்ணெய், பலகாரம்

1982. சிலுப்பாச் சிலுப்புவா சிங்காரி
சிரிப்பாய்த் தெரிவாள் ஆங்காரி.
கண்டபடி ஆடுவாள் கதவிடுக்கிற்கே ஓடுவாள்.

–விளக்குமாறு

1983. சிவப்புக்கல் மாணிக்கம் சிக்கியதோ முன்சிறையில்.

–இலந்தைப்பழம்

1984. சிவப்புச் சட்டிக்குக் கருப்புமூடி. அது என்ன?

–குன்றிமணி

1985. சிவப்புச் சட்டைக்காரன்.
சேவகத்தில் கெட்டிக்காரன். அவன் யார்?

–உலர்ந்த மிளகாய்

1986. சிவப்புச் சிப்பாய்க்குக் கறுப்புக் குல்லா.

–குன்றிமணி

1987. சிவப்புச் சட்டைக்காரன் சமையலுக்குக் கெட்டிக்காரன்.
அவன் யார்?

–மிளகாய்

1988. சிவப்பு சிங்காரி சீண்டினால் அழவைப்பாள்.
அவள் யார்?

–வெங்காயம்

1989. சிவப்பு நிறக் காளை
நீருக்குள் பதுங்கும். அது என்ன?

–தீ

1990. சிவப்பு நெத்துக்குள் முத்து மஞ்சள்.

–மிளகாய் வற்றல்

1991. சிவப்புப் பட்டில் சிரிச்சு வந்தவன்
முகப்பு ஏறியதும் முள்ளாய்க் குத்துவான்
திரும்பும்போது ஏனோ திசையெல்லாம்
சிந்துவான் ரத்தம்?

–சூரியன்

1992. சிவப்புப் பட்டுப்பைக்குள்
சிக்கியிருப்பது பொன்காசு.

–மிளகாய்வற்றல்

1993. சிவப்புப்பைக்குள்
சில்லறை கொட்டிக் கிடக்குது. அது என்ன?

–மிளகாய்

1994. சிவப்பு மூக்குத்திக்கு சிரசிலே மறு.

–குன்றிமணி

1995. சிவப்பு மொச்சைக்கொட்டை
பகட்டும் பட்டுச் சட்டை.

–பட்டுப்பூச்சி

1996. சிவப்புரோஜா மலர்ந்தால்
முல்லைப்பூக்கள் தெரியும். அது என்ன?

–உதடு, பற்கள்

1997. சிவப்போ கறுப்போ தருவதெல்லாம் வெள்ளை.
அது என்ன?

–கோழி/முட்டை

1998. சிற்றா நல்லூர் ஏரியிலே சில
குமரிப்பெண்கள் குளிக்கிறார்கள்
பார்த்த கண் பூத்துப் போச்சு
பையன் கையில் துட்டு இல்லை. அது என்ன?

–மீன்

1999. சிறகடித்துப் பறக்கும் அது சிட்டுக்குருவி அல்ல.
அந்தி சாய்ந்துவிட்டதும் ஆகாரத்திற்கு அலையும்
ஆந்தையும் அல்ல. கல்லைப்போல பல்லைக் காட்டும்
கருங்குரங்கும் அல்ல. கால்மேலேயும்
தலை கீழேயுமாகவே
கம்பி விட்டத்தில் தொங்கும் கராத்தேக்காரனும் அல்ல.

–வௌவால்

2000. சிறகில்லாமல் பறவை தேசமெங்கும் திரியும்.

–கடிதம்

2001. சிறகு இல்லாத பறவைக்குச் செப்புப் போல மூக்கு
பாய்ந்துபோகும் அதற்குப் பருத்தி நூலு வாலு.

–ஊசி

2002. சிறகு மடக்காமல் சின்னவிழி மூடாமல்
பறக்குதே பூச்சி. அதன் பெயர் என்ன சொல்லு.

–தட்டாம்பூச்சி

2003. சிறுசிறு கதவுகள் செய்யாத கதவுகள்
திறக்க அடக்கச் சத்தம் செய்யாத கதவுகள்.
அது என்ன?

–கண் இமை

2004. சிறுதுளி பெருவெள்ளம். அது என்ன?

–தீபம்

2005. சிறுமலை பெருமலை சேர்ந்ததொரு பழனிமலை
பழனிமலைக்குள்ளிருக்கும் செந்தாமரைப் புஷ்பம்
புஷ்பத்தின் மேலிருக்கும் அன்னதான மண்டபம்
மண்டபத்துக்குள்ளிருக்கும் வால்நீண்ட குருவி
இரையெடுக்கும் இரை கக்கும் இரை தின்னத்
தெரியாது. அவை என்ன?

–அடுப்பு, நெருப்பு, சோறு, கரண்டி

2006. சிறுமலை போன்ற கரியமேனி
இடர் செய்தவன் உயிருக்கு உறானி
கோயில் அரண்மனையில் வசிக்கும் ஞானி
இருந்தும் இறந்தும் விலையுயர்ந்த தானி. அது என்ன?

–யானை

2007. சிற்றாடை உடுத்தியிருக்கும் சிறுபெண்ணுமன்று
சிறக்கநூல் அணிந்திருக்கும் பார்ப்பானுமன்று

கரிவளையல் அணிந்திருக்கும் பெண்மணியுமன்று.
அது என்ன?

–உடுக்கை

2008. சிற்றாவல்லூர் ஏரியிலே - சில
குமரிப்பெண்கள் குளிக்கிறார்கள்.
பார்த்த கண் பூத்துப்போச்சு
பையன் கையில் துட்டு இல்லை.
அது என்ன?

–மீன்

2009. சிறிய சிட்டானுக்குப் பெரிய உருமாலை. அது என்ன?

–தீக்குச்சி

2010. சிறியதொரு சிட்டாண்டி
வயிற்றைப் புழுத்துச் செத்தாண்டி. அது என்ன?

–பருத்தி

2011. சிறிய வீட்டுக்குள்ளே நிறையச் செறா. அது என்ன?

–பல்

2012. சிறு அறை நிறைய விறகு. அது என்ன?

–தீப்பெட்டி

2013. சிறுகடலும் பெருகடலும் பொங்கிவர
சிறுமுத்தெல்லாம் குதித்துவர
மட்டத்தேங்காய் மலர்ந்து வர
சங்கிலிபோட்டு இழுத்து வர. அது என்ன?

–சோறுவடித்தல்

2014. சிறு தூசி விழுந்து குளமே கலங்கியது.
அது என்ன?

–கண்

2015. சின்னக் கறுப்பன், உருவம் சிறுத்தாலும்
காரம் குறையாதவன், அறுசுவை உணவுக்குள்ளும்
அவன் இருப்பான். அது எது?

–கடுகு

2016. சின்னக் கிணற்றில் கிண்ணந் தண்ணீர். அது என்ன?

–தேங்காய்

2017. சின்னக்குங்குமச் செப்புக்குள்ளே
சின்னப்பாம்பு நெளியுது குழையுது.

–நாக்கு

2018. சின்னக் குட்டி மொட்டு, சிவப்பு ரங்கச் சிட்டு
தேகம் வெல்வெட்டு, திரியும் நகர்ந்துக்கிட்டு.

–பட்டுப்பூச்சி

2019. சின்னக்குட்டி வீட்டிலே சிவப்பு முத்துக் காயுது.

–மிளகாய்

2020. சின்னக் குடிசை வீட்டிலே சிந்திக்
கிடக்குது நிறையச் சிறா.

–பற்கள்

2021. சின்னக் குண்டுத் தேங்காயே தீக்குளிக்கப் போறாயே
நெய்யைப் போலே உருகியதும் நெஞ்சம்
உருகி எனைப்பாராய்.

–வெல்லம்

2022. சின்னக்குதிரைக்கு நூறு கடிவாளம். அது என்ன?

–தறி

2023. சின்னக்குள்ளி எவ்வளவு வைத்தாலும்
சுமப்பாள். அது என்ன?

–அடுப்பு

2024. சின்னச் சதுரப் பெட்டி
சிங்கார வர்ணப் பெட்டி
கற்றோர்க்குக் கைப்பெட்டி
விற்றோர்க்குப் பணப்பெட்டி.
அது என்ன?

–புத்தகம்

2025. சின்னச் சன்னக் கொடியிலே கச்சகப் பிச்சகக்
காயோடு சரியுது மஞ்சக பிஞ்சுக.

–பாகற்காய்

2026. சின்னச் சாத்தான் வயிறு பெருத்துச் செத்தான்.
அவன் யார்?

–பருத்திக்காய்

2027. சின்னச் சிட்டான்
இழுத்து இழுத்து முள்ளடைப்பான். அது என்ன?

–ஊசி

2028. சின்னச்சிமிழும் கவிந்தாற்போல்
சிறிய கொண்டை முடித்தாற்போல்
உள்ளே பழம் பழுத்தாற்போல். அது என்ன?

–மாதுளம்பழம்

2029. சின்னச் சிறுக்கியும் சின்னப் பையனும்
சிரித்துக் கட்டின தாலி
சிக்கில்லாமல் அவிழ்த்தவர்க்குச்
சென்னை பட்டினம் இனாம்.
அது என்ன?

–தூக்கணாங்குருவிக்கூடு

2030. சின்னச் சின்னக் கத்தி சிங்காரக் கத்தி
துரைமாரைக் கண்டாலும் விலகாத கத்தி.
அது என்ன?

–முள்

2031. சின்னக் சின்னக் கதவு சிங்காரக் கதவு
திறக்கப்பூட்டவோ சாவியும் பூட்டும்
தேடாத கதவு.

–கண் இமைகள்

2032. சின்னச் சின்னச் சாத்தான்
வயிறு பெருத்துச் செத்தான். அவன் யார்?

–பருத்திக்கொட்டை

2033. சின்னச் சின்ன சீமாட்டிக்கு சிற்றலங்காரத்துக்கு
மட்டும் நூற்றைம்பது உடைகள்....அது என்ன?

–வெங்காயம்

2034. சின்னச் சின்னப் பூக்கள்
சிங்காரப் பூக்கள்
சிதறிக் கிடக்கும் பூக்கள்
இரவில் பூக்கும் பூக்கள். அது என்ன?

–விண்மீன்

2035. சின்னச் சின்னப் பூச்சி சிதறிக் கிடக்கும் பூச்சி.
அதற்குத் தேகம் எல்லாம் கொம்பே
தொட்டுவிட்டால் வம்பே!

–முள்

2036. சின்னச் சின்னப் பெட்டிக்குள்ளே
சேதியெல்லாம் கண்ணுக்குள்ளே. அது என்ன?

–தொலைக்காட்சிப் பெட்டி

2037. சின்னச் சின்ன மரமே சிங்கார மரமே
செட்டியார் வைத்திருக்கும் சிகப்பு மரமே
எண்ணத்தை வடிவாக்கும் இணையற்ற மரமே
இயற்கைதனை உருவாக்கும் எழில்பெற்ற மரமே
அது என்ன?

–பென்சில்

2038. சின்னச் சின்ன முள்ளு தைத்தால் பொறுக்கமாட்டேன்
சிங்காரக் கத்தியை உருவமாட்டேன்
மாணிக்கக் கல்லுமேலே மிதிக்கமாட்டேன்
பங்காரக் குதிரைமேலே ஏறமாட்டேன்.
அது என்ன?

–தேள், பாம்பு, நெருப்பு, கழுதை

2039. சின்னச் சின்ன வாழைக்காய்
சிங்கார வாழைக்காய்
முந்நூறு பணம் பெத்த
முத்து முத்து வாழைக்காய். அது என்ன?

–வெண்டைக்காய்

2040. சின்னஞ்சிறு குகைக்குள்ளே சிவப்பு விளக்கு எரியுது.

–மாதுளம்பழம்

2041. சின்னஞ்சிறு சிட்டுக்குருவி
இழுத்து இழுத்து முள் அடைக்கிறது. அது என்ன?

–ஊசிநூல்

2042. சின்னஞ்சிறு பாத்திரம்
பாப்பாவுக்கேற்ற பாத்திரம்.

–கெண்டி

2043. சின்னஞ்சிறு மாளிகையில்
சின்னச்சின்னத் துரைகள்
குதிப்பார்கள் நீந்துவார்கள்
கும்மாளம் அடிப்பார்கள். அது என்ன?

–குளத்துமீன்கள்

2044. சின்னஞ்சிறு ராமனுக்கு கன்னங்கரு நாமம்.

–அணில்

2045. சின்னஞ்சிறு வீட்டிலே சிப்பாய்கள் பலபேரு.
அது என்ன?

–தீப்பெட்டி, தீக்குச்சி

2046. சின்னத்தம்பி சிவப்புத்தம்பி
திறந்தவாய் மூடாத நல்லதம்பி. அவன் யார்?

–தபால்பெட்டி

2047. சின்னத்துரைக்குச் செல்லத்தொப்பி இரண்டு.
அது என்ன?

–பட்டாணிக்கடலை

2048. சின்னப்பட்டு சிகப்புப்பட்டு
தேசமெல்லாம் தேவைப்பட்டு
நம்மெல்லோராலும் விரும்பப்பட்டு
நாடெல்லாம் திரியும் பட்டு.

–பட்டுப்பூச்சி

2049. சின்னப்பட்டு சிவப்புப்பட்டு
பின்னப்பட்டு வரும்பட்டு
என்னைக் கண்டு வெட்கப்பட்டு
நிக்குது இந்தத் தோப்புப் பட்டு

–பட்டுப்பூச்சி

2050. சின்னப்புள்ளை சின்னப்புள்ளை பெரியவனாய்
வளர்ந்தால், பேரெடுக்கும் நல்லபிள்ளை.

–தென்னை

2051. சின்னப்பெட்டி, வெல்லக்கட்டி,
சேதி சொல்லும் நல்ல பெட்டி. அது என்ன?

–வானொலி

2052. சின்னப்பையனும் சின்னப்பெண்ணும்
சிரித்துக் கட்டின மாலை - இதைச்
சிக்கலில்லாமல் எடுத்தவர்க்குச்
சென்னைப்பட்டணம் தாரேன். அது என்ன?

–குருவிக்கூடு

2053. சின்னப் பொட்டிக்குள்ளே
குட்டிப் போலீஸ் தொப்பி.

–தீப்பெட்டியும் குச்சியும்

2054. சின்னப் பொடியனுக்கு
அரண்மனையிலே வேலை. அவன் யார்?

–படி

2055. சின்ன மச்சான் குனிய வச்சான். அது என்ன?

–முள்ளு

2056. சின்ன மீசைக்காரன், மியாவ் மியாவ்
ஓசைக்காரன். அவன், யார்?

–பூனை

2057. சின்ன முத்துச் கொட்டைக்குச் சிவப்புச் சட்டை.

–பட்டுப்பூச்சி

2058. சின்னவன் ஓடுவான் அடுத்தவன் நடப்பான்
பெரியவன் தவழுவான். அவர்கள் யார்?

–கடிகாரமுட்கள்

2059. சின்ன விழியிலே சிங்காரப் பாப்பா. அது எது?

–கண்மணி

2060. சின்ன வீட்டுக்கு நிறையச் சிறா. அது என்ன?

–பற்கள்

2061. சின்ன வீட்டுக்கு நிறைய சீத்தாப்பழம். அது என்ன?

–பற்கள்

2062. சின்ன வெங்காரம் வீடெல்லாம் சிங்காரம்.
அது என்ன?

–தீபம்

2063. சினந்து சிவந்தவன் சிதைந்துபோவான். அவன் யார்?

–தீ

2064. சீக்கில்லை போக்கில்லை சிணுங்குகிறான்
முணங்குகிறான் சேற்றிலே புரளுகிறான். இவன் யார்?

–பன்றி

2065. சீத்தனக்கடி சீத்தனக்கடி
செத்தனக்கடி கிடக்கடி
நாலுகாலு சீத்தனக்கடி
மோந்துனக்காடி பார்க்குது
ரெண்டு காலு சீத்தனக்கடி
தூக்கனக்கடி போவுது. அது என்ன?

–தவளை, நாய், காகம்

2066. சுக்குட்டிப் பையன் கட்டையைக் கடிக்கிறான்.
அது என்ன?

–முள்ளெடுக்கி

2067. சுகத்திலே சுகம் என்ன சுகம்?

–புத்தகம்

2068. சுட்ட உடம்பு தட்டினால் 'கணகண'

–பானை

2069. சுட்ட கருவாடு
பிட்டமே நிக்குது. அது என்ன?

–அடுக்குப்பானை

2070. சுட்ட குருவி ஊருக்குப் போகிறது.
அது என்ன?

–பலகாரம்

2071. சுட்ட நெத்தலி நட்டமாய் நிற்கிறது. அது என்ன?

–ஓட்டை உருவம்

2072. சுட்ட பிணத்தைச் சுட
செத்த பிணம் வந்திருக்கிறது. அது என்ன?

–கரி, துருத்தி

2073. சுட்டவன் சந்தைக்குப் போறான். அது என்ன?

–சட்டி

2074. சுட்டுவிட்டுக் குருவி கப்பலேறுது. அது என்ன?

–வடை

2075. சுடாத நெருப்பெடுத்து
இருளிலும் சுற்றலாம். அது என்ன?

–டார்ச்லைட்

2076. சுண்ணாம்பு அடித்த மொட்டை மாடியில்
உளுந்து காயுது தொட்டுப்பார்த்தேன்
கையால் அள்ளமுடியவில்லை.

–பத்திரிகையும் எழுத்தும்

2077. சுத்திச் சுத்தி வரும் புடலம்பூ
அது சூதாடி வரும் புடலம்பூ
அது கச்சேரிக்குப் போகுமாம் புடலம்பூ
அது சரணமும் போடுமாம் புடலம்பூ.
அது என்ன?

–ரூபாய்

2078. சுத்திச் சூர முள்ளு
நடுப்புற நல்ல வெல்லம். அது என்ன?

–பலாப்பழம்

2079. சுத்து முத்தும் பார்த்தான்
சிண்டைப் பிடித்து இழுத்தான்.
அது என்ன?

–நிலக்கடலை

2080. சுத்துவானாம் பயல் செடியைச்
சூடானாம் பயல் பூவைத்
தின்பானாம் பயல் காயைத்
தீண்டானாம் பயல் பழத்தை.
அது என்ன?

–சுரைக்காய்

2081. சுத்துவேன் அந்தச் செடியை
தருவேன் அந்தப் பூவை
நத்துவேன் அந்தக் காயை
நாடேன் அந்தப் பழத்தை! அது என்ன?

–சுண்டச்செடி

2082. சும்மா இருக்கும்போது ஒட்டிக் கிடப்பார்கள்,
பேசத் தொடங்குவிட்டால் பிரிந்தே ஆவார்கள்.
அது என்ன?

–உதடு

2083. சும்மாவே அழகு; ஆடினால் இன்னமும் அழகு.
அவன் யார்?

–மயில்

2084. சுமையும் சுமந்திருக்கும் அடியும் திறந்திருக்கும்.
அது என்ன?

–உறி

2085. சுமையும் தாங்கும் உதையும் கொடுக்கும். எது?

–கழுதை

2086. சுரங்க வாசலில் சொக்கன் நுழைந்தால்
சொர்க்க பூமிக்குப் பாதை தெரியுமாம்.

–பூட்டும், சாவியும்

2087. சுரம் இல்லாத சுரம் என்ன சுரம்?

–பாசுரம்

2088. சுருங்காமல் பறப்பது என்ன மந்திரி?
சிமிட்டாமல் விழிக்குதே அதுதான் ராசா.

–தட்டாம்பூச்சி

2089. சுருளோட சுருளுவரக் கண்டியா பெண்ணே
சுருளிக்க விரிவோடக் கண்டேனே ராஜா

வில்லோடிப் புல்மேயக் கண்டியா பெண்ணே
இரண்டு கொம்புடனே மானவரக் கண்டேனே ராஜா.
அது என்ன?

–நத்தைக்கூடு

2090. சுவரில் தொங்கும் கறுப்பு ராணிக்கு
சுற்றியிருக்குதாம் வெள்ளிப் பூணும்.

–கரும்பலகை

2091. சுவரில் பொம்மை சங்கிலிப் பொம்மை
வந்து போவார்க்கு வார்க்கும் பொம்மை.
அது என்ன?

–தேள்

2092. சுவரிலே மேட்டிலே தூங்கும் சுருள்துணி பொம்மை
தொட்டால் போதும் அது சுட்டுத்
தொலைத்திடும் துப்பாக்கியால் நம்மை.

–தேள்

2093. சுவருக்குள்ளே கும்மி அடிக்கிற சொகுசுச் சீமாட்டி,
எவருடம்பையும் நக்கிப் பார்க்கிற எச்சிலுக்
கோமாட்டி, அவலுப்பொரிதான் உடம்பு அதில்
குங்குமக் கடம்பு இவருக்கும் ராத்திரி விழிப்பு.
இரத்தத்தில் பின்னாலே குளிப்பு.

–மூட்டைப்பூச்சி

2094. சுளகு நிறைய வெண்டைக்காய்
விடிந்து பார்த்தால் ஒன்றுமில்லை.

–விண்மீன்

2095. சுற்றிச் சுற்றி முள்ளடைத்துச்
சூரியகாந்தி பட்டுடுத்தி
ஐயோ! ஒரு பெண் கையேந்தி நிற்கிறாள்.
அவள் யார்?

–மிளகாய்ச்செடி

2096. சுற்றிச் சுற்றி வந்தாலும்
இருக்கும் இடம் ஒரே இடம் தான். அது என்ன?

–கடிகாரமுள்

2097. சுற்றிச் சுற்றி வேலிநட்டு
சூரியனார் பட்டு உடுத்தி
ஐயோ ! அவள் கையேந்தி நிற்கிறாள்.
அவள் யார்?

–வாழைமரம்

2098. சுற்றிலும் கல்கட்டு, நடுவில் வெள்ளிக்கட்டு.
அது என்ன?

–தேங்காய்

2099. சுற்றிவர காவல் காக்க சுகமாகத்
தூங்குகிறாள் ஒரு பெண். அது என்ன?

–நாக்கு

2100. சுற்றிவரும் தேரிலே
அத்தைமகள் நிற்கிறாள்
அத்தையுடைய அழுகுரலை
அடக்கிவைக்க முடியலை.
அது என்ன?

–செக்கு

2101. சுற்றிவிட்டால் சுழன்று சுழன்று ஆடுவான்.
அவன் யார்?

–பம்பரம்

2102. சுற்றுச் சுவரெல்லாம் வெள்ளிக்கட்டி
சுரங்க அறைக்குள்ளே தங்கக்கட்டி.

–முட்டை

2103. சுற்றும்போது மட்டும் சுகம் தருவான். அது எது?

–மின்விசிறி

2104. சுற்றுமுற்றும் பார்த்தான்
சிண்டைப் பிடித்து இழுத்தான்.

–நிலக்கடலை

2105. சுற்றுவேன் அந்தச் செடியைச்
சூடேன் அந்தப் பூவை
நத்துவேன் அந்தக் காயை
நாடேன் அந்தப் பழத்தை. அது என்ன?

–சுண்டைக்காய்ச் செடி

2106. சுற்றுவேன் அந்த மரத்தைச்
சூடேன் அந்தப் பூவை
நத்தேன் அந்தக் காயை
நாடுவேன் அந்தப் பழத்தை.
அது என்ன?

–வேப்பமரம்

2107. சுறுக்கென்று முள்
பொறுக்கமுடியாது. அது என்ன?

–தேள்

2108. சுறு சுறுங்கிது ஒரு குருவி
சுனாலிங்கிது ஒரு குருவி
கொத்திக் கொடுக்குது ஒரு குருவி
கொண்டுகிட்டு ஓடுது ஒரு குருவி. அது என்ன?

–பணியாரம்

2109. சுறுசுறுப்பானவன் கோபம் வந்தால்
'சுருக்' என்று வலியைத் தருவான். அவன் யார்?

–எறும்பு

2110. சுனை ஒன்று, சுவர் மூன்று. அது என்ன?

–தேங்காய்

2111. சூடுபட்டவனுக்குச் செல்வாக்கு அதிகம்.
அது என்ன?

–செங்கல்

2112. சூடுபட்டுச் சிவந்தவன்
வீடுகட்ட உதவுவான். அவன் யார்?

–செங்கல்

2113. சூரியன் காணாக் கங்கை
சுண்ணாம்பு தோற்கும் வெண்மை
மண்ணிற் பண்ணாப் பாண்டம்
மனிதர்களுக்கு எண்ணெயாய் உதவும்
அவனைத் தின்போம் நாமும். அது என்ன?

–தேங்காய்

2114. சூரியனுக்கு ஒளியில்லையென்று எப்படிச் சொல்லலாம்?

**–போதமருள் பல்கலையும்
பொற்புடனே யற்பொடு
கல்லாதவனுக்கில்லை யொளி.**

2115. சூரியனே சந்திரனே மந்திரி மகளைப் பாரு
அவள் என்ன சாதி?
அறுத்துக் கட்டுகிற சாதி
கோட்டைக்குள்ளே போனாலும்
குத்துப்பட்டுச் சாவாள். அவள் யார்?

–நெல்

2116. சூழச்சூழ முள்ளுக் குத்தி
பச்சை வண்ணப்பட்டு உடுத்தி
அய்யோ அவள் ஒருத்தி
ஆள் பார்த்து நிற்கிறாள்.
அவள் யார்?

–பலாப்பழம்

2117. செக்கச் சிகப்பி நாங்கள்
தீயில் உள்ளவர்கள் நாங்கள்
கல்லுத் தடுக்கினால் செத்துப் போவோம்.
நாங்கள் யார்?

–பானச்சட்டி

2118. செக்கச் சிவந்த நிறம்
தேங்காய் திருவி அரம். அது என்ன?

–சேவல் கொண்டை

2119. செக்கச் சிவந்தவர்கள் தீயில் உள்ளவர்கள்
கல்லுத் தடுக்கினால் செத்துப் போவோம்.

–பானை, சட்டி

2120. செக்கச் சிவந்தவர்கள் நாலுபேர்
செவ்வெண்ணையிட்டுக் கொண்டவர்கள் நாலுபேர்
மஞ்சள் குளித்தவர்கள் நாலுபேர்
மையிட்டுக் கொண்டவர்கள் நாலுபேர்
இப்பதினாறு பேர்களுக்கும் இரண்டே கணவர்.
அது என்ன?

–சொக்கட்டான்

2121. செக்கச் சிவந்திருக்கும்; செவ்வாழை பூத்திருக்கும்;
வால் முளைந்திருக்கும்; வந்திருக்கும் கடைத்தெருவில்.

–மிளகாய்வற்றல்

2122. செக்கச் சிவந்திருக்கும், மஞ்சளாயுமிருக்கும்
கண்ணைக் கவரும், தின்றால் காறும்
விண்டால் கொண்டையில்லை, முன்னே விடுகிறான்
அதன் கொட்டை போல என்பார். அது என்ன பழம்?

–முந்திரிப்பழம்

2123. செக்கச் சிவந்திருப்பா எங்கக்கா
செவத்தோரம் ஒண்டியிருப்பா எங்கக்கா
வாலக் கொழைச்சிடுவா எங்கக்கா
வவுத்தெரிச்ச மூட்டிடுவா எங்கக்கா.
அவள் யார்?

–தேள்

2124. செக்கச் சிவந்திருப்பா
செங்கழனி பூத்திருப்பா
வாரி முடிஞ்சிருப்பா
வந்திருப்பா சந்தையிலே! அவள் யார்?

–மிளகாய்வற்றல்

2125. செக்கச் சிவந்திருப்பாள் எங்க சின்னாயி
செவ்வரளி பூத்திருப்பாள் எங்க சின்னாயி. அது என்ன?
–மிளகாய்

2126. செக்கச் சிவந்திருப்பாள்
சிங்காரக் கொண்டைக்காரி செல்லாயி
கண்ணைக் கவர்ந்திடுவாள் காவேரி
கடித்தாள் காறிடுவாள் காவேரி. அது என்ன?
–முந்திரிப்பழம்

2127. செக்கச் சிவந்திருப்பாள், செட்டியார் மகள்,
நாளைச் சந்தைக்கு வருவாள், நாத்தியார் மகள்.
அது எது?
–மிளகாய்

2128. செக்கச் சிவந்திருப்பாள்
செம்பவளம் போலிருப்பாள்
தேசமெங்கும் நிறைந்திருப்பாள்
தீண்டமுடியாது இவளை. இவள் யார்?
–நெருப்பு

2129. செக்கச் சிவப்பு நாங்க கட்டிக் குடுத்தாப்
போவோம். விழுந்த இடத்தில் சாவோம். அது என்ன?
–மண்பானை

2130. செக்கச் செவேரென்றிருக்கும்
பக்கம் மீசை இருக்கும்
வால் முளைத்திருக்கும்
மேலே தோடு இருக்கும்
வந்திறங்கும் சந்தையில். அது என்ன?
–இறால்மீன்

2131. செங்கக்கட்டு, செங்கக்கட்டு
மகிழம்பூக் கொல்லை
செட்டியார் மகள் பெயர் தில்லை
அவள் வயிற்றில் ஐந்து மாதப் பிள்ளை. அது என்ன?
–கேப்பை

2132. செங்கட்டு செங்கட்டு மத்தாப்புக் கொல்லை
செல்லாச்சி மகள் பேரு நான் தெரிந்ததில்லை
செனப்பட்டாள் அவள் வயிற்றில் அஞ்சுமாசப் பிள்ளை.
–கேப்பை

2133. செங்கக்கட்டு மதிலோரம் கொல்லை
அவள் பெயர் தில்லை
அவள் வயிற்றில் ஆறுமாதம் பிள்ளை
அவள் எவரோடும் பேசுகிறதில்லை. அது என்ன?

–நெல்

2134. செங்கல் கட்டடம்
அதற்குள்ளே பொன் கட்டடம்
அதற்குள்ளே வெள்ளிக் கட்டடம்
அதற்குள் திருக்குளம். அது என்ன?

–தேங்காய்

2135. செங்கலடுக்கச் செவ்வந்தி பூக்க
இரத்தினம் பதிக்கப் பெட்டி திறக்க. அது என்ன?

–மாதுளம்பழம்

2136. செங்கலறுக்கச் செவ்வரளி பூக்கப்
பெட்டியைத் திறக்க லட்சுமி சிரிக்க. அது என்ன?

–வாய்

2137. செங்கீரைத்தண்டுபோல் வளர்ந்தாய் மகளேஃ
செங்காட்டுத் தீயினில் வெந்தாய் மகளே
மகராசன் வீட்டிலே புகுந்தாய் மகளே
மண்ணுக்கு இரையாகி மடிந்தாய் மகளே. அது என்ன?

–மண்பானை

2138. செஞ்சேரி மலைமேலே செல வடுவை
செல வடுவன் பெண்டாட்டி செலம்பக்கா
செலம்பக்கா வவுத்திலே குடுகுடுப்பான்
குடுகுடுப்பான் வவுத்திலே கடுகடுப்பான்.

–தேங்காய்

2139. செட்டிமகள் குப்பா
குப்பா பெத்தாள் குலுகுலுப்பை
குலுகுலுப்பை பெத்தாள் கிலுகிலுப்பை.
அது என்ன?

–கோழிக்குஞ்சு

2140. செட்டியார் கடையில் இருப்பேன்
சேர்ந்து நான் வசிப்பேன்
ஆட்கள் வந்தால் பறப்பேன்.

–கரப்பான்பூச்சி

2141. செடிக்கு கீழ்வரும் கிழங்கு,
செழுமையாக இருக்கும், பெண்மைக்கு
இது பெருமை. அது என்ன?

-மஞ்சள்

2142. செடியில்லாமல் சிரிக்கும் பூ
காய்க்காமல் கனிந்த பூ. அது என்ன?

-உப்பு

2143. செடியில் விளையாத பஞ்சு
தறியில் நூற்காத நூல்
கையில் தொடாத துணி. அது என்ன?

-சிலந்திவலை

2144. செடியை உலுக்குது ஒரு குருவி
செடியோரம் போகுது ஒரு குருவி
குட்டையைக் குழப்புது ஒரு குருவி
குட்டையோரம் போகுது ஒரு குருவி.
அது என்ன?

-வெள்ளாடு, செம்மறியாடு, எருமை, பசு.

2145. செடியைச் சுற்றிச் செந்துருக்கம். அது என்ன?

-மிளகாய்ப்பழம்

2146. செடியைச் சுற்றியே சிகப்பும் பச்சையும்.

-மிளகாய்

2147. செத்தபின் பூமியில் இறங்குகிற பட்சி
என்ன பட்சி?

-வௌவால்

2148. செத்தவன் மறுபடி வந்தான் உயிரோட.
அவன் யார்?

-அடுப்புக்கரி

2149. செத்துக் காய்ந்த மாடு
சந்தைக்குப் போகிறது.
அது என்ன?

-கருவாடு

2150. செத்துப்போன அண்ணன்
வானத்திலிருந்து
ஒரு பெட்டி போட்டான்
அதைத் திறக்கமுடியும் மூடமுடியாது. அது என்ன?

-தேங்காய்

2151. செந்தணல் குருவிகளுக்கு தீனிக்கு
ஒரு குறையும் இல்லை.
ஆனால் தீர்த்தம் உண்டதும் ஆயுள் தீர்ந்தேபோகுது.
–நெருப்பு

2152. செப்புக் கம்பிக்கும் எனக்கும் சிநேகிதம்
தப்புக்கணக்குப் போட்டுவிடாதீர், செப்புக்கம்பியும்
நானும் சேர்ந்திருக்கும்போது தொட்டுவிடாதீர்,
அபாயம் அபாயம். தொட்டால் சிலநேரம்
விட்டாலும் விடுவேன், விடாமல் பிடித்தால் உமக்கு
வீடுபேறும் கொடுப்பேன். வேதனை வேண்டாம்,
சோதனை செய்யாதீர். நான் யார்?
–மின்சாரம்

2153. செப்பு நிறைய மாணிக்கம். அது என்ன?
–மாதுளம்பழம்

2154. செம்பட்டு உடை அழகி
தலைகீழே குடை பிடிப்பாள்.
–மிளகாய்

2155. செம்பு நிறைக் கெம்பு.
–மாதுளம்பழம்

2156. செம்பு நிறைய சிவப்புமுத்து.
–மாதுளம்பழம்

2157. செம்மண் உருண்டை உருட்டிச்
சீரகப் பொடியைத் தூவி
ஐந்து விரலால் அடித்து
ஆதித்தியனுக்குக் காட்டி
அக்கினி பகவானுக்குக் கொடுத்தேன்.
–வரட்டி

2158. செம்மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன்.
அவன் யார்?
–மண்புழு

2159. செம்மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன்.
–சீனிக்கிழங்கு

2160. செம்மண்ணுக்குள் நெளியும் சிவப்பு சிப்பாய்.
–சீனிக்கிழங்கு

2161. செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல
சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல.அது என்ன?
–கண்ணாடி

2162. செய்தி வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.

–தொலைபேசி

2163. செல்லச் சிரிப்பழகி சீர்வரிசைப் பல்லழகி
கரும்பு அழகைக் கன்னத்தில் கொண்டவளே!
மெல்லச் சந்தைக்குப் போய் மீள்வாய் எப்போது?

–சீப்பு

2164. செல்லாப் பணம் செல்வதும்
செங்கருடன் பறப்பதும் எதனால்?

–வட்டமிட்டு

2165. செவலை எருது பிடிக்கப் போனால்
சொக்கி எருது குத்த வருது. அது என்ன?

–இலந்தைப்பழம்

2166. செவி இல்லாத செவிடன்
செகம் பூராவும் திரிகிறான்
கால் இல்லாத கபடன்
கண்ட இடமெல்லாம் போகிறான்.
அவன் யார்?

–பாம்பு

2167. சென்னை பட்டணம் கறுப்பு
சீரங்க பட்டணம் கறுப்பு
உடைத்துப் பார்த்தால் பருப்பு
தின்று பார்த்தால் கசப்பு. அது என்ன?

–குன்றிமணி

2168. சேட்டு வீட்டுப் பாப்பா
எட்டி எட்டிப் பாக்குறா. அது என்ன?

–மூக்குச்சளி

2169. சேதியை எடுத்துச் செல்லும் சின்னவன்
வெள்ளைக்காரன் சீவிய தலையும் காலும்
சேதிக்கே தத்தம் செய்த சிறப்பான
தூதன் யார் சொல்.

–கடிதம்

2170. சேரத் தண்ணியிலே சிறுக்கி சித்தாடை
தொவக்கிறா.
அது என்ன?

–வடைசுடுதல்

2171. சேலத்துச் செம்புறா
செல்லமாய்ப் பசும்புறா
மாடத்து வெண்புறா
இவை மூன்றையும் ஒரு கூட்டிலடைத்து
ஒருவன் தள்ளப் பதினாறுபேர் மிதிக்கத்
துளிக்குமே உதிரமது சொல்லுவீரே.

–பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு,
நாக்கு, பற்கள்

2172. சேலம் சிகப்பு செவ்வாய் பேட்டை கருப்பு
உடைச்சாப் பருப்பு தின்னாக் கசப்பு.
அது என்ன?

–குன்றிமணி

2173. சேலைக்குள்ளே சிக்கல் சிக்கலுக்குள் சிலந்தி.

–தலைமுடி பேன்

2174. சேற்றுக்குள்ளே செங்கோழி முட்டை.
அது என்ன?

–வெங்காயம்

2175. சொல்லொன்று சொன்னவுடன்
நில்லாமல் ஓடுகிறான்
ஓடுகிற வழி தெரிகிறது
உருவம் தெரியவில்லை
கையால் பிடிக்கமுடியாது
கண்ணால் பார்க்கமுடியாது
காதால் கேட்கலாம்.அது என்ன?

–தொலைபேசி

2176. சொல்வதைத் திருப்பிச் சொல்வான் கிளிப்பிள்ளை.
அவன் யார்?

–எதிரொலி

2177. சொறிபிடித்த மேனி, சுரசுரப்பு மேனி,
கரும்பச்சை மேனி, இரும்புநிறக் கலப்பாம்.
முளைத்து வால் நீளும் நீண்ட வால் மாறும்
கட்டிவிட்ட காலால் அது முட்டி தட்டிக் குதிக்கும்.

–தவளை

2178. சொறியனைக் கறி சமைக்கக்
சோறெல்லாம் கசப்பு. அது என்ன?

–பாகற்காய்

2179. சொன்னதைக் கேட்பான்
சொல்லச் சொல்லக் கேட்பான்
திரும்பச் சொல்ல மாட்டான்
திருடன் மாதிரி இருப்பான்.
அவன் யார்?

–காது

2180. சோற்றுக்கு கதைக்கு வந்த சொக்குச்
செல்லாளை சேற்றுக்குள் போட்டு
சிக்கென்று அமுக்குகிறார்கள்.

–நெல்நாற்று

2181. சோற்றுக்குள்ளே செங்கோழி முட்டை.

–வெங்காயம்

2182. சோறு சமைப்பான் சொக்கன் சாப்பிட
வேலையாள் அல்ல. விருந்து படைப்பான்
வந்தவர் சாப்பிட மனைவி அல்ல. இருந்தாள்
கொடுப்பாள் எங்கும் இருப்பாள் எங்கள் சொக்கி.

–அகப்பை

2183. டக்கு டக்குச் சத்தம் கேட்டேன்,
டமாரமும் இல்லை. அக்கம் பக்கம்
சத்தம் கேட்டார். அவள் யாருமில்லை,
அன்னப் பொண்ணுக்கு சின்னத்தட்டாம்
யாரு சொல்லுங்க!

–முறம்

2184. டக்டா வண்டி உடைந்து கிடக்கு ஒக்குட நாதியில்லை
ராசாமகள் கோபமாய்ப் போறா கூப்பிட நாதியில்லை
ரோசாப்பூக் கொட்டிக் கிடக்கு பொறுக்க நாதியில்லை.
அது என்ன?

–வான், நிலா, விண்மீன்

2185. டகர மெப்படித் தீவை யொக்கும்?

–கடல் நடுவிலிருத்தலால்

2186. டப்டிப் சிங்கம் டமாரச் சிங்கம்
தண்ணீர் பட்டதும் செத்ததாம் சிங்கம்.

–நெருப்பு

2187. டாக்கு டீக்கு என்னுமாம் குதிரை
தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம் குதிரை.

–செருப்பு

2188. டாக்கு டோக்கு மரம்,
தண்ணியிலே கிடக்கும் மரம்,
தச்சர் சீவாத மரம். அது என்ன?

–நாக்கு

2189. டாக்டர் வந்தார் ஊசி போட்டார்
காசு வாங்காமல் ஓடிவிட்டார். அவர் யார்?

–தேள்

2190. டாக்டர் வந்தார் கோட்டைக் கழட்டினார்
கேணிக்குள் குதித்தார். அவர் யார்?

–வாழைப்பழம்

2191. டாக்டர் வந்தாரு ஊசி போட்டாரு
காசு வாங்காமல் சென்றுவிட்டாரு. அது என்ன?

–கொசு

2192. டாங்கு டூங்கு மரம்
நாதாங்கி போட்ட மரம்
இரும்பு துளைத்த மரம்
இருபேரும் ஏறும் மரம்.

–கப்பல்

2193. டிக் டிக் கேட்கும் இதயம் அல்ல
முட்கள் இருக்கும் ரோஜா அல்ல.
அது என்ன? .

–கடிகாரம்

2194. டில்லி ராஜாமகள்
அவள் வயிற்றில் ஆறுமாதப் பிள்ளை
அவள் ஒருவரோடும் பேசமாட்டாள்.
அவள் யார்?

–தாழம்பூ

2195. டேரா கிழிந்துபோனால் தைக்க முடியாது
ராஜாத்தி ஓடிப் போனால் பிடிக்க முடியாது
ரோஜாப்பூ உதிர்ந்து போனால்
பொறுக்கமுடியாது.
அவை என்ன?

–வான், நிலா, விண்மீன்

2196. தக்கறா புக்கறா கத்துவான், சலிம்பன்
வித்துவான், தண்ணீருக்குள் சுத்துவான், தரையிலும்
தத்துவான். அவன் யார்?

–தவளை

2197. தக்காளிப்பழம் போல தளுக்குக்காரி,
தரையில் ஓடுகிற மினுக்குக்காரி,
அரக்கு மணி பூட்டி அசைந்து போவாளை
படக்கென்று பிடிச்சதும் பட்டாக நழுவுகின்றாள்.

–பட்டுப்பூச்சி

2198. தகதக தட்டுப்போல
தாமரை மொட்டுப்போல
இந்திரன் எழுத்துப் போல
இராவணன் சுருட்டுப் போல. அது என்ன?

–பாம்பு

2199. தகதக தட்டுப்போல, தாமரை மொட்டுப்போல,
இந்திரன் வட்டுப்போல, ரவிமுகம் பட்டுப் போல.

–வெள்ளி ஒரு ரூபாய் நாணயம்

2200. தகதக தட்டுப் போல
தாமரை மொட்டுப் போல
வெள்ளிக்குருத்து போல
விக்கிதாம் கடையிலே. அது என்ன?

–குடம்

2201. தங்க உடற்காரி தரமான ஆட்டக்காரி
மேகம் இருண்டு வந்தால்
மோகம் கொண்டு ஆடுவாள். அவள் யார்?

–மயில்

2202. ஆண்: தங்கக்குடம் எடுத்து
தண்ணீக்குப் போற பெண்ணே!
உன் கணவர் எங்கே?
பெண்: செத்தவரைத் தூக்கிக்கொண்டு
வித்துவரப் போயிருக்கார் என் கணவர்.

–கருவாடு

2203. தங்கச்சி முத்தத்திலே தங்கப்பழம் காய்கிறது.
அது என்ன?

–மிளகாய்

2204. தங்க மாம்பழத்தைத் திங்க முடியவில்லை.

–நெருப்பு

2205. தங்கை தலையிலே பாம்பு.

–பின்னல்

2206. தங்கை நீட்டிய ஓவியம் தரையில் தவழுது.
அது என்ன?

–கோலம்

2207. தச்சர் கொத்தர் செய்யாத தேர்
தானே கிளம்பும் சித்திரத் தேர்.

–புற்று

2208. தச்சர் செதுக்காத மரம் என்ன மரம்?

–வாழை

2209. தச்சன் இழைக்காத மரம் என்ன மரம்?

–துடப்பம்

2210. தச்சன் கதவு செய்வதேன்?
தாசி தனம் பருப்பதேன்?

–பலகையினால்
–பல கையினால்

2211. தச்சன் செய்யாத பெட்டி
தரையில் வைக்காத பெட்டி
ஆயிரம் பேர் கூடி
அருமையாய் வாழும் பெட்டி. அது என்ன?

–தேன்கூடு

2212. தச்சன் செய்யாத பெட்டி
தானே திறந்து மூடும் பெட்டி. அது என்ன?

–கண்

2213. தச்சழைக்கத் தமர் கிளம்ப
தையலம்மா ளேறி மிதிக்க
கொட்டை பிதுங்கக் கோது பிதுங்க
கொட்டையில்லாப் பழம் என்ன பழம்?

–வெண்ணெய்

2214. தஞ்சாவூர் தாம்பாளத்தை
தாயும் மகளும் தேய்ச்சாக.

–திரிகை

2215. தட்டத் தட்டத் தகடு; காய விறகு.
அது என்ன?

–சாணம்

2216. தட்டிப்பார்த்து வாங்கவேண்டும்
தலையைக் குட்டிப் பார்க்கவேண்டும்
துட்டைக் கொடுத்து வந்த பின்பு

கெட்டுப் போனால் ஏதும் இல்லையாம்?
அது எது?

–தேங்காய்

2217. தட்டினால் பறப்பான்
தடவினால் சாவான். அது என்ன?

–கொசு

2218. தட்டுத் தட்டாய் பூப்போட்ட தடுக்குப் போட்டாளே
போட்டுவிட்ட தடுக்கை யாரும் பொறுக்கமுடியல்லே
துடைப்பத்தால் பெருக்கி விட்டால்
தோற்றம் தெரியல்லே.

–கோலம்

2219. தட்டுதட்டாய் மல்லாந்திருக்கும்
ஒரு சொட்டுத் தண்ணீர் கூட ஒட்டாது.

–தாமரைஇலை

2220. தட்டும் தின்பான், புல்லும் தின்பான்,
தங்க ரத்தினக்காரன், தண்ணீர்பட்டால்
செத்துப் போவான். அது என்ன?

–நெருப்பு

2221. தட்டை தின்னும் தாழை தின்னும்
சாமிநாதன் காளை
தண்ணீர் குடித்தால் செத்துப்போகும்
சாமிநாதன் காளை.

–நெருப்பு

2222. தட்டையன் கட்டையன்
கருப்புக் கட்டையன்
கண்டவர்க்கு எல்லாம்
உருண்டைக் கட்டையன்
ஊருக்கு எல்லாம் உறைச்ச கட்டையன்.
அவன் யார்?

–மிளகு

2223. தட்டோ மொட்டை. இதில் எட்டுப் பேரும்
தலயாத்திரை கிளம்புகிறார்களாம்.

–வண்ணத்தோணி

2224. தடத்திலே போகிறவன் தடிக்கம்பை வீசினான்.

–சுருட்டு

2225. தடாகம் வற்ற வற்ற தாமரை முட்ட முட்ட.

–விளக்கு

2226. *தடுக்குப் போட்டேன் எடுக்க முடியவில்லை.*

–கோலம்

2227. *அடையில் எட்டு இடையில் ஐந்து*
கடையில் மை எல்லாம் சேர்ந்தால் மேன்மை.
அது என்ன?

–அருமை

2228. *தண்டில்லை கொம்பில்லை தாங்கும் கொடியில்லை*
பொட்டு எள்ளுப் பத்திருக்கும் மேனியெங்கும்
வட்ட வட்ட இலை சுட்டுத் தின்னும் இலை என்ன?

–அப்பளம்

2229. *தண்டு இல்லாத வட்ட வட்ட இலை.*

–அப்பளம்

2230. *தண்டு மேலே தாழி, தாழிக்குள்ளே தண்ணி,*
தண்ணிக்குள்ளே கொடி, கொடிக்கு மேலே ஒளி.
அது என்ன?

–குத்துவிளக்கு

2231. *தண்டை சலங்கைக்காரி,*
தலைவாசல் வீட்டுக்காரி,
அவளைத் தொடுவானேன், கவலைப்படுவானேன்.
அவள் யார்?

–தேள்

2232. *தண்ணி இல்லாக் குட்டையிலே*
தத்தளிக்குது கெண்டை மீன்.

–நாக்கு

2233. *தண்ணீர் இல்லாத காட்டில் தாகமே வந்தாலும்*
சற்றும் தயங்காமல் வேகமாய்ப் போகும்
கப்பல் எந்தக் கப்பல்?

–ஒட்டகம்

2234. *தண்ணீர் இல்லாத தடாகத்தில்*
தாவிப் பாயுது ஒரு கப்பல். அது என்ன?

–ஒட்டகம்

2235. *தண்ணீர் இல்லாமல் வளரும்*
தரை இல்லாமல் படரும்
வளர்ந்து நெளிந்து ஆடும்
வாசனைப்பூவும் கேட்கும். அது என்ன?

–கூந்தல்

2236. தண்ணீர் இல்லாமல் விவசாயம் தரம்
தரமா முடிஞ்சதும், ஊருக்கு வெளியிலே
உபவாசம், ஒவ்வொரு நாளும் வனவாசம்,
உட்கார்ந்திருக்கிற பயிரம்மா, உடம்பில்
அங்கங்கே மயிரம்மா, பச்சை உடம்புக்காரியவள்
பாலைச் சுரக்கிற மூளியவள் யார்?

–கள்ளிச்செடிகள்

2237. தண்ணீர் கரையோரம் தவமிருக்கும்
வெள்ளைச் சாமியார். அவர் யார்?

–கொக்கு

2238. தண்ணீர்க் குதிரையைப் பிடித்து வர
சப்பாணிக் குதிரையில் சவாரி.

–மீன், செருப்பு

2239. தண்ணீர் தலைவாசல் தட்டு
முகவாசல் கண்ணீர் தெறித்த பால்
கழுவாமல் கொள்ளாமல் கட்டழகி மிகவும்
வாடி இருந்தாலும் பந்திக்குச் சோறு
பரிமாறும் பச்சைப் பொண்ணு.

–தாமரைஇலை

2240. தண்ணீரில் ஓடிவரும் தத்துவப்பசு
தரைமீதில் ஓடாத வித்துவப்பசு.

–கப்பல்

2241. தண்ணீரில் தள்ளாடுவான். ஆனாலும் அக்கறையாய்
அக்கரை கொண்டு சேர்ப்பான்.
அவன் யார்?

–படகு

2242. தண்ணீரில் நீந்தி வரும்; தரையிலே
தாவி வரும். அது என்ன?

- தவளை

2243. தண்ணீரில் மிதக்கும் அது தாராவும் இல்லை,
எண்ணினால் அதுக்குள்ளே ஏழு பேர் பயணம்.

–படகு

2244. தண்ணீரில் மிதக்கும் கப்பல் அல்ல
கனமாக இருக்கும் கல்லும் அல்ல
வெய்யிலில் உருகும் வெண்ணெயும் அல்ல.
அது என்ன?

–பனிக்கட்டி

2245. தண்ணீரிலே தாமரைப்பூ, தள்ளாடுதே
அலைகளிலே. அது என்ன?

–படகு

2246. தண்ணீரிலே பிறந்து தண்ணீரிலே அழிந்து
தீராத பயன் பலதரும் பொருள் என்ன பொருள்?

–உப்பு

2247. தண்ணீரிலே வெள்ளை. அது என்ன?

–மீன்

2248. தண்ணீருக்குள் இருப்பான், தரைக்கு வந்தால்
கறிக்கு உதவுவான். அவன் யார்?

–மீன்

2249. தண்ணீரும் மழையும் இல்லாமல் பயிர்
பச்சையாய் இருக்கிறது, பாக்கு வெற்றிலை
போடாமல் வாய் சிவப்பாய் இருக்கிறது.
அது என்ன?

–கிளி

2250. தண்ணீரைக் கண்டால் தயங்கும்
மணலைக் கண்டால் மயங்கும்
முள்ளைக் கண்டால் சீறும்
காற்று ஏறினால் வெடிக்கும்.
அது என்ன?

–சைக்கிள்

2251. தண்ணீரோடு போகும் கல் எது?

–விக்கல்

2252. தணலை முடிபவன், தானே மடிபவன்
திரி எண்ணெ விளக்கிற்குச் சித்தப்பா மகன்.
யார் இவன்?

–மெழுகுவர்த்தி

2253. தத்தக பித்தக நாலேகால்
தானே நடக்கும் இரண்டேகால்
முத்திப் போனால் மூன்றேகால்
முதுகாடு போவது பத்தேகால்.

–குழந்தை, வாலிபன், கிழவன், பிணம்

2254. தத்தா பித்தா நான்கு கால்
தானாக முளைத்தது இரண்டு கால்
முத்தின மரத்துக்கு மூன்று கால்.

2255. தந்தக்கால் நாலு, தளரப் பல் பத்து,
தண்டத்தடி இரண்டு, சாமரமோ ஒண்ணு.

–பசு

2256. தந்தைக்கு முன்னே தரணியில் நிற்பான்.

–பிள்ளையார்

2257. தந்தைக்கோ அடி தனயனுக்கோ படி.

–வைக்கோல், நெல்

2258. தந்தை போர்வையை மடிக்க முடியலே
அம்மா பணத்தை எண்ண முடியலே. அது என்ன?

–வானம், விண்மீன்

2259. தபால் பெட்டி கிழிந்திருக்கு - தைக்க நாதியில்லை.
பிச்சிப்பூ சிந்திக் கிடக்கு - பொறுக்க நாதியில்லை.

–மேகம், நட்சத்திரம், நிலா

2260. தம்படிக் குதிரை வாலுக்கு லகாம்.

–ஊசி

2261. தம்பிக்கு எட்டுவது அண்ணனுக்கு எட்டாது.

–உதடு

2262. தம்பி சோற்றுத் தட்டமாம்
தரைக்கு வராத தட்டமாம்
தேய்ந்து வரும் தட்டமாம்
திருட முடியாத தட்டமாம்
அது என்ன?

–நிலா

2263. தம்பூர் அடிக்குது கட்டை, தாளம் போடுது குட்டை
கட்டையில் தொற்றியபோது கூடவே ஆடுது தோது.

–தயிர்கடைதல்

2264. தரக்கான் புரக்கான் சந்தைக்குப் போகிறான்.

–செருப்பு

2265. தரை போட்ட முட்டை தணலன் பொரிந்த
குஞ்சு ஓராயிரம் கூடி ஒண்ணுபோல கிடக்கு.
என்ன இது?

–உப்பு

2266. தரையில் போட்டதும் மிதிக்கும்
தண்ணீரைக் கண்டதும் தவிக்கும்.

–செருப்பு

2267. தரையில் போட்ட பூவைத்
தலையில் வைக்க முடியாது. அது என்ன?

–கோலம்

2268. தரையில் முட்டிடும் விரலில் ஒட்டிடும்.

–கால்மெட்டி

2269. தரையில் விழுந்தால் ஒட்டிக் கொள்ளும்,
கையில் எடுத்தால் சுடும். அது என்ன?

–நாகப்பழம்

2270. தரையிலே போட்ட பாய்
அதைக் கிழிக்க முடியாது.

–கோலம்

2271. தரையிலே முட்டி முட்டி வரும்
விரலிலே ஒட்டி ஒட்டி வரும்.
அது என்ன?

–மெட்டி

2272. தரையைத் தடவும் மரம்,
தச்சன் சீவாத மரம் என்ன மரம்?

–துடைப்பம்

2273. தரை வெள்ளைத்தரை
விதை கறுத்த விதை
கையாலே போடணும்
வாயாலே எடுக்கணும்.

–காகிதம், எழுத்து

2274. தலை இல்லை இடை இல்லை
கையுண்டு விரல் இல்லை. அது என்ன?

–சட்டை

2275. தலைக்குமேல் தாவும் பூ, தண்டோடு இருக்கும் பூ,
வெயிலுக்கும் மழைக்கும் விரிந்து கொடுக்கும் பூ,
விளம்பும் இது என்ன பூ?

–குடை

2276. தலை எல்லாம் நரைத்தவள்
தாவி ஓடி ஆடுகிறாள்.

–புகை

2277. தலைக்கு மேலே மலரும் பூ
தண்டின் பக்கம் களியும் பூ.

–குடை

2278. தலைமேல் முளைத்திருக்கும்
இலையில்லா மரம். அது என்ன?

—மான் கொம்பு

2279. தலையணை மடிப்புப் போதும், தாராளம்
குடியிருக்க அலைவான், விரல் பிடிக்குள்
அகப்பட்டாற்போல நகருவான், அப்பப்ப
யாரையும் அர்த்த இராத்திரியிலும் அடிக்கடி
எழுப்பிடும் அரக்கர் கூட்டம் என்ன கூட்டம்?

—மூட்டைப்பூச்சி

2280. தலையாலே பூத்து காய்த்துக் கனியாக்கி,
காலம் எல்லாம் சுமந்து கைநீட்டிக்
கொடுக்கும் மரம், ஏறமுடியாது இருக்கும்
வழுக்குமரம். அது என்ன மரம்?

—வாழைமரம்

2281. தலையிலே எட்டு
இடையில் ஐந்து
கடையில் மை
எல்லாம் சேர்ந்தால் மேன்மை. அது என்ன?

—அருமை

2282. தலையில் காலும்
இடையில் தசமும்
எல்லையில் வில்லும் சேர்ந்தால்
எல்லோரும் விரும்பும் பொருளதுவே.
அது என்ன?

—வயல்

2283. தலையில்லை இடையில்லை
கையுண்டு விரலில்லை. அது என்ன?

—சட்டை

2284. தலையில்லை உடலுண்டு
கையில்லை காலுண்டு. அது என்ன?

—விடையில்லை

2285. தலையில்லை கண்ணுண்டு
மார்பில்லை முதுகுண்டு
வயிறில்லை இடுப்புண்டு
விரலில்லை கையுண்டு; அடியில்லை
காலுண்டு; உயிரில்லை, உடலுண்டு ; உருவிதனை
கண்டுரைப்பீர் உண்மைத் தோழர்களே!

—நாற்காலி

2286. தலையிலே கிளை வைத்திருப்பவன்
எதிரியைக் கண்டால் ஓட்டம் எடுப்பான்.
அவன் யார்?

—மான்

2287. தலையைச் சீவச் சீவத் தன் கருப்பு
நாக்கை நீட்டுகிறான். அது என்ன?

—பென்சில்

2288. தலையைச் சீவினேன் தாகம் தீர்ந்தது.
அது என்ன?

—இளநீர்

2289. தலையை முறித்து கம்புக்கூட்டுக்குள் வைத்தான்.
அது என்ன?

—தலைப்பாகை

2290. தலையை வெட்ட வெட்ட
கறுப்பு நாக்கை நீட்டுகிறான்.

—பென்சில்

2291. தலைவிரிந்த தாசிக்கு பவளம் போல
தாதியும் தாதிப்பட்டு உடலுக்குள்
தவள முத்தும் இருக்குமாம்.

—மிளகாய்ப்பழம்

2292. தவழ்ந்து விளையாடும் கிளி
தரணியில் உள்ளோர் விரும்பும் கிளி
பேசத் தெரியாத கிளி
பேசாமலும் இருக்காத கிளி.

—குழந்தை

2293. தவழும்போது ஒரு பெயர்
விழும்போது ஒரு பெயர்
உருளும்போது ஒரு பெயர்.
அது என்ன?

—மேகம், மழை, நீர்

2294. தவளமுத்தினைப் பவளமாதீன்று
தன்னகம் வைத்துக் கண்ணிமை போலக்
காக்கக் கண்டேன், கழறாய் இதுவென்?

—பற்களும், உதடுகளும்

2295. தவள மேனியன், பவள நாசியன்,
நெடிலாய் பிறந்து நெருப்பால் குறைவேன்.
நான் யார்?

—மெழுகுவர்த்தி

2296. தவறு செய்யாவிட்டாலும் தலையைப் பிடிக்கிறான்?

–சவரத்தொழிலாளி

2297. தள்ளாடி தள்ளாடி போனாலும்
தவறாமல் கரை சேர்க்கும். அது என்ன?

–படகு

2298. தள்ளாடிப் போகும், ஆனால் தடம்
மாறிப் போகாது. அது என்ன?

–ரயில்

2299. தளத் திண்ணைக்கும் வாசற்படிக்கும் நடக்கும்.

–விளக்குமாறு

2300. தளதள மேனிக் கெம்புக்கல்
தவழ்ந்து செல்லும் கெம்புக்கல்
நீரில் மிதக்கும் கெம்புக்கல்
நித்திரை கெடுக்கும் கெம்புக்கல். அது என்ன?

–மூட்டைப்பூச்சி

2301. தளுக்கு மினுக்குக்காரி
தாழ்வில்லா ரோசாக்காரி
தழுவ இடம் கொடுத்தால்
தலைக்கு ஏறுவாள். அவள் யார்?

–பூ

2302. தன்னை அழித்தவளை
தானே அழித்திடுவாள். அவள் யார்?

–விஷம்

2303. தன்னைத்தானே பலி கொடுப்பான்
மற்றவர்களுக்கு ஒளி கொடுப்பான்.
அது என்ன?

–மெழுகுவர்த்தி

2304. தன்னை நம்பாதவன் கூடவே வருவான்
அவன் யார்?

–நிழல்

2305. தாகம் வரும்போது சந்தையில் ஒன்றைக்
கண்டதும் எடுத்தேன் உடைத்தேன் உடைத்ததைக்
குடித்தேன். குடித்ததும் அதன் குடலைக்
குத்திக் குத்தித் தின்றேன்.

–நுங்கு, தேங்காய்

2306. தாடிக்காரன் மீசைக்காரன்
கோவிலுக்குப் போனால் வெள்ளைக்காரன்.
–தேங்காய்

2307. தாத்தாவுக்கும் பாட்டிக்கும் மட்டுமல்ல
கூன் விழுவது... ஒரு நகருக்குந்தான். அது எது?
–ரங்கூன்

2308. தாமரை மொட்டுக்குத் தாயாதி பூவர்க்கும்
தன் தாயின் வயிற்றிலே தனிக்கொத்து இனம்
சேர்க்கும் பூ என்ன பூ?
–வாழைப்பூ

2309. தாய் பரட்டைச்சி மகள் உருட்டைச்சி.
–அம்மி, குழவி

2310. தாய் வீட்டுக்குள் மகள் போவாள்
மகள் வீட்டுக்குள் தாய் போகமாட்டாள்.
–நாழியும் உழக்கும்

2311. தாயின் வாயில் பிறக்கும்
தரணி எங்கும் சிறக்கும்
–தாலாட்டு

2312. தாயும் பெண்ணும் தரும பத்தினிகள்
விரிச்ச தலையை முடிக்க மாட்டார்கள்.
–தென்னை

2313. தாயை அடுப்பில் வைத்து
பிள்ளையைப் பொரித்து தின்றாள்.
–துவரங்குச்சி, துவரம்பருப்பு

2314. தாயோ தரைக் கடையில்
சேயோ மணி முடியில். என்ன அவை?
–சிப்பியும், முத்தும்

2315. தாலோ தாலே பாடும் தையல் தவழ்ந்து
வந்தால் மதலை. தாவிப்பிடித்து வந்தால்
தாரம். தம்பட்டம் அடித்து விட்டாலோ
அவள் தாடகையே!
–தென்றல், காற்று, புயல்

2316. தாளம் இல்லாத ஆட்டம்
தாய்மார் விரும்பாத ஆட்டம். அது என்ன?
–சூதாட்டம்

2317. தாளம் மேளம் கொட்டிவர
தலையில் கொடி நாட்டிவர

உருளை ஆறு கட்டி வர
ஊரார்கள் இழுத்து வர
ஆடி அசைந்து வர
ஆரணங்குக்கு என்ன பேரோ?

–தேர்

2318. தாளைக் கொடுத்தால் தின்பான்
தண்ணீர் கொடுத்தால் மடிவான்.
அவன் யார்?

–நெருப்பு

2319. தாளைப் பார்த்ததும் தாரை தாரையாக்
கண்ணீர் சிந்தும், தலை முக்காடிவிட்டால்
தப்பித்து தலைமறைவு ஆகும். அது என்ன?

–பேனா

2320. தாளேறிப் பாயும் தத்துப்பிள்ளைக்கு
தலையைச் சீவுடா, சக்தியும் ஏறும்.
தலை சீவாவிட்டால் தடைபட்டு நிற்பான்!
யார் இவன்?

–பென்சில்

2321. தாளைப் பார்த்தால் போதும் பிள்ளை
தாரையாய் கண்ணீர் சிந்தும் பிள்ளை
தொப்பியை மாட்டின போதே பிள்ளை
தூங்கிடுவான் செல்லப்பிள்ளை.

–பேனா

2322. தாழ்ப்பாளின் கீழ் கோபாலசாமி.

–தேள்

2323. தாழை விழுது சேர்த்து தடித்த நல் மூங்கில் கட்டி
காளைபோல் தலை நிமிர்ந்து கடக்குமாம்
ஆற்றுநீரை. கழலுவீர் அதற்குப் பேரை.

–தெப்பம் அல்லது பரிசல்

2324. தானிருந்தால் பிறரை இருக்கவிடான்.

– ஓட்டை (துவாரம்)

2325. திண்டுக்கல்லை இரண்டாய் வெட்டி
திருச்சிராப்பள்ளியை மூன்றாய் வெட்டி
வெள்ளைக்காரனை வாயால் போட்டால்
வாய் எல்லாம் ரத்தம்.

–பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு

2326. திண்ணை மெழுகிற பெண்ணே உன்
புருவத்தின் கீழ் இருபத்திரண்டு கண்ணே.

–கண் இரண்டு, நகக்கண் இருபது

2327. திரண்டு வந்த மக்கள் ஒரே திசை
நோக்கிப் பாய்கிறார்கள். அது என்ன?

–திரைப்படம்

2328. திரி இல்லாத விளக்கு.
திரி லோகமும் தெரியுதாம். அது என்ன?

–சூரியன்

2329. திரி உள்ள இந்த விளக்குக்கு
எண்ணெய் வேண்டாம். அது என்ன?

–மெழுகுவர்த்தி

2330. திரிந்து அலைந்து நீ தினம் தேடி என்ன பலன்?
என்றைக்கோ ஒருநாள் இறைக்கு இரையாகிப்
போவாள். உரைப்பவர் யார் இவள் பெயர்?

–கோழி

2331. திருக்குவாறு ஒண்ணு தெருவில் கிடக்குது என்று
தொட்டுப் பார்க்கும் முன்பே நல்ல வேளை
பார்த்தேன். கழுத்தை வெட்டும் கத்தி
சுழித்து மடித்துக் கிடந்தது.

–பாம்பு

2332. திருச்செந்தூர்ப் பெண்ணே
திண்ணை மெழுகும் பெண்ணே
உன் உடலிலே பெண்ணே
இருபத்திரண்டு கண்ணே.

–கண் 2, கைநகக்கண் 10, கால் நகக்கண்10.

2333. திருடனுக்கு வேண்டாதவன்
காற்றுக்கு வேண்டியவன். அவன் யார்?

–ஜன்னல்

2334. திருப்பதி போனாலும் திரும்பாத பல்லக்கு.

–பிணம்

2335. திருப்பதியிலே திருத்தணியிலே
திருத்திக் குத்தின சேவல்
நடுக்கடலிலே சமுத்திரத்திலே
கூவா மல்லிகைச் சேவல்.

–சங்கு

2336. திருமலைராயன் தெப்பத்திலே தினம்
திருவிழா நடக்குது. விழாவிற்கு வந்த
சின்னப் பெண்கள் விழுந்து விழுந்து குளிக்கிறார்கள்.
குளிக்கிற பெண்களை குறுக்கே மறித்துப்
பிடிக்கிறார்கள்.

–மீன்கள், வலையர்கள்

2337. திருவண்ணாமலைக் கீழாலே
திண்ணை வழிக்கிற பெண்டுக்கு
நெத்திப் புருவத்துக் கீழாலே
இருப்பத்திரண்டு கண்ணு.

–கைவிரல் 10
–கால்விரல் 10
–கண் 2

2338. திறந்த வாய் மூடாமல்
நாளெல்லாம் இருப்பான்.
அவன் யார்?

–தபால்பெட்டி

2339. தின்றதை மறவாத செல்லத் தோழன்.
தினந்தோறும் நம் வீடு மிதக்கும் தோழன்.
அறிந்தும் அறியாமல் மிதித்தபோதும்
மறந்து மறவாமல் நம்மை மதிக்கும் தோழன்.

–நாய்

2340. தினமும் இருமுறை ஒரே வீட்டுக்கு வருவான்.
அவன் யார்?

–கடிகாரச் சின்னமுள்

2341. தினமும் எடை குறைவான். அவன் யார்?

–காலண்டர்

2342. தீக்குள் புகுந்தாலும் திடமாகவே இருப்பான்.
அவன் யார்?

–செங்கல்

2343. தீப்பொறி பறக்கிறது எரியாது
பிடித்தால் இருக்கும் பிடியாவிட்டால்
பறக்கும். அது என்ன?

–மின்மினி

2344. தீபாவளியும் இல்லை திருநாளும் இல்லை
ஒருநாள் இதுதான் வெறுநாள் தான்
வானம் எரியுது பட்டாசு வெடிக்குதே.

–மின்னல், இடி

2345. தீயில் சுட்ட கோழி செந்தூரக் கோழி
வரிசையில் அடுக்கி நிறுத்த வளரும்
திண்ணையும் விழும்.

–செங்கல்

2346. தீயிலே பிறந்தபிள்ளை, தெருவெல்லாம்
திரியும் பிள்ளை, வாயாலும் மூக்காலும்
வளைஞ்சு வளைஞ்சு போகும் பிள்ளை.

–புகை

2347. தீர்க்க முடியாமல் திணறடிக்கும் கல் எது?

–சிக்கல்

2348. தீவட்டி நுனியைக் கடிக்கிறான்
கடிச்சி நெருப்பில் பிடிக்கிறான்
பிடிச்சி மூச்சை முடிக்கிறான்!

–சுருட்டு

2349. தீனிக்குக் குறைவில்லை
தீர்த்தமுண்டால் மரணம். அது என்ன?

–தீ

2350. துக்குணிச் சிறுசுக்கு முக்கலக் கந்தை.

–கோழி

2351. துகுதுகு மலையிலே சுந்தர மடுவிலே
அந்தரத் தோகை ஒன்று
மந்திரக் கூத்தாடுது.
அது என்ன?

–மத்து

2352. துச்சனிச் சித்தன் கட்டையைப் பிளந்தான்.
அவன் யார்?

–முள் இடுக்கி

2353. துடி துடித்து இடி இடிக்கும்
சட சட வென்று பட படக்கும். அது என்ன?

–வெடி

2354. துடிப்பான் துவளமாட்டான்.
அவன் யார்?

–கண் இமை

2355. துடு துடு மலையிலே சுந்தர மடுவிலே
அந்தரத் தோகை மந்திரக் கூத்தாடுது.
அது என்ன?

–மத்து

2356. தும்பையின் கீழ் இருந்தவரே
பம்பரம் போலச் சுழன்றவரே
அத்தை துடிக்க அய்யா துடிக்க
யார் யார் வீட்டிற்குப் போனீரோ?

–சட்டிப்பானை

2357. தும்மலுக்கும் தூத்தலுக்கும் தூத்துக்குடி மேடை
இந்தக் கதை அழித்தவர்க்கு இராமகிருஷ்ண மேடை.
அது என்ன?

–குடை

2358. துள்ளித் துள்ளி விளையாடும் ராசா
உனக்கு எமன் உன் குரல்தானே

–தவளை

2359. துளி துளியாய்க் கண்ணீர் விட்டு,
இருளைத் தூரமாய் விரட்டும். அது என்ன?

–மெழுகுவர்த்தி

2360. தூக்கில் சதா தொங்கிக் கிடக்கும்
தோழியைப் பார்த்ததும் மடிப்புச் சேலைக்காரி
சொன்னாள்; விடியும்வரை தான் எனக்கு வேதனை
என்று. மற்றும் ஒருத்தி மண்டை சிலுப்பி
விடிந்தால் போதும் வேதனை என்றாளாம்.
விவரம் தெரிகிறதா யார் இந்தக் கும்பல்?

–தொட்டில், பாய், துடைப்பம்

2361. தூங்கலுக்குத் தாழ்வாரம், தூற்றலுக்கு மேல்வாரம்,
துவளும் கொடிமேடை சுருட்டும் கரு ஆடை.

–குடை

2362. தூங்கவும் வைப்பான் தூரவும் எறிவான்.

–காற்று

2363. தூங்கும் அறையைத் தேடுவார்;
சங்கீதத்தைப் பாடுவார்;
பாசுரம் இல்லாமல் ஊசி போடுவார். அவர் யார்?

–கொசு

2364. தூங்கும்போது வருவான்,
தூக்கமெல்லாம் கலைப்பான். அது என்ன?

–கனவு

2365. தூரத்தில் நின்று பார்க்கக் கறுப்பாயிருந்தது
பக்கத்தில் போய்ப் பார்க்கப் பளபளப்பாயிருந்தது

கையில் எடுத்துப் பார்க்கச் சிவப்பாயிருந்தது
சுவைத்துப் பார்க்க இனிப்பாயிருந்தது. அது என்ன?

–தேன்கூடு

2366. தூரம் இல்லாத் தூரம் துளி ரத்தத் தூரம்,
வைத்தியர் கையிருந்து வாங்கும் தூரம் என்ன?

–செந்தூரம்

2367. தூறு பெருத்த குந்தாணிப் பொண்ணுக்கு
துடப்பக்குச்சித் தொங்கட்டான்.

–தென்னைமரம்

2368. தெப்பக்குளம் சுற்றி
சின்னஞ்சிறு சுவர்க்கோவை.

–பல்

2369. தெப்பத்துக்குள் சிரிக்கிற முத்துகள்.

–பற்கள்

2370. தெப்பத்தைச் சுற்றித் தெர்ப்பைப் புல்.

–புருவம்

2371. தெரிந்து பூப்பூக்கும்
தெரியாமல் காய் காய்க்கும். அது என்ன?

–வேர்க்கடலை

2372. தெரியாமல் பூக்கும் மரம் தெரிஞ்சு
காய்க்கும் மரம் என்ன மரம்?

–அத்திமரம்

2373. தெருத்தெருவாய் வெளிச்சம், சீதளத்தின் குளிர்ச்சி!
திரியும் நெய்யும் இட்டதார், தீபம் திரியில் சுட்டதார்?

–சந்திரன்

2374. தெருமுனையில் இருப்பான்
விவரம் தெரிந்துகொள்ள உதவுவான். அவன் யார்?

–பெயர்ப்பலகை

2375. தெருவிளிம்பில் தொங்குகிற சின்னப் பெட்டி,
சிவப்பாக வண்ணம் வாய்திறந்த பெட்டி,
தாள் தூது தாக்கீது தேக்கப் பெட்டி,
சேதி சொல்லத்தனைத் தியாகம் செய்த பெட்டி.

–தபால்பெட்டி

2376. தெள்ளிய நீர் ஓடையில் வெள்ளிக் கும்பா மிதக்குது.

–சந்திரன்

2377. தெற்கே இருந்து வருது பாரு
தேர்க்குச்சி போலே
அது போட்டிருக்கும் நகையைப் பார்த்தால்
முத்துச்சரம் போலே. அது என்ன?

–வெண்டைக்காய்

2378. தேக்கம் நீர்நிலை வாழும் தவளை அல்ல,
தெருச்சுற்றித் திரிந்துவரும் பேயும் அல்ல,
இருட்டிவிட்டால் கொண்டாட்டம் இரைச்சல் கீதம்
காது நாசிக்குள் நுழைந்து இசைபாடும் வசைக்கான
ஜன்மம். அதன் நாமம் என்ன?

–கொசு

2379. தேகமில்லாத மனுஷன், திராணியில்லாத மனுஷன்,
யூகம் இல்லாத மனுஷன், ஊர் ஊராய்த் திரியவே
வேகமாகவும் போவான். தாகமென்று சொல்லி
அவன் தண்ணீரும் குடிப்பதில்லை. அவன் யார்?

–சைக்கிள்

2380. தேங்கிய நீரிலும் தேசத்தின் பாஷையை
ஓங்கிப் பேசியே உதைபடும் தியாகிகள்.

–தவளை

2381. தேடாமல் கிடைப்பது
தேடும் செல்வத்தைக் குறைப்பது. அது என்ன?

–சோம்பல்

2382. தேடிச் தேடிச் சேர்த்த பொருளை
நாடி வந்தவன் நாசமாக்கிவிட்டான்.
அவன் யார்?

–மது

2383. தேய்க்க நுரைக்கும் அடிக்க வெளுக்கும்.
அது என்ன?

–சோப்பு

2384. தேர் அசைய அசைய பூ உதிர உதிர. அது என்ன?

–எந்திரம்

2385. தேர் ஓடுவதேன்? திண்ணை மெழுகுவதேன்?

–அச்சாணி

–அச் சாணி

2386. தேர் திரிய திசை எல்லாம் உதிரிப்பூ.

–எந்திரம்

2387. தேர்போல அசைகிற திருட்டுக் காளைக்கு
தேடித் தேடிப் பார்த்தாலும்
பிடிக்க மயிர் ஒன்றும் இல்லை.

–ஆமை

2388. தேரூரும் வீதியிலே தெப்பம் சுற்றித் தேக்குமரம்.
சிரித்தால் பூக்கும் சிணுங்கினால் காய்க்கும்

–பற்கள்

2389. தேரோடு பூச்சிந்துது.

–திரிகை

2390. தேவை என்றால் வீசுவார்கள்.
தேவையில்லை என்றால் எடுத்து வைப்பார்கள்.

–வலை

2391. தேவை என்றால் வீசுவோம்
தேவை இல்லை என்றால் எடுத்து வைப்போம்.
அது என்ன?

–நங்கூரம்

2392. தைத்த முள்ளோ சிறிதுதான். தலையைச்
சுழற்றுதே அண்ணாச்சி. மெத்தைச்
சங்கிலிக்காரன் மேனி முள்ளுக்காரன்
சாவகாசம் இப்படித்தான்.

–தேள்கடி

2393. தையலா ளென்றொரு பெண்ணு
பெண்ணுக்காயிரம் கிள்ளு
கிள்ளுக்காயிரம் சொல்லு
சொல்லுக்காயிரம் பொன்னு. அது என்ன?

–புத்தகம்

2394. தையலொடு கூடி தாழ்வாரம் அடி
வெயிலாலே மாய்ந்தவன் வெறியாட்டம்
போடுகிறான். அவன் யார்?

–சட்டை

2395. தொட்டதும் ஒட்டிக்கொள்ளும்
உறவுக்காரன். அவன் யார்?

–தூசி

2396. தொட்டால் சிணுங்காமல் தூக்கி வீசும்.

–மின்சாரம்

2397. தொட்டால் சுருங்கிக்குத் தொண்ணூறு கால்.
அது என்ன?

–மரவட்டை

2398. தொட்டால் துவண்டுவிடும்
அது கடித்தால் தொல்லை வரும்.
அது என்ன?

–கொசு

2399. தொட்டால் பிடித்துக்கொள்ளும் பசையல்ல,
விட்டால் வேலை செய்யும் எந்திரமல்ல. அது என்ன?

–மின்சாரம்

2400. தொட்டால் மணக்கிற ராசா,
துப்பட்டி தொங்கவிட்ட ராசா,

மண்டையில் கட்டிய ராசா,
மாதாகோயில் கூசா.

–எலுமிச்சம்பழம்
உரித்த வாழைப்பழம்
தலைப்பாகை
மெழுகுத்திரி

2401. தொட்டால் மணக்கும் குடித்தால் புளிக்கும்.
அது என்ன?

–எலுமிச்சம்பழம்

2402. தொட்டாலும் குத்தும் பட்டாலும் குத்தும்.

–நெருஞ்சிமுள்

2403. தொட்டிச் ஜெண்டா பறக்குது அதற்கு
அடியிலே சிவப்பு முடியிலே வெள்ளை
நடுவிலே பச்சை நவில்வீர் இது என்ன செடி?

–வெங்காயச்செடி

2404. தொட்டித் தண்ணீரில் எட்டுக் கப்பல்கள்
கிட்டப்போனால் எட்டி ஓடுது.
அது என்ன?

–தவளை

2405. தொட்டுவிடும் தூரத்தில் தெரிவான்.
எட்டிப் பிடிக்க நினைத்தால் முடியாது. அவன் யார்?

–வானம்

2406. தொடையிலே தொடை என்ன தொடை?

–ஆடாதொடை

2407. தொந்தி உடலிலே துவரங்காய்ப் பொட்டலிலே
நாலுபேர் துரைமக்கள் நனையாமல் வாராங்க.
அவர்கள் யார்?

–பசுவின்மடி

2408. தொப்பி கறுப்புப் போலீசு
பெட்டி அதுக்கு வாரிசு.

–தீப்பெட்டி, தீக்குச்சி

2409. தொப்புளில் கோல் பட்டுத்
துடிக்குதாம் பிள்ளை.

–தவில்

2410. தொப்பையனுக்கு ஒரு வாசல்
தோழனுக்கு இரண்டு வாசல். அது என்ன?

–சட்டை

2411. தொலையா வழிநடக்கப் போய்த்
தொல்லை வழியில் பிள்ளையும் பெற்று

மலையராசா புலையராசாவிடம் சொல்லி
அவர் வந்து டக்டக் என்று தட்டி
ஆறாய்ப் பெருக்கி அலைக்கடலாக்குகிறார்.
அது என்ன?

–நுங்கு, பனம்பழம்

2412. தோகைமயிலாள் சொகுசுக்காரி
தோட்டிமகன் கையில் தொல்லைப்படுகிறாள்.
அவள் யார்?

–துடைப்பம்

2413. தோகை மயிற் பீலி தோட்டி கையில் ஜோலி.

–துடைப்பம்

2414. தோசமில்லாத தோசம் தண்ணீர் தோசம்.
என்ன தெரியுமா?

–ஜலதோஷம்

2415. தோசைக்கு மாமா துவையலுக்கும் ஆமாம்.

–உளுந்து

2416. தோட்டத்தலங்காரி துரைமகள் சிங்காரி
கையிலடங்குவாள் களிப்பை உண்டாக்குவாள்
தேட்டமுடனிக் கதையைச் சொல்வோர் தம்மை
தேவருக்கு மேலாகச் செப்பலாமே. அது என்ன?

–வெற்றிலை

2417. தோட்டத்திலே தொங்குதடி அழகு செம்பு கட்டி
சுவையான நீரமுதமும் இருக்கு அதற்குள் கொட்டி

–இளநீர்

2418. தோட்டத்திலே நெத்துக்காய் தொங்குவது
பார்த்தேன். வீட்டுக்குக் கொணர்ந்து வெட்டிப்
பார்த்தேன். தோட்டுக்குப் பத்துக்கல்
ஜ்வலித்ததும் வேர்த்தேன். அது என்ன?

–வெண்டைக்காய்

2419. தோண்டித் தோண்டி மண்ணை தூக்கணாம்குருவி
ஒண்ணை துளைக்குள்ளே போட்டார். ஆறேழு வருசம்
கழிச்சு ஆகா ஓகோ உயரத்திலே ஆத்தாடி
எத்தனை முட்டை. அண்ணாந்து அண்ணாந்து பார்க்க
அறுந்துபோகுது தலையே. அது என்ன?

–பனைமரம்

2420. தோண்டி வச்ச பொருளும் நீண்டுகொண்டு வருது.

–விதை முளைப்பது

2421. தோண்டுவான் முடக்குவான். அவன் யார்?

–நாய்

2422. தோப்புத் துலாமரம் தொங்குது மாமரம்
காய் கனத்த காய் கைபட்டால் கொட்டிப்போகும்.
அது என்ன?

–நெல்

2423. தோல் இருக்கச் சுளை விழுங்க. அது என்ன?

–வாழைப்பழம்

2424. தோலை உரிக்கும் அது பாம்பு அல்ல.
துவண்டுபோகும் அது கீரைத்தண்டும் அல்ல.
நாதர்முடி மேல் இருக்கும் நிலவும் அல்ல.
பசி வந்தால் தின்னச் சொல்லும் பண்டமும் அல்ல.
அது என்ன?

–வாழைப்பழம் (பஞ்சாமிர்தமாக
ஈஸ்வரன் தலையில் இருக்கும்)

2425. தோல் உரிச்ச பாம்பு தொப்பென்று
கிணற்றிலே துள்ளாமலே விழுந்தது
சொல்லாமலே மறைந்தது. அது என்ன?

–பழம் பசியோடு வயிற்றுக்குள் போனது.

2426. தோல் உரிச்சு பிடி எடுத்த முத்துக்குட்டி.

–சோளக்கதிர்

2427. தோல் காய், தொங்கு காய், துவரம் காய் எவை?

–வாழைக்காய்,
புடல், துவரை.

2428. தோலைக் கழற்றி எறிந்தவன்
தொலைதூரம் போய்விட்டான். அவன் யார்?

–பாம்பு, சட்டை

2429. தோலையுரித்து வாலை நறுக்கித்
தொங்கும் நரம்பைச் சேர்த்துக் கட்டி
அங்குமிங்கும் பந்தடிக்கும்
அடுக்களையில் மறைந்துகொள்ளும்.
அது என்ன?

–துடைப்பம்

2430. நகராமல் ஓடுவான் நல்லதம்பி. அவன் யார்?

–கடிகாரம்

2431. நங்கை கல்யாணத்தில் நலுங்கு இடுவதற்கு மேலே
தங்கை விரல்களையும் தழுவும்படி ஒரு தாலி. கட்டின
அந்தத் தாலி தரையைத் தட்டித் தட்டி தாளம்
போட்டு ஆடுது. 'சல்சல்' என்று சப்தம் அதன்
சதுராலே போடுது!

—மெட்டி

2432. நங்கையர் என்னைப் பேசுவார் இழிவாய்
நான் இல்லாவிடில் நாறிப்போகும் வீடெல்லாம்.
நான் யார்?

—துடைப்பம்

2433. நட்டநடுக் காட்டுக்குள்ளே நரித்திருடன் ஒருத்தன்
திரிநூலை ஏனோ திரிந்து விடுகிறான்.

—எறும்பு

2434. நட்டமாய் நிற்கிறவனுக்கு
நறுக்கு நறுக்கென்று கடிக்கும் வேலை.

—அரிவாள்மனை

2435. நட்டாற்றில் முட்டை மிதக்குது.

—பரிசில்

2436. நட்டேரி நடுவில்
நடுத்தம்பி குழல் ஊதுகிறான்.

—தவளை

2437. நடக்கத் தெரியாதவன்
நட்டுவனாருக்கு வழிகாட்டுகிறான்.

—கைகாட்டி

2438. நடக்க மாட்டாதவன் வீட்டுக்கு
உட்காரமாட்டாதவன் போகிறான்.

—மரமும் வௌவாலும்

2439. நடக்கமுடியாது ஆனால் நகராமல் இருக்காது.

—கடிகாரம்

2440. நடக்க வக்கில்லாத நொண்டி
நாலுபேருக்கு வழி சொல்கிறானாம்
எப்படி கதை? செப்புவீர் விடை!

—கைகாட்டி

2441. நடமாடும் வீட்டுக்குச் சொந்தக்காரர்.
நடந்துபோனால் ஆமைக்கும் குறைந்த வேகம்.
அது என்ன?

—நத்தை

2442. நடலாம்; பிடுங்கமுடியாது.

–பச்சைகுத்துதல்

2443. நடவா எருமை நாலுசேர் பாலைக் கடிதே ஈயும்
காலையும் மாலையும் பிடி மேய்ச்சலில்லை,
பேராவலோடு குடி கன்றுமில்லை, குலவாயனுளன்.
அது என்ன?

–பனைமரம்

2444. நடுக்காட்டில் ஒரு கூழ்ப்பானை
திறந்து கிடக்குது. அது என்ன?

–கிணறு

2445. நடுக்காட்டில் பொங்கல் வைத்து இறக்கியிருக்கிறது.
நாயுந் தொடாது பேயுந் தொடாது. அது என்ன?

–சுண்ணாம்புச்சட்டி

2446. நடுக்காட்டில் மழை பெய்யும்போது

நான்கு பேர் நனையாமல் வருகிறார்கள்.
அது என்ன?

–மாட்டின் காம்புகள்

2447. நடுக்காட்டில் வெள்ளைவேட்டி
விரித்துக் கிடக்குது.

–குளம்

2448. நடுக்காட்டிலே குந்தியம்மா
குடை பிடிக்கிறாள். அவள் யார்?

–காளான்

2449. நடுக்காட்டிலேயிருந்து திருடன் கயிறு விடுகிறான்.

–எறும்பு

2450. நடுக்காட்டுக்குள் நாலு ராஜா
குடை பிடித்துக்கொண்டு நிற்கிறார்.

–மாட்டுக் காம்பு

2451. நடுக் காட்டுக்குள்ளே ஒரு சொட்டு ரத்தம்.

–குன்றிமுத்து

2452. நடுப்பகல் வேளையில் நசுக்கப்பட்டு நலியும்
மாலைச் சூரியன் மஞ்சள் கதிர் நீட்டும்போது
மறு உருவம் பெறும். அது என்ன?

–நிழல்

2453. நடுமரத்திலே கிளி இருக்க நங்கை இரண்டுபேர்
சுற்றிவர மின்மினிப்பூச்சி ஒளி சிதற
தேனி முட்டைப் பொடி ஆகுதடி.

–கேழ்வரகு

2454. நடுவிலே இருக்கும் கருப்பு ராசாவுக்கு
நாலா பக்கமும் வெள்ளையர் காவல்.

–கரும்பலகை

2455. நடுவே இருக்கும் கறுப்பனுக்கு
நாற்புறமும் வெள்ளையர்கள் காவல்.

–சிலேட்

2456. நடைக்கு உவமை நளனுக்குத் தூதுவன்.
அவன் யார்?

–அன்னம்

2457. நடையேறி நாணம்விட்டு வந்தால் கூட
நகை செய்து வரவேற்பார் யாரும் காணேன்.

–செருப்பு

2458. நத்தைக் காசுக்கு அப்பம் வாங்கி
ஊருக்கெல்லாம் கொடுத்தேன்.

–சந்திரன்

2459. நத்தைக் காதுப் பையன் ஊடுருவிப் பாய்கிறான்.

–ஊசி

2460. நம்ம ஊருக் கோட்டை நாற்கால் பந்தல்
போட்டே சரம் சரமாகச் சாட்டைத்
தொடங்குது யாரைக் கேட்டே?

–புடலங்காய்

2461. நம்மவீட்டுப் பெண்ணை நாக்கை நீட்டச்
சொல்லிப் பார்த்தேன். நுனி நாக்குச் சிவப்பு
நடுவிலோ வெள்ளை அடியில் பார்த்தா பச்சை
அடி ஆத்தாடி என்ன புள்ளை?

–தேசியக்கொடி

2462. நம்மிடம் பிறந்த சித்திரம்
நம்மையே தொடர்ந்த சித்திரம். அது என்ன?

–நிழல்

2463. நம்மோடு பிறந்து நம்மோடு வளர்ந்து
நம்மோடு மடிவான். அவன் யார்?

–வயது

2464. நமக்குரியதை நம்மைவிட மற்றவர்கள் தான்
அதிகம் பயன்படுத்துவார்கள். அது என்ன?

–நமது பெயர்

2465. நரம்பு இல்லாத இலை
நாக்கு ருசிதர இலை.

–அப்பளம்

2466. நரைத்த கிழவி குதித்து ஓடுகிறாள். அது என்ன?

–சாம்பல்

2467. நரைத்த கிழவி ஊரெல்லாம் ஆடுகிறாள்.

–புகை

2468. நரைத்த தலைமுடியிலே நறுக்கிவிட்ட முறையிலே
அரைக்குள் நாணும் குஞ்சமே; அசைக்க
அழகு கொஞ்சுமே!

–வெண்சாமரை

2469. நல்லபாம்புப் படம் மூன்று
நற்கதலிப் பழம் நான்கு
பச்சைப் பாம்பு ஐந்து
இத்தனைக்கும் காம்பு ஒன்று.
அது என்ன?

–ஆவரமொட்டு

2470. நல்ல பெண்ணு உத்தமிக்கு
நடுக்கடலில்ஒட்டை.

–வடை

2471. நல்லவர் கொள்ளும் தானம்
நாலுபேருக்குத் தராத தானம்.
அது என்ன?

–நிதானம்

2472. நல்லாமூரு வீதியிலே நாலெட்டு தென்னைமரம்.
காய்க்காது; பூக்காது; அத்தனையும்
வெள்ளைமரம். அவை என்ன?

–நமது பற்கள்

2473. நறுக்க உதவாத கறுக்கு அரிவாள்
எங்கோ நட்டாற்றில் கிடக்குது.

–பிறைச்சந்திரன்

2474. 1. நன்மையின் பெயர்
2. வாசனைப் பெயர்
3. கமலப் பெயர்
4. சிவன் பெயர்

5. ஒரு ஆண்டின் பெயர்
6. ஒரு மரத்தின் பெயர்.
இப்பெயர்களில் நடு எழுத்துக்களை ஒன்றுசேர்த்தால்
விஷ்ணுவின் பெயர். அது என்ன?

–சுபம், வதுவை, தாமரை, அநாதி,
விபவ, வன்னி(பதுமநாபன்)

2475. நன்றி உள்ளவன்
நம்பு மிக்கவன்
கொன்று போட்டாலும்
கூடிக் குலாவுவான். அவன் யார்?

–நாய்

2476. நன்றாகச் சுமைதாங்கும்
நன்றாக உதைவாங்கும். அது என்ன?

–கழுதை

2477. நாக்கு இல்லாதவன்; நல்லது சொல்வான்.
அது என்ன?

–புத்தகம்

2478. நாக்கு என்றால் நாக்குப் பிளவுபடா நாக்கு
நல்லெண்ணக்காரருக்கு நாத்தானார் நாக்கு
அது என்ன?

–பிண்ணாக்கு

2479. நாக்கு நீட்டியிருக்கும்
மண்டலம் போட்டிருக்கும்
சின்னவர்கள் பெரியவர்கள்
மடியிலே இருக்கும். அது என்ன?

–விசிறி

2480. நாக்குப் பிறளாதிருக்கு நாகப்பாம்பல்ல
நாலு வார்த்தை சொல்லாததால் ஞானியும் அல்ல!
காகிதத்தைக் காதலிக்கும் யோகி இவனே!

–பேனா

2481. நாக்கை ஊன்றியே நடுத்தெருவில் ஆடுவான்
மூச்சுத் திணறிவிட்டால் முடங்கிக் கிடப்பான்.

–பம்பரம்

2482. நாக்கை நாக்கை நீட்டும் பாம்பு
நல்ல சித்திரம் ஆடும் பாம்பு
தேவர் கையில் அடங்கும் பாம்பு
தேவன் அணையும் பாம்பதுவன்று.
அது என்ன?

–தராசு

2483. நாகரு பட்டணம்
நான்கு வாசலுக்குப் பதினாறு பெண்.
அவர்களுக்கு இரண்டே ராஜா.
அது என்ன?

—சொக்கட்டான்

2484. நாகைமலை தோகைமலை நடுவிலொரு பாலைமலை
பாலைமலைக் கடிவாரம் செந்தாமரைப் புட்பம்
புட்பத்துக் கடிவாரம் வால் நீண்ட குருவி
குருவிக்கிரையெடுத்தால் விழுங்காமற் கிடக்கும்.
அது என்ன?

—அகப்பை

2485. நாகோஜி ராஜாவே நாலுகால் மந்திரியே
தொங்கத் தொங்க நாக்கழகு
தின்னத் தின்னப் பல்லழகு
தும்பைப் பூ போல் வாலழகு.
அது என்ன?

—நாய்

2486. நாட்டாண்மைக்காரன் பெண்டாட்டியை
ஓட்டிலே போட்டு மூடியிருக்கு.

—புளியம்பழம்

2487. நாட்டார் மகளை ஓட்டால் மூடியிருக்கிறது.

—புளியம்பழம்

2488. நாட்டில் மிகவும் வலிமைமிகுந்த
நாடு என்ன நாடு?

—வல்லநாடு, உரத்தநாடு

2489. நாடி நாடி நீட்டும் கை.
தேடித்தேடி அலையும் கை.
கோதிக் கோதி முடிக்கும் கை.
ஊதி ஊதிஓட்டும் கை.

—நகை (ஆபரணம்), தகை (பெருமை)
சிகை (கூந்தல்), புகை

2490. நாடியைத் தாங்குவார் நாணயம் வாங்குவார்.

—வைத்தியர்

2491. நாடெல்லாம் சுற்றுவான் சுற்றினதிற்கு
அடையாளம் கோடுபோட்டுக் காட்டுவான்.
கூறுங்கள் அவன் பெயரை?

—குதிரை

2492. நாத்திலே நாத்து மிகச் சிறந்து நாத்து,
பின்னால் என்றும் திரும்பி வராத நாத்து. அது எது?

—நேற்று முன்தினம்

2493. நாமும் ஏறும் காளையில் நானூறு
ஓட்டை தெரியுதே. அது என்ன?

—நாற்கட்டில்

2494. நாய் செத்தால் திங்கலாம்
தின்றால் செவ்வையா யிராது
செவ்வையா யிராவிட்டால் புதைக்கலாம்
புதைத்தால் வியாஜ்யம் வரும்
வியாஜ்யம் வந்தால் வெளியாகும்
வெளிவந்தால் அது கிடக்கிறது சனி!
அது என்ன?

—ஞாயிறு முதல் சனிவரை

2495. நார்ப்பட்டு நானூறு நங்கையவள் உடுத்தியே
நல்லாத்தான் வளர்ந்தாள். நீர்பட்டு நனைய
நனையவே நிறையக் கை முளைத்ததும் கையை
அறுக்கிறான். நைய அதன் எலும்பைக் குத்துகிறான்.
ஐயோ, என்னைத்தான் அன்புள்ளம் கொண்டவரே
யாரு என்று பாருங்கள். எனக்குதவி தாருங்கள்!

—வாழைமரம்

2496. நாரில்லாத நாரு வாசனை நாரு,
என்ன நாரு இயம்புங்கள் பார்க்லாம்.

—நாத்தனார்

2497. நாரிலே நாரு என்ன நாரு?

—கிழவனாரு

2498. நாலா வழிக்கும் நல்லது நம்பிக்கைத்
துரோகம் உள்ளது. அது எது?

—பூனை

2499. நாலா வழியிலும் போகும்
நம்பிக்கை துரோகமும் செய்யும்.

—பூனை

2500. நாலிலை ஒரு பந்தலடா தோழா
மொள்ள நீர் மொண்டுதடி தோழி
அள்ளாமல் குறைந்ததடா தோழா.
அது என்ன?

—தென்னை

2501. நாலு உலக்கை குத்தி வரும்
இரண்டு முறம் புடைச்சு வரும்
ஒரு துடுப்பு துழாவி வரும்
துரைமகன் ஏறி வாரான்.

–யானை

2502. நாலு கால் இருந்தும் நடக்காது.
அது என்ன?

–நார்க்கட்டில்

2503. நாலு கால் இருந்தும் நடக்காது. *அது என்ன?*

–நாற்காலி

2504. நாலு கால் உண்டு
நடுவில் உடல் இல்லை.

–கட்டில்

2505. நாலு கால் உண்டு வீச வால் இல்லை.

–நாற்காலி

2506. நாலு கால் ஓடமது; நாணமுள்ள இயந்திரமாம்;
உறவில்லா உறவினர்க்கு உயிர் கொடுக்கும்;
தெய்வம் அது யார்?

–பசு

2507. நாலு கால் நகாரி வால் இல்லாக் கெடேரி.
அது என்ன?

–தவளை

2508. நாலு கால் மன்னா நாளைச் சாவாய்
யாருடா சொன்னா சென்னியிலே கண்ணா
குடல் இல்லா மன்னன் கூப்பிட்டுச் சொன்னான்.
அது என்ன?

–ஆடு, தவளை, மத்தளம்

2509. நாலு காலரே சோணை வாலரே
நாளை போகுது உந்தன் தலையே!
பத்துத் தலையரே பக்கத்துக் கண்ணனே
உரைத்தது யாரு உனக்கு இதையே!

–ஆடு, நண்டு

2510. நாலு காலுண்டு நாற்காலியல்ல,
மேலே விரிப்புண்டு பல்லாக்குமல்ல,
பாங்காகப் படுத்ததும் நித்திராதேவி கூப்பிடுவாள்.
அது என்ன?

–கட்டில்

2511. நாலு கால் உண்டு, வீச வால் உண்டு.
அது என்ன?

–கட்டில்

2512. நாலு காலு நங்கைக்கு நடமாட்டமும் உண்டு.
படுக்களமும் உண்டு. அந்த நங்கை பேர் என்ன?

–கட்டில்

2513. நாலு காலு மச்சான்
நடு வீட்டுக்கு உதவான்
கூடக் கூட வருவான்
குப்பை மேட்டில் கிடப்பான்
உண்மை உழைப்பாளி ஊருக்குக் கடையாளி.
அவன் யார்?

–நாய்

2514. நாலு காலு மீனா
நாளையுனக்குச் சாவு காலம்.
உச்சியில் கண்ணா
உனக்கு யார் சொன்னா?
குடலில்லா மன்னன் கூப்பிட்டுச் சொன்னான்.
அவை என்ன?

–ஆடு, உழுவமீன், கத்தி

2515. நாலு திசையும் காற்று சுற்றி பெய்த
மழையிலே நடுக்காட்டில் வெண்பட்டு
விரிந்து கிடக்குது.
அது என்ன?

–குளம்

2516. நாலு பாப்பான் நனையாமப் போறான்.
அவன் யார்?

–மாட்டுக்கொம்பு

2517. நாலு பாம்பு தூக்கிவர
நல்லண்ணன் படுத்திருக்க
அவன் மேலே நாங்களெல்லாம்
ஆடிக் களித்திருக்க. அது என்ன?

–ஊஞ்சல்

2518. நாலுபேர் சப்பரம் தூக்கிவர
நடுவே ஆயக்கால் போட்டுவர
பக்க வெஞ்சாமரை ஆடிவர
பட்டயக்காரரும் ஏறிவர

ஆடி அசைந்த மலைபோலே
அதோ வருவது என்ன பெண்ணே?

–யானை

2519. நாலுமுக்குக் களத்திலே நங்கை பிடிச்சபோதிலும்
நாச்சியார் ஓடி ஆடுகிறாள். தடுத்துக் கொஞ்சம்
பார்த்ததும் தலையைத் தடவிச் சாடுகிறாள்.

–அம்மியும் குழவியும்.

2520. நாலு மூக்குப் பெட்டி நந்தவனப் பெட்டி
ஓடும் குதிரைக்குட்டி வீசும் புளியாக்கை என்ன?

–கிணறு, கமலை, மாடு, சாட்டை

2521. நாலுமூலைக் கிணறு நாகரெத்தினக் கிணறு
எட்டிப் பார்த்தால் சொட்டுத் தண்ணீர் இல்லை.
அது என்ன?

–அச்சுவெல்லம்

2522. நாலு மூலை நக்கி, ஒரு மூலை குச்சி.
அது என்ன?

–விளக்குமாறு

2523. நாலுமூலை நாடகசாலை
நடுவிலிருக்கும் பாடகசாலை
ஆடும் பெண்கள் பதினாறு
ஆட்டிவைப்பவர் இரண்டு பேர்.
அது என்ன?

–சொக்கட்டான்

2524. நாலுமூலைப் பெட்டி நந்தவனப் பெட்டி
ஓடும் குதிரைக்குட்டி. அது என்ன?

–அம்மி, குழவி

2525. நாலுலக்கை குத்திவர
இரண்டு முறம் புடைத்துவர
துடுப்புத் துழாவிவர
வெண்சாமரம் வீசிவர
துரைமக்கள் ஏறிவர.
அது என்ன?

–யானை

2526. நாளெல்லாம் ஓடும்; நடக்காது;
எப்போதும் முணுமுணுக்கும்; தூங்காது.
அது என்ன?

–நதி

2527. நாற்கால்காரி நடவாள் படுப்பாள். அது என்ன?

—கட்டில்

2528. நான் அழுதால்தான் நீங்கள் சிரிக்கமுடியும்.
அது என்ன?

—உடலெங்கும் வியர்வை

2529. நான் இழுக்க நீ இழுக்க
நட்டுச் சப்பரம் கட்டி இழுக்க
நாய் குலைக்க வள்ளென்ன
நாகப்பட்டினம் கீறீச்சென்ன.
அது என்ன?

—தயிர்கடைதல்

2530. நான் ஏறும் குதிரைக்கு உடல் எல்லாம் ஓட்டை.

—கட்டில்

2531. நான் ஏறும் குதிரை நாலுகால் குதிரை
அந்தக் குதிரைக்கு ஆயிரம் கண்கள்.
அது என்ன?

—கட்டில்

2532. நான்கு காலுண்டு நாற்காலி அல்ல
மேலே விரிப்புண்டு பல்லாக்கும் அல்ல.
அது என்ன?

—கட்டில்

2533. நான்கேழு நாள் வருவாள்
நாள் ஒன்றில் தான்மறைவாள். அவள் யார்?

—நிலவு

2534. நான் புகாத பொட்டுக்குள்ளே என் தம்பி
சங்கரப்பிள்ளை புகுந்துவிட்டான்.
அது என்ன?

—ஊசிநூல்

2535. நான் புகாத பொட்டுக்குள்ளே
தம்பி பஞ்சுப்பிள்ளை புகுந்துவிட்டான்.

—ஊசி, நூல்

2536. நான் பெற்ற பிள்ளைக்கு ஒற்றைக்கண்.
அது என்ன?

—ஊசி

2537. நானும் கறுப்பு நான் உண்ணும்
உணவும் கறுப்பு. நான் யார்?

—ரயில் எஞ்சின்

2538. நித்தம் குளிக்குமாம் பொத்தக்கிடா
கூடக் குளிக்குமாம் குட்டிக்கிடா. அது என்ன?

—அம்மி, குழவி

2539. நித்தம் கொட்டும் சத்தம் இல்லை. அது என்ன?

–கண் இமை

2540. நித்தம் நித்தம் உழுவான், பல் வரிசைக்காரன்.
அவன் யார்?

–சீப்பு

2541. நித்திரையின் தூதுவர், நினைக்காமலேயே
வருவான், போனால் வரமாட்டான்,
பிடிபடவும் மாட்டான். அவன் யார்?

–கொட்டாவி

2542. நிம்மதியைக் கலைப்பது நித்திரைக்கு உரியது.
அது என்ன?

–கனவு

2543. நிரப்பலாம், பிடிக்க முடியாது
உணரலாம், காணமுடியாது.

–காற்று

2544. நிலத்தில் இருப்பான் நீரில் இருப்பான்
வாலொடு பிறப்பான் வாலையும் இழப்பான்
கை முளைக்கும் கால் முளைக்கும்
கத்தலும் தத்தலும் அதிகரிக்கும்.

–தவளை

2545. நிலத்தில் முட்டை வச்சு நிருத்திப் பார்த்து வந்தேன்
ஆறு வருஷம் சென்று அண்ணாந்து பாக்கையிலே
தொண்ணூறு முட்டை தொகையாகக் கிடைச்சது.
அது என்ன?

– தென்னை

2546. நிலத்திலே முளைக்காத செடி நிமிர்ந்து
நிற்காத செடி. அது என்ன?

–முடி

2547. நிலத்தில் வரும் நீரில் வரும் தவளையன்று
நீட்டியதன் தலையிழுக்கும் நத்தையன்று
பலத்த ஓர் ஓடிருக்கும் தேங்காய் அன்று
பாய்ந்து வரமுடியாது பாம்பும் அன்று. அது என்ன?

–ஆமை

2548. நிலத்திலே பிறந்து நீரிலே வாழ்பவன்
நிலத்தைத் தொட்டால் நிலைகுலைந்து போவான்.
அவன் யார்?

–கப்பல்

2549. நிலத்திலே முளைக்காத புல்.
நிமிர்ந்தும் நிற்காத புல். அது என்ன?

–தலைமுடி

2550. நிலத்திலே முளைக்காது.
நீண்ட கொடி வீசாது.
காய்க்காது, பூக்காது.
கனியே சாப்பிடலாம். அது என்ன?

–தேன்

2551. நிலத்தைச் சுற்றிவரும் நீண்ட நெடும்
கயிறு பாலத்திலும் தலத்திலும்
போக்குவரத்துக்குப் புகலே அவர் துணை?

–வழிப்பாதை

2552. நிலம் நோக்கி வரும்
நுரை கக்கிச் செல்லும். அது என்ன?

–கடல்அலை

2553. நிறையத் தின்னாலும் நீர் குடிச்சாலும் மாளும்.

–நெருப்பு

2554. நீட்டிக்கொண்டு நடுவே படுக்கும்.
சுருட்டிக்கொண்டு மூலையில் நிற்கும். அது என்ன?

–துடைப்பம்

2555. நீட்டிக்கொண்டு நடுவே படுக்கும்
சுருட்டிக்கொண்டு மூலையில் நிற்கும். அது என்ன?

–பாய்

2556. நீண்ட உடலாயிருக்கும் தூணுமல்ல
கையினால் பிடித்தணைத்தால் மெலிவாய்க் காணும்
கந்தமுள்ள பூவல்ல
துயிலுக்கோ இவளன்றிச் சுகமில்லை மாநிலத்தில்
மங்கையல்ல
மதித்துரைப்பீர் இக்கதையில் வளத்தை நீரே.

–தலையணை

2557. நீண்ட உடலிருக்கும் தூணுமல்ல
உடலில் சட்டையிருக்கும் உயிரில்லை
துயிலுக்கோ சுகமிருக்கும் மெத்தையல்ல.
அது என்ன?

–தலையனை

2558. நீண்ட உடலிருக்கும் நேரே படமிருக்கும்
தீண்டும்போதே யெழுந்து சீறுமே

வேண்டினபேர் மந்திரத்திற் கட்டினதோர்
பாட்டினிலே நின்றாடுஞ் சுந்தரஞ்சேர் பாம்புமல்ல.

-தம்புரா

2559. நீண்ட நெடும்பாம்பு
நெளியாத கரும்பாம்பு
அசையாது படுத்திருக்கும்
அடிபட்ட செத்த பாம்பு. அது என்ன?

-ரயில்தண்டவாளம்

2560. நீண்ட பச்சை வேலால் கொண்டுவந்து
நெஞ்சை நீளக் கிழித்துப் போட்டு
வெண்ணெய் நீவிவிட்டு வீசி எறிய
முள்ளம் கொட்டை ஒன்றை வெட்டி
கொஞ்சம் போட்டுக்கொண்டேன். வெட்டுக்காயம்
ரத்தம் வெளிய தெரியல் ஆச்சு.

-வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

2561. நீண்ட வழி போனாலும்
நிறை அறியாத பாரம் என்ன பாரம்?

-வயிற்றுப்பிள்ளை

2562. நீண்ட வால் புகையிலை நீரில் வாழும் புகையிலை
துண்டம் போட்ட வகையிலே
சுட்டும் வெந்தும் தின்பாராம்.

-மீன்

2563. நீண்ட வாலுப் பறவைக்கு
நிலவுக்குத் தாவும் பறவைக்கு
நெருக்கிப் போட்ட கடிவாளம் இருக்கு
தம்பியின் கையிலே. அது என்ன?

-பட்டம்

2564. நீந்தத் தெரியும் மீனும் அல்ல
நடக்கத் தெரியும் மனிதன் அல்ல
இறக்கை கொண்ட பறவைதான்
இறகு கொண்டு பறக்காது. அது என்ன?

-வாத்து

2565. நீந்துவதற்கும் தொங்குவதற்கும்
ஒரேநாளில் திருமணம். அது என்ன?

-மீன், புளி

2566. நீ நீட்ட, நான் மாட்ட கலகல என்று
கன்னிப்பெண் சிரிக்கிறாள். அது என்ன?

-வளையல்

2567. நீயும் நானும் அழியாமல்
குப்பிக்குள்ளே தண்ணீர் கொட்டிப்போனது யாரு?

—தேங்காய்

2568. நீயும் நானும் பார்த்திருக்க
பொன்னாங்கண்ணி பூத்திருக்கு. அது என்ன?

—சோறு

2569. நீர் ஓடி நிலம் பாய்ந்து
நிலத்து வாழைக்குருத்து விட்டு
கார் ஓடிய மணலிலே
கதுவாளி முட்டையிட்டது. அது என்ன?

—காளான்

2570. நீர் கசியும் ஊற்று நிழல் நிறத்து
ஊற்றுக்கு நெட்டையான முடி ஒன்று. கொஞ்சம்
பார்ப்பதற்கு கட்டையான முடி ஒன்று. அது என்ன?

—கண்கள்

2571. நீர் வற்றியபோது உருவானவன்.
நீர் ஊற்றியபோது காணாமல் போவான். அவன் யார்?

—உப்பு

2572. நீராலே பிறந்து நீராலே அழியும்
நித்தனித்தம் சுகம்தரும் பொருளது உரைப்பாயே.

—உப்பு

2573. நீரில் உள்ள கல் எது?

—கலங்கல்

2574. நீரில் நீந்துவேன் நிலத்தில் உயிர்விடுவேன்
வயிற்றுக்குள் புகுந்தால் கண்பார்வை
கொடுத்திடுவேன். நான் யார்?

—மீன்

2575. நீரில்லாக் குளத்திலே நீண்ட கொடி ஒன்று
வாடாது வதங்காது பூக்காது காய்க்காது. அது என்ன?

—கைரேகை

2576. நீரில்லாத குளத்தில் நீந்தி
விளையாடும் மீன். அது என்ன?

—கண்

2577. நீரில்லாத குளத்திலே நீந்திப்போவுது தோணி.

—ஒட்டகம்

2578. நீரில்லா நெடுங்குளத்து ஏரியில்
ஆளில்லா ரெண்டன்னங்கள் மேயுது
அதைக் காலில்லாதவன் ஓடி மறித்தான்
கையில்லாதவன் கட்டிப்பிடித்தான்.

–சூரியன், சந்திரன்
மேகம், புல்பூண்டு, செடி, கொடி

2579. நீரிலும் வாழும் மீன் அல்ல.
கொம்பு உண்டு. மாடு அல்ல.
அது என்ன?

–நத்தை

2580. நீரிலே உயிர் பெற்று
நிலத்திலே நீர் இறைப்பான்.
அவன் யார்?

–மின்சாரம்

2581. நீரிலே கொண்டாட்டம்
நிலத்திலே திண்டாட்டம்.
அது என்ன?

–மீன்

2582. நீரிலே பிறந்து நீராலே அழியும்
நித்த நித்தம் சுகம்தரும் பொருள் எது?

–உப்பு

2583. நீரிலே பூக்கும் பூ,
காய்க்குது பழுக்காது
வண்டு வந்து மொய்க்காது
கொண்டையிலே இருக்காது.

–உப்பு

2584. நீரிலே பூத்த பூ,
தலையிலே சூடாத பூ. அது என்ன?

–உப்பு

2585. நீரிலே விளையும் பூ
நிலத்திலே வேரோடாப்பூ
மாதர் கொண்டைக்கு ஆகாப்பூ
ஊரெல்லாம் உலாவி வரும் பூ என்ன பூ?

–உப்பு

2586. நீருக்குள் இருக்கும் மீனும் அல்ல.
வெளியில் வந்தால் எரியும் நெருப்பும் அல்ல.

– பாஸ்பரஸ்

2587. நீரும் அதற்குள்ளே நிழலும் அதற்குள்ளே
நீராழி மண்டபம் தானும் அதற்குள்ளே
காளை கட்டக் கயிறும் அதற்குள்ளே
காணம் கண்ட விறகும் அதற்குள்ளே.
அது என்ன?

–தேங்காய்

2588. நீரும் இல்லை; நிலமும் இல்லை;
ஆனால் கரைமட்டும் உண்டு. அது என்ன?

–சர்க்கரை

2589. நீரேறத் தலைநிமிரும் வாலும் கூழை
நிற்பதுகீழ் இருகாலும் ஒருகால் மேலே
சீருடனே ஒரு காலின் நடக்கும்போது
திடமாக மேலிரண்டால் சுமைசுமக்கும்
வாரணியும் கொம்புமுண்டு ஓடிப்பாயும்
வண்மையுள்ள இக்கதையை வழுத்துவீரே.

–ஏற்றம்

2590. நீரோடி நிலம் பாய்ந்து
நிலத்து வாழைக் குருத்தோடி
காம்போடி சிறிய கயிறோடி
காக்கை உட்கார இடமில்லை.

–நெல்

2591. நீரோடு நிலங் காய்ஞ்சி
நிலவாழைக் குருத்துட்டு
கருவு இல்லாத மொட்டு என்ன மொட்டு?

–காளான்

2592. நீலக்கடலிலே வெண்பஞ்சு மிதக்குது.
அது என்ன?

–வெண்மேகம்

2593. நீலச்சுளி கொண்டால் நீருக்குள் மாள்வான்.
அவன் யார்?

–தீ

2594. நீல நிலத்தில் நித்தில முளைகள். அது என்ன?

–விண்மீன்

2595. நீலநிறத்தான் எல்லை நெடுந்தூரம். அவன் யார்?

–வானம்

2596. நீல நிறத்தில் நித்தில முளைகள். அவை என்ன?

–நட்சத்திரங்கள்

2597. நீல நிறத்து அழகி நான்
நித்த நித்தம் வேண்டும் அழகி நான்
ரச அழகி நான்ருசி அழகி நான்
விலையும் ஏறிவிட்டேன் நானேதான்.
நான் யார்?

—புளி

2598. நீலநிறத் தோட்டத்திலே
மஞ்சள் பூப் பூத்திருக்கு. அது என்ன?

—பௌர்ணமி நிலவு

2599. நீல நிறமுடையான், உயிர்கள் பல உடையான்,
உலகில் முக்கால் அவனே! அது என்ன?

—கடல்

2600. நீல நிற மேடையிலே கோடிமலர் கிடைக்குது,
எடுப்பாரும் இல்லை, தொடுப்பாரும் இல்லை,
அது என்ன?

—வானம், நட்சத்திரம்

2601. நீலப்பட்டுக்காரி
நிலையில்லாப் போக்குக்காரி
ஊருக்குதவும் பாரி
உலகினர் வேண்டும் நாரி. அது என்ன?

—மேகம், வானம்

2602. நீலப்பாவாடை கட்டி நிருத்தமிடும் பேரழகி
காலைக் கதிரவனைக் கட்டி அணைத்தனுப்ப
மாலை அலைக்கரத்து மந்திரஒலி எழுப்பி
மறுநாளும் அவன் மடியில் திருநாள் கொண்டாடும்
தேவி அவள் பெயரென்ன செப்புவீர் பெரியோரே!

—கடல், குமரி

2603. நீல மேனி கொண்டவன்; நிலத்தைச்
சுற்றி அலைகிறான். அவன் யார்?

—கடல்

2604. நீள்சதுர உடல் இருக்கும் பெட்டி அல்ல.
உடல் சட்டை போடுவதால் மனிதர் அல்ல.
போட்ட சட்டை கழற்றுவதால் பாம்பும் அல்ல.
போக துயில் சுகம் தருவாள். பெண் பேர் என்ன?

—தலையணை

2605. நீள உடம்புக்காரன்
நெடுந்தூரப் பயணக்காரன். அவன் யார்?

—ரெயில்

2606. நீறு பூசி நிற்கும் அது பூசணி அல்ல.
நிறம் மஞ்சள் பூச்சிருக்கும் எலுமிச்சையும் அல்ல.
மடக்குக் கொம்பும் உண்டு மச்சக்காளை அல்ல.
குண்டு மணி தெரியும் அதில் கருவிழியும் அல்ல.
உருண்டு திரண்டிருக்கும் உதைக்கும் பந்து அல்ல.
கண்டவுடன் நாக்கு ஊறும் கல்லுக்குப் பேர் என்ன?

–லட்டு

2607. நுனி சிவப்பு அடி பச்சை
நடு வெள்ளை அது நமது பிள்ளை.

–இந்திய தேசியக் கொடி

2608. நூல் இல்லை ஊசி உண்டு
வாய் இல்லை பாடும். அது என்ன?

–கிராமபோன்

2609. நூல் நூற்கும். இராட்டை அல்ல,
ஆடை நெய்யும். தறியல்ல. அது என்ன?

–சிலந்தி

2610. நூலுக்கு வழிக் கருவி
மாதருக்குத் தொழிற்கருவி. அது என்ன?

–ஊசி

2611. நூறு கடையை மூடினால் ஒரு கடை.
அது என்ன?

–புத்தகம்

2612. நூறு கிளிகளுக்கு ஒரே வாய். அது என்ன?

–வாழைப்பூ

2613. நூறு குருவிகளுக்கும் நுழைவாயில் ஒன்றே.

–வாழைப்பூ

2614. நெஞ்சிலே ஒரு கல் வீட்டிலே ஒரு கல்
வானத்திலே ஒரு கல். அவை யாவை?

–விக்கல், உப்புக்கல், கறுக்கல்

2615. நெஞ்சோடு நேரான கொழுந்தா
நீரோடும் வாய்க்காலை அடைச்சா
நான் கீழே நீ மேலே. அது என்ன?

–அண்ணன் தம்பி பாகப்பிரிவினை

2616. நெட்ட நெடுமரம் நினைத்தாலே தித்திக்கும் மரம்.
நீட்டிப் பிறந்திருக்கும், நெருஞ்சி முள்ளுத் தானிருக்கும்,
சிட்டிப்பு பூத்திருக்கும் சீனிச்சாறு வார்த்திருக்கும்.

–கரும்பு

2617. நெட்டி இல்லாத வட்ட இலை. அது என்ன?

–அப்பளம்

2618. நெட்டி மிதக்க, நீர் சிலுக்க
நாகப்பட்டினம் 'கொல்' என்க.

–மோர்கடைதல்

2619. நெட்டுநெட்டாய் நீண்டிருக்கும் பாம்பும் அல்ல
நெருப்பிலே விளையாடும் சிவனும் அல்ல
பட்டணத்தைச் சுட்டழிக்கும் அனுமாரல்ல
வாயாலே தின்று கக்கும் வெளவாலல்ல
மன்னவனே இக்கதைக்கு விடை சொல்வாயே.

–துப்பாக்கி

2620. நெட்டுவிட்ட மரம், நிலவாழை போன்ற மரம்.
நீண்ட இலை இருந்தும் நிழலுக்குக் கிளையில்லாத
சின்னம் சிறு தென்னைமரம். உடம்பெல்லாம்
வரி போட்டே வளர்ந்த மரம். கணுக்கணுவாய்
இருக்கின்ற களிமூங்கில் போன்ற மரம். அது என்ன?

–கரும்பு

2621. நெட்டை அக்காள் தாக்குகிறாள்.
குட்டை அக்காள் தாங்குகிறாள்.
அது என்ன?

–உரல், உலக்கை

2622. நெட்டை குட்டை பட்டப்பகல் எனக்குப் பகை
அடித்தால் போகேன் நின்றால் நிற்பேன்
நடந்தால் நடப்பேன். நான் யார்?

–மனிதநிழல்

2623. நெட்டைப்புள்ளை, குட்டைப்புள்ளை, நெல்லளக்கும்
பண்ணைப்புள்ளை. குட்டிப்புள்ளை அத்தனையும்
குடலுக்குள் வைத்த புள்ளை. கையுமின்றி காலுமின்றி
காலம் எல்லாம் உழைக்கும் புள்ளை.
கை கொடுத்தால் எழும்பும் புள்ளை.

–நாழி, உழக்கு முதலியன.

2624. நெட்டை மரத்திலே நீளம் இல்லாக் கொப்பிலே
அட்டகரிப் பெட்டிக்குள்ளே அசந்து தூங்குவேன்.
மூடிப் படுத்தோர்கள் முகம் திறந்து பார்த்தால்
மூன்று கண்ணு தோன்றிற்று! மொழியுங்கள்
யார் இவர்?

–பனைமரம், பனங்காய், நுங்கு

2625. நெட்டையான பையன் விட்டம் வரை
வளர்ந்திருக்கும் வீட்டுக்காரப் பையனை
அடித்தாலும் சரி, இடித்தாலும் சரி
அழவும் மாட்டான், அக்கம்பக்கம்
அகலவும் மாட்டான். அவன் யார்?

–தூண்

2626. நெடுங்காட்டில் இரத்தத்துளி சிதறிக் கிடக்கிறது.
அது என்ன?

–குன்றிமணி

2627. நெடுக வளர்ந்தவனுக்கு நிழல் இல்லை. அவன் யார்?

–பாதை

2628. நெடுநாளைக்கு முன் அமைத்ததென்றாலும்
அன்றன்றைக்கு அமைக்கப்படுகின்றது
யாவருக்கும் தாங்குகையில் அது வேலை செய்கின்றது.
அதனை வேண்டாதவர் ஒருவருமில்லை.
அது என்ன?

–படுக்கை

2629. நெடுநெடென்று வளருமாம் சம்பாப் பயிர்
நேர்ந்தபடி மேயுமதில் தேவப்பூச்சி
தடியெடென்று துரத்துவார் பலருங் கூடித்
தாட்டியாய்க் குத்துவார் இரண்டுபேரே.
அவர்கள் யார்?

–கூந்தல், விரல்கள், பேன்

2630. நெடுநெடு என்று வளர்ந்தான்
நெற்றியில் திருநீறு பூசினான்
கையில் கபாலம் ஏந்தினான்
கழுத்தில் உருத்திராட்சம் அணிந்தான்.
அவன் யார்?

–ஆமணக்குச்செடி

2631. நெடுநெடுவென்று வளர்ந்த மரம்
லீலீப்பூ பூத்த மரம்
வாயில் வார்த்த மரம். அது என்ன?

–கரும்பு

2632. நெய்யாத சீலை கொய்யாதே உடுத்தி
நீராவியில் நிற்கும் பெண்ணே
வையாபுரிக்கு வழியெது?

முதுகில் இருப்பிடமும் விலாவில் காலும் வாயில்
சையுமாய்ப் போகிறவனே அதுதான் வழி.

–நீராடிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணும், குதிரையின் மேல் ஏறிச் செல்லும் வழிப்போக்கனும்.

2633. ஆண்; நெய்யாத சேலையைக் கொய்யாமல் மடித்துப்
பண்ணாத செம்பில் பன்னீர் கொண்டுபோகும்
பெண்ணே, நீ எப்போது வருவாய்?
பெண்; இந்த ராசா போய் அடுத்த ராசா வரட்டும்
கொடி இல்லாத மல்லிகை பூக்கட்டும்
பட்டமரமும் பட்டமரமும் ஒட்டும்போது
வருகிறேன்.

–சூரியன், சந்திரன், விண்மீன், கதவு

2634. நெய்யாதது, ஆனால் தையாமல் தீராது.

–புத்தகம்

2635. நெய்யாத புடவையைக் கொய்யாமல்
உடுத்தியிருக்கும் பெண்ணே. மதுரைக்கு வழி எது?
பண்ணாத செம்பில் பன்னீர் கொண்டுபோகும் பையா?
மதுரைக்கு வழி அதுதான்.

–தென்னைமரம், இளநீர்

2636. நெருப்பிலே பிறந்து நீரிலே மூழ்கி
வாயிலே வந்து வானத்திலே போவார்.

–நீராவி

2637. நெருப்புக் கிழவி சுவரிலே மயிர்நெடுக நடமாட்டம்.

–புகை

2638. நெருப்புக்கு அஞ்சாதவன்தான் வேகாமல்
தனக்குள் உள்ளதை வேக வைப்பான். அவன் யார்?

–பானை

2639. நெருப்புக்குதிரை மேல் நீந்தும் குதிரை,
நிறத்தால் அதுதான் கறுப்புக்குதிரை.
அதன்மேல் விளையாடும் வெள்ளைக்குதிரை.

–அடுப்பு, தோசைக்கல், தோசை

2640. நெருப்பில் சுட்ட மனிதன் நெடுங்காலம் வாழ்வான்.
அவன் யார்?

–செங்கல்

2641. நெருப்பைக் கண்டால் பயந்து ஓடுவான்
பருந்தைக் கண்டால் ஒளிந்திடுவான்
கோபம் கொண்டால் சீறிடுவான்.
அவன் யார்?

–பாம்பு

2642. நெல்நிறத்துப் பட்டாடை நீக்கிவிட்டு
நிர்வாண மஞ்சள் உடல் வேகவிட்டு
நீலாழிச் சீனியை நாம் தூவிவிட்டு
நெருப்புநிற மிளகாய்த்தூள் தன்னைக் கட்டி
நறுக்கி உடல் துண்டத்துடன் தேங்காய் சீவல்
நாக்குக்கு ருசியாகச் சேர்த்திவனை உண்பார்.
இந்த நிர்வாணி பேர் நீங்கள் சொல்லல் ஆமோ.

–பனங்கிழங்கு

2643. நெல்மணி காதல் ஜோடி, அந்திக்கும் கறுத்த மேனி
அவர் இவள் ஒன்றுசேர்ந்து,
தண்ணீரில் குளித்துக்கொள்வர்.
காதலி கறுப்புச்சட்டை கழற்றியே கருத்தரிக்க
கலந்தாடி கூடிச் சுத்த வெண்ணெயின் விழுதுமாகி
விரும்பி நம் பண்டம் ஆவள்.

–அரிசியும் உளுந்தும்

2644. நெல்லண்ணன் ஸ்ரீரண்ணன் யுத்தம் செய்ய
தேங்கண்ணன் மூங்கண்ணன் சமாதானம் செய்ய.
அது என்ன?

–அகப்பை

2645. நெல்லளக்காக் கலம் நீர்க்கலம் என்ன கலம்?

–படகு

2646. நெற்றிக் கயிற்றிலே நீராழி மண்டபம்
நீராழி மண்டபத்தை நீறு பூத்து மறைக்குது.

–பூசணிக்காய், பூசணிக்கொடி

2647. நெற்றிக்கு இடாத பூ என்ன பூ?

–குங்குமப்பூ

2648. நெற்றிமுகப்பில் நதிநகரம் மலைக்கோடாம்.

–தேசப்படம்

2649. நெற்றியில் கோல் பட்டு கதறுதாம் காளை.

– மத்தளம்

2650. நேர்கிழக்கு நெல்லியந்தோப்பு
செங்கல் அறுக்கச் செவ்வந்தி பூக்கப்
பெட்டியைத் திறக்க ரத்தினம் பறக்க. அது என்ன?

–சூரியன்

2651 நேரங்கண்டு இரையும் நெடுந்தூரம் பரவும்.
அது என்ன?

–சங்கு

2652. நேரம் காட்டாத கடிகாரம்
எல்லோராலும் பார்க்கமுடியாத கடிகாரம்.
அது என்ன?

–இதயம்

2653. நேற்று நீ சின்னபப்பா
இன்று நீ அப்பப்பா. அது என்ன?

–நிலவு

2654. நேற்றுப் பிறந்த தம்பி இன்று துள்ளிக்
குதித்து வேலி அடைகிறான். அது என்ன?

–கடப்பாரை

2655. நேற்றுப் பிறந்தவன் இன்று எங்கள்
அப்பாவோடு உட்கார்ந்து சாப்பிடுகிறான்.
அது யார்?

–ஈ

2656. நேற்றுப் பிறந்தவன் இன்று கட்டுகிறான்.
அது என்ன?

–ஊசி

2657. நொங்கும் நுரைக்கும், நூறு குமிழ்தான் மிதக்கும்,
தங்கக்கட்டி அவள் உடல் அங்கத்தில் பட்டால் மணமே.

–சோப்பு

2658. நொண்டி காட்டும் சாலையில்
நூற்று பேரும் போகிறார்.

–கைகாட்டி

2659. நோய் நொடியில்லாமல்
முக்கி முனங்கித் திரிகிறான் ஒருவன். அவன் யார்?

–பன்றி

2660. நோயில்லாமல் நொடியில்லாமல்
அனத்துபவன் யார்?

–வண்ணான்

2661. நோயின்றி மருந்து சாப்பிடுவான்
வாயின்றி கூச்சல் போடுவான். அவன் யார்?

–பட்டாசு

2662. பக்கத்தில் இருப்பான். படுத்தால் மறைவான். அது யார்?

–நம் நிழல்

2663. பெண்; பக்கம் பழுத்த கிழவா இன்னும்
எத்தனை நாள் இருப்பாய்?
ஆண்; உள்ளே இருக்கும் கொட்டையை
எடுத்தால் ஊழிவரை இருப்பேன்.

–புளியம்பழம்

2664. பக்கமுள்ள பட்டினத்தைப்
பார்க்கமுடியவில்லை.
அது என்ன?

–முதுகு

2665. பகட்டானது பார்வைக்கு வெளுப்பு
பதமானது வாய்க்குச் சிவப்பு
பாரில் எரிந்த பூ என்ன பூ?

–சுண்ணாம்பு

2666. பகல் எல்லாம் பட்டினி கிடப்பாள்
பிள்ளைக்கும் பால் கொடுப்பாள்
இரவெல்லாம் இன்பம் அடைவாள்
விடிந்தவுடன் விசனம் அடைவாள்.
அவள் யார்?

–வெளவால்

2667. பகல் எல்லாம் படுத்துத் தூங்குகிறாள்.
இரவில் ஏன் எழுந்திருக்கிறாள்?

–விண்மீன்

2668. பகல் எல்லாம் போனாலும் பத்துக்கஜம்
தாண்டார். போருக்கு இவர் போவதுபோல்
போட்டிருக்கே கவசம்.

–நத்தை

2669. பகலில் இருபுறமும் இரவில் நடுவிலும் இருக்கும்.
அது என்ன?

–நத்தை

2670. பகலில் சுருட்டிக் கிடப்பாள்
பாதிராத்திரியில் விரித்துக் கிடப்பாள்
பட்டப்பகலிலும் கூப்பிட்டால் வருவாள்

படுத்து அனுபவித்தால் சுகமும் தருவாள்.
அவள் யார்?

–பாய்

2671. பகலில் தங்கத்தட்டு இரவில் வெள்ளித்தட்டு.
அவை என்ன?

–சூரியன், சந்திரன்

2672. பகலில் துயிலுவான் இரவில் அலறுவான்.
அவன் யார்?

–ஆந்தை

2673. பகலில் தூக்கத்தால் இல்லையாம் மூச்சுப்பேச்சு
இரவோ வந்ததும் இரைச்சலோ கீச்சிக் கீச்.
இவன் யார்?

–ஆந்தை

2674. பகலில் தூங்கி இரவில் விழிப்பவன் யார்?

–விண்மீன்

2675. பகலில் மரமாய் நிற்பான்
இரவில் இருட்டை விரட்டுவான். அவன் யார்?

–தெருவிளக்கு

2676. பகலில் வரும் அக்காவுக்குப் பக்கத்துணை யாருமில்லை
இரவில் வரும் தங்கைக்கு ஏகப்பட்ட தோழிகள்.
அவர்கள் யார்?

–சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்

2677. பகலிலே வெறுங்காடு
இரவெல்லாம் பூக்காடு. அது என்ன?

–வானம்

2678. பச்செ பச்செ டாக்டர்
பால் பால் டாக்டர்
குண்டு சட்டி டாக்டர்
குதிரை வால் டாக்டர். அது என்ன?

–வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை

2679. பச்சை அரண்மனைக்குள் பால்வெள்ளைத்
திரைகட்டி பட்டத்துக் கறுப்பரசி
படுத்துக் கிடக்கிறாள். அவள் யார்?

–கொடுக்காப்புளி

2680. பச்சை இலை ஆடப் பாம்பு நெளிந்து ஓடுது.

–இரயில்வண்டி

2681. பச்சை உடை அணிந்திருப்பாள்.
பசுந்தளிர் தின்றிடுவாள். அவள் யார்?

–கிளி

2682. பச்சைக் கடைக்குள் பளிங்குமுத்துப் பல உண்டு.

–முருங்கை

2683. பச்சைக்கதவு வெள்ளைச் சன்னல்
உள்ளே கறுப்புராஜா.' அது என்ன?

–சீத்தாப்பழம்

2684. பச்சைக்கள்ளி மடிபட்டாள்
பவளக்கன்னி பொடிபட்டாள்
வெள்ளைக்கன்னி பிடிபட்டாள்
மூன்று கன்னியரும் மறைபட்டார்
சிவப்புக்கன்னி எதிர்ப்பட்டாள். அவர்கள் யார்?

–தாம்பூலம்

2685. பச்சைக் காமறா உள்ளே தூங்கறா. அது என்ன?

–நாரத்தங்காய்

2686. பச்சைக்காய் குப்பியை பக்கமா மூக்குடைத்து
பார்த்ததும் மூடிகள் இரண்டு தெரிந்தது.
உள் முகத்தைப் பிறகு உருக்கினால் நெய்யும்
உருகி வந்தது!

–ஆமணக்கு கொட்டை

2687. பச்சைக்காய் முக்கொடப்பி பனங்காயுமில்லை
உடைந்தால் மூடி இரண்டு தேங்காயுமில்லை
உருக்கினால் நெய்வடியும் வெண்ணெயுமில்லை.
அது என்ன?

–கொட்டைமுத்து

2688. பச்சைக்கிளி பறக்கமுடியாத கிளி
கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி. அது என்ன?

–மாங்காய்

2689. பச்சைக் குடத்திலே தண்ணீரும்
பறவைகளும் குடிக்க முடியாது.

–இளநீர்

2690. பச்சைக்கோலி, கண்ணாடிக்கோலி,
பார்க்க அழகான கோலி, கொத்துக்கொத்தாய்க்
கொடியில் காய்த்துக் கொல்லையிலே
தொங்குவது, ஒரு காலத்தில் ஒரு நரிதான்
சீசீ யென்றே ஓடினதாம். அது என்ன?

–திராட்சைப்பழம்

2691. பச்சைக்கோழிக்குப் பச்சை முட்டை
பொரிச்சா வெள்ளைக் குஞ்சு. அது என்ன?

–பருத்தி

2692. பச்சைச் சன்னல் வெள்ளைத் தோப்பரா
கறுப்புப் பாதிரி உள்ளே தூங்குகிறான். அவன் யார்?

–சீத்தாப்பழம்

2693. பச்சைச் சாளரத்து படுக்கை அறையிலே
வெள்ளித் தோப்புராவில் கள்ளி கருப்பாயி
குளிர்காய்ந்து கொள்கிறாள். அவள் யார்?

–சீத்தாப்பழம்

2694. பச்சைச் செடியிலே தயிர்சாதம். அது என்ன?

–மல்லிகைப்பூ

2695. பச்சைச் சேலைக்காரி பகட்டுக்காரி
இச்சைப்பட்டால் என் வீட்டுக்காரி
தொட்டால் கோபக்காரி
விட்டால் மோசக்காரி. அது என்ன?

–செந்தட்டி இலை

2696. பச்சைச் சொறியனைப் பறித்துக் கொணர்ந்து
பக்குவப்படுத்திப் பாகோடு சேர்த்தாலும்
சுண்டைக்காய் சுவையை அது ஏனோ
சொந்தம் கொண்டாடுது?

–பாகற்காய்

2697. பச்சைத் தண்ணீருக்குள் பம்பரம் ஆடுது.

–கவலை இறைக்கும் உருளை

2698. பச்சைத் துளுக்கன் பாய்போட்டுப்
படுத்துக் கொண்டிருக்கிறான். அவன் யார்?

–கீரைப்பாத்தி

2699. பச்சை நிறத்தழகிக்கு லிப்ஸ்டிக் போடாமலே
சிவந்த வாய். அவள் யார்?

–கிளி

2700. பச்சை நிறத்தழகி பவளம்போல் மூக்கழகி
சொன்னதைச் சொல்வாள். அவள் யார்?

–கிளி

2701. பச்சை நிறத்திலே குடை பிடிக்கும் குட்டிராஜா
பழுத்தால் சிவப்பு நிறம். அது யார்?

–மிளகாய்

2702. பச்சை நிறத்திலே பக்கத்தூரு மாடு ஒன்று
வெள்ள நிறத்திலே வெள்ளிச்சந்தை மாடு ஒன்று
செவந்த நிறத்திலே செட்டிக்கடை மாடு ஒன்று
மூனுமாடு ஒன்றுசேர்ந்து ஒரு செவப்புக்கன்னு
போட்டுது. அது என்ன?

–வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு

2703. பச்சை நிறப் பாப்பான்
வயிறு வெடிச்சு வெளுத்தான். அவன் யார்?

–பருத்திக்காய்

2704. பச்சை நிறமாயிருக்கும் திருமாலல்ல
பலகாலும் கொழுந்து கிள்ளும் கொடிக்காலல்ல
வைத்த கல் சுமந்திருக்கும் மனிதன் அல்ல
வாரையில் தலைகீழ்த் தொங்கும் வெளவால் அல்ல
உச்சியிலே பூ முடிக்கும் பெண்ணுமல்ல
உண்மையாய் இக்கதையை விடுவிப்பீரே.

–புகையிலை

2705. பச்சைநிற மேனியுண்டு விஜயன் அல்ல
பவள இதழ் வாயுமுண்டு கோவை அல்ல
உச்சியிலே போடியுண்டு மைனாவல்ல
உட்கழுத்தில் அரும்புமுண்டு புஷ்பமல்ல
இச்சையுடன் சிறையில் பாடும் திருடனல்ல
இயைமொழிதான் புகலும் மனிதன் அல்ல. அது என்ன?

–கிளி

2706. பச்சைப்பங்களா, பல குட்டி தூங்குறா. அது என்ன?

–முருங்கைக்காய்

2707. பச்சைப் பங்களாவிலே
வெண்பட்டு மெத்தையிலே
கருப்புத்துரை தூங்குகிறார்.

–கொடுக்காப்புளி

2708. பச்சைப் பங்களா வெள்ளைக் காமிரா
அதிலே ஒரு குட்டி தூங்குகிறாள். அது என்ன?

–மாங்காய்

2709. பச்சைப் பச்சென்றிருக்கும் பாவக்காயுமல்ல
பக்கத்தில் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல
உருக்கினால் நெய்யொழுகும் வெண்ணெயுமல்ல.
அது என்ன?

–கொட்டைமுத்து

2710. பச்சைப் பச்சென்றிருக்கும் பாவக்காயன்று
நடுவிலே விதையிருக்கும் வெள்ளரியன்று
நீண்டவுடல் தானிருக்கும் கொம்புமன்று
இடையிடையே கணுவிருக்கும் மூங்கிலன்று
நேர்மையாய் இக்கதையை நிகழ்த்துவீரே.

—முருங்கைக்காய்

2711. பச்சைப்பச்சென்று இருப்பாள் பாவையல்ல
இச்சை கொண்டு செல்வார்க்கு இதமாய்
இன்பமளிப்பாள், ஆடிப்பாடி விசிறிடுவாள்
அணங்குமல்ல, தேடிப்போவோருக்குத்
தெவிட்டாத உணவளிப்பாள். அவள் யார்?

—வாழைஇலை

2712. பச்சைப்பச்சைக் கப்பல் பாரப்பா
கப்பலை இரும்பால் அடித்தாலும் திரும்பாதப்பா.
அது என்ன?

—பிணம்

2713. பச்சைப் பச்சை டாக் டாக்
பால் பால் டாக் டாக்
குண்டு குண்டு டாக் டாக்
குதிரை வாலி டாக் டாக். அவை யாவை?

—வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை

2714. பச்சைப் பச்சை நிறத்தாள் பவழம்போல் நிறத்தாள்
தாம்பரக்கொடிபோல தானா வளர்ந்தாள்
மூச்சுக் கட்டப் பிறந்தாள் முறங்கட்டப் பிறந்தாள்
மாடுமேய்க்கப் பிறந்தாள் அரண்மனை வாசலுக்குக்
கொடிகட்டப் பிறந்தாள். அவள் யார்?

—மூங்கில்

2715. பச்சைப் பச்சைப் பல்லக்கு
பார்ப்பாரைப் பல்லக்கு
இரும்பாலடித்தாலும் திரும்பாத பல்லக்கு.
அது என்ன?

—பிணம்

2716. பச்சைப் பச்சைப் பாப்பாத்தி
பளபளக்கிற பாப்பாத்தி
விண்ணையும் பார்த்து விசிறுவாள், விலைக்கு
வீதிக்குள் வந்தாலும் வீட்டுக்குள் திரும்பி வந்துவிட்டால்
விருந்து போடாமல் போகமாட்டாள்.

—வாழைஇலை

2717. பச்சைப் பச்சை லாந்தா
பாவாடை லாந்தா
ஓங்கி வளர்ந்தா கீழே சாய்ந்தா.
அது எது?

—மூங்கில்

2718. பச்சைப்பசேர் பசப்புக்காரி,
பக்குவமாக சமைத்தாலும் கசப்புக்காரி.
அவள் யார்?

—பாகற்காய்

2719. பச்சைப்பசே லென்றிருக்கும் பாவக்காயுமன்று
பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமன்று
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமன்று
உண்டால் மயக்கமாம் புகையிலையுமன்று.
அது என்ன?

—ஊமத்தை

2720. பச்சைப்பசேல் என்றிருக்கும் பாகற்காயும் அல்ல
பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயும் அல்ல
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயும் அல்ல
உருக்கினால் நெய்வடியும் வெண்ணெயும் அல்ல
அது என்ன?

—ஆமணக்கு

2721. பச்சைப்பசேல் டேக் டேக்
பற்போல் முள்ளு டேக் டேக்
பாலாம் வெள்ளை டேக் டேக்
பருப்பு விதையிலே டேக் டேக்

—ஆமணக்கு

2722. பச்சைப்பசே லென்றிருக்கும்
பந்தி முன்னால் நிற்கும்
பசியாறியவுடன் பாதையில் கிடக்கும்.
அது என்ன?

—வாழை இலை

2723. பச்சைப் பட்டதனைப் பிடித்திழுத்து
இச்சை தீர்க்கும் நீலியைக் கொண்டுவந்து
அறுசுவை உண்டி அன்புடன் அளித்துத்
தெருவில் விட்டுவிட்டேன் தேவியவளை.
அது என்ன?

—வாழை இலை

2724. பச்சைப் பட்டாடைக்காரியைக் கண்டேன்
இச்சைப்பட்டே அவளருகில் சென்றேன்
செக்கச் சிவந்திருந்த முலையைத் தொட்டேன்
வெக்கமும் விட்டதனைக் கடித்தேன். அது என்ன?

–மாம்பழம்

2725. பச்சைப் பட்டுக்காரி படைசொறி சுட்டுக்காரி
தொட்டாலே துவளுவாள் துடிப்பாக கோபக்காரி.

–செந்தட்டி இலை

2726. பச்சைப் பட்டுப்பாய் பரக்க விரிச்சுருக்கு
விரிச்சதைப் பிடுங்கி வீதிக்குக் கொண்டுவந்து
விலைபேசும் சரக்காம் அது.

–கீரை

2727. பச்சைப் பாப்பா மூக்கிலே இரத்தம்.
ஐயோ கத்துறா? அது என்ன?

–கிளி

2728. பச்சைப்பாம்பு கல்லைத் தூக்குது. அது என்ன?

–புடலங்காய்

2729. பச்சைப்பாம்பு வாலிலே கல்லு. அது என்ன?

–புடலங்காய்

2730. பச்சைப் பாம்பைப் பிடித்து
முதுகு நெட்டையை எடுத்துப்
பச்சை வெண்ணெயைத் தடவிக்
குச்சு வீட்டுக்குள் போட்டேன்.
அது என்ன?

–தாம்பூலம்

2731. பச்சைப்பாய் விரித்திருக்கு
பருவம் கழிந்தால் மணிகள் குவியும்.
அது என்ன?

–வயல்

2732. பச்சைப் புடவை அஞ்சு, படத்தில் பழம் நூறு,
பாம்புப்படம் மூணு, ஆக அத்தனைக்கும் காம்பு ஒன்று.

–ஆவார மொட்டு

2733. பச்சைப் புதரிலே பட்டப்பகலிலே பணியாரம்
சுட்டார்கள். சுட்ட பணியாரத்தைத் தொங்கப்
போட்டார்கள். நாற்பது பேர் அதை நல்லாப்
புடைத்தாலும் நையவும் இல்லை. அது தொய்யவும்
இல்லையே? அது என்ன?

–தேன்கூடு

2734. பச்சைப்புல்லில் துவண்டுவரும்
பவளம்போல் உருண்டு இருக்கும்
காலையில் தோன்றும்
கண்ணாடி போல் பளபளக்கும். அது என்ன?

–பனி

2735. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள்.
அது என்ன?

–வெண்டைக்காய்

2736. பச்சைப் பெட்டியில் பத்துச்சரம் முத்து
எடுக்கலாம் தொடுக்கமுடியாது. அது என்ன?

–வெண்டைக்காய்

2737. பச்சைப் பெருமாளைக் கட்டி வா, பின்
நரம்பு நீட்டலை வெட்டி வா, பால் பசு
வெண்ணெயைக் கொட்டி நீ மேல்மாடி
வீட்டுக்குள் போட்டுவை.

–வெற்றிலை போடுதல்

2738. பச்சைப் பேழையில் இச்சை முத்துகள்
வச்சது எடுக்கலாம் வடம் ஆக்கமுடியாது.

–வெண்டைக்காய்

2739. பச்சை பச்சை உடம்பு பகட்டான உடம்பு
படக்கென்று நாம் தொட்டால் பசை
சொறிக்கும் உடம்பு.

–செந்தட்டி இலை

2740. பச்சை படர்ந்திருக்கும் பசுமை கொலுவிருக்கும்
வெள்ளை சிமிழுக்குள் விதைச்ச முத்துக் கோர்த்திருக்கும்.

–சீத்தாப்பழம்

2741. பச்சை மட்டையை உரித்துத் தின்போம் நாங்கள்
ஒரு ஜாதி
ஆற்றுமணலை வாரித் தின்போம் நாங்கள் ஒரு ஜாதி
நாங்கள் யார்?

–கரும்பு, சர்க்கரை, கற்கண்டு

2742. பச்சை மலை, பஞ்சு மலை, ஒரு மலை, ஒரு குளம்.
அது என்ன?

–தேங்காய்

2743. யக்கையம்மா மடியிலே முத்தம்மா படுத்தாள்
பெரியண்ணன் முகம் பார்த்து உருண்டோடி
மறைந்தாள். அது என்ன?

–பனித்துளி

2744. யக்கையாய் வெள்ளையாவார்
பலர் கையிலிருந்து வாழ்வார்
இச்சியா யொருவரில்லை
வெற்றிலை அன்று, தேர்க.

–ஓலை

2745. பச்சை வாத்து முட்டையும் படக்கென்று
வெடித்ததும் பறந்து நின்றது கொக்காச்சு.

–பருத்தி

2746. பச்சை வால் பார் பார்
பவள வால் பார் பார்
வெள்ளை வால் பார் பார்
வெடித்த தோல் பார் பார்.

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை

2747. பச்சை வாழப்பூவும் பறக்கும் சிறகுகொண்டு
உச்சிமரத்து மேலே உட்கார்ந்து பார்த்தேன்
கொச்சி மஞ்சள் பூசி குளித்திருக்கும் போலும்.
நொச்சி மூக்கு பிரித்தால் நுரைக்கும் ரத்தம் விரிப்பாம்.

–கிளி

2748. பச்சை வீட்டுக்குச் சிவப்பு வாசல். அது என்ன?

–கிளி

2749. பசுந்தளிர் கொட்டை வெண்ணெய்
வேர்த்தொலியுடன் பிசைந்தவர்
வாயிலே கசிந்ததோ இரத்தமாய்.

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை

2750. பசுமையாக வளர்ந்தாள் பசலை ஒன்றையே
பெற்றதும் 'படக்' கென்று போய்விட்டாள்.

–வாழைமரம்

2751. பசுவுடன் உன்னைச் சேர்த்துவரும்
மாதம் என்ன மாதம்?

–ஆ என்றால் பசு, உன்னை என்றால் நீ. ஆக ஆனி மாதம்.

2752. பஞ்சக்கா மகளுக்கு அஞ்சு காசு மஞ்சனம்.

–நூல்கயிறு

2753. பஞ்சு தெறிச்சுப் பறந்து போறதைப் பிடிக்க
நாதியில்லை! அஞ்சுகத்தக்காள் பெண்ணுக்கு இருக்கா,
அழைக்க நாதியில்லை! வெள்ளிக் கொலுசுகள் சிந்திக்
கிடக்குது மூட்ட நாதியில்லை!

–வானம், மதி, விண்மீன்கள்

2754. பஞ்சுபஞ்சாய் நரைத்திருக்கும் கிழவன் அல்ல
பாவையர் எடுத்து ஏந்தும் பாலகரும் அல்ல
விஞ்சித் தலை விரித்தாடும் பேயும் அல்ல
வெள்ளித் தங்க நகை பூணும் பிள்ளையாரும் அல்ல.
அது என்ன?

–வெண்சாமரம்

2755. பஞ்சவர்ணக்கிளி போலக் கொஞ்ச வல்லாள்
பாவலர்கள் அருகிருந்து பலுக்க வல்லாள்
மிஞ்சுதனம் பொற்சீலை மூடவல்லாள்
மின்னுடையாள் கனகதங்கி மிகுந்த நாரி
தஞ்சமென்பார் மிகத்தழுவுஞ் சொகுசுக்காரி
தையலாள் அறிகுறியைச் சாற்றுவீரே.

–தம்புறா

2756. பஞ்சுதனைப் புசித்தகமும் பாதுகாக்கும்
பலநாளும் போர்வையிட்டுப் படுத்துறங்கும்
தஞ்சமென இருந்தவர்கள் தலையைத் தூக்கும்
தாழ்வில்லா துஞ்சல் மெத்தை தம்மில் நாடும்
வஞ்சமுடன் மேல்விழுந்து மருவிப் பார்க்கும்
வகையுடன் நீ இக்கதையை வழங்குவாயே.

–தலையணை

2757. பஞ்சு போன்ற பாத அழகி, குறுக்கே வந்தால்
சிலருக்குப் பிடிக்காது. அது என்ன?

–பூனை

2758. பஞ்சை உண்டு படுத்தே கிடக்கு. அது என்ன?

–தலையணை

2759. பட்சி இரண்டும் ஒரு நிறம், பறப்பது வெகுதூரம்
அது என்ன?
அன்னம் நீர் அருந்தாது, ஒரு கட்டிலும் அடையாது.
அது என்ன?

–கண்கள்

2760. பட்சியில் சிறந்த பட்சி பல வர்ணமுள்ள பட்சி
சிறகை விரித்தாடும் பட்சி சிங்காரப் பட்சி
ஆயிரம் கண்ணுள்ள பட்சி அற்புதப் பட்சி
நாட்டியம் ஆடும் பட்சி நானிலத்தில் வாழும் பட்சி.

–மயில்

2761. பட்டகசாலையில் பட்டு விரித்திருக்கு,
தொட்டால் ஒட்டிக்கொள்ளும், உயிரை விழுங்கிவிடும்.
அது என்ன?

–நெருப்பு

2762. பட்டணத்திலே விருந்து இரண்டு சிராய்
கொண்டுவந்தேன். ஒன்று எரியுது. ஒன்று புகையுது.

–கற்பூரம், சாம்பிராணி

2763. பட்டணத்து ஆலமரம்
வெட்ட வெட்டத் துளுக்குது. அது என்ன?

–மயில்

2764. பட்டணத்துச் சேலையை மடிக்க முடியல்லே
அதிலுள்ள ரோசாப்பூவைப் பறிக்க முடியல்லே
ராசாத்தி துரைமகளைப் பிடிக்க முடியல்லே.

–வானம்

2765. பட்டணத்துத் தேவியவள் சொகுசுக்காரி
பழிகாரி இளங்கொடியாள் பாரின்மீது
கட்டுதற்குங் கிள்ளுவதற்குங் கடிப்பதற்குங்
கட்டழகி பொறுத்திருப்பாள். காசுக்கென்றால்
இட்டமுடனே வருவாள், தாசியல்ல. இதமுடனே
இக்கதை இயம்புவீரே

–வெற்றிலை

2766. பட்டணத்து வேப்பமரம் வெட்ட வெட்ட தளிர்க்கும்.

–மயிர்

2767. பட்டணம் கிட்டே இருக்கிறது.
எட்டிப்பார்க்க இயலவில்லை. அது என்ன?

–முதுகு

2768. பட்டணம் சுற்றிப் பாவை
பரும் கவுத்தில் ஏறிய வேசை
உத்தாரெல்லாம் வாங்க உசந்த கன்னியைத் தொட.
அது என்ன?

–திருமணம்

2769. பட்டத்தரசி கடாரத்தை மடக்க முடியல்லே.
பவளமாலை அவிழ்ந்து போர்ச்சு கோர்க்க முடியல்லே.
பட்டுக் கொட்டடி பரப்பளவை மதிக்க முடியல்லே.

–ஆகாயம்

2770. பட்ட பட்டையை நீக்கி முத்து பட்டையை நீக்கி
முன்னே வாராள் சீமாட்டி.

–வாழைப்பூ

2771. பட்டம்அது பட்டம் பதினைஞ்சு காசுப் பட்டம்
பல மைல்கள் பறக்குது பல குத்தும் அடியும் படுது.

–தபால்கார்டு

2772. பட்டம் பறந்ததும் படிப்புச் சிறந்ததும் எதனால்?

–நூல்

2773. பட்ட மரத்திலே சிவப்பு அதிலும் பச்சை.

–கிளி

2774. பட்ட மரத்திலே பம்பரம் ஆடுது.

–கமலை இறைக்கும் உருளை

2775. பட்டமரத்தைக் கண்டால் படைபடையாய் வரும்.
அது என்ன?

–மேகம்

2776. பட்டமரத்தைத் தட்டினால் படைகள் வரும்.

–தமுக்கு

2777. பட்டமரம் இரண்டு படாதமரம் நான்கு
விசிறி இரண்டு வெண்சாமரம் ஒன்று.

–மாட்டின் கொம்புகள் 2
–பால் காம்புகள் 4
–காதுகள் 2
–வால் 1

2778. பட்டமரமும் பட்டமரும் சேர்ந்திருப்பானேன்?
பட்டணத்துப் பெண்களெல்லாம் செத்திருப்பானேன்?
கொடியில்லாத மல்லிகை பூத்திருப்பானேன்?
கும்பகோணத்துக் கள்ளன் வந்து அறுத்துக்
கிடப்பானேன்?

–கதவு, உறக்கம், விண்மீன்கள், பெருச்சாளி

2779. பட்டாக்கத்திப் பையன் 'பரட்' டென்று விழுந்து
பல் உடைந்து போச்சுது. பல் விழுந்து பல ஆண்டுகள்
பறந்துபோச்சு. ஆனாலும் அந்த ஓட்டைவாயனுக்கு
உடைஞ்ச பல் இன்னமும் உதிக்கவே இல்லையே!

–சீப்பு

2780. பட்டி என்றால் பட்டி, பஞ்சுப்பட்டி,
மட்டியிலும் மட்டி இரும்பு மட்டி,
கட்டு என்றால் கட்டு வேஷக்கட்டு.

-துப்பட்டி, சம்மட்டி, பகட்டு

2781. பட்டியில்லாப் பட்டி என்ன பட்டி?

-துப்பட்டி

2782. பட்டுக்குடை போல் பூப்பூக்கும்
பறிக்கப்போனால் எட்டாது. அது என்ன?

-சந்திரன்

2783. பட்டுக்கோட்டைச் செட்டியாருக்கு
மொட்டைத்தலையாம்
வயிறு நிறைந்து உட்கார்ந்தால்
பட்டு முண்டாசாம். அது என்ன?

-பானை

2784. பட்டுக்கோட்டை தெப்பத்திலே
பத்துப் பதினைந்து ஈச்சமரம். பூவும் இல்லை,
காயும் இல்லை, பூச்சி ஒதுங்கவும் இடம் இல்லை.

-கண்புருவம்

2785. பட்டுக்கோட்டை மூலையிலே பச்சைப்பிள்ளை
பேசினால் சென்னையில் சிறுவீதியில்
துட்டுப் போட்டுக் கேட்கலாம்.
சொல்லுங்க என்ன பார்க்கலாம்?

-தொலைபேசி

2786. பட்டுக்கோட்டை ராஜா, பவனி வராத ராஜா,
தொட்டுத் துழாவிடும் ராஜா, கொட்டிக்
கிடக்கிறார் பாரு.

-பல், நாக்கு

2787. பட்டுச்சட்டை போட்டவன்
பார்க்க அழகு கொண்டவன்
தட்டி மேலே பறப்பவன்
தாவித் தேனைக் குடிப்பவன்.
யார்?

-வண்ணத்துப்பூச்சி

2788. பட்டுச்சட்டை முதுகிலே பட்டை
நாமம் தீட்டி நீர் விட்டெறிந்த மின்னலாம்
விரைந்து சொல்வதாரய்யா?

-அணில்

2789. பட்டுச் சேலைக்காரி அனுபவம் இல்லாதவர்களை அழவைப்பாள். அவள் யார்?

–வெங்காயம்

2790. பட்டுடுத்திப் பணி உடுத்தி இந்தமுகம் போகிற தங்கை உன்னை என்ன சொல்லிக் கூப்பிட்டால் வருவாய்?
பன்னீர் தெளித்து இரண்டு திருப்புத்
திருப்பினால் வருவேன்.

–வரகு, திரிகை

2791. பட்டு நூலுக்காரி பசுநெய் குளத்திலே
முழுகிவிட்டுத் தெறிக்க நகைப்பில்
வெளிச்சம் போடுதே முகப்பில்.

–குத்துவிளக்கு

2792. பட்டுப்பட்டுக் குட்டி பவளநிறச் சுட்டி
வெல்வெட்டு கட்டி வேலி ஓரத்திலே நின்று
விளையாட்டுப் பார்க்கிறாள்.

–பட்டுப்பூச்சி

2793. பட்டுப் பட்டுத் தொரப்பு
பட்டாணித் தொரப்பு
நான் போட்ட தொரப்பு
நானே தொரக்க முடியலே.
அது என்ன?

–நெஞ்சு

2794. பட்டுப்புடவையும் கொசுவி உடுத்துப்
பதினாறு தொங்கலும் தொங்கவிட்டுச்
செட்டித் தெருவுக்குப் போகிற பெண்ணுக்குத்
திரும்பிப் பார்க்கமுடியாது.
அது என்ன?

–தேர்

2795. பட்டுப்புல்லுத் தேகம், விட்டு எறிந்த அம்பாய்
விறுட்டு என்று பாயும் தேகம், அடர்த்தியான
வாலும் அழகு வரைந்த கோலம், பளிங்குக்
கண்கள் கொண்டு பார்க்கும் அந்தப் பிராணி
பயப்படும். அது எப்பிராணி?

–அணில்

2796. பட்டுப்பூச்சி அத்தைக்குப் படுக்கை
முள்ளு மெத்தையாம்.

–இலந்தைச் செடியும் பழமும்

2797. பட்டுப்பூவானுக்கு மேல் முழுவதும் பல்.
அது என்ன?

–சோளம்

2798. பட்டுப்பை நிறையப் பவுன் காசு.

–மிளகாய் விதை

2799. பட்டுப்போவானுக்கு மேல் முழுவதும் பல்.

–சோளம்

2800. பட்டுமேல் பட்டுடுத்தி பட்டணம் போற பெண்ணே,
பட்டு என்ன விலை?

–வெங்காயம்

2801. பட்டுமேலே பட்டுடுத்திப் படிகநிறப் பட்டுடுத்திக்
காசிக்குப் போகிற பெண்ணே, உன் பட்டு என்ன விலை?
செட்டியார் சொன்ன விலை. அது என்ன?

–வெங்காயம்

2802. பட்டு ரோஜா மலர்ந்தது
கிட்டே போனால் சுட்டது.
அது என்ன?

–நெருப்பு

2803. பட்டுன்னு போட்டா பளிச்சின்று எரியும்.
அது என்ன?

–மின்சாரவிளக்கு

2804. பட்டை உண்டு, கட்டை இல்லை
இலை உண்டு, கிளை இல்லை.
பூ உண்டு, மணம் இல்லை
பழம் 'உண்டு, விதை இல்லை
கன்று உண்டு, மாடு அல்ல.
அது என்ன?

–வாழை

2805. பட்டை பட்டைக் கதவு பட்டாணிக் கதவு
என்ன போட்டாலும் எடுக்காத கதவு.
அது என்ன?

–வானம்

2806. பட்டை பட்டை நீக்கிப்
பதினாறு பட்டை நீக்கி
முத்துப் பட்டை நீக்கி
முன்னே வாராள் சீமாட்டி. அது என்ன?

–வாழைப்பூ

2807. பட்டை பட்டை மேல்பட்டை,
மேல்பட்டை போனதும்தோல்பட்டை,
தோல்பட்டை போனதும் பால்பட்டை,
பால்பட்டை போனதும் கால்சட்டை,
கால் சட்டைக்கு மேலே தோள்பட்டை,
தோள் பட்டை பட்டகை வழுக்குமடா
தாமரை மெட்டிதழ் மெழுகுமடா
மெழுகுப்பெண் பேரென்ன சொல்லுங்கள்.

–வாழைத்தண்டு

2808. பட்டை மரத்தில் கொக்கிருக்க
பாவைகள் இரண்டு ஆடிவர
ஈனாப்பூச்சி இறங்கிவர
எறும்பு இடாத முட்டை கரைந்துவர.

–கேழ்வரகு, திருகை

2809. பட்டையிலும் பட்டை பிழையான பட்டை.

–தப்பட்டை

(பிழை= தப்பு)

2810. பட்டையிலே பட்டை என்ன பட்டை?

–வாழைப்பட்டை

2811. பட்டையுண்டு கட்டையில்லை
இலையுண்டு கிளையில்லை
பூவுண்டு காயுண்டு பழமுண்டு விதையில்லை
விதையில்லாமல் கன்றுகள் ஈனுவான்
ஒரு குலை ஈன்று தன் உயிர் விட்டிடுவான்.
அவன் யார்?

–வாழைமரம்

2812. பட்டையைப் பட்டையை நீக்கி
பதினாறு பட்டையை நீக்கி
முத்துப் பட்டையை நீக்கி
முன்னால் வருவாள் சீமாட்டி.
அது என்ன?

–வாழைமரம்

2813. படம் இல்லாத படம் அது சட்டிப்படம்.
என்ன படம்?

–சம்படம்

2814. படி உயரம் செடி குடை அகலம் பூ
பிஞ்சில் அறுப்பான் காயில் உலர்த்துவான்
பழத்தில் விற்பான். அது என்ன?

–சட்டிப்பானை

2815. படியிலே படி என்ன படி?

–வாசற்படி,

2816. படீரென்று வெடிக்கும் பட்டாசு அல்ல
பறந்துபோகும் விமானம் அல்ல. அது என்ன?

–பலூான்

2817. படுத்து உறங்காத மிருகம் பந்தயத்தில்
ஓட்டம் அதிகம். அது என்ன?

–குதிரை

2818. படுத்து எழுந்திருந்தேன்
பம்பரம் போல் சுற்றி வந்தேன்
ஆயி அடித்தாள் என்று
அப்பனிடம் சொன்னதற்கு
அவள் அக்கினிக் கோட்டை கட்டி
அப்பவே விலை கூறிவிட்டாள்.
அவள் யார்?

–சட்டிப்பானை

2819. படை கடந்து சென்று பத்து மாதம் ஆச்சு.
ஆய்தாரை நிலை மாறவே இல்லை.

–வாய்க்கால்

2820. பண்டம் கேட்ட கடையில் பளிங்குக் குழலைத்
தந்தாள். பளிச்செனத் தலையை அமுக்க
புளிச்சென வாந்தி எடுக்குதே.

–சோடா

2821. பத்துச் சேலை நீக்கி, பதினைந்து பாவாடை நீக்கி,
முத்துச் சரத்தை நீக்கி, முனைந்தால் நிற்பான் ஜாக்கி.

–வாழைப்பூ

2822. பத்துப் பால் மரம் நாலு ஆல மரம்
இரண்டு கொங்காணி ஒரு கோணல் தடி. அது என்ன?

–நாய்

2823. பத்துப்பேரை வெட்டி பதினாறு பேரைக் குத்தி
ஐந்து பேரைக் கக்கத்திலடக்கி

ரெட்டைக் குதிரைமேல் ஏறி ஏழாம் வீடு தாண்டி
எட்டாம் வீடு வா. அது என்ன?

–விரல் நகம், பல், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை, பை, செருப்பு.

2824. பத்து மரங்களுண்டு ஒவ்வொரு மரத்தின் உச்சியிலும்
தட்டையான பத்துப் 'பாறைகளிருக்கின்றன.
அம்மரங்கள் யாவை?

–கைவிரல்கள்

2825. பத்து மாட்டுக்கு ஒரு தட்டு.

–மத்துக்கோல்

2826. பத்து வண்டி நூல் போட்டாலும் பத்தாது!
எட்டு வண்டி நூல் போட்டாலும் எட்டாது!
அது என்ன?

–வானம்

2827. பத்து விரல் பந்தாட ஐந்து விரல் அமர்ந்திருக்க
சூரியனுடன் வாதாட எமனுடன் போராட.
அது என்ன?

–வரட்டி

2828. பதில் வெடி போடாத வண்ணாத்தி புருஷனுக்கு
முதுகிலே மூணு சூடு. அது என்ன?

–அணில்

2829. பதுங்கி வருவார் கள்வர் அல்ல
பாய்ந்து பிடிப்பார் திருடனை அல்ல
வீட்டிலே இருப்பார் கணவர் அல்ல.

–பூனை

2830. பதுங்கி வருவார் கள்வர் அல்ல
பாய்ந்து பிடிப்பார் போலீஸ்காரர் அல்ல
அவர்கள் யார்?

–எலி, பூனை

2831. பதைக்கிறாள் குதிக்கிறாள்
பக்குவமாகிறாள் பந்திக்குப் போகிறாள்.
அவள் யார்?

–சோறு

2832. பந்தக்கால் நாலு பவளப்பல் பத்து
வெள்ளித்தடி இரண்டு வெண்சாமரம் ஒன்று.

–பசு

2833. பந்தடிப்பான் பரசிலடிப்பான் நூறுபேரையும்
நொறுக்கியடிப்பான். அவன் யார்?

–விளக்குமாறு

2834. பந்தல் கால் நாலு பவழக்கால் நாலு
வெள்ளித்தடி இரண்டு வெண்சாமரம் ஒன்று.
அது என்ன?

–பசுமாடு

2835. பந்தல் போட்டாச்சு, பழம் பூவும் வந்தாச்சு,
நாதசுரம் கேட்டாச்சு, நாட்டரசன் மகள் இருக்க
நம்ம ராசா இல்லாமல் நடக்குமா கல்யாணம்?

–உப்பு

2836. பந்தலிலே பச்சைப்பாம்பு
பயமின்றி பக்கம் போகலாம்.
அது என்ன?

–புடலங்காய்

2837. பந்தலைச் சுற்றி பாம்பு தொங்குது.

–புடலங்காய்

2838. பந்தான பந்து பச்சைப் பந்து. பச்சையோடு
மஞ்சள் ஊடே பூசிக்கொள்ளும் பந்து. பந்தைச்
சுற்றித் தோடு. தோட்டின் உள்ளே பதினோரு சுளை.
சுளைக்குள்ளே முத்து. முத்தை நீக்கிச் சத்தைச்
சித்தே பிழிஞ்சு உறிஞ்சிக் குடித்துப் பாருங்கள்.
சுவைக்கும். அது என்ன?

–ஆரஞ்சுப்பழம்

2839. பந்து பந்தடா புளியம் பந்தடா
நின்று தாக்கடா உயிரைப் போக்கடா. அது என்ன?

–துப்பாக்கி

2840. பந்துபோல் உருட்டித் தோசைபோல் தட்டி
வெய்யிலில் காட்டி வெந்நீருக்கு மாட்டி. அது என்ன?

–வரட்டி

2841. பயங்கரமான மழையிலும் நான்கு பேர்கள்
நனையாமல் செல்லுகின்றனர். அது என்ன?

–பசுமடி

2842. பயத்தால் விடமாட்டான். பழகினால்
மறக்க மாட்டான். அது யார்?

–நாய்

2843. பயித்தங்காய் பத்தும் படுக்கும் இடம் சப்பட்டை.

–விரல்கள்

2844. பரட்டைத் தலை மாமிக்குப்
பவளம் போல மருமகள்.

–இலந்தைப்பழம்

2845. பரட்டைத்தலை முடியாத பவுசுகெட்ட பெண்ணே
உன் உச்சிப்பால் குடித்தல்லோ ஊரு கெட்டுப்போச்சு.

–பனைமரம்

2846. பரட்டைத்தலையனுக்குப் பக்கம் எல்லாம் சடை.

–ஆலமரம்

2847. பரட்டைத்தலை விஸ்தாரக்காரி
முரட்டுப்பிள்ளை பெற்றாளே நீலி
அனைவருக்கும் பால்கொடுக்கும் தாதி
அங்கே கண்ட சேதிகளை இங்கே வந்து
சொல்லுவாளே தோழி. அது என்ன?

–பனைமரம்

2848. பரந்த காட்டேறிக்குப் பக்கமெல்லாம் சடை.

–ஆலமரம்

2849. பரந்து கிடக்கும் பந்தலே. நீ பதியக்
காலும் இல்லையே.

–வானம்

2850. பரமக்குடிக்கும் பார்த்திபனூ ருக்கும்
பறக்கும் தட்டுவாணி பாலில்லாமல்
பிள்ளை வளர்ப்பாள் மகாகெட்டிக்காரி.
அது யார்?

–கோழி

2851. பரமக்குடி ராசா மகள்
பத்துப்பிள்ளைக்காரி அவள்
பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில்
பலே கைகாரி அவள்.

–கோழி

2852. பருவத்தில் பச்சைப்பிள்ளை
பழுத்ததும் செவலைப்பிள்ளை
பல்பட்டால் போதும் கல்லும் கதறி அழும்.

–மிளகாய்

2853. பல் இருந்தும் கடிக்காத நல்ல மனிதன். அவன் யார்?

–சீப்பு

2854. பல் இல்லாத வெள்ளையன் காட்டிலும் மேட்டிலும்
வாய்விட்டுச் சிரிக்கிறான். அவன் யார்?

–பருத்தி

2855. பல்மீது விரல்பட்டால் போதும்
படிப்பாளே அவள் சங்கீதம்.

–ஆர்மோனியம்

2856. பல்லாக்குச் சாலையில் பறந்து ஓடி வந்தாலும்
பச்சைத் தண்ணீரைக் கண்டதும் பயந்து
ஒடுங்கி நிற்குதே.

–செருப்பு

2857. பல்லைப் பிடித்து அழுத்தினால்
பதறிப் பதறி அழுவான். அவன் யார்?

–ஆர்மோனியம்

2858. பலநாள் காய்த்து
ஒரு நாளில் பழுக்கும். அது என்ன?

–சட்டி

2859. பலபேர் கட்டிய வீடு
ஒருவன் கண்பட்டு உடைந்தது. அது என்ன?

–தேன்கூடு

2860. பலபேருக்கு ஒரே குடுமி. அவர்கள் யார்?

–பூண்டு

2861. பலர் கட்டிய மாளிகை
ஒருவருக்குத் தெரிந்தால் போதும்,
காணாமற் போய்விடும்.
அது என்ன?

–தேன்கூடு

2862. பவளத் தாயார் பளிங்குக் கல்
கோட்டைக்குள் தவழத் தன் மகளை
தவமிருந்து பெற்றாள் பேச்சழகி
மகளைப் பெற்ற தாய் போற்றினாள்.

–வாய், நாக்கு, பற்கள்

2863. பள்ளத்தாக்கு இரண்டுக்கும்
பாலமோ ஒன்றுதான். அது என்ன?

–மூக்கு

2864. பள்ளத்தில் மேயும் குள்ளக்கிடேரிக்குக்
கிள்ளி எடுக்க மயிர் இல்லை. அது என்ன?

–ஆமை

2865. பள்ளத்தைக் கண்டதும் பாய்ந்தோடும் தம்பி.

–தண்ணீர்

2866. பள்ளம் தோண்டினால் உள்ளம் குளிரவைப்பான்.
அவன் யார்?

–கிணறு

2867. பள்ளிக்குப் புறப்படும் பாலர்கள் பாய்ந்து
வாருங்கள். புகைவண்டி ஜல்தியில் புறப்படுகிறது
ஜல்தி நடவுங்கள் என்று பலரைப் பார்த்துப்
பரபரப்புடன் அழைக்கிறான். அவன் யார்?

–மணி

2868. பள்ளிக்கூடத்துக்குப் போகிற பட்டம்மாளுக்கு
கழுத்தில் ஒரு டை, கையில் ஒரு டை,
காலில் ஒரு டை. அவை என்ன?

–கழுத்துக்கட்டி (டை)
– குடை
– தண்டை

2869. பள்ளிக்கூடம் போகிற பட்டம்மாளுக்கு
கையிலே ஒரு டை, வாயிலே ஒரு டை
தலையிலே ஒரு டை. அவை என்ன?

–குடை, வடை, சடை

2870. பளபளத்த கல்லு பட்டுப் போல் கல்லு
மளமள என நூறு மச்சுக்கும் குச்சுக்கும்
சுற்றி வளைய வளைய இருக்குதே பிரித்தால்
ஆனைக் கொம்பு சிரிக்கக் காணலாம் நம்பு.

–வாழைத்தண்டு

2871. பளபள பகட்டுக்காரன் இறந்தபோது
இன்னும் சிறப்பு. அவன் யார்?

–பட்டுப்பூச்சி

2872. பளபள பகட்டுக்காரி
தளதள தளுக்குக்காரி
ஆயா தோட்டத்து அரக்குமணி
ஆடி அசையும் குந்தாணி
தேடிப் பிடியடா தெள்ளுமணி. அது என்ன?

–பட்டுப்பூச்சி

2873. பளபள பட்டுடுத்தி, பதினாயிரம் குஞ்சரம்
தொங்கவிட்டு, தெருவில் அசைந்தாடி வருவாள்

திரும்பிப் பார்க்கமாட்டாள்.
அது யார்?

–தேர்

2874. பளபள பட்டுப்போல பங்கய மொட்டுப்போல
பாம்பட வட்டுப்போல பகவான் தேர் வடத்தைப்போல.

–பாம்பு

2875. பளபளவென்றிருப்பாள் பல நிறங்காட்டிடுவாள்
தளதளவென்றிருப்பாள் தரணியெல்லாஞ் சென்றிடுவாள்
கட்டழகி முகம் காட்டிடுவாள்
கண்ணாட்டி கையில் இருந்திடுவாள். அது என்ன?

–கண்ணாடி

2876. பளிங்கு நீர் மான்களுக்குப்
பச்சை ஒட்டடை தீவனம்.

–மீன், பாசி

2877. பளிங்கு மண்டபம் கட்டி
பாலாறு ஒன்று வெட்டி
மகாராணி ஒருத்தி
மஞ்சள் நீராடுகிறாள்.

–முட்டை

2878. பளிங்கு மாளிகையில் கோமாளி ராசா
கொடி கட்டித் தொங்குகிறார். அவர் யார்?

–திருஷ்டிபொம்மை

2879. பளிச்சிடும் பச்சரிசி கோர்வை
கடிக்க முடியாது. ஆனால் கடிக்கும்.
அது என்ன?

–பற்கள்

2880. பளிச்சென்று கண் வெட்டுவான். அவன் யார்?

–மின்னல்

2881. பழக்கடைக்குப் போனேன்
பார்த்தேன் ஒரு அதிசயம்
பச்சை, சிவப்பு, பகட்டு மஞ்சள்
மெச்சும் நிறத்தில் மேல்தோல் இருக்க
அதை நச்சு உரிக்க நான் கண்டேன்
உள்ளே இருந்த வெள்ளைப் பொருளை
விரும்பி உண்டேன் விந்தைப்பழம். அது என்ன?

–வாழைப்பழம்

2882. *பழகினால் மறக்காது பயந்தால் விடாது.*
அது என்ன?

–நாய்

2883. *பழத்திலே பழம், பார்த்தாலும் தொட்டாலும்*
நினைத்தாலும் கொண்டாலும் இனிக்கிற பழம்.
என்ன பழம்?

–குழந்தை

2884. *பழத்திலே பழுத்த பழம்*
பட்டுப் போன்றதொரு புட்டுப்பழம்,
எடுப்பார்கள் கடிப்பார்கள், இதழ் வைத்துப்
பார்த்தாலும் என்றைக்கும் அருந்தாக்கனி.

–குழந்தை

2885. *பழந்துணி எப்போது வேம்பையொக்கும்?*

–கசக்கும்போது

2886. *பழமாகாப் பழம் என்ன பழம்?*

–விபூதிப்பழம்

2887. *பழமையும் புதுமையும் கலந்தவள்*
இளமையும் முதுமையும் உடையவள்
இனியவள் இதயம் கவர்ந்தவள். அவள் யார்?

–தமிழ்

2888. *பழமோ பழம் உரிக்காத பழம்*
மணமோ மணம் வேண்டாத மணம்
பாடு என்றால் பாடு அதுக்குப் பெரும்பாடு
மாடுண்ணாமாடு மண்டையில் தூங்குற மாடு.

–சம்பளம்

– அம்மணம்

– செம்மாடு

2889. *பற்கள் தெரிவதேன்?*
பொற்கொல்லன் தட்டுவதேன்?

–நகையால்

2890. *பற்கள் பல இருந்தும் யாரையும்*
கடிக்காத பிராணி, பளிங்கு இருந்தும்
பக்கத்தில் பார்க்காத ராணி.

–சீப்பு

2891. *பற்கள் பல உண்டு*
கடிக்க மட்டும் தெரியாது.

–சீப்பு

2892. பறக்கமுடியாத பச்சைக்கிளி
பக்கத்திலும் உள்ளது நொண்டிக்கிளி.

–மாங்காய்

2893. பறக்காத பூப்பந்து பகட்டான சிறு பந்து
எடுத்து வாயில் போட்டால் இனிக்கும் தேன்பந்து.
எது?

–லட்டு

2894. பறக்கும் ஆனால் பறந்து செல்லாது.

–கொடி

2895. பறக்கும் பறவையல்ல!
வாலுண்டு பிராணியுமல்ல. அது என்ன?

–பட்டம்

2896. பறந்து திரியும், அதன் படுக்கை மட்டும்
தலைகீழ் இருக்கும். அது என்ன?

–வௌவால்

2897. பறப்பான், கைபட்டால் இறப்பான்.
அவன் யார்?

–கொசு

2898. பறவையல்ல; பறக்கிறது!

–ஆகாயவிமானம்

2899. பறிக்கப் பறிக்கப் பெரிதாகிறது.

–குழி

2900. பன்னிரண்டு வருஷ வேளாண்மை ஒன்று
ஆறுமாச வேளாண்மை ஒன்று
மூன்றுமாச வேளாண்மை ஒன்று
அன்றே நட்டு அன்றே அறுக்கும் வேளாண்மை ஒன்று
எல்லாம் ஒரு களத்தில் அடிபட வேண்டும்.

–பாக்கு, வெற்றிலை,
புகையிலை, சுண்ணாம்பு.

2901. பனித்துளியே விழுந்தாலும் படுக்க இடம் தராமல்
நுனிக்குச்சி இலைக்குத்தி நூறுபேர் தங்க நிழல்
தணிக்கத் தரும் மரம்பேர் தங்கம்மா சொல்லம்மா?

–சவுக்குமரம்

2902. பனையூருக் கொல்லையிலே
பச்சைக் கம்பனைக் கண்டேன்

கோவிலூருக் கொல்லையிலே
கோலாட்டக் கம்பனைக் கண்டேன்.
அது என்ன?

–முருங்கைக்காய்

2903. 'பாக்' 'பாக்' என்குது. சிட்டங்கட்டிச்
செடியோரம் மேயுது.' அது என்ன?

–வாத்து

2904. பாக்கு எண்ண முடியவில்லை
பாய் சுருட்ட முடியவில்லை.
அது என்ன?

–நட்சத்திரங்கள், வானம்

2905. பாங்காய் இருப்பாள்
பட்டென்று போவாள்.

–மண்பாண்டம்

2906. பாட்டுக்காரி பங்கஜம் பார்த்து வளர்த்த
குமரியில் பல்லைப் பிடிச்சுப் பார்க்கையில்
பதறிப் பதறி அழுவானேன்.

–ஆர்மோனியம்

2907. பாட்டுப்பாடும் வாய் பேசாது
பார்த்துக்கொண்டு இருக்கும் கண் இமைக்காது.
அது என்ன?

–ரேடியோ

2908. பாட்டுப்பாடி நீரூற்றுவான். அவன் யார்?

–மழை

2909. பாட்டுப்பாடி வருவார்; பரதேசி அல்ல.
பட்டென்று அடித்தால் சாவார்; பாம்பு அல்ல.

–கொசு

2910. பாட்டை ஓரத்திலே பரட்டைத் தலையோடே
சலிக்காமல் காட்டேறி சடையோடே நிற்கிறான்.

–ஆலமரம்

2911. பாடாத பாட்டெல்லாம் பாட வந்தான்
கல்லான நெஞ்சையே கலங்கவைத்தான்.
அவன் யார்?

–கொசு

2912. பாடிக்கொண்டே பறப்பான். அவன் யார்?

–குயில்

2913. பாடி வலம் வருவார் பாகவதர் அல்ல
நாடி நரம்பூசி போடுவார்
நாட்டு வைத்தியரும் அல்ல.

–கொசு

2914. பாத்தி இருக்கும் தண்ணீர் இருக்கும் பயிர் இருக்காது,
சேத்துக்குள்ளே பூத்துக் குலுங்கும் செடி இருக்காது,
கொட்டிக் குலுங்கிய பூக்களை மக்கள் வெட்டிக்
கொள்வாங்க.

–உப்பு

2915. பாத்தி எப்படி நிறைவது, பசுவின் கன்றெப்படி
முட்டுவது?

–பாய்ந்து பாய்ந்து

2916. பாத்தி கட்டித் தண்ணீர் பாய்ச்சிடுவார்
விதைகொண்டு விதைக்கமாட்டார்
விளைந்தவுடன் வெட்டிக்கொள்வார்.

–உப்பு

2917. பாத்தி சிறு பாத்தி
பாய்வது கருநீர்
பூப்பது செம்பூ.

–குத்துவிளக்கு

2918. பாத்தியிலே பாத்தி என்ன பாத்தி?

–பாப்பாத்தி

2919. பாத்தியோ சின்னப்பாத்தி
பாய்வதோ கரிய தண்ணீர்
வேரோ வெள்ளை வேர்
பூப்பதோ செம்பூ. அது என்ன?

–விளக்கு

2920. பாதம் அளவு தண்ணீரில் பன்றி கொட்டம் அடிக்குது.

–தவளை

2921. பாதாளச் சுரங்க வாசல் பகல் வரத்
திறக்கக் கண்டேன். பலர் காவல் மறக்கக் கண்டேன்.
பளிச்சென்று கமுகுச் சோலை படைத்திட்டேன்.
என்பேர் சொல்லேன்?

–வெங்காயச்செடி

2922. பாதாளத்தில் இருந்து வந்தவளே
பம்பரம் ஆடி வந்தவளே

நல்லதும் பொல்லாததும் தின்னவளே
நாயினும் கேடாய்ப் போனவளே. அது என்ன?

–சட்டி

2923. பாதாளத்தில் பிறந்தவன்
பம்பரத்தில் சுழன்றவன்
இளம் வெயிலிற் காய்ந்தவன்
எல்லோரர் வீட்டிலும் இருப்பவன்.

–பானை

2924. பாதாளத்திலிருந்து இரண்டு வேதாளம் வருகிறது,
அதைப் பிடிக்க இரண்டு காவலாளி இருக்கிறான்,
அது என்ன?

–மூக்குச்சளி

2925. பாதாளத்திலே பிறந்து
பவுசத்திலே வளர்ந்து
ஒரு பொழுதிலே சமைந்து
ஊரெல்லாம் ஆசைப்படுவது.

–மண்பாண்டம்

2926. பாதியில் பாதி நான்
பலபுறம் காட்டி நான்
நீதியில் பெரியோன் நான்
நீலங்கள் தரிப்போன் நான்
கோவிலில் முன்நின்று கும்பிடுவேன் நான்.
நான் யார்?

–கைவிரல்கள்

2927. பாதுகாப்பதில் பலே ஆளு
பலனும் அவன் அடையான்
சண்டையிடமாட்டான் பதுங்கிடவும் மாட்டான்.

–பூட்டு

2928. பாதுகாப்பான பெட்டிக்குள்ளே
பலரும் விரும்பும் கடிகாரம்.

–இதயம்

2929. பாதையோரம் காணப்படுவான்
பலருக்கு வழிகாட்டுவான். அவன் யார்?

–பெயர்ப்பலகை

2930. பாப்பாக்குடித் தெருவிலே பட்டைச்சோறு
தின்றபின் பங்காருக்குதிரை நின்றது.
பணம் கோடிக் கொடுத்தாலும் பங்காரு
குதிரையில் ஏறுவோமோ?

–கழுதை

2931. பாப்பாத்தி கொல்லையிலே பச்சைத் துலுக்கச்சிப்
பாய்போட்டுத் துயில்கிறாள். அவள் யார்?

–கீரைப்பாத்தி

2932. பாம்பு ஓடுவதேன்? பாறை இடிவதேன்?

–அடிப்பாரற்று
அடிப்பார் அற்று

2933. பாய் சுருட்டவும் முடியாது
பாக்கு எண்ணவும் முடியாது.
அது என்ன?

–ஆகாயம், நட்சத்திரம்

2934. பாயை விரிச்சாச்சு பதக்கம் எல்லாம்
இறைச்சாச்சு பரிசு வாங்கிவிடப்
பையன்களைக் காணோமே.

–வானமும், நட்சத்திரங்களும்

2935. பாயை விரித்து எங்கும் பஞ்சை
வெட்டிப் போட்டிருக்கிறது. அது என்ன?

–மேகம்

2936. பார்க்கும்போது கருப்பு,
பாடும்போது இனிப்பு. அது என்ன?

–குயில்

2937. பார்த்தது இரண்டு பேர்
எடுத்தது பத்துப்பேர்
உருசி பார்த்தது ஒருவன். அவை என்ன?

–கண், கைவிரல்கள், நாக்கு.

2938. பார்த்தவர்க்கு ஒரு குடுமி கண்ணப்பன் பேர்
பாதியுரு அமைந்தழுழக் கோலுங் கொண்டு
ஆற்றுவான் நீர்மீட்பான் நீரில்மூழ்கி
அறுசுவையும் அறிந்திருப்பான் வெந்நீர்க் கஞ்சான்
வேற்றவர்க்கு விடாய் தீர்ப்பான் பகவானல்லன்
மெல்லியர்கைக்குள்ளாவான் விளம்புவீரே.

–அகப்பை

2939. பார்த்தால் கல்தான்
பல்பட்டால் தண்ணீர்தான்.

–பனிக்கட்டி

2940. பார்த்தால் சின்னப்பையன்
போட்டால் ஓங்காரம்.

–தேள்

2941. பார்த்தால் பசப்புக்காரி
கடித்தால் கசப்புக்காரி.
அவள் யார்?

–பாகற்காய்

2942. பார்த்தால் பார்க்கும், சிரித்தால் சிரிக்கும்
குத்திப்பார்த்தால் பத்துச் சில்லாகும்.

–முகம் பார்க்கும் கண்ணாடி

2943. பார்த்திருப்பீர் பார்த்திருப்பீர் காய்க்கிற மரம்
எனினும் காய்க்காமல் பழுக்கும் மரம் என்ன மரம்?

–இலவமரம்

2944. பார்ப்பதற்கு உருவம் உண்டு
எடுப்பதற்கு உடல் இல்லை.

–தண்ணீர்

2945. பார்ப்பதற்கு ஐந்து கால்
எண்ணுவதற்கு நான்கு கால். அது என்ன?

–யானை

2946. பார்ப்பான் புத்தி படிப்பதெப்படி
பணக்காரர் அரையில் உடுப்பதென்னது?

–பட்டுப்பட்டு

2947. பார்வைக்கு வெள்ளைக்காரி
பட்டுத்துணி வெள்ளைக்காரி
பாய் படுக்கைச் சொந்தக்காரி
படுக்க வாரும் என்னைக் கோரி.

–தலையணை

2948. பாராமல் நாமே போட்ட விதை
பார்ப்பவர் அதிசயிக்க முளைத்த விதை.

–பல்

2949. பாரினில் பறவாத கொக்கு
பாயாத வேங்கை.

–குதிரை, பொன்
(கொக்கு என்ற பெயர் குதிரைக்கு
வேங்கை என்ற பெயர் பொன்னுக்கு)

2950. பாரினிலே காய்த்துப் பழுக்காத மரம்.

–இலவமரம்

2951. பாலாற்றில் கறுப்பு மீன். அது என்ன?

–கண் கருவிழி

2952. பாலில்லாமல் பருக்குது.
நோயில்லாமல் இளைக்குது. அது என்ன?

–நிலா

2953. பாலிலே பழந்தூங்கப் பாதிநிலாத் தாதூங்க
ஆலமரத்தில் அணில் தூங்க அலைகடலுந்தான் தூங்க
காடெல்லாம் தூங்கிவரக் கழனிவேலி நெல் தூங்க
ஊரெல்லாந் தூங்க உன்கண் உறங்கலையே
ஆராரோ ஆரிவரோ?

–உயிர்

2954. பாவாடை உடுத்திருக்கும் பாவையன்று
பருத்த சிறு தொந்தியுண்டு செட்டியன்று
சுருண்டிருக்கும் வாலுமுண்டு சுவானமன்று
சுவையான கறிக்குதவும். அது என்ன?

–கத்தரிக்காய்

2955. பாழும் மரத்திலே பச்சை
பச்சை நுனியிலே சிவப்பு.

–கிளி

2956. பாளைபோல் இருக்கும் பூ
பார்த்தவர் விரும்பும் பூ
தலையிலே சூடாத பூ
தரணிதனில் என்ன பூ?

–வாழைப்பூ

2957. பாற்கடலின் மீது பட்டமரம் ஆட
பனித்துளிகள் மேலே படரும். அவை
பின்னே பதம் படிக்கும். சல்சல் பொருள்
இது என்ன சொல் சொல்!

–தயிர் மத்து கடையும்போது
படியும் வெண்ணெயும்
கேட்கும் சப்தமும்

2958. பாறை நடந்து பார்த்தேன்
ஐந்துகால் நிறுத்தி எண்ணினேன்.
நிஜமே நான்கு கால்.

–யானை

2959. பாறை - பாறைக்கு மேலே புல்லு,
புல்லுக்கு மேலே குதிரைக்குட்டி.
அது என்ன?

–தலைமுடி, பேன்

2960. பாறைமேல் இட்ட விதை
பார்ப்பவர் வியக்க முளைத்த விதை.

–பற்கள்

2961. பாறைமேல் கோரை
கோரைக்குள் குறவன். அது என்ன?

–தலை, மயிர், பேன்

2962. பாறையிலே மோதி பளிங்கு நீர் ஆடி
பசும் புல்லில் படுத்திருக்கும் பட்டத்து ராணி யார்?

–துவைத்து அலசிப்போட்ட ஆடைகள்

2963. பானைசட்டி போல காய் காய்க்கும்.

–பூசணிக்காய்

2964. பானை சிவப்பு அதன் மூடி கறுப்பு
உள்ளே தினை சாதம். அது என்ன?

–குன்றிமணி

2965. பிடரியை உலுக்கும் பேயாய்ப் பூக்கும்,
காய்க்கும், குலுக்கும் உடல், இதன்மேலே
கரிச்சான் குஞ்சு கூட உட்காரமுடியல்லை.

–நெற்கதிர்

2966. பிடி இல்லாத குடையைத் தொடமுடியவில்லை.

–வானம்

2967. பிடிக்கமுடியாது பிசைய வராது. அது என்ன?

–தண்ணீர்

2968. பிடிக்கவே முடியாத கள்ளன். அவன் யார்?

–புகை

2969. பிடித்தால் அடம்பிடிப்பான்
பிளவுநா இரண்டுள்ளான்
கடித்தற்குத் தெரியாதான்
காண்பதற்கோ பயமவனை
அடித்துத் தின்றால் அரைக்குப் பலமென்று
பிடித்து நமனே கொடுப்பான். அது என்ன?

–உடும்பு

2970. பிடிப்பிடி சுப்பல் பொறுக்கி
அரண்மனை வாசல் கட்டி

பார்க்கவந்த ராசாக்களெல்லாம்
பல்லை இளித்தார்களாம். அது என்ன?

–மீன்

2971. பிடியில்லாத பிடி என்ன பிடி?

–தம்பிடி

2972. பிள்ளைகளைப் பெருக்கமாய்ப் பெற்று
வளரவளரப் பட்சணம் பண்ணும்
படுநீலித்தாய் எவள்?

–கடல்

2973. பிள்ளை, பிள்ளையைப் பிடித்து
பிள்ளையில் வைத்துத் தின்றது.

–கீரிப்பிள்ளை
அணில்பிள்ளை
தென்னம்பிள்ளை

2974. பிள்ளை பிறந்தவுடன் எழுந்து
நான்கு பேரைக் கடித்தது.
அந்தப் பிள்ளை பேர் என்ன?

–கன்றுக்குட்டி

2975. பிள்ளையிலே ஏழுபிள்ளை என்ன?

–தென்னம்பிள்ளை, மாப்பிள்ளை, அணில்பிள்ளை,
கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை, பிள்ளைப்பூச்சி,
கருவேப்பிலை.

2976. பிளந்த நாக்குடையவனாம் சர்ப்பமல்ல
பேசாமல் பேசுவானாம் ஞானியுமல்ல
கரும்பாலும் செம்பாலும் குடித்துக் கக்கி
கற்றவர்க்கு வர்த்தகர்க்கும் தொண்டனாவான்.
அவன் யார்?

–பேனா

2977. பிறக்கும்பொழுது சுருண்டிருக்கும்
பிறந்தபிறகு பிரிந்திருக்கும். அது என்ன?

–வாழையிலை

2978. பிறக்கும்போது இரண்டு கொம்பாய்ப் பிறந்தது
இறக்கும்போது இரண்டு கொம்பாய் இறந்தது
இருக்கும் போது மறைவது. அது என்ன?

–பிறை

2979. பிறக்கும்போது நாலுகால், வளரும்போது
இரண்டுகால், வயதானபோது மூன்று கால்.
இவர்கள் யார்?

–குழந்தை, வாலிபம், தாத்தா

2980. பிறக்கும்போது வால் உண்டு
இறக்கும் போது வால் இல்லை. அது என்ன?

–தவளை

2981. பிறந்த அன்றைக்கே நடந்து
பிள்ளைச் சலங்கையும் கட்டாமல்
தாய்ப்பாலும் குடிக்காமல்
தண்ணீர் குடித்தே வளருகிறது.
அது என்ன?

–கோழிக்குஞ்சு

2982. பிறந்ததும் இனிப்பாள் கலந்ததும் புளிப்பாள்
பெற்ற பின் மணப்பாள்.

–பால், தயிர், நெய்

2983. பிறந்ததும் பிறந்தபின்னும் நம்மைத் தொடர்ந்து
வளர்ந்து நம்முடலை வற்றச் செய்யுது,
மாற்றம் செய்யுது.
என்ன இது?

–வயது

2984. பிறந்ததுமுதல் வயிற்றினால் போகிறது.
அது என்ன?

–பாம்பு

2985. பிறப்பால் வால் முருகும் இறப்பாலே வால் கருகும்.

–தவளை

2986. பிறப்புடன் வந்தது. இறப்புடன் நிற்கும். அது என்ன?

–மூச்சு

2987. பிறப்பும் இறப்பும் ஒரு மாதத்தில் அடங்கும்
ஒருவனுக்கு. அவன் யார்?

–நிலா

2988. பிறைகவ்வி மலைநடக்கும். அது என்ன?

–யானை

2989. பின்னச் சன்ன வேப்பமரம்
எண்ணெய் குடிக்கும் மரம்
எழுபது ஆள் தாங்கும் மரம்.

–[illegible]

2990 பீமனுக்குச் சோறு போட்டு வீதியில்
கிடப்பவள். அது என்ன?

–இலை

2991. புகைப்பவனுக்குக் கூட்டாளி
புகைச்சல் நோய்க்கு ஆட்டாளி
பெட்டிக்குள்ளே சேக்காளி
பிதுக்கிவிடுவான் ஷோக்காளி.

–சிகரெட்

2992. புகையாய்ப் போக்காளி
பலருக்குக் கூட்டாளி
பையில் இருப்பாளி. அது என்ன?

–சிகரெட்

2993. புகையும் நெருப்பும் இல்லாமல் எரிவது எது?

–ஏழையின் வயிறு

2994. புட்டி ஒன்றுதான் புட்டி
அதற்குள்ளே போட்ட தைலம் இரண்டுதான்
புகலுவீர் என்ன இது?

–முட்டை

2995. புட்டி ஒன்று புதை தைலம் இரண்டு.

–முட்டை

2996. புட்டுக்கூடை போல பூ பூக்கும்
பறிக்கப்போனால் எட்டாது.

–நிலா

2997. புட்பமோ நல்ல புட்பம்
எடுத்து முடிவாருமில்லை
முள்ளோ நல்ல முள்ளு
எடுத்து வேலி அடைப்பாருமில்லை
கூப்பிடுவது நன்றாயிருக்கிறது
கேட்போர் ஒருவருமில்லை.
அது என்ன?

–சேவல்

2998. புதரின் நடுவே பொன்போலப் பூத்திருக்கும்
பொய் சொன்ன பூ என்று
புராணக்கதை கூறும். அது என்ன?

–தாழம்பூ

2999. புதைத்து வைத்த பொருள்
பொத்துக்கிட்டு வருது.

–விதைமுளைத்து எழுதல்

3000. புரியாத மொழி பேசும்
புவனமெல்லாம் பார்த்து வரும்

பணம் கொடுத்தால் பறந்து வரும்
பத்தாயிரம் காதமானாலும் பாய்ந்துவரும்.

–தந்தி

3001. புல்லாக்குப் போலப் பூப்பூக்கும்
மல்லாந்து குத்தவே காய்காய்க்கும்.

–நெருஞ்சிமுள்

3002. புவியிலே பெண்பிறந்தும் பாவியானேன்
பிடிக்கிறவர் கைக்கெல்லாம் கட்டுப்பட்டேன்
புகாத கோவிலெல்லாம் புகுந்து வந்தேன்
சண்டையிடும் பெண்களோடு எதிர்த்து நின்றேன்
சாமிகளே யார் என்று சாற்றுவீரே.

–விளக்குமாறு

3003. புற்றை வளைத்துப் பூரான். அது என்ன?

–சரடு

3004. புறக்கடை அண்டாவுக்குப் பொத்தலே வராது.

–கிணறு

3005. புறக்கடையிலே பிறந்தவன் புழுதிக்குள்ளே
இருந்தாலும் புதுக்குடையே வச்சிருக்கான்.

–காளான்

3006. பூ இருக்க பிஞ்சு தின்றேன். அது என்ன?

–வெள்ளரிப் பிஞ்சு

3007. பூ இருக்கும், ஆனால்
இல்லை என்பார்கள். அது என்ன?

–காலிபிளவர்

3008. பூ இருந்தும் பறிக்காத புதிர்க்கதை ஒன்று
பட்டமரத்திலே பெருச்சாளி ஆடுது
பழைய கதை ஒன்று, நஞ்சுரிக்கும் தோலுரிக்கும்
நைசுக்கதை ஒன்று. தெரிஞ்சாச் சொல்லு
தெரியாங்காட்டி நில்லு

–1. சேவல், 2. கவலை இறைக்கும் உருளை, 3.பழம்.

3009. பூ இருந்தும் பறிப்பதில்லை. அது என்ன?

–சேவல்

3010. பூ உறங்குது, பொழுதும் உறங்குது,
நீ உறங்கவில்லை... எது?

–இதயம்

3011. பூக்காத பூ என்ன பூ?

–குங்குமப்பூ

3012. பூக்காமல் காய்ப்பது, புண்ணின்றிப்
புழு புழுக்கும். அது என்ன?

–அத்திப்பழம்

3013. பூக்காமல் பிறந்த காய்
பொரிக்காமல் தீராத காய். என்ன காய்?

–பொரிவிளங்காய்

3014. பூக்கும் காய்க்கும் ஆனால் காக்கா
உட்கார மட்டும் இங்கே இடமில்லை. அது என்ன?

–நெற்கதிர்

3015. பூக்குமது வேண்டினவர் முடியிலேறும்
புவனம் விலையாய்க் கொள்ளும் புவியின்மீது
ஆக்குமின் தானவஸ்து மிகுந்தவழி
அப்பாலே தான்பிறந்து மூலைசேரும்
நோக்குமிந்தப் பொருளின்நிறம் வெள்ளையாகும்
நுவலுவீர் இன்னதென நொடியிற்கண்டே.

–உப்பு

3016. பூ கொட்டக் கொட்டப் பொறுக்கமுடியல்லே

–மழைத்துளி

3017. பூசரை வீசரை மரத்தின்மேல் ஏறிநடப்பவரே
கைபோட்டுக் கறக்காத பால்
இரண்டு பால் கொண்டு வா.

–அப்பால், இப்பால்

3018. பூச வேண்டாத சுவர் பூசி மெழுகுவார்கள்
ஓட்டை இல்லாத மேடை அதில் ஓட்டுப்
போடுவாங்க. காலம் கலிகாலம் ஆதலாலே
எங்கும் காசுக்குக்கூட வட்டப்பில்லை
விற்கிறாள், ஓட்டுப்படம் போல அதை ஒட்டி
அழகு பார்க்கிறாள்!

–திருநீற்றுப்பூச்சும், பொட்டும்

3019. பூசாரி தொடாத திருநீற்றைப்
புழுதியாய் வாரி இறைத்தேன்.
புகைபுகையாய்ப் படர்ந்து
புதைத்து விட்டது ஊரை.

—சாம்பல்

3020. பூசைக்கு உரியவன் பசிக்கும்
உணவு அளிப்பான். அவன் யார்?

—பசு

3021. பூட்டில்லாப் பெட்டிக்குள்ளே
போட்டிருக்கும் வைரக்கல்
வைரகல்லின் ஒளியாலே
வையகமே தெரியுதடி. அது என்ன?

—கண்

3022. பூட்டு சாவி இல்லாத பெட்டி
காசு கொடுத்து வாங்கும் பெட்டி. அது என்ன?

—தீப்பெட்டி

3023. பூத்தபோது மஞ்சள்
பூத்ததும் சிவப்பு
காய்த்தபோது சிவப்பு
காய்த்ததும் கருப்பு

—ஈச்சம்பழம்

3024. பூப்பூவாய் உதிர்வான்
பொறிபட்டால் எரிவான். அவன் யார்?

—பட்டாசு

3025. பூப்போட்ட சேலை புட்டாச்சேலை.
தலையும் இருக்கும் கால் இருக்கவே இருக்காது.

—ரூபாய் நாணயம்

3026. பூமாதேவி கூந்தலில் புழங்கும் சீப்பு.

—துடைப்பம்

3027. பூமிக்கடியில் வாழும் ஒரு வெள்ளை மீன்.
என்ன மீன்?

—முள்ளங்கி

3028. பூமிக்கடியிலே பிறந்து பொக்கென்று வளர்ந்து
பொசுக்கென்று பூத்தவளை பொம்பளைகள்
பார்த்து, அம்மாடி எத்தனை ஆசைப்படுறாக!

—பானை

3029. பூமிக்குள்ளே பொன் விரலாள்.

–மஞ்சள்

3030. பூமியில் பிறந்தவள், போர்வைக் கூட்டுக்குள்
புகுந்து வாழ்பவள், பிழியப் பிழிய
வழியுமாம் நெய்யே!

–வேர்க்கடலை

3031. பூமியில் வளராத மரம்
கிளை உண்டு இலை இல்லை. அது என்ன?

–மான்கொம்பு

3032. பூமியிலிருந்து வந்தவளே
பம்பரமாடி வந்தவளே
ஏறுவெயில் காய்ந்தவளே
எல்லோருக்கும் ஆனவளே. அவள் யார்?

–சட்டி

3033. பூமியிலே பிறக்கும்
புகையாய்ப் போகும்.

–பெட்ரோல்

3034. பூமியிலே பெண் பிறந்தேன்
பிடித்தவருக்குக் கட்டுப்பட்டேன்
சாதியிலே ஈனம் ஆனேன்
சண்டைக்கு வந்து நின்றேன்
கோவில் குளங்களைக் கட்டி வைத்தேன்
கொண்டையில் பூமுடியாப் பாவியானேன்.
நான் யார்?

–துடைப்பம்

3035. பூமியிலே பொன் மரப்பாச்சி
புதைத்து வைத்திருக்கிறது.

–மஞ்சள்

3036. பூமுடிப்பார் யாருமில்லை , கூட ஒருமாதங்
காவல்கொள்வார்
அங்கமெல்லாம் மினுமினுத்து எட்டிப்பார்ப்பார்
அவளைக்கண்டு ஆயிரம்பேர் இச்சைப்படுவார்கள்.
அது என்ன?

–முத்துச்சோளம்

3037. பூரணச்சந்திரன் வடிவம்,
புட்டு தின்ன உதவும். அது எது?

–தோசை

3038. பூலாப்பூ பூத்துக்கிடக்குது பொறுக்க நேரமில்லை
தங்கப் போர்வை கிழிஞ்சு கிடக்குது தைக்க ஊசியில்லை
இராஜாமகள் பொணங்கிட்டுப் போறா அழைக்க
ஆளுமில்லை. அது என்ன?
–விண்மீன், மேகம், நிலா

3039. பூவாகாப்பூ என்ன பூ?
–குங்குமப்பூ

3040. பூவாமற் காய்ப்பது என்னகாண் மந்திரி
புண்ணின்றிப் புழுபுழுக்கும் அதுதான் மன்னா.
–அத்திப்பழம்

3041. பூவாய்ப் பூக்கும், புலபுலன்னு காய்க்கும்,
சிறு இலைகூடக் காணோம்.
அது என்ன?
–நாகதாளி

3042. பூவிருக்கப் பிஞ்சு தின்றேன். அது என்ன?
–வெள்ளரிப்பிஞ்சு

3043. பூவில் பிறக்கும் நாவில் சுவைக்கும்.
–தேன்

3044. பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்த
பூலோக ரம்பையே! சொல் ஒன்று பூவில்
தொடங்கி பூவில் முடியும் பொட்டுக்
கிண்ணிப் பூ என்ன பூ?
–பூச் செப்பு

3045. பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்த
பூலோக ராசாமகளே
பூவில் சிறந்த பூ என்ன பூ?
எள்ளிலே பிறந்து எள்ளிலே வளர்ந்த ராசாமகளே
எள்ளுக்கும் சிறிய இலை என்ன இலை?
–விடத்தலா இலை, பூ

3046. பூவிலே வெள்ளைப் பூ பூமியை நோக்கும் பூ.
–எள்ளுப் பூ.

3047. பூவுக்குள் பூ வைத்துப் போர்த்திய பூ
என்ன பூ?
–வாழைப்பூ

3048. பூவும் செடியும் இருக்கும். ஆனால்
செடி அல்ல. அது என்ன?
–நாணயம்

3049. பூவும் பூக்கும் காயும் காய்க்கும்
பூவையிருக்கப் பூங்கொம்பில்லை.

–நெற்பயிர்

3050. பூவை பூ எடுத்து
பூ மீது வைத்துத் தின்று
பூ போக மீதி பூ இருக்கு.

–எறும்பு, கரும்பு, வரப்பு

(எறும்பு கரும்பை வரப்புமீது வைத்துத் தின்றுவிட்டுப் போய் விட்டது. வரப்பு இருக்கிறது.)

3051. பூவையர் கையிலிருக்கும் பூச்சியைப் பிடித்துவரும்
வாயிற் பற்களுண்டு வர்ணங்கள் பலவுண்டு
மேலேறிப் பிராண்டும் பெருக்கும் அழுக்கெடுக்கும்
மேதினியில் வாழ்வாரே உரைப்பீரே உண்மைதனை.

–சீப்பு

3052. பூவோடு ஒன்றைச் சேரு, ஒன்றின்மேல்
பொட்டை ஒட்டு, ஒட்டிப் பின் மதுவைச்
சேர்த்தால் ஒரு கூட்டப் பூவும் ஆகும்.

–பூக்கள்

(தமிழில் ஒன்று என்பதை 'க' என எழுதுவர். இதன்மேல் பொட்டு இட்டால் 'க்' ஆகும்.)

3053. பூனைக்குட்டியை உரித்துத் தின்போம்
நாங்க ஒரு சாதி. அது என்ன?

–வாழைப்பழம்

3054. பெஞ்ச மழையிலே நெஞ்சு குளிர்ந்த கிளியே,
கொஞ்சலாம் உன்னோடே, கட்டிலே போடலாம்,
பச்சை ரத்தம் பரிமாறிக் கொள்ளலாம்தானே?
பதில் சொல்க!

–வெற்றிலை

3055. பெட்டிக்கடைக்குள் மஞ்சள் ஆடை அணிந்து கூட்டம்
எட்டிப் பார்க்கிறது. அது என்ன?

–வாழைப்பழம்

3056. பெட்டிக்கு அடியிலும் கொட்டிக் கிழங்கு.

–தேள்

3057 பெட்டிக்குள் இருக்கிற கட்டி முத்துக்கள்.

–பற்கள்

3058. பெட்டிக்குள்ளே சேதி கொட்டிப் போனது யாரு?

—வானொலி

3059. பெட்டி மூடிக்குப் பிளவுகள் ஐந்து.

—உள்ளங்கை

3060. பெட்டியாவது பெட்டி பேசுகின்ற பெட்டி
விசை கொடுத்தால் சுற்றிப் சுற்றிப் பாடுகின்ற பெட்டி
தட்டிருக்கும் பெட்டி வாயிருக்கும் பெட்டி
சங்கீதம் அத்தனையும் அடக்கிவைத்த பெட்டி.
அது என்ன?

—கிராமபோன்பெட்டி

3061. பெட்டியிலே வட்டு, வட்டுமேலே தட்டு,
தட்டை ஊசி தொட்டு தலைசுற்றியதும் பாட்டு,
தாளத்தோடு கேட்டு தித்திக்க வைக்கும் பெட்டி.
என்ன பெட்டி?

—கிராமபோன்

3062. பெட்டியைத் திறந்தால் அடுக்கிய நிலையில்
அக்கினிபுத்திரர்கள். அவர்கள் யார்?

—தீக்குச்சி

3063. பெட்டியைத் திறந்தால் பெருங்காயம் மணக்கும்.
அது என்ன?

—பலாப்பழம்

3064. பெட்டியைத் திறந்தால் வருவது போலீஸ்.
அது என்ன?

—தீக்குச்சி

3065. பெட்டியைத் திறந்தேன்
கிருஷ்ணன் பிறந்தான். அவன் யார்?

—வேர்க்கடலை

3066. பெண்ணுக்கு இருப்பாகப் பேசும் பொண்ணு
கண்டாங்கி சேலைக்குள்ளே கசங்கின பொண்ணு
வளைச்ச நாலுப்பாலம் வசப்பட்டது உண்டு
வளையல் குலுங்கலுடன் உறுமிடும் வண்டு.

—உடுக்கை

3067. பெண்ணுக்கே பெறந்தவ, பொண்ணாகப்
பொறந்தவ, கண்ணாலே கண்டதும்
கன்னியர்கள் கொல்வதாம்! அது என்ன?

—பேன்

3068. பெண்ணோ ஒருத்தி தோட்டத்திலே
மாப்பிள்ளை தோப்பிலே நண்பன் வீட்டிலே.
அவர்கள் யார்?

–வெற்றிலை, புகையிலை, பாக்கு, சுண்ணாம்பு.

3069. பெத்த பிள்ளை கொடுக்காதது
வளர்த்த பிள்ளை கொடுக்கும். அது என்ன?

–தென்னம்பிள்ளை

3070. பெய்த மழை வற்ற வற்ற பிள்ளைப்பூச்சி
உப்ப உப்ப. அது என்ன?

–குலோப்ஜாமூன்

3071. பெயர்ச்சொல்லானால் வீட்டை மூடும்
வினைச்சொல்லானால் விரைவைக் காட்டும்.
அது எந்தச் சொல்?

– ஓடு

3072. பெயரில் புலி உண்டு, உருவிலோ
செயலிலோ அது இல்லை. அது என்ன?

–அம்புலி

3073. பெரிய கடாரங்காய் போலக் காய்காய்க்கும்.
அது என்ன?

–பூசணிக்காய்

3074. பெரியண்ணன் வேட்டியை மடிக்கமுடியலை
சின்னண்ணன் பணத்தை எண்ணமுடியலை. அது என்ன?

–வானம், விண்மீன்கள்

3075. பெரிய மாமா வீட்டுத் துப்பட்டி
பிரிக்கவும் முடியலை விரிக்கவும் முடியலை.

–வானம்

3076 பெரியாரு பேச்சுக்குப் பிச்சுப்பிள்ளை
அரிஞ்சாலோ அழவைப்பாள் ஐயாப்பிள்ளை.

–வெங்காயம்

3077. பெருக்கப் பெருக்கப் பேர்வாங்கிச்
சிறுக்கி கைபட்டுச் சிறுத்துப் போனேன். நான் யார்?

–துடைப்பம்

3078. பெருங்காயம் தலையிலே சிங்காரம். அது என்ன?

–பம்பரம்

3079. பெருவயிறன் செவியுடையான் கதிர்குலத்தான்
பேசுவான் குரல் நெருக்கிப் பெண்டிர்க்கன்பன்
அரிவையர்முன் தலைவிரித்துச் சுழற்றியாடி

அவனிதனிற் சாத்திரநூல் அறிந்த ஞானி
இருநிலமும் தனதெனத் தோரணங்கள் கட்டி
இருப்பவனை இன்னவனென் றியம்புவாயே.

–இராட்டினம்

3080. பேச்சுக்குப் பேச்சு பெண்களால் ஏச்சு
நங்கை நான் இல்லாட்டி நாறிப்போகும் வீடு.

–துடைப்பம்

3081. பேசாமல் இருப்பான்
ஆயிரம் அர்த்தங்கள் உணரவைப்பான்.
அவன் யார்?

–அகராதி

3082. பேரென்றால் பெண்ணின் பேரு. பெண்ணுக்கு
ரூபமில்லை
ஓடுவாள் வேகமாக, உதவுவாள் யாருக்குமே
போனவள் திரும்பமாட்டாள், பொருளதை
அறிவீர் தாமே. அது என்ன?

–கங்கை

3083. பேனா இல்லாமல் பென்சிலும் இல்லாமல்
ஆனானப்பட்ட சேதிகளையும் அவசர அவசரமாக
ஊன்பட்ட ஒலியாலே உரைக்கும் உழைப்பாளி,
கட்டும் கட்டாவென்று துட்டுக் கொடுத்தால் தூர
தேசங்களுக்கும் ஆளையே அனுப்புவான்.
அறிவிக்கச் செய்வான். அவன் யார்?

–தந்தி

3084. பைங்கொடியாள் வந்தபின்பு பந்தல் போட்டுப்
பாதத்தில் நீர் சொரிந்து பருமனாகி
அங்கவரும் பூமுடித்து மகிழ்ந்ததாக
அம்புவியிலோர் பேரும் பெற்று நல்ல
கொங்கனையும் ஈன்றெடுத்தாள் நீண்ட மெய்யாள்
சூடுண்டாள் அறுப்புண்டாள் சொல்லுவீரே.

–புடலங்காய்

3085. பையில் அது இருந்தால்
வேறு எதுவும் அங்கிருக்காது. அது என்ன?

–கிழிசல்

3086. பொட்டுப் பையன் போகிறான்
அவன் போனதடம் தெரியவில்லை.

––எறும்பு

3087. பொட்டுப் போல் இலை இருக்கும்
பொரிபோலப் பூப்பூக்கும்
தின்னக்காய் காய்க்கும்
தின்னாத பழம் பழுக்கும். அது என்ன?

–முருங்கை

3088. பொட்டுப் போன்ற ஓட்டையுள் குட்டைச் சீனன்
கூடவே பஞ்சுப்பிள்ளை புகுந்திட்டான் தட்டுக் கட்டிச்
சடுகுடு தாறுமாறா ஆடுகிறார்.

–ஊசிநூல் தையல் மிஷினில் தைப்பது.

3089. பொடிப்பையனுக்குப் பொட்டுருமால்.
அது என்ன?

–தீக்குச்சி

3090. பொண்ணு வயிற்றுப் புள்ளைத்தாச்சி
இங்கே படுத்திருக்கும் நேரத்தில் பெத்தவ
ஊர் சுற்றிப் பேயாய்த் திரிகிறாளே.

–பூசணிக்காய், பூசணிச்செடி

3091. பொந்து பொந்து புளியம்பொந்து
பொந்தில் இருக்கிற தேவி உயிரை வாங்கும் தாவி.

–துப்பாக்கி

3092. பொந்திலே இருப்பவன் கொம்பிலே சுற்றுபவன்
ஒரு போடு போட்டால் உயிரே போகும். அவன் யார்?

–பாம்பு

3093. பொய்கையிலே குளிச்சு வரும் பூமியிலே துள்ளிவரும்.

–தவளை

3094. பொரிச்சது நடக்கும் அறுத்தது முளைக்கும்.

–கோழி, மாம்பழம்

3095. பொரித்தது நடக்கும். அது என்ன?

–கோழிக்குஞ்சு

3096. பொரி பொரித்தேன், பெட்டியில் வைத்தேன்
பொழுது விடிந்து பார்த்தால் காணவில்லை.

–விண்மீன்

3097. பொருள் ஒன்றுக் கூட்டினால் பதினொன்று
வரவேண்டும். அது என்ன?

–ஆரஞ்சுப்பழம்

3098. பொழுது போனால் பூந்தோட்டம். அது என்ன?

–நட்சத்திரம்

3099. பொழுது போனால் பூந்தோட்டம்
விடிந்தால் வெறுந்தோட்டம். அது எது?

–வானம்

3100. பொழுது விடிந்ததும் சிரித்தது ஒன்று,
பறந்தது ஒன்று, பதுங்கியது ஒன்று, மலர்ந்தது ஒன்று,
மறைந்தது ஒன்று, தெரிந்தது ஒன்றா இரண்டா
சொல்லுங்கள் பார்க்கலாம்.

–கதிரவன் சிரித்தான்,
இருட்டு பறந்தது, வௌவால் பதுங்கியது,
மலர்ந்தது தாமரை, மறைந்தது நட்சத்திரம்.

3101. பொழுது விடிந்தால் நல்லது என்றது ஒன்று
பொழுது விடியவேண்டாம் என்றது ஒன்று
விடிந்தால் என்ன, விடியாவிட்டால் என்ன என்றது
இன்னொன்று. அவை யாவை?

–கட்டில், அடுப்பு, உறி.

3102. பொன் நகையால் பூப்பூக்கும்
சொன்னதை எல்லாம் உள் இழுக்கும். அது என்ன?

–காது

3103. பொன்னாசாரி தட்டுவதேன்?
பூவை பற்கள் தெரிவதேன்?

–நகையால்

3104. போகப் போக வெள்ளிப்பணத்தை வீசி
எறிஞ்சிட்டுப் போகிறான்.

–எச்சில்

3105. போகாமல் இருப்பது ஒன்று. போய்வருவது
இரண்டு. போனது இருப்பது வருவது மூன்று
போனால் வராததும் உண்டு.

–ஆகாயம், சூரிய சந்திரன், நேற்று –
இன்று – நாளை, உயிர்.

3106. போகிற வழியெல்லாம் புகைக்கூண்டுச் சாம்பலை
பொடிப் பொடியாத் தூவுகிறான். தூவித் தூவித்
துப்புகிறான். யார் இவன்?

–சிகரெட், பீடி புகைக்கிறவர்கள்

3107. போகும் இடமெல்லாம் கோடும் கிழித்துவிடுவான்.

–நத்தை

3108. போகும்போது கிழவி, வரும்போது குமரி.

–தண்ணீர்ப் பறி (தோல்பறி)

3109. போகும் வழியில் பெருச்சாளி
வங்கில் கைவிடுகிறான். அது என்ன?

–வெற்றிலைப்பை

3110. போட்டதெல்லாம் தின்று புழுதிச் சாம்பல் ஆக்கும்.
புனலைத் தொட்டால் போதும் பொறி
முடிந்து போகும்.

–தீ

3111. போட்டதை எடுக்கமுடியவில்லை. அது என்ன?

–கோலம்

3112. போட்டால் பொரியும் இங்கிலீஷ் முட்டை.
அது என்ன?

–கடுகு

3113. போடப் போடத் திங்கும் பொத்தக்கிடா.
அது என்ன?

–திருகை

3114. போத்தித் தாத்தாவிடம் நான் போர்வையைக்
கேட்டதும் அவர் கோல் ஒன்றைத் தம்பியிடம்
கொடுத்து என்னிடம் கொடுக்கச் சொன்ன
கருத்து என்ன புரியுதா?

–கம்பளி

(கோல் = கம்பு
கொடு = அளி)

3115. போய்க்கொண்டே இருக்கிறேன் என்னைத்
தொடர்ந்துகொண்டே வருகிறான். அவன் யார்?

–நிழல்

3116. போய்வருபவை இரண்டு
போனால் வராதவை இரண்டு
எப்போதும் இருப்பவை இரண்டு. அவை யாவை?

–இரவு, பகல்
இளமை, பருவம்
சூரியன், சந்திரன்

3117. போய்வருவது உண்டு போட்டி போட்டுக்கொண்டு,
முன்னும் பின்னும் சிண்டு முடித்துக் கொள்பவை
ரெண்டு.
முடியுமா அவை பேர் சொல்ல?

–இரவு, பகல்
சூரியன், சந்திரன்

3118. *போருக்குப் போகாத வீரன்*
போர்க்களத்தையே விரட்டிடுவான். அவன் யார்?

–பாம்பு

3119. *போருக்குப் போகாமலேயே படைகளை*
நடுங்க வைப்பான். அது யார்?

–பாம்பு

3120. *போலீஸ்காரர்களைப் போட்டது யார் சிறையில்?*

–தீப்பெட்டி

3121. *போவப் போவ வெள்ளிப் பணத்தை வீசி*
எறிஞ்சிட்டுப் போறான். அது என்ன?

–எச்சில்

3122. *போவான் வருவான் கறுத்தப்பன்*
தலைகீழாய் நிற்பான் கறுத்தப்பன்.

–வெளவால்

3123. *போவான் வருவான் திம்மப்பன்*
ஒரு காலில் நிற்பான் திம்மப்பன்.

– கதவு

3124. *போன ரயில் திரும்பிவராது. அது என்ன?*

– உயிர்

3125. *போனாரு கோவாரு பொய்யில்லை*
ஆனாலும் சுவடு தெரியலையே.

– எறும்பு

3126. *போனால் திரும்பாதது எது?*

– உயிர்

3127. *மக்களும் மக்களும் நாங்கள் தான்*
மகராஜி மக்களும் நாங்கள் தான்
அம்மியின் மேலே கும்மி அடிக்கிற
அம்மான் மக்களும் நாங்கள் தான்
பட்டுப் புடவைக்கு முத்திரை வைக்கிற
பல்லு மக்களும் நாங்கள் தான். நாங்கள் யார்?

– எலிகள்

3128. *மக்குப் பிள்ளையாருக்கு*
மாரியம்மன் வார்த்திருக்கிறது. அது என்ன?

–பலாப்பழம்

3129. *மகுடம் அணிந்த மகராசா மத்தாப்பு*
மேனி சிகைராசா ஏலச் சந்தைக்கு வந்தாச்சு

ஏறின வேலையைத் தந்தாச்சு
ராசா இதயம் நொந்தாச்சு.

–கத்திரிக்காய்

3130. மங்கலத்தின் சின்னம்
மங்கையரின் தோழி. அது என்ன?

–மஞ்சள்

3131. மங்கை அக்கா வீட்டுக் கொல்லையிலே
மஞ்சள் முட்டை மரத்தில் ஆடுது.

–எலுமிச்சம்பழம்

3132. மங்கை மனைவி அடேங்கப்பா
மணவாளனைப் போட்டு அடிப்பா, மறுபடியும்
போட்டு உடைப்பா, மங்குணிக் கணவனும் கிடப்பான்.

–அம்மி, குழவி

3133. மங்கையர் அங்கத்தைத் தங்கமாக்கும் மங்களம்
மங்களப் பொன் அம்பலம் மணக்கும் நல் சித்தம்பலம்?

–மஞ்சள்

3134. மங்கை வந்து குளிப்பாட்டி
அமுதூட்டி எடுத்தாள். நாணிக்கோணி
இடையில் வந்து அணைத்துக்கொண்டு நடந்தாள்.
அது என்ன?

–குடம்

3135. மச்சான் வீட்டுக் கூடத்திலே
மலை எருமை படுத்துக் கிடக்கிறது.

–வைக்கோல் போர்

3136. மச்சிக்குள்ளே குச்சி
குச்சிக்குள்ளே தொப்பி

–தீக்குச்சி

3137. மச்சுக்குப் போனேன் மச்சியைப் பார்த்தேன்.
ஒரு கட்டுப்புல்லை உருவித் தந்தாள்.
சேர்க்கவும் முடியல்ல கோர்க்கவும் முடியல்ல.

–தலைமுடி

3138. மஞ்சக்கரு இருக்கும் மணி கறுப்பு ரெண்டிருக்கும்
கொஞ்சம் உரிச்சதும் நெஞ்சிலே துஞ்சுமாம்
நெல் நிறத்துப் பட்டாடை நெடுக அவன் மூடாக்கு
உருவத்தில் அச்சு அசல் உருளைக்கிழங்கிறகேன்
ஒண்ணான சொக்காரன்.

–சப்போட்டாப்பழம்

3139. மஞ்சள் அங்கிக்குள்ளே மறைந்திருந்த வெள்ளையம்மா
பஞ்சம் பறப்பதற்கு நீ பவனியன்றோ வரவேண்டும்?

–நெல்

3140. மஞ்சள் உறைக்குள் மறைந்து இருப்பான்
மக்கள் இதயத்தில் மலர்ந்து இருப்பான்.

–நெல்

3141. மஞ்சள் கன்னி நாலு பேர்
சிவப்புக் கன்னி நாலு பேர்
கருப்புக் கன்னி நாலு பேர்
பச்சைக் கன்னி நாலு பேர்
இந்தப் பதினாறு பேருக்கும்
இரண்டு ஆம்படையான். அது என்ன?

–சொக்கட்டான்

3142. மஞ்சள் கிண்ணத்தில் மணி மணியா கெம்பு.

–மாதுளம் கனி

3143. மஞ்சள் குருவி ஊஞ்சலாடும்
மாதேவனுக்குப் பூசைக்காகும்.

–வாழைப்பழம்

3144. மஞ்சள் சட்டை மாப்பிள்ளை
மணமணக்கிறார் வீட்டிலே.

–எலுமிச்சம்பழம்

3145. மஞ்சள் சேலை கட்டி
மங்கையர் பத்துப்பேர்
கயிற்றைப் பிடித்துக்கொண்டு
கடைதனிலே தொங்குகின்றார்.

–வாழைப்பழச் சீப்பு

3146. மஞ்சள்தனை மெய்யணியும் மடந்தையன்று
மனம்புணர்ந்தே மகிழ்ச்சி தரும் மனைவி அன்று
கொஞ்சி பலபேரேந்தும் குழந்தையன்று
கொற்றவர்களிடம் புகுதும் திருவுமன்று
பிஞ்ஞகன் மேல் நின்றாடும் பாம்புமன்று
பிரியமுடன் தனையருந்தும் மதுவுமன்று
பிழையாமல் இக்கதையைப் பேசுவாயே.

–எலுமிச்சம்பழம்

3147. மஞ்சள் நிற அழகி நான்
மணமில்லாத அழகி நான்
மார்கழி வந்தால் வரவேற்பார் என்னை. நான் யார்?

–பூசணிப்பூ

3148. மஞ்சள் பட்டு உடுத்தி
மடிக்குள் பிள்ளையை வைத்து
கடைத்தெருவில் வீற்றிருப்பாள்
கண்டவர் மயங்கும் ராணி.

–மாம்பழம்

3149. மஞ்சள் பூக்கள் பூக்கையிலே
மாட்டேன் என்று சொன்னீரே!
பிள்ளையைப் பெற்றுக் கையில் கொடுத்தால்
கொஞ்சக் கொஞ்ச வருகின்றீரே!

–வேர்க்கடலை

3150. மஞ்சள் பெட்டி மரக்கால் பெட்டி
ஒருக்காலும் திறக்காப் பெட்டி.

–வயிறு

3151. மஞ்சள் போர்வை போர்த்தி
மறைந்திருப்பான் வெள்ளையன்
கொஞ்சம் போர்வை களைந்தால்
கொதிக்கும் நீரில் விழுவான். அவர்கள் யார்?

–நெல், அரிசி

3152. மஞ்சள் போல் பூப்பூத்து
மாறு போல் காய் காய்ச்சு
எங்கே போனாலும் எம்பேர் கறுப்பி. நான் யார்?

–கடுகு

3153. மஞ்சள் மாளிகைவாசி, மக்கள் தினம்
தேடும் பாசி, வாயில் போகும் பாசி என்ன பாசி?

–நெல்

3154. மஞ்சள் வீட்டிற்கு வெளியே நிற்பான். அவன் யார்?

–முந்திரிக்கொட்டை

3155. மஞ்சளாகப் பூத்தது மத்தாப்பாகச் சிவந்தது
பழுத்தவுடன் பார்த்தாலோ பனைமரம் போல்
கறுத்திடுச்சே!

–பேரிச்சம்பழம்

3156. மஞ்சனத்தி மரத்திலே மகாலிங்கம் தோப்பிலே
டக்கிலே முக்கிலே ஒருத்தி சிறையிலிருந்து
வாழ்கிறாள். அது என்ன?

–மாங்கலியத்தாலி.

3157. மட்டையுண்டு கட்டையில்லை
பூவுண்டு மணமில்லை.
அது என்ன?

–வாழை

3158. மட்டையோடு காய்க்கும் காய்
மரபூசைக்கு வேண்டும் காய்
செட்டியார் கடையிலே
சிவகளையோடு இருக்கும் காய்.

–தேங்காய்

3159. மடக்காமல் பறக்குதே அதென்ன மந்திரி?
சிமிட்டாமல் விழிக்குதே அது தான் மன்னா?

–தட்டாரப்பூச்சி

3160. மடக்கும் விரிக்கும் மட்டை முடிச்சிறகு.

–குடை

3161. மடிப்புக் குலையாமல் மஞ்சள் புடவைகட்டி
மடிசார் கொசுவம் போல் வரிசை வரிசையாய்
வடத்தில் கடையிலே துஞ்சும் தோழியர் யார்?

–வாழைப்பழம்

3162 மடியிலை பறித்தால் பிடியிலை இல்லை.

–புகையிலை

3163. மண் சட்டி வைரம் பாய்ந்து
மாரியம்மனுக்குப் பூசை போட்டு,
மடியிலே சலங்கை கட்டி
மாதிவள் கதறுவாளே.

–உடுக்கை

3164. மண்டூருத் தோட்டத்திலே
குண்டுப் பண்ணி படுத்துக் கிடக்கு
பிடித்து வாடா பெரிய கருப்பா
அடித்துக் கொல்லுடா ஆம்பிளை சிங்கம்.

–பரங்கிக்காய்

3165. மண்டைக் குளத்திலே மயில் பீலி.

–பனங்கிழங்கு

3166. மண்டைப்பூக்காரி மத்தாப்பூ கொண்டைக்காரி.

–சேவல்

3167. மண்டையில் அவளுக்கு மயிரில்லை. ஆயினும்
அவளுக்கு உயரமான கொண்டை மட்டும்
இரண்டு இருந்தது.

–மான்கொம்பு

3168. மண்டையில் போட்டால்
மகிழ்ந்து சிரிப்பான். அவன் யார்?

–தேங்காய்

3169. மண்டையில் வெள்ளை மடியில் பச்சை
மச்சி காயத்தில் அடிமலர் சிவப்பாம்.

–வெங்காயம்

3170. மண்டையிலே மயிரில்லாக் கொண்டைக்காரி
மனிதரோடு பேசாத மகிமைக்காரி
கொண்டவனைக் ,கண்டக்கால் குலுக்கென்று சிரிப்பாள்.
அவள் யார்?

–கைத்தறி

3171. மண்ணாகக் கிடந்தவளை மாவாக்கிப் பிசைந்து
புண்ணாகி நனைச்சுப் புடிச்சு நெருப்பில்
போட்டானே, அத்தோடே விட்டானா மனுசன்?
பிள்ளை என்று என்னை நினையாமல் விலை பேசுகிறான்.
இதைக் கேட்பாரே கிடையாதா?

–பானைசட்டி

3172. மண்ணாம் மண்ணிற்குள்ளே
வாழைப்பழ வடிவிற்குள்ளே
மச்சம் வெள்ளையாய் மறைந்து கிடக்குது.

–முள்ளங்கி

3173. மண்ணிலே பிறந்து மங்கையர்க்கு அழகு தந்து
தன் மதிப்பைக் குறைத்துக்கொண்டான்.

–தங்கம்

3174. மண்ணிலே பிறந்து மண்ணைக் குடைந்து
மண்ணையே உண்டு மண்ணோடு வாழும்
மாயாண்டி. அவன் யார்?

–மண்புழு

3175. மண்ணிலே பிறந்து மண்ணோடு சேர்வாள்
பெண்ணுமல்ல
சக்கரத்தில் சுழன்று செல்லும் தேர் அல்ல
வெயிலிற் காயும் நெருப்பிலே வேகும் செங்கல் அல்ல
கடைக்குச் செல்வாள் காரிலும் போவாள் வருவாள்
போட்டதெல்லாம் தின்பாள், திருப்பியுந் தருவாள்
பண்புடன் நடக்காவிட்டால் பட்டென்று கோபிப்பாள்.
அது என்ன?

–பானைசட்டி

3176. மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையுது.

–சாம்பிராணி

3177. மண்ணிலே மரம் பிறந்து
மகாதேவருக்கு அடிமைப்பட்டு
கண்ணிலே கலிங்கம் போட்டு
கதறுதாம் காளங் கன்று.

–மேளம்

3178. மண்ணின் மடியில் நின்று தவம் செய்யும்
நிர்வாண அழகி. அங்கம்மீது எப்போதும்
அலகு குத்திக்கொண்டே ஆடாமல் அசையாமல்
ஆகாயத்தைப் பார்த்து நிலைகுத்தி நிற்பவள்.

–சப்பாத்திக்கள்ளி

3179. மண்ணுக்குள் இருப்பவள் மங்களத்துக்கு ஏற்றவள்.
அவள் யார்?

–மஞ்சள்

3180. மண்ணுக்குள் கிடக்குது மயிர் மாணிக்கம்.

–பனங்கிழங்கு

3181. மண்ணுக்குள் பிறக்கும் மங்கைக்கு அழகுதரும்.

–மஞ்சள்

3182. மண்ணுக்குள் பிறந்தாண்டி
மாபெரும் தோலாண்டி
கண்ணீரைத் தருவாண்டி. அது என்ன?

–வெங்காயம்

3183. மண்ணுக்குள் மயிர்கோதி. அது என்ன?

–பனங்கிழங்கு

3184. மண்ணுக்குள்ளே இருக்கிற மாயாண்டி
உரிக்க உரிக்கத் தோலாண்டி.

–வெங்காயம்

3185. மண்ணுக்குள்ளே பொன்னம்மாள். அது என்ன?

–மஞ்சள்

3186. மண்ணுக்குள்ளே மட்காத கயிறு. அது என்ன?

–மண்ணுளிப் பாம்பு

3187. மண்ணுக்குள்ளே மயிர் பயிராகிறது. அது என்ன?

–வெட்டிவேர்

3188 மண்ணுக்குள்ளே வெள்ளை மீன். அது என்ன?

–முள்ளங்கி

3189. மண்ணுக்குள்ளே வைரம். அது என்ன?

–நிலக்கரி

3190. மண்ணை மண்ணைத் தோண்டுவான்
தோண்டி அதில் தூங்குவான்.

–நாய்

3191. மண்பிசைந்து வேலைசெய்வான் குயவனல்ல
வங்காளம் போய்வருவான் செட்டியல்ல
கண்ணுண்டு மூக்கில்லை தேங்காய் அல்ல
காலுண்டு தலையில்லை கபந்தமல்ல
இண்ணுண்டு சிலபேர்க்கு இசையாவான்
ஈசனுக்கும் மாயனுக்கும் பெரியோன்தானே.
அது என்ன?

–நண்டு

3192. மண்மீதும் காண்பான் மலைமேலும் காண்பான்
தண்ணியிலும் காண்பான் தத்தித் தத்திப் போவான்.

–தவளை

3193. மணம் இல்லாத மல்லிகை
மாலையில் மலரும்.

–தீபம்

3194. மணியடித்தால் மலைப்பாம்பு நகரும். அது என்ன?

–புகைவண்டி

3195. மணிச்சிறப்பொன்றை மணிப்பொதுவோடே
அணைத்திடினன்றே அருமைகுலைந்து
ஒன்றுக்காகா மண்ணும் கிழங்காய்
மருத்துவர் கையில் வருத்தமுற்றிடுமே. அது என்ன?

–முத்தம், காசு–முத்தக்காசு – ஒரு கிழங்கு

3196. மணிமணி முடிச்சிட்டு
வெண்கலக் கொளச்சிட்டு
எங்கெங்கே இருப்பீர் ராகவரே
தூணில் இருப்பேன் துரும்பிலும் இருப்பேன்
தொட்டாலும் ஒட்டிக்கொள்வேன். நான் யார்?

–தேள்

3197. மத்தளம் மேளத்துடன் மனம் உவக்க வருவாள்
பொன்னியம்மாள், பூ செழிக்க வருவாள்
கன்னியம்மாள். அது யார்?

–மழை

3198. *மத்தாப்பு எரியுது பட்டாசு வெடிக்குது.*

–மின்னல், இடி

3199. *மத்தால் அடித்து பத்துப்பேர் பிடித்து*
பதமாய் எடுப்பது. அது என்ன?

–வெண்ணெய்

3200. *மதில் இல்லாத கோட்டை*
மக்கள் இல்லாத நாடு. அது என்ன?

–மனம்

3201. *மது இல்லாமல் தள்ளாடுவான் தண்ணியில். அது என்ன?*

–படகு

3202. *மதுரமான ஏரியில் மான் வந்து மேயுது*
கட்டடா! பிடியடா! கண்ட கோல் வையடா!
அது என்ன?

–நிலா

3203. *மதுரைச் சமுக்காளம்*
மடிக்க முடியவில்லை. அது என்ன?

–வானம்

3204. *மதுரைச் சமுக்காளம், மடிக்க முடியவில்லை.*
கடல் புளியங்கொட்டை, கடிக்க முடியவில்லை.

–வானம், ரூபாய்

3205. *மதுரைச் சிவப்பு மானாமதுரைக் கருப்பு*
உடைத்தால் பருப்பு தின்றால் கசப்பு.

–குன்றிமணி

3206. *மதுரைமான் ஏரியிலே மான் வந்து நிற்கிறது*
கட்டடா பிடியடா கள்ளக்கயிறு போடடா
இந்த வெடியை வெடித்தவர்க்கு நூறு பாக்கு
நூறு வெற்றிலை சுண்டுவிரல் குற்றுச் சுண்ணாம்பு.
அது என்ன?

–கப்பல்

3207. *மந்திரமெல்லாம் ஒரு மூட்டைக்குள்ளே*
மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே.

–பருத்திக்கொட்டை

3208. *மரகதமணியாய்ப் பிறந்து*
பொன்மணியாய் வளர்ந்து
முத்துமணியாய் வெடித்து
பால்மணியாய்ப் பக்குவமாய்த்
தரணிகாக்கும் தாயாவேன். நான் யார்?

–நெல், அரிசி, சாதம்

3209. மரத்தில் விரியாத மஞ்சள் இலை. அது என்ன?

–அப்பளம்

3210. மரத்திலே கோண, செடியிலே செவப்பு
தண்ணியிலே வெள்ளை. அது என்ன?

–புளியங்காய், மிளகாய், மீன்

3211. மரத்திலே மரம் முளைத்து
மக்க சக்கரப் பழம் பழுத்து
எடுப்பார் உண்டு, தின்பார் இல்லை.

–குழந்தை

3212. மரத்திலொட்டியே வசிக்கும் வௌவாலன்று
மரவுரியைத் தரித்திருக்கும் யோகியன்று
சிரசில் கங்கைச் சடையுண்டு குளமுமன்று
உருவுகொண்டே பருத்துருத்தும் கட்டியன்று
உச்சியிலே குடுமியுண்டு செட்டியன்று
உன்னியே அற்புதத்தைக் கண்டிடாயே.

–தேன்கூடு

3213. மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல
பட்டை தீட்டியிருப்பான் சாமியார் அல்ல.

–அணில்

3214. மரத்திற்கு மேலே பழம்,
பழத்துக்கு மேலே மரம். அது என்ன?

–அன்னாசிப்பழம்

3215. மரம் இல்லாத காடுகள்
மணல் இல்லாத பாலைவனம்
நீர் இல்லாத கடலை எங்கே பார்க்கலாம்?

–தேசப்படம்

3216. மரம் ஏறினால் வழுக்குது
காய் தின்னால் துவர்க்கிறது
பழந்தின்னால் இனிக்கிறது. அது என்ன?

–வாழைமரம், காய், பழம்

3217. மரம் ஏறும் மங்காத்தாளுக்கு
முதுகிலே மூன்று சூடு.

–அணில்

3218. மரமுண்டு அடுப்பெரிக்க விறகுமாகாது
சீப்புண்டு தலைகோதி வாரமுடியாது
பூவுண்டு கொண்டையிலே முடிக்கமுடியாது.
அது என்ன?

–வாழை

3219. மரமோ ஒன்று, கிளைகளோ பன்னிரண்டு,
இலைகளோ முப்பது. அது என்ன?

–வருடம், மாதம், நாட்கள்

3220. மல்போல பட்டு, மத்தாப்பு பட்டு, மடியாமல்
ஆயிரம் மங்கை அவள் உடுத்தி மாளிகைக்கு
வந்தவள் விலையாகிப் போனாளாம்.
அது என்ன?

–வெங்காயம்

3221. மலட்டுப் பசு அது மடு பிடிச்ச மட்டிலும்
மண்கலம் நிறைய அது பால் கொடுக்கும்.

–பனைமரம்

3222. மலய மலயக் காட்டிலே
மலர்ந்திருக்கிற பொம்பிளே
கிள்ளட்டுமா கிழிக்கட்டுமா
கிளிக்கட்டில் அடைக்கட்டுமா?
அது என்ன?

–வெற்றிலை

3223. மலை அருவிச் சாரலிலே, மண்ணு சாரல் சரிவிலே,
காங்கதடி சுண்டைக்காய் கணக்கு எண்ணிப்பார்த்தால்
கிளைக்கு இருபது காய்தான். அது என்ன?

–காப்பிச்செடி

3224. மலை ஏறித் தாள் பறித்து
மகிழ்ந்திருந்து தொன்னை பிடித்துப்
பத்தினியாள் இட்ட கஞ்சி
பற்றும் இல்லை உப்பும் இல்லை.
அது என்ன?

–பதநீர்

3225. மலைக்குப்போய் இரண்டு மாடு பிடிச்சுகிட்டு வந்தா
ஒன்று சப்பாணி ஒன்று இழுப்பாணி.

–திருகை

3226. மலைக்குப் போனேன் மங்கம்மாளைக் கண்டேன்
மூன்று சாமான்கள் தந்தாள். ஒன்று முழுகிற்று,
இன்னொன்று மிதந்தது, மற்றொன்று கரைந்தது.
அவை என்ன?

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

3227. மலைகள் பிறந்த நாட்டிலே
இலைகள் கவிழ்ந்த மரம்.

–தென்னைமரம்

3228. மலைச்சரிவு ஓரம் நிற்கும் இலை
கவிழ்ந்த மரம் என்ன மரம்?

–தென்னை

3229. மலை படுத்துக் கிடக்குதே மாட்டுக் கொட்டடி ஓரம்.

–வைக்கோல்போர்

3230. மலைபோன்ற மனிதன் கண்ணீர் விட்டால்
காணாமல் போய்விடுவான். அவன் யார்?

–பனிக்கட்டி

3231. மலைமேல் இருக்கிற மங்கைத் தாய்க்கு
ஈருமில்லை பேனுமில்லை எடுத்துக் குத்துவார்
ஆருமில்லை. அது என்ன?

–கரடி

3232. மலைமேல் இருக்கும் மங்கைக்கு
ஈரும் இல்லை பேனும் இல்லை
எடுத்துக்குத்த ஆளும் இல்லை.

–பாம்பு

3233. மலையில் இருந்து மாடுகள் இரண்டு
ஓட்டிவந்தேன். ஒன்று வேலிக்கு இழுக்கிறது
ஒன்று நீருக்கு இழுக்கிறது. அவை என்ன?

–ஓணான், தவளை

3234. மலையிலிருந்து இரண்டு பசு பிடித்துவந்தேன்
ஒன்று பாலாய்க் கறக்கிறது
ஒன்று ரத்தமாய்க் கறக்கிறது.

–களாக்காய், களாப்பழம்

3235. மலையிலிருந்து இரண்டு மாதர்கள் கூட்டிவந்தேன்.
ஒருத்தி சுறுசுறுப்பி, மற்றவளோ சப்பாணி.

–திருகை

3236. மலையிலே கடபுடா கிடுக்கு உருளுது புரளுது.

–இடி

3237. மலையிலே மலைச்சரிவிலே
கெண்டை விக்கிக்குது
கெழுத்தி விக்கிக்குது
கீறிப்பார்த்தால் முள்ளு இல்லை.

–வெள்ளரிக்காய்

3238. மலையிலே மலைச்சரிவிலே மயங்கிநிற்கிற பெண்ணே
உன்னைக் கிள்ளலாம் கிளிக்கூண்டில் போட்டு
அடைக்கலாம். அது என்ன?

–வெற்றிலைபோடல்

3239. மலையிலே முண்டம்
ஆற்றிலே ராசா
செடியிலே சிவப்பு. அவை என்ன?

–மஞ்சள், மீன், மிளகாய்ப்பழம்

3240. மலையிலே வயிரம் பாய்ந்து
மகாதேவருக்குப் பூசை செய்து
இடுப்பிலே சலங்கை கட்டிக்
கதறுதாம் காளங்கன்று. அது என்ன?

–உடுக்கு

3241. மலையிலே வைரம் பேத்து
மகாதேவனுக்குப் பூசையிட்டு
காதிலே கடுக்கன் போட்டு
கதறுதாம் காளைக்கன்று. அது என்ன?

–உடுக்கு

3242. மலையே மலைச் சோங்குலே
மலையில் இருக்கும் பொம்பளை
கிள்ளட்டுமா கிளிக்கூண்டில் அடைக்கட்டுமா?

–வெத்திலை

3243. மலையேறும் மயில்சாமிக்கு
முதுகிலே மூன்று கோடு. அது என்ன?

–அணில்

3244. மலையோரத்தில் இருவர்
ஒருவரோடொருவர் பேசார்
ஒருவரை யொருவர் தொடார்.
அவர்கள் யார்?

–கண்கள்

3245. மலையோரத்தில் இருவர், ஒருவரோடு ஒருவர்
பேசார். தொட்டுக்கொள்வதே இல்லை. அவை என்ன?

–ரயில் தண்டவாளங்கள்

3246. மழைக்குக் குடைபிடிக்கும் அரைச்சான் குள்ளன்.
அவன் யார்?

–காளான்

3247. மழை பெய்தால் போதும், அழையாதபோதும்
நுழையாத வீட்டிற்குள்ளும் நுழைந்துவிடுவார்கள்,
வெளிச்சத்தைப் பார்த்ததும் விளையாடுவார்கள்.

–ஈசல்

3248. மழையில் நனையும்
வெயிலில் காயும்
வெளியில் மலரும்
வீட்டில் சுருங்கும்.
அது என்ன?

–குடை

3249. மழையிலே மழைச்சாரலிலே
வாழ்ந்திருக்கிற பெண்ணே - உன்னை வாங்கலாம்
கிளிக்கூட்டிலே போட்டு அடைக்கலாம்
ரத்தம் வரக் குடிக்கலாம்
வெளியில் பிடித்துத் தள்ளலாம்.
அது என்ன?

–வெற்றிலை

3250. மழையின் முன்னும் பின்னும்
மாயாஜாலம் காட்டும். அது என்ன?

–வானவில்

3251. மழையின்றி மாரியின்றிப் பச்சையாவதென்ன?
பூவின்றிக் காயின்றிப் பழம் பழுப்பதென்ன?

–கிளி

3252. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை
வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது.
அது என்ன?

–ஈசல்

3253. மளிகைக்கடையில் இருக்கும் ராணி என்ன ராணி?

–சாம்பிராணி

3254. மற்றொருத்தியாகிறவள் குலத்தில் வந்தாள்
மடந்தையர்கைக் குள்ளானாள் வஞ்சிமுன்னாள்
குத்துண்டாள் அறுப்புண்டாள் கட்டுமுண்டாள்
கொம்பனையார் பணையமிட்டுக் கொள்ளளந்தாள்
இத்தனைக்கும் பொறுத்திருப்பாள் வேலைக்காரி
ஏந்திழையை இன்னவெளென்றியம்புவாயே.

–முறம்

3255. மறைந்திருக்கும் மாயப்பிசாசு
எங்கு போனாலும் அங்கெல்லாம் வரும்.

–நிழல்

3256. மனம் கொண்டமட்டும் வாரி வாரிக் கொட்டினேன்.
மளமள எனக் கொட்டியும் வத வதன்னு புகை வருதே.

–சாம்பல்

3257. மனிதன் போடாத கூரை,
ஊருக்கெல்லாம் ஓரே கூரை. அது என்ன?

–வானம்

3258. மனிதன் போடாத பந்தலில் மலர்ந்து கிடக்குது
மல்லிகைப் பூக்கள். அது என்ன?

–நட்சத்திரங்கள்

3259. மனைவியுடன் வசிப்பதற்கும் ஒரு பெயர்
மதுப்பழக்கத்திற்கும் மறுபெயர். அது என்ன?

–குடி

3260. மா இலை இல்லாத மரம் மண்டை மரம்
என்ன மரம்?

–மான் கொம்பு

3261. மாங்கொட்டைப் பருப்பிற்கு மறுபதிப்பு உடம்பு
மெத்தப் பட்டுப் போர்த்தி மினுமினுக்கும் உடம்பு
உடம்புத் தோல் கிழித்தவள் உண்டியாய் நமக்கு
வருவாள்.

–மொச்சை

3262. மாட்டுக்குச் சோறு வீட்டுக்குள்ளே
மன்னாருசாமி கோட்டைக்குள்ளே.

–பருத்திவிதை

3263. மாடமாளிகையில் வசிப்பான்
மன்னன் அல்ல
கூட கோபுரத்தில் இருப்பான்
கடவுள் அல்ல. அவன் யார்?

–மாடப்புறா

3264. மாடமாளிகையில் வசிப்பான்
மன்னவன் அல்ல.
கோபுரத்திலும் வசிப்பான்
கொற்றவனும் அல்ல. அவன் யார்?

–மாடப்புறா

3265. மாடி இல்லா மாடி என்ன மாடி?

–அம்மாடி

3266. மாடிமேல் மாடிகட்டி
குடியிருக்கும் மனிதனை
தொட்டால் குத்திடுவான்
பட்டால் கீறிடுவான். அவன் யார்?

–சப்பாத்திக்கள்ளி

3267. மாடியில் கிடக்கிற வெள்ளிக் கம்பியை
மடக்கலாம் 'படக்' என்று ஒடிக்கமுடியாது.

–தலைமயிர்

3268. மாடில்லாத செக்குக்கு மாட்டிக்கொண்டது
இரண்டு ஆடு. படுத்துக்கொள்ளும் ஒன்று.
அதன்மேல் படிந்து சுற்றும் மற்றொன்று.

–திருகை

3269. மாதர் கையில் வயங்கப் பூண்பதும்
தீதறு தீம்பால் தினந்தினம் தருவதும்
பல்லோர் கூடிப் பான்மையின் வாழ்வதும்
எல்லாம் கூடி இசைந்திடும்போது
கழறிய பஞ்சு காவியத்தொன்றே. அது என்ன?

–வளையாபதி

3270. மாந்துளிர், மரபிசினி
வெட்டிவேர், கல்லெண்ணை. அவை என்ன?

–வெற்றிலை, பாக்கு,
புகையிலை, சுண்ணாம்பு.

3271. மாமரத்திலே அடித்த மாங்காய்
மாத்தூரிலே போய் விழுகிறது. அது என்ன?

–மரத்தின் அடியில் கிடக்கிறது

3272. மாமரத்துத் தோப்புக்குள்ளே
மரத்து மரத்தடியிலே
ஒட்டுத் தோலுக்காரி
உடம்பெல்லாம் சீக்குக்காரி. அது என்ன?

–மாங்கொட்டை

3273. மாமன் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் குருவி ஊசலாடுது. அது என்ன?

–எலுமிச்சம்பழம்

3274. மாமா வீட்டுக்குப் போனேன்.
மச்சிக்கு அன்று விருந்து. இலையை
எடுத்து வீசிவிட்டு இருந்து சாப்பிடுங்கள் என்றார்கள்.

–கறிவேப்பிலை

3275. மாமா வீட்டுத் தோட்டத்திலே
மதயானை இறந்து கிடக்கு.

–வைக்கோல் போர்

3276. மாமா வீட்டு முற்றத்திலே
மாப்பிள்ளை விருந்து போட

மாணிக்கக்கல்லை பதித்திருந்தார்
மனைவிமக்கள் சத்தியமாய் மாணிக்கக்
கல்லை மிதியேனே.

–நெருப்பு

3277. மாமியார் மேல் மருமகள் உருண்டு உருண்டு
விளையாடுகிறாள். அவர்கள் யார்?

–அம்மி, குழவி

3278. மாமியார் வீட்டுக்குப் போனேன்
இலையை எடுத்துவிட்டுச் சோறு
சாப்பிடச் சொன்னாள். அது என்ன?

–கறிவேப்பிலை

3279. மாய்மாலம் ஆனதொரு பெட்டி
மனிதர்கள் செய்யாத பெட்டி
தானே தான் மூடிக்கொள்ளும் பெட்டி எது?

–கண்

3280. மாயக் கண்ணன்
சொல்வதைச் சொல்லிவிடுவான். அவன் யார்?

–எதிரொலி

3281. மாயனார் நெற்றியில் சூடும் கல் எது?

–நாமக்கல்

3282. மார்கழி மா்தம், தினம் மாந்தர்கள்
போடும் சித்திரம், கூர்விழி கொண்டு
அதனைக் கோதையர் நின்று பார்ப்பர். அது என்ன?

–கோலம்

3283. மார்கழி வாசலுக்கு மஞ்சப்பொட்டு.

–பூசணிப்பூ

3284. மார்பு அளவு மயிரிலே
மயிலைக்காளை மேயுது

–பேன்

3285. மார்மட்டுக் கோரையிலே
மயிலைக்காளை மேயுது. அது என்ன?

–பேன்

3286. மாரி இல்லாமல் ஆமை கெட்டது
ஆமை இல்லாமல் சீமை கெட்டது. அது என்ன?

–வேளாண்மை

3287. மாரியம்மன் கோயில் பூசாரி
மஞ்சள் சேலைப்பூக்காரி, விஞ்சுவிட்டுப் பின்னாலே
கொஞ்சநாளில் காய்தருவாள் காயைப் பிரித்துப்
பார்க்கையிலே கட்டுமுத்து சிரிக்குமடி.

–வெண்டைக்காய்

3288. மாலுமிக்கு வழிக்கருவி
மாதருக்குத் தொழிற்கருவி. அது என்ன?

–ஊசி

3289. மாவாலே செய்த பழம்
மஞ்சள் நிறத்துப் பழம்
மாந்தர்கள் சுட்டுத் தின்னும் பழம்
அது என்ன பழம்?

–அப்பளம்

3290. மாவில் பழுத்த பழம்
மக்கள் விரும்பும் பழம். அது என்ன?

–அப்பளம்

3291. மாற்றுக்கதை போட்ட மன்னவன் தம்பியை
சேற்றுக்குள் பிடித்துச் செதுக்கென்று அமுக்கினார்கள்.

–நெல்நாற்று

3292. மாறுவேஷம் போட்டு வந்த மல்லிகைப்
பூச்செண்டுகளை கூறுகெட்டுப் போயோ
மக்கள் குழிக்குள் புதைத்தார்கள்?

–நெல்நாற்று

3293. மானத்திலே மாசி
பூமியிலே தேசி
எடுக்காத அங்கம்
கோர்க்காத சரம் என்ன?

–அம்மாசி, ஏகாதசி, ஸ்ரீரங்கம், ராமேசுவரம்

3294. மானத்திலிருந்து ரெண்டு செரா எடுத்துட்டு வந்தா
ஒன்னு பொழுதுவரையில் எரிஞ்சுது
ஒன்னு விடியுரமட்டும் எரிஞ்சுது. அது என்ன?

–சூரியன், சந்திரன்

3295. மானத்திலே ரோட்டுப் போட்டு
மகாலிங்கம் பேரு வெட்டி
இங்கிலீசுப் பள்ளிக்கூடம்
எங்கெங்கே போவுது. அது என்ன?

–வானவூர்தி

3296. மானத்துக்குப் போனேன்
மங்கம்மாளைக் கண்டேன்
ஒரு கட்டு ஓலை தந்தாள்
அதை எண்ணவும் முடியவில்லை
எழுதவும் முடியவில்லை.

–தலைமுடி

3297. மானம் கெட்ட மாமரம்
மழுக்க மழுக்க வளருது.

–தலைமுடி

3298. மானாமதுரைக்குப் போன மச்சான்
மாவிலே பூத்தது வாங்கி வாரும்
மாவிலே பூத்தது இல்லாவிட்டால்
பக்கம் பழுத்தது வாங்கி வாரும்
பக்கம் பழுத்தது இல்லாவிட்டால்
ஒக்கச் சிரிப்பது வாங்கி வாரும்
ஒக்கச் சிரிப்பது இல்லாவிட்டால்
உமக்கும் நமக்கும் வாங்கி வாரும். அவை என்ன?

–பணியாரம், பவழம், கண்ணாடி, பாய்

3299. மிதிச்சா மிதிக்காது.

–கோலம்

3300. மின்சாரக் குருதி
மேனிஎங்கும் ஓடிவர
காற்றிலே வருபவனை
கம்பிக்குடல் சீரணிக்க
விசைவாலை முறுக்கியதும்
விரும்பும் இசை பால் கறக்கும். அது என்ன?

–வானொலி

3301. மின்னலையும் தோற்கடிக்கும் மிதப்பு குதிரை.

–மனம்

3302. மீசை வைத்த சிறிய அத்தை
மினுமினுப்பாகப் போகிறாள். அது யார்?

–கரப்பான்பூச்சி

3303. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால்
வலை பின்னுவான். அது யார்?

–சிலந்தி

3304. முக்கண்ணுக்குள் இருப்பது முத்தான சுவைநீர்.
அது என்ன?

–தேங்காய்

3305. முக்காட்டிற்குள்ளேதான் மூன்று பையன் சிநேகிதம்
சுக்கா வெயில் அடிச்சதும்
துண்டு துண்டாகப் போய்விட்டான்.

–ஆமணக்கு

3306. முக்காட்டுக்குள்ளே மூன்றுபேர்
வெயிலடித்தால் வெவ்வேறே. அது என்ன?

–பருத்திக்காய்

3307. முக்காலணாவுக்கு முந்நூறுகாதம் பறக்கும்
அடிபட்டுக் குத்துப்பட்டு ஓடிவந்து சேதி சொல்லும்
பகலில்லை, இரவில்லை, வெயிலில்லை, மழையில்லை
எப்பொழுதும் ஓடித்திரியும்
அது ஏறாத வாகனம் கிடையாது. அது என்ன?

–கார்டு

3308. முக்கிலே மூலையிலே மொட்டைச் சுவரிலே
மூக்கணாங்கயறிலே தூக்கணாங்குருவிக் கூடு
தொத்திக் கிடக்குது. சொல்லு அது என்ன?

–சுரைக்காய்

3309. முக்குறுணிச் சாலு முப்பது முழ வாலு
கட்டினால் பேசும், கட்டாவிட்டால் பேசாது.
அது என்ன?

–செக்கு

3310. முகத்தாலே முகம் காட்டும்
முன்பொருளைத்தான் காட்டும்
முன்பு பல ஆண்டுகள் முன் இவன் மூதாதையர்
முளைத்ததோர் தேசம் பெல்ஜிய தேசம்.
பேராட்டி இவள் பேர் என்ன?

–கண்ணாடி

3311. முகத்திலெல்லாம் அழகு முகம் என்ன முகம்?

–கண்

3312. முகத்தின்மீது முழுநீலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லை. அது என்ன?

–கண்

3313. முகத்தைக் காட்டுவான்
முதுகைக் காட்டமாட்டான். அது என்ன?

–கண்ணாடி

3314. முகம் உண்டு
கைகள் உண்டு
கால்கள் இல்லை. ஆனாலும்
நடக்கிறேன். நான் யார்?

–கடிகாரம்

3315. முகம் பார்த்து வளரும்
முடிவில்லாமல் தொடரும். அது என்ன?

–சொந்தம்

3316. முகம் மட்டும் காட்டிடுவாள் நல்ல அலங்காரி
முதுகை மட்டும் காட்டாளாம் அந்த அலங்காரி.

–கண்ணாடி

3317. முகர்வான் தோண்டுவான் முடக்கிக்கிடப்பான்.

–நாய்

3318. முச்சந்தியில் மூன்று விளக்கு
பார்த்து நடந்தால் பாதுகாப்பு. அது என்ன?

–சிக்னல் (கைகாட்டி)

3319. முச்சூடும் சுற்றி முப்பதுக்கு மேலே வெள்ளைக்கார வீரர்கள் முனைப்பாக நின்றாலும் நடுநாயகருக்குத்தான் நல்லது கெட்டது தெரியுமாம். அவை என்ன?

–பல்லும் நாக்கும்

3320. முட்டிக் கழுதைக்கு முப்பது கால்களாம்.

–ஊமத்தங்காய்

3321. முட்டிக் குதிரைக்கு முன்னூறு கால். அது என்ன?

–ஊமத்தங்காய்

3322. முட்டை இடும் சட்டை கழற்றும்
நாக்கை நீட்டும் படம் விரிக்கும்
நாலு மாதம் அடைகாக்கும்
நாயன் தள்ளுன பாம்பு அல்ல.
அது என்ன?

–பனங்கிழங்கு

3323. முட்டை இடும் மூன்றுமாதம் அடையில் இருக்கும்
நாக்கை நீட்டும் வெளியே வரும்
நாகம்போல் படமெடுக்கும் நாகமில்லை.
அது என்ன?

–தென்னம்பிள்ளை

3324. முட்டை இடுவேன் குஞ்சு பொரிப்பேன்
மூவாறுமாதம் மண்ணில் இருப்பேன்
சட்டை உரிப்பேன் தோல் உரிப்பேன்
சாமிசாட்சியாய்ப் பாம்பு அல்ல. நான் யார்?

–கருணைக்கிழங்கு

3325. முட்டைக்கு மூன்று கண்
அட்டைக்கு ஆயிரங்கண்
பெருமாளுக்கு ஒரு கண். அது என்ன?

–தேங்காய், சல்லடை, ஊசி

3326. முட்டை போலப் பூ இருக்கும்
தாமரை அல்ல
கோணலாகக் காய் காய்க்கும்
புளியும் அல்ல.
அது என்ன?

–எருக்கம்

3327. முட்டையிடும் குஞ்சு பொறிக்காது
காட்டில் குடியிருக்கும்
கூடு கட்டத் தெரியாது. அது எது?

–குயில்

3328. முட்டையிடும் குஞ்சு பொறிக்கும் முப்பது நாள்
அடை காக்கும் வட்டமில்லாக் கோயில் குடை
பிடிக்கும். கறியும் ஆகும் மகான்களுக்கே.

–கருணைக்கிழங்கு

3329. முட்டையை உரித்தால் முச்சூடும்
சருகு உருவ உருவ வருகுதே.

–வெங்காயம்

3330. முடுக்கு வீட்டினுள் முன்னூறு தென்னம்பிள்ளை.
அது என்ன?

–மூக்கினுள் முடி

3331. முண்டும் முடிச்சுமா இருந்தாலும்
முற்றும் சுவை எப்பவும் மாறாது.

–கரும்பு

3332. முத்தத்து மூலையிலே முப்பது ஈச்சமரம்
புத்துருக்கு நெய்வார்த்தும் பூக்கவில்லை
காய்க்கவில்லை.

–மூக்குச்சளியும், மூக்குமுடியும்

3333. முத்தத்துல நட்சத்திரம் பூத்திருக்கு.

–கோலம்

3334. முத்தாத்தாளைக் கொண்டு வா
மொட்டை அடித்துவிடு
மூளி சட்டை கழற்றிவிடு
கட்டையை நறுக்கு சட்டியில் போடு.

–வாழைத்தண்டு

3335. முத்துக்கருப்பனை அழையடா
முதுகுத்தோலை வாங்கடா
பச்சை வெண்ணெயைத் தடவடா
பாவுள்ளே போட்டு அடையடா.

–வெற்றிலை

3336. முத்துக்கள் பதிந்திருக்கும் முன்குடுமி சிவந்திருக்கும்
சுத்த பச்சையாடை பல சூழ்ந்திருக்கும்
நாற்புறமும் மெத்தவழ காயிருக்கும் மின்னலது
போலொளிக்கும் வஸ்துவிது வாழைமலர்
வடிவான வன்மையிதே. அது என்ன?

–மக்காச்சோளம்

3337. முத்துக்கிருஷ்ணனைக் கூப்பிடுங்கள்
முதுகு நரம்பை உரியுங்கள்
பச்சை வெண்ணெயைத் தடவுங்கள்
பாங்கான உள்ளில் அடையுங்கள்.
அது என்ன?

–தாம்பூலம்

3338. முத்துக்கிருஷ்ணனைப் பிடித்து
முதுகுத்தோலை உரித்து
பச்சை வெண்ணையைத் தடவி
பழைய பைக்குள் போட்டு.

–தாம்பூலம்போடுதல்

3339. முத்துக்கு உவமை
சொல்லுக்கு உரிமை. அது என்ன?

–பல்

3340. முத்துக்கோட்டைக்குள் முத்துச்சிப்பிகள்.
அது என்ன?

–பற்கள்

3341. முத்துக்கோட்டைக்குள் மூன்றுபேர் புகுந்தார்கள்
புகுந்தவர்கள் வரவில்லை
போர் நடக்குது, ரத்தம் சிந்தது. அது என்ன?

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

3342. முத்துச்சம்பா
முழுவிளைவு
சித்தே சாவி. அது என்ன?

–ஈறு

3343. முத்துச் சிலம்புக்காரி முப்பணத்து ஓலைக்காரி
தண்டைச் சலங்கைக்காரி தரணியில் திரியும் நாரி
மின்னல் நடைக்காரி மின்சாரப் பைக்காரி
அவளைத் தொடுவானேன் அவஸ்தைப்படுவானேன்.

–தேள்

3344. முத்து சிதறிப் போயிருச்சி
முடிச்சு அவிழ்ந்து போயிருச்சி
வைத்துக் கோக்க முடியாது
மாலை ஆக்கமுடியாது. அது என்ன?

–மாதுளம்பழம்

3345. முத்து சிமிக்கி தரையில் மூழ்கி மூழ்கி
வெடிக்குது சத்தம் போட்டுத் துடிக்குது
சரம் சரமாய் நடக்குது.

–மழை

3346. முத்துப் பந்தல் போடக்
கொட்டு மேளம் ஊத
ஓடும், விளக்கெரிய
ஆரும் தேடி வரார்
பச்சைப் பெண்ணுக்குப்
பாங்கான கல்யாணம். அது என்ன?

–வானம், மேகம், இடி,
மின்னல், செடி, கொடி, மரம்.

3347. முத்துப் பல்லழகி
முகம் காட்டி நிற்கிறாள். அவள் யார்?

–சோளக்கதிர்

3348. முத்துப்போல் பூத்து முறுகிச்சிறு பயறாகி
அத்தனையும் சிவந்து ஒக்கக் கறுத்து
ஒரு பூண் போட்டுச் சித்திரை மாதம்
வருவார் தெருவீதி. அது என்ன?

–ஈச்சம்பழம், காற்று

3349. முத்தும் முத்தும் குதித்து விளையாட
மங்களராசா மகிழ்ந்து விளையாட.

–சோறு, நுரை

3350. முத்து முத்தாய்த் தோரணம்
தரையில் விழுந்து ஓடுது. அது என்ன?

–மழை

3351. முத்து முத்துச் சேலைக்காரி
முப்பது பொன் வேலைக்காரி
தண்டை கொலுசுக்காரி
தாவரத்து வீட்டுக்காரி
அவளைத் தொடுவானேன்
கவலைப்படுவானேன்? அது என்ன?

–தேள்

3352. முத்து மூடியிருக்கும்
முக்காடு போட்டிருக்கும்
முட்கள் நீண்டிருக்கும்
மிடுக்காக வீற்றிருக்கும். அது என்ன?

–ஆமணக்கு

3353. முத்து வீரனைப் பிடியுங்கள்
முதுகு நரம்பைக் கிழியுங்கள்
பச்சை வெண்ணெயைத் தடவுங்கள்
பாங்காய் வீட்டில் அடையுங்கள். அது என்ன?

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

3354. முதல்முதல் கற்ற பொருள்
முடிவிலும் அறியாப்பொருள்.

–மகாவிஷ்ணு

3355. முதலில் எட்டு
இடையில் ஐந்து
கடையில் மை
எல்லாம் சேர்ந்தால் மேன்மை.

–அருமை

3356. முதலில் ஒன்று
நடுவில் கால்
கடையில் ஈ
விடையில் என்ன?

–கவர்

3357. முதலில் கால் நடுவில் ஐந்து கை
சேர்த்துப் பாருங்கள். கண்டிப்பாக வருமானம் தான்.

–வருகை

(தமிழில் ஐந்துக்கு ரு எனவும் காலுக்கு வ எனவும் எழுதுவர்.)

3358. முதலில் வெளியில் இருப்பதை எறிந்துவிடுவீர்கள்
பின் வெளியில் இருப்பதைச் சாப்பிட்டுவிட்டு
உள் இருப்பதை எறிந்துவிடுவீர்கள். அது என்ன?

–சோளம்

3359. முதலும் மூன்றும் உறுநிலை மாறின்
ஐந்நிலத்தொன்றால் இருந்தது மாறி
நால்வகைப் பொருட்கும் முதலாகும்மே. அது என்ன?

–மருதம், தருமம்

3360. முதலெழுத்தால் பால் உண்ணலாம்
கடையிரண்டால் கானகம் செல்லலாம்
முதலும் முடிவுக்கு தாத்தாவுக்கு
மூன்றெழுத்தில் ஒரு வார்த்தை. அது என்ன?

–கோவில்

3361. முதன்மொழி நமக்கு முன்னுறக்காணா
உறுப்பினையுணர்த்தும் உற்றவிரண்டு
பாகன் யானையின் படர் செவிபற்றி
ஈர்த்துச் செல்லும் இரும்படையாகும்
மூன்றா மொழிதான் நீர் நிறை குண்டிகை
ஆயிம் மூன்றும் அடைவின் அமைப்பின்
சதுரவுருவாய்ச் சமைந்திடுமன்றே.

–முதுகு, துறடு, குடுவை

3362. முதுகதனில் பொதி சுமக்கும் ஒட்டகம் அல்ல
முளையான கொம்புண்டு எருதுமல்ல
விதிவசத்தால் ஓடெடுக்கும் சிவனுமல்ல
வெற்றிச்சங்கு தானூதும் புலவனல்ல. அது என்ன?

–நத்தை

3363. முதுகிலே திருவோடு முத்துச்சிப்பி
சிறு ஓடு முதுகிலே தாங்கிவரும்
முன்னழகு கோடி பெறும்.

–நத்தை

3364. முதுகிலே மூட்டை சுமந்து
மூன்று மணிக்கு முழம் போவான்.

–நத்தை

3365. முதுகுமேல் இருப்பது கூடு
முத்தம்மாளுக்கு அது வீடு.

–நத்தைக்கூடு

3366. முதுகுமேலே காவடி முன்னுக்குத்தான்
போச்சுதாம் மூணுமணி நேரமா
மூன்று கஜம் தூரம்தான்.

–நத்தை

3367. முதுகெல்லாம் கூனல்
வயிறெல்லாம் பல். அது என்ன?

–கருக்கரிவாள்

3368. முதுகை அமுக்கினால் மூச்சு விடுவான். அது என்ன?

–ஆர்மோனியப்பெட்டி

3369. முந்திரிச் செடிபோல முல்லைக்கொடி மேலே
முத்தாய்க் கொத்தாக முன்னூறு காய் தொங்கும்
அவை கொடியிலே பிறந்து வளர்ந்தது கடையிலே
கைமாறப் போக காத்துக்கிடக்குது பாரு.

–மிளகு

3370. முப்பத்திரண்டு காவலாளி
நடுவில் ஒரு சின்னப்பெண். அது யார்?

–பற்கள், நாக்கு

3371. முப்பத்திரண்டு வெள்ளைச் சிப்பாய்களுக்கு
நடுவில் ஒரு சிவப்பு இராசா. அது என்ன?

–நாக்கு

3372. முப்பதுக்கு மேல் மந்திரிகள் இருந்தும்
முதல்வனான ராசாவால்தான்
எதையும் அறியமுடியும்.

–பற்கள், நாக்கு

3373. முப்பெயர் கூடி முடிந்தொரு பெயராம்
அப்பெயர் முறையே அறைகுவன் கேண்மின்
செல்வமும் வனப்பும் சேர அளிப்பது
கொடியொடு கொடியிடை கூடக் கொடுப்பது
குளனொடு கிணறும் வளனுறத் தருவது
எல்லாஞ் சேர்ந்தோர் இரும்புர மாமே.

–திருவல்லிக்கேணி

3374. முயல் புகாத காடு எது?

–முக்காடு

3375. முருகன் அழகுச் சோடி முதுகுமேலே
காவடி திருகுதாளம் கூடவே
சிப்பி அக்கா ஆடுவாள்.

—நத்தை

3376. முருகன் வீட்டிற்குப் போனேன்
மூன்று வஸ்துப் பெற்றேன்
தண்ணியிலே போட்டேன்
ஒன்று கரைந்தது ஒன்று மிதந்தது
ஒன்று அமிழ்ந்தது. அது என்ன?

—வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

3377. முருகா முருகா முடிகொண்டை முருகா
முருகனுக்கு பேத்தியர் மூக்காத்தாள்
மூக்காத்தாள் வயிற்றிலே கிலுகிலுப்பை
கிலுகிலுப்பைக்குள்ளே கிச்சி முச்சி

—சேவல், கோழி, முட்டை, இஞ்சி

3378. முழுகி முழுகி எழுந்திருக்கும்
மூதேவிப் பயபிள்ளை.

—செம்பு, போகணி

3379. முள் இல்லாத மீன் என்ன மீன்?

—முட்டை

3380. முள்ளம்பன்றி வயிற்றுக்குள்ளே வைக்கோல்
வைக்கோலுக்குள்ளே குடல்
குடலுக்குள்ளே குண்டுமணி. அது என்ன?

—பலாப்பழம்

3381. முள்ளில் பிறக்காமல் முள்ளில் வளராமல்
முள் உறுப்புக் கொண்டதாயும்
முள் பூ இல்லாமல் முளைத்து காய்த்த காய்
மொழிக நீர் அதன் பேரே!

—முள்ளங்கிக்காய்

3382. முள்ளுக் கோட்டைக்குள்
மோகினி உறங்குகின்றாள். அவள் யார்?

—பலாக்கனி

3383. முள்ளுச் சொறியோட முழுப் பச்சைப் பட்டோட
ஆள் கோடி எதிர்பார்த்து அந்தரத்தில்
திக்கு முக்காடுகிறாள்.

—பலாப்பழம்

3384. முள்ளு முள்ளுக்குள்ளே
முக்கிளு வந்தண்டுக்குள்ளே
வெள்ளி மடலுக்குள்ளே
வெண்கலக் கட்டி. அது என்ன?

–பலாப்பழம்

3385. முள்ளு முள்ளுக்குள்ளே
முந்திரித் தோப்புக்குள்ளே
வைக்கோல் போருக்குள்ளே
கண்டெடுத்தேன் வைரமணி. அது என்ன?

–பலாப்பழம்

3386. முள்ளு முள்ளுக்குள்ளே
வைக்கோல் பத்தைக்குள்ளே
வந்திருக்கா சீமாட்டி
வயிற்றுப் பிள்ளையோடு.

–பலாச்சுளை

3387. முள்ளோ முள்ளங்கி மூடிய பச்சைப்பெட்டி
பெட்டி வாசலிலே பச்சை மஞ்சள் மணிக்கயிறு
மணிக்கயிறு நீங்கியதும் முட்டைக்கருவோடே
மஞ்சள் மோகினியும் மஞ்சத்தில் படுத்திருக்க
மனம் என்ன நாவும் மொச்சட்டம் போடுதே.

–பலாப்பழம்

3388. முற்பதினைந்தில் முளைப்பதுமாகி
அப்பதினைந்தில் அகம்புறமாகி
பிற்பதினைந்தில் பின்னே வளரும்
சத்தியம் சொன்னேன் சந்திரன் அல்ல. அது என்ன?

–நிழல்

3389. முற்றத்தில் நடக்கும்
மூலையில் படுக்கும். அது என்ன?

–விளக்குமாறு

3390. முற்றத்தில் பல சவாரிக்கும் முளைக்காத குதிரை.

–திண்ணை

3391. முற்றத்து முன்பு முளைத்த மரம் அஞ்சு
அதை மடக்க முடியுது பிடுங்கமுடியலை.

–உள்ளங்கை விரல்கள்

3392. முறுகல் இறுகல் கயிறு, மோகனாங்கக் கயிறு,
எளிதில் கண்படாத கயிறு, என்ன இதனைக் கழறு.

–பாம்பு

3393. முன்பு தாம் சேர்த்துவைத்த மூட்டையை
அவிழ்த்துக் காசை முக்காலும் எண்ணவேண்டி
முச்சந்தி பாட்டன் போட்டார். மூதாட்டி பாட்டியோ
சேலை முழுவதும் விரித்தாள். காசை இன்னும்
எண்ணமுடியலை. களைந்த சேலையை மடிக்கவும்
முடியலை.

–வானம், நட்சத்திரம்

3394. முன்முகம் காட்டுவான் பின்பிடரி காட்டான்.

–கண்மூடி

3395. முன்னாலே கட்டுண்டு அறுப்புமுண்டு
முனைகுலைத்த பெண்களெல்லாம் சீச்சீ என்ன
பின்னாலே தானுமுண்டு தையல் நல்லாள்
பிடித்திருப்பார் கைக்குள்ளாள் சுத்தக்காரி
சொன்னாலும் பேர்கொஞ்சம் வேலைக்காரி
சொகுசான இக்கதையைச் சொல்லுவீரே.

–துடைப்பம்

3396. முன்னாலே பிறந்து, ரெண்டாவது இறந்து
மூன்றாவது பிறந்தா சாகிறதேயில்லை
பிறகு ரெண்டாவது செத்தால் பிழைக்கிறதேயில்லை.

–பல்

3397. முன்னும் பின்னும் நீங்கள் முள்ளில்லாத
வெள்ளை மீன் பார்த்ததுண்டா? சொல்லுங்கள்?

–முட்டை

3398. முன்னும் பின்னும் போவான்
ஒற்றைக்காலில் நிற்பான். அவன் யார்?

–கதவு

3399. முன்னுள்ள பொருளை அப்படியே காட்டும்
இடம் வலம் மாறித் தெரியும்
பளபளப்பு என்றாலே பாதி தெரியும்
பெல்ஜியம் என்றாலே பெயர் தெரியும். அது என்ன?

–கண்ணாடி

3400. முன்னே இரண்டும் குட்டை
பின்னே இரண்டும் நெட்டை
காது ரொம்ப நீளம் கண்கள் செம்பவளம்.
அது என்ன?

–முயல்

3401. முன்னே வெளுத்து முனையிலே நனைந்து
நடுவே சிவந்து நடக்குமிவன்
கண்டது கண்டாற்போலக் காணாமல் போகிறான்.
அவன் யார்?

–சுருட்டுப்புகை

3402. முன்னொரு ஊரின் பேராம்
முதலெழுத் தில்லாவிட்டால்
நன்னகர் மன்னர் பேராம்
நடுஎழுத் தில்லாவிட்டால்
கன்னமா மிருகத் தின்பேர்
கடைஎழுத் தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம்
ஊரின் பேர் விளம்புவீரே.

–மதுரை

3403. மூக்கனுக்கு மூன்றுமுழ நீளம்
மூக்கன் பெண்டாட்டிக்கு முறத்து அகலம்.
அது என்ன?

–வாழைப்பழம், வாழையிலை

3404. மூக்கிலே முகப்பு முதுகிலே வனப்பு.

–பம்பரம்

3405. மூக்குண்டு வாயுண்டு கழுத்துண்டு
முனியன்னை யாவர்க்கும் முகமலர்ந்து
தேக்கவே களையான தியக்கம் தீரும்
செந்தியில் மூழ்கிவந்து மணமுஞ் செய்வாள்
நாக்கில்லை உதடுண்டு காத்து வந்த
நாயகியை இன்னதென்று நவிலுவாயே.

–மண்பானை

3406. மூக்குத்தி போலப் பூ பூக்கும்
அப்பாட என்ற காய் காய்க்கும்.

–நெருஞ்சிமுள்

3407. மூக்கு மேல்முனை இருண்பாண்டி
முட்டுக் கடிவாளம் இணைப்பாண்டி
காதையும் பொருத்தையும் அணைப்பாண்டி
காட்சிக்குப் பெருந்துணை விளைப்பாண்டி.

–கண்ணாடி

3408. மூக்கைத் தட்டி வாயில் போட்டேன். அது என்ன?

–வேர்க்கடலை

3409. மூச்சுவிடும் இரட்டைக்குழல் துப்பாக்கி.
அது என்ன?

–மூக்கு

3410. மூட்டைக்குள்ளே மூட்டைமுடிச்சு, முடிச்சை அவிழ்த்து
முயன்றமட்டும் பார்த்தேன், விடிஞ்சு போச்சு,
பிறகு மீதி எல்லாம் சருகு.

–வெங்காயம்

3411. மூட்டை சுமக்கிற அண்ணாச்சி, அவருக்கு
முற்றிலும் குஷிவந்தாச்சு, வாயிலே
வந்தது பாட்டு, செவிடு படும்படிக் கேட்டு
தினமும் அலுத்துப் போச்சு.

–கழுதை

3412. மூட்டை தூக்கி முத்தையன் நத்தை அல்ல
தண்ணீரில் இருக்கும் நத்தையன் தவளை அல்ல.
அது என்ன?

–ஆமை

3413. மூட்டை மூட்டையாய் எரித்தாலும்
பிடிசாம்பல் தேறாது. அது என்ன?

–முடி

3414. மூட்டையை அவிழ்க்க அவிழ்க்க
முடிச்சு முடிச்சாய் வருகிறது. அது என்ன?

–வெங்காயம்

3415. மூடாத தொட்டியில் எடுக்க எடுக்க தண்ணீர்.
அது என்ன?

–கிணறு

3416. மூடாத வாய்க்கு முழம் நீள நாக்கு.

–அகப்பை

3417. மூடாத வாய்க்கு முழ வால். அது என்ன?

–அகப்பை

3418. மூடித் திறக்குமொரு கிண்கிணிப்பெட்டி
அதற்குள்ளே ஒரு வெள்ளைக் கிண்ணம்
அதற்குள்ளே ஒரு நாவற்பழம்
அதற்குள்ளே ஒரு நீலப்பழம். அது என்ன?

–கண்

3419. மூடி திறந்ததும் மூக்கைத் தொளைக்குது.

–பலாப்பழம்

3420. மூடிய கோட்டைக்குள்
முத்துக்கள் முப்பதுக்கு மேல். அது என்ன?
–வாய், பற்கள்

3421. மூடியிருக்குது குண்டுக்கோட்டை
மூட்டைக்குள் இருக்குது நெல்மூட்டை.
–சாத்துக்குடிப்பழம்

3422. மூடியை வெட்டினால் முழி தெரியும்.
–நுங்கு

3423. மூடு காட்டில் கொண்டை வீட்டில். அது என்ன?
–நெற்பயிர்

3424. மூணு சக்கர வண்டி அது முக்காலமும் நொண்டி.
–முக்காலி

3425. மூணு பொண்ணு ஒரு முகம்
மூத்த பொண்ணு ஆத்திலே
நடுப்பொண்ணு காட்டிலே
கடைசிப்பொண்ணு வீட்டிலே. அவர்கள் யார்?
–முதலை, உடும்பு, பல்லி

3426. மூத்த தம்பி ஆத்துக்குள்ளே
முளிமுளிச்சான் காட்டுக்குள்ளே
பேச்சுப் படிச்சான் வீட்டுக்குள்ளே. அவை என்ன?
–மீன், ஆந்தை, பல்லி

3427. மூலைமுடுக்கிலே முந்நூறு தென்னம்பிள்ளை
காயாது பூவாது கள்ளருக்கும் எட்டாது.
–மூக்குமுடி

3428. மூலையில் கிடப்பவளுக்கு வீடு முழுக்க வேலை.
அவள் யார்?
–துடைப்பம்

3429. மூவர் இரு காலால் நடந்ததுண்டோ? உண்டு.
அது என்ன?
–இடுப்பில் குழந்தையுடன் கர்ப்பிணிப் பெண்

3430. மூவர்களுண் டோரகத்திற் பிறந்த மன்னர்
முத்திரைக்குக் கர்த்தாவாய் மூடுதற்குங்
காவலர்களிருவருமாய்க் கூடி வாழ்ந்தார்
கடையிலொரு வானவன் கலக்கமிட்டுப்
போவதற்கும் உட்புகுந்து வேலுபண்ணான்
புவிமிசையே இக்கதையைப் புகலுவீரே.
–பூட்டு

3431. மூளிப் பல்லழகி முகத்தைச் சுற்றிப் பூச்சொரியும்.

–தேங்காய் திருகி

3432. மூன்று அங்குலக் கோட்டை
முப்பத்திரண்டு பேர் காவல்
பாங்காக உள்ளிருக்கார் ராஜா
பவனிவர ஏங்குகிறார் ராஜா. அது என்ன?

–நாக்கு .

3433. மூன்று எழுத்தில் ஒரு ஆண்டின் பெயர்
முதலும் கடையும் சேரில் திற
இடையும் முதலும் சேரில் ஒரு நிறம்
இடையும் கடையும் சேரில் மூன்று வள்ளல்களில் ஒருவர்.

–விகாரி

3434. மூன்று எழுத்தில் ஒரு சோதி
முன் இரண்டும் சேரில் உண்மை
முதலும் கடையும் சேரில் புருஷன்
கடையும் இடையும் சேரில் ஒரு எண். அது என்ன?

–பரிதி

3435. மூன்று எழுத்தில் ஒரு திசையின் பெயர்
முதல் எழுத்து இல்லாவிடில் குதிரை
இடையெழுத்து இல்லாவிடில் வாள்
கடை எழுத்து இல்லாவிடில் ஆசைப்பெருக்கமுமாம்.
அது என்ன?

–அவாசி (தெற்கு)

3436. மூன்று எழுத்தில் ஒரு மரத்தின் பெயர்
முதல் எழுத்து இல்லாவிடில் எண்ணின் பெயர்
இடையெழுத்து இல்லாவிடில் பூமியின் பெயர்
கடையெழுத்து இல்லாவிடில் அரையின் பெயர்.
அது என்ன?

–பாதிரி

3437. மூன்று எழுத்தில் ஒரு வார்த்தை
துள்ளித் துள்ளி ஓடிடும் மீன்
முதல் எழுத்தை நீக்கிவிட்டால் அன்பும் பெருமையுமாம்
நடு எழுத்தை நீக்கிவிட்டால் 'ஆம்' என்பதற்கு
மாற்றுச்சொல். அது என்ன?

–சபரி

3438. மூன்று எழுத்தில் ஒரு வார்த்தை
மாதம் ஒன்றின் பெயர்

நடு எழுத்தை நீக்கிவிட்டால் இரும்பாலாகிய கருவி
கடையெழுத்தை நீக்கிவிட்டால் ஒரு காய்.
அது என்ன?

–ஆவணி

3439. மூன்று எழுத்து ஒரு வார்த்தை
இரத்தக் கலப்புள்ள உறவினன்
நடு எழுத்தை நீக்கிவிட்டால் தவித்திடுதல்
கடை எழுத்தை நீக்கிவிட்டால் மூச்சை உள்ளடக்குதல்.
அது என்ன?

–தம்பி

3440. மூன்று எழுத்து ஒரு வார்த்தை
ஒருவகை மரம்
நடு எழுத்தை நீக்கிவிட்டால் தொடர்ந்திடும் துன்பமாம்
அதுவே யுகங்களில் ஒன்றும். அது என்ன?

–கதலி

3441. மூன்று எழுத்து ஒரு வார்த்தை
குற்றாலம் போனாலும் பார்க்கலாம்
குளித்துக் குளித்து ஆடலாம்
கும்மாளம் போடலாம். அது என்ன?

–அருவி

3442. மூன்று கண்ணுடைய முண்டப்பன்
அதற்கு மேல் தொந்தியப்பன்
ஆத்தப்பனும் அத்தப்பனும் சண்டையிடுகிறார்கள்
சித்தப்பன் விலகிவிடுகிறார். அது என்ன?

–அடுப்பு, பானை, அரிசி, தண்ணீர், அகப்பை

3443. மூன்று காசுக் குதிரைக்குப்
பின்னால் கடிவாளம். அது என்ன?

–ஊசி

3444. மூன்று கால் யானை
தின்பதெல்லாம் கரும்பு. அது என்ன?

–அடுப்பு

3445. மூன்று கால் யானை மேலே மூடிப்பானை
போட்டதெல்லாம் தின்னுப்போட்டு
சிவந்தது கண்ணு. அது என்ன?

–நெருப்பு

3446. மூன்று கொடியோடி முச்சந்தில் கூடி
கொள்ளவாளம் பட்டு கொடிகட்டி ஆடுமாம். அது என்ன?

–சட்டை

3447. மூன்று கொண்டை போட்டவள்
சமையலுக்கு உதவுவாள். அவள் யார்?

–அடுப்பு

3448. மூன்று கொம்பு மாடு
ஒரு கொம்பால் முட்டுது. அது என்ன?

–நெருஞ்சிமுள்

3449. மூன்று சகோதரிகள், ஒருத்தி குச்சி,
இன்னொருத்தி கல், மற்றவள் மண்.
அவர்கள் யார்?

–அச்சுவெல்லம், பனைவெல்லம், சர்க்கரை.

3450. மூன்று சிட்டெடுத்து முட்டைக்குள்ளே போட்டால்
முட்டைக்கு இருந்த நிறம் முற்றும் மாறிப்போச்சு.

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

3451. மூன்று தம்பிடியில் வீடு நிறையும். அது என்ன?

–விளக்கு

3452. மூன்று தம்பியும் ஒரு முகம்
மூத்த தம்பி ஆற்றிலே
வாது செய்வான் காட்டிலே
வார்த்தை சொல்வான் வீட்டிலே.
அவர்கள் யார்?

–முதலை, உடும்பு, பல்லி

3453. மூன்று தலை
பத்துக்கால்
இரண்டு வால்
ஆறு கண்
இரண்டு கை
நான்கு கொம்பு. அவை என்ன?

–ஏர் உழும் மாடுகள், மனிதன்

3454. மூன்று நிறக் கருவி முத்தம்மா வாசலுக்குள்
பொத்திப் புகுந்தவுடன் அத்தனை பேர்
நிறமும் ரத்தச் சிவப்பாச்சு.

–வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

3455. மூன்று நிறக் கிளிகளாம்
கூண்டில் போனால் ஒரு நிறம். அது என்ன?

–தாம்பூலம்

3456. மூன்று பெண்கள் முட்டாக்குக்காரிகள்
வெய்யில் காய்ந்தால் வெவ்வேறே போவார்கள்.
அது என்ன?

–ஆமணக்குக்காய்

3457. மூன்று பெண்ணிற்கும் ஒரே முகம்
மூத்த பெண் ஆற்றிலே
நடுப் பெண் காட்டிலே
கடைசிப் பெண் வீட்டிலே. அவை என்ன?

–முதலை, உடும்பு, பல்லி

3458. மூன்றுபேர் இரண்டுகாலில் சென்றவழியில் செத்தனர்
அவர்களைக் கொன்றவன் இவர்கள் செத்ததிற்கும்
இரண்டு நாள் முன்பே செத்துவிட்டான். அவர்கள் யார்?

**–கர்ப்பிணி கையில் குழந்தையுடன் சென்று
பாம்பு செத்துக்கிடந்த குட்டை நீரைக்
குடித்து இறந்தார்கள்.**

3459. மூன்று போலீஸ்காரனுக்கு ஒரே தொப்பி. அது என்ன?

–பனம்பழம்

3460. மூன்றெழுத்து உண்டானால்
அமைந்ததொரு வெண்பொருள்
தலையும் கடையும் சேர்ந்தால்
தரணிவாழ் மிருகம் ஒன்று. அது என்ன?

–பஞ்சு

3461. மூன்றெழுத்து ஊர் ஒன்று
முதல் எழுத்தும் கடை எழுத்தும் மானைச் சுட்டும்,
முதல் எழுத்தும் நடு எழுத்தும் தேனைக் கூட்டும்,
நடுவெழுத்தும் கடையெழுத்தும் நாடுகாக்கும்
நாயகனைக் காட்டும் என்று நவில்வாரம்மா.

–மதுரை

3462. மூன்றெழுத்துக் கொண்டது ஒரு பெண்ணின் பெயர்
அதன் முதலெழுத்தை நீக்கினால் ஒரு பூவின் பெயர்.
அது என்ன?

–சரோஜா

3463. மூன்றெழுத்தும் கூட்டி முனகினால் கூட
காஞ்சிபுரம் சேலையின் கட்டழகுப் பெயராம்.

தலை கடையும் சேர்த்தால் துயில் எனத்
துவங்கும். சொல்லுங்கள் என்ன இது?

–பட்டு, படு.

3464. மூன்றெழுத்து முனிவரே
முதல் இரண்டு அழகரே
மூன்று கோட்டு முனிவரே
முழிமுழிக்கும் அழகரே. அவர் யார்?

–அணில்.

3465. மூன்றெழுத்தூர்
முப்பதம் இசைக்கும் ஓரூர்
முன்னோன் மண்ணாய் நின்ற ஊர்
முத்தமிழ் வளர்ந்த மூதூர். யாது?

–மதுரை

3466. மூன்றெழுத்தோர் படர்கொடியின் பேரேயாகும்,
முதல் எழுத்தைத் தள்ளிவிடின் மலையோ என்பார்
இடை எடுத்து விடைகாண்பார் இடையோ என்பார்
மடவரலே திடமாக 'அவரை' நீர் மொழிகுவீரே. யாது?

–அவரை

3467. மெல்ல இருட்டியதும் மெழுகாத தரையிலே
மெழுகுவர்த்திக் கோட்டை. நல்லா விடிந்ததும்
நீல நெடும்பாட்டை. என்ன இது?

–வானம்

3468. மேகத்தின் பிள்ளை அது
தாகத்தின் நண்பன் அது. அது என்ன?

–மழை

3469. மேதினியில் மெல்லி நல்லாள் கருத்த மேனியுடையாள்
வாயுண்டு பேசமாட்டாள் வம்புஞ் செய்யமாட்டாள்
கரங்களுண்டு கால்களுமுண்டு நடக்கமாட்டாள்
ஆழத்தில் இறங்குவாள் அகப்பட்டதை அள்ளுவாள்
இவள் படுநீலி மாநிலத்தில் மங்கையல்ல
மகிழ்வுடனே இக்கதையை உரைத்திடுவீர்.

–பாதாளக்கரண்டி

3470. மேல்பலகை கீழ்ப்பலகை
நடுவில் நெளிபாம்பு. அது என்ன?

–நாக்கு

3471. மேல்புறம் கருப்பு
அடிப்புறம் சிவப்பு

உடைத்தால் பருப்பு
தின்றால் கசப்பு. அது என்ன?

–குன்றிமணி

3472. மேலறை கீழறை நடுவில் நெளிபாம்பு.
அது என்ன?

–நாக்கு

3473. மேலும் கீழுமாய் வந்து மகிழவைப்பான்.
அது என்ன?

–ராட்டினம்

3474. மேலே இருந்தும் வருவான்
கீழேயும் இருப்பான். அவன் யார்?

–தண்ணீர்

3475. மேலே ஏறும் கன்றுக்குட்டி
மிடுக்காகப் பாயும் கன்றுக்குட்டி
இடுக்கு முடக்குக் கொம்பிலும்
படுத்தே வரும் கன்றுக்குட்டி.

–அணில்

3476. மேலே கல்கட்டு கீழே கல்கட்டு
கல்கட்டின் கீழே கனத்த சிறுபாம்பு
தக்கபடி வார்த்தை சொல்லித்
தன்கட்டில் தானிருக்கும். அது என்ன?

–நாக்கு

3477. மேலே பறப்பவனுக்குக் கீழே கடிவாளம்.
அது என்ன?

–பட்டம்

3478. மேலே பூப்பூக்கும்
கீழே காய்காய்க்கும். அது என்ன?

–வேர்க்கடலை

3479. மேலேயும் கல் கட்டிடம்
கீழேயும் கல் கட்டிடம்
நடுவிலே போகிறது ஊற்றுக்கால்வாய்.

–நாக்கு

3480. மேளம் முழங்க, மெர்க்குரி ஒளிர வருவான்
வடிவேலன். அவை என்ன?

–இடி, மின்னல், மழை

3481. மேனி எல்லாம் கண்கள் மிக உண்டு.

–நார்க்கட்டில்

3482. மேனிமுழுவதும் கண்ணுடையாள்
முக்காடு போட்டால் சொக்காயில் விழுவாள்.

–வலை

3483. மேனி முற்றும் கண்மேயவன்
தன்னிற் சிக்கிய சீவனை மாய்ப்பவன். அது என்ன?

–வலை

3484. மொச்சைச் செடிக்கு
அர்ச்சனை செய்யும் பூசாரி
மோடம் போட்டால்
முதல் திருவிழா உங்களுக்கா?

–புழு

3485. மொட்டுக்கம்பி முளையாக் கம்பி
நுழையாக் கடலில் நுழைந்த கம்பி. அது என்ன?

–ஊசி

3486. மொட்டைக் கட்டைக் குட்டி
முட்டுக் கட்டைக் கெட்டி
முழுகி முழுகி நிதமும் முன்னேறிக் கரைசேர்ந்தாள்.

–கடைகால்

3487. மொட்டைக்காலு மாடு
முக்கி முக்கித் தண்ணீர் குடிக்கிறது. அது என்ன?

–விளக்கு

3488. மொட்டைத் தட்டிலே எட்டுப்பேர் பயணம்.

–படகு

3489. மொட்டைத் தலையனுக்கு
முடியோ இரட்டைத் தொப்பி

–பட்டாணி

3490. மொட்டைத்தலையனுக்கு முண்டாசு ரெண்டு.

–பட்டாணிக்கடலை

3491. மொட்டைத் தலையனுக்கு முன்பின்னும் சீவினேன்
பட்டென்று அங்கே பருப்பும் கருப்பாய்
விறைப்பாய் நிற்கிறதேன்?

–பென்சில்

3492. மொட்டைத் தாத்தாவுக்கு
இரட்டைப்பிளவு மண்டையில். அது என்ன?

–பட்டாணி

3493. மொட்டைத் தாத்தன் மண்டையிலே
மூடி இரண்டு தெரியுது.

–பட்டாணி

3494. மொட்டைப் பனையிலிருந்து
பூச்சொரிகிறது.

–தேங்காய் திருகி

3495. மொட்டைப் பாறையில்
மூடிய கண்கள் மூன்று. அது என்ன?

–தேங்காய்

3496. மொட்டைப் பாட்டிக்கு முழுகத் தெரியாது.
அது என்ன?

–வெண்ணெய்

3497. மொட்டை மரத்தில் முன்னூறு காக்காய்.
அது என்ன?

–பரிசல்

3498. மொட்டை மரத்திலே முப்பது காகம். அது என்ன?

–படகு

3499. மொட்டை மாடு உட்கார்ந்திருக்கிறது.
மூக்கணாங்கயிறு மேய்ந்து வருகிறது. அது என்ன?

–பூசணிக்கொடி

3500. மோதியபின் மின்னும்
மின்னிய பின் வெடிக்கும். அது என்ன?

–மின்னல், இடி

3501. மோரூரு வீதியிலே
முப்பது தென்னைமரம்
காய்க்காது பூக்காது
அத்தனையும் வெள்ளைமரம். அது என்ன?

–பற்கள்

3502. யாருக்குமே அடங்காதது
ஆதவனுக்கு மட்டும் அடங்கும். அது என்ன?

–குளிர்

3503. யாரும் இறங்காத கிணற்றிலே
அரிச்சந்திரன் இறங்குகிறான்.

–அகப்பை

3504. யாரும் ஏற்றாத இரவு விளக்கு.

–சந்திரன், விண்மீன்

3505. யாரும் ஏறமுடியாத மரத்தில்
ஒரே பிள்ளை பெற்றாள்.

–வாழை

3506. யாரும் போகமுடியாத காட்டிலே
அரவமும் கேட்காத ஆங்கோர் மேட்டிலே
மலை உரல் உருளுது புரளுது.

–வானத்தில் இடி மின்னல்

3507. யாரும் போடாத பந்தலில்
இறைஞ்சு கிடக்குது பூக்கள்.

–நட்சத்திரம்

3508. யாரைப் பிடித்தாலும் இவனைப் பிடிக்கமுடியாது.

–புகை

3509. யானை அசையாமல் தின்கிறது. அது என்ன?

–அடுப்பு

3510. யானைக்கும் குதிரைக்கும் அடங்காத தண்ணீர்
தொண்டைமான் குதிரைக்குத் தொடையளவு தண்ணீர்.

–தவளை

3511. யானை செத்து ஆறுமாதம் ஆகிவிட்டது
யானைத்தடம் அழியவில்லை. அது என்ன?

–நெல்தாள்

3512. யானை படுக்க நிழல் உண்டு
கடுகு மடிக்க இலை இல்லை. அது என்ன?

–சவுக்குமரம்

3513. யானை படுக்க நிழலுண்டு
கிள்ளிப்பிடிக்க இலை இல்லை. அது என்ன?

–கள்ளி

3514. யானை விரும்பும் சேனை விரும்பும்
அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும்.

–கரும்பு

3515. யானை வேகுது
யானை சந்து வேகலை. அது என்ன?

–வீட்டுக்கூரை, மதில்

3516. ரகர மெப்படிச் சந்திரனை யொக்கும்?

–இரவில் தோன்றுதலால்

3517. ரத்தம் இல்லாத பூச்சி
உத்தரத்தோடே போகுது.

–புகை

3518. ராசா மகன் ரஞ்சிதமே
ராத்திரியெல்லாம் கொஞ்சினமே

நாளைச் சாவு நிச்சயம்
இன்னும் கொஞ்சம் கொஞ்சுவமே. அது என்ன?

–பூ

3519. ராசா மகள் ரோசக்காரி
பூ இல்லாமல் சடை போடமாட்டாள்.

–முருங்கக்காய்

3520. ராசா ராணி உண்டு, நாடு அல்ல.
இலைகள் பல உண்டு, தாவரம் அல்ல.
அச்சில் எழுத்து உண்டு, புத்தகம் அல்ல.
ஆடை ஆபரணம் உண்டு, கடை அல்ல.

–சீட்டுக்கட்டு

3521. ராசா வீட்டுத் தோட்டத்திலே
ராணி வந்து வீசற கதையைச் சொல்லவா?
காமினி வீட்டுத் தோட்டத்திலே
மோகினி வந்து வீசற கதையைச் சொல்லவா?

–தென்றல்

3522. ராசாவும் நாங்கள்தான் ராணியரும் நாங்கள்தான்
ஆசை கொண்டு அடித்திடுவார் எங்களைத்தான்
எங்கள் பிள்ளையைத்தான்
பேசாமலிருப்போம் பெருமை குலையாமலிருப்போம்
காசாசை கொண்டவர்க்குக் கற்கண்டாயிருப்போம்
கனிரசமாயிருப்போம். நாங்கள் யார்?

–சீட்டுக்கட்டு

3523. ராத்திரி பிறந்த பையன்
தலைப்பாவுடன் பிறந்தான்.

–காளான்

3524. ராத்திரி பெய்த மழைக்குக்
காலையில் சிவப்புக் கம்பள வரவேற்பு. அது என்ன?

–பட்டுப்பூச்சி

3525. ராத்திரி ராஜாங்கம்
கோடி அரசாங்கம். அது என்ன?

–வானம், நட்சத்திரங்கள்

3526. ரோசா நிறத்து உடம்பிலே
ராஜா கறுப்புக் கம்பிதான்
காகிதத்தை நம்பித்தான் காலம்தள்ளும் தம்பிதான்.

–பென்சில்

3527. வகை, புகை, தகை அவை என்ன?

–வாழைக்காய், புடலங்காய், தக்காளிக்காய்

3528. வங்கார மலைமேலே சிங்காரப் பூப்பூத்துத்
தொங்காத காய் காய்க்கும். அது என்ன?

–எள்

3529. வஞ்சி இளங்கொடியாள் அவள்
மேனி எல்லாம் கண்ணுடையாள்
கண் எல்லாம் சொல்லுடையாள்
சொல் எல்லாம் பொருளுடையாள். அவள் யார்?

–புத்தகம்

3530. வட்ட இரட்டை முகம்தான்
வனப்பான முகம்தான்
ஒத்தே ஒத்த முகத்திலே
ஒட்டியிருக்கிற பொட்டிலே
தட்டு தட்டென்று தட்டினால்
ஜலதரங்கம் பேசுமே!

–மத்தளம்

3531. வட்டக் கண்ணன் வானத்திற்குள்ளே
குட்டைத்தம்பி குளத்திற்குள்ளே
பலன் தரப் பேசுவோன் வீட்டிற்குள்ளே.

–ஆந்தை, மீன், பல்லி

3532. வட்டக் குருவியைத் தட்டித்தட்டி
பொத்தல் போட்டுப் பொத்திப் பொத்தி
தண்ணீருக்குள் போட்டேன் தளதளங்க
கண்ணீர் விட்டது கண்கலங்க. அது என்ன?

–வடை

3533. வட்டக் குளத்திலே பூப்பூத்தா
வாசல் குளத்திற்குள் போயிடுமாம்.

–சேறு

3534. வட்டக்குளத்திலே மீன் வந்து மேயுது
ஈட்டியாலே குத்தி எடுத்து
வாயிலே போடடா. அது என்ன?

–வடை

3535. வட்ட கிணறு
வட்ட குளம்
நெட்ட கொக்கு

குளத்திலே தண்ணியில்லாட்டி
கொக்கு செத்துப்போகும்.

–தீபம்

3536. வட்டச்சட்டி குட்டைச்சட்டி
குட்டைச் சட்டிமேல் கூழ்பானை
கூழ்பானைக்குமேல் போதைப்புல்
போதைப்புல்லுக்கு மேல் பன்றிக்குட்டி. அது என்ன?

–தலை, மூளை, மயிர், பேன்

3537. வட்டப் பூந்தோட்டத்திலே
வரிசையாய் மரம் இருக்கு
நெட்டை மாப்பிள்ளை
எட்டி நடை போடுகிறாள்
குட்டைப் பெண்ணுக்குக்
கூட வர முடியவில்லை. அது என்ன?

–மணிக்கூண்டுக் கடிகாரம்

3538. வட்டம் வட்டமிட வல்குருவி நட்டமிட
வாணிபக் கோட்டைக்குள் வட்டாட்சி புரிகின்றாள்.

–தராசு

3539. வட்டமாகவே இருக்கும் முட்டையல்ல
வருணத்தால் வெளுப்பென்றே சொல்லலுற்றோம்
சட்டமாக உலகமெங்கும் சுற்றி ஓடும்
சந்திரன் என்பீரேல் அதுவுமல்ல
திட்டமாக அவ்விடத்தில் பெண்ணொன்றுண்டு
திருமருவு பாற்கடல் திருவுமன்று. அது என்ன?

–ரூபாய்

3540. வட்டமாய்ச் சுற்றிவரும் கருடன் அல்ல
வாய்மூக்குச் சிவந்திருக்கும் கிளியும் அல்ல
கொட்டுண்டு தட்டுண்டு கோயில் அல்ல
சுற்றிவந்து கொள்ளிவைப்பார் சுடுகாடல்ல.
அது என்ன?

–குயவன், சக்கரமும் சூளையும்

3541. வட்டமாய் வண்ண முகமிருக்கும்
தொட்டுப் பாட வேண்டும்
சற்று இறுகினாலும் பட்டென்று
உடைந்து போகும். அது என்ன?

–கண்ணாடி

3542. வட்டமான குளத்திலே மீனாய் மிதக்குதய்யா
ஈட்டியாலே குத்தி எடுத்துப்போடு வாயிலே.

—வடை

3543. <u>ஆண் கேட்டது</u>
வட்டமிட்டது என்னடி சிறுக்கி
வழுவழுத்தது என்னடி சிறுக்கி
கொட்டையிட்டது என்னடி சிறுக்கி
குளுகுளுத்தது என்னடி சிறுக்கி
மயிர் முளைத்தது என்னடி சிறுக்கி
எட்டி பிடித்தது என்னடி சிறுக்கி
குதித்து ஏறினது என்னடி சிறுக்கி
<u>பெண் அழிச்சது</u>
வட்டமிட்டது தோசையடா
வழுவழுத்தது வாழைப்பழம்
கொட்டையிட்டது மாம்பழம்
குளுகுளுத்தது கறுப்பட்டி
மயிர் முளைத்தது தேங்காய்
எட்டிப்பிடித்தது கடிவாளம்
குதித்து ஏறினது குதிரையடா.

3544. வட்ட முகத்தழகி, வாட்டமின்றி எந்நாளும்
போட்ட விருந்துக்கு புண்ணியத்தைக் கட்டியவள்
காலத்தேர் ஓடக் கைகாட்டி நிற்கின்ற
காலக் கண்ணாடியே நீ?

—கடிகாரம்

3545. வட்ட முகம் உண்டு
வாய் திறந்து பேசாது
காட்டக் கை உண்டு
கால் ஊன்றி நடக்காது. அது என்ன?

—கடிகாரம்

3546. வட்டமுக வடிவழகன்
வந்தாண்டி காலையிலே
எட்டிநின்று பேசாமல்
எங்கோ சென்றான் மாலையிலே. அவன் யார்?

—சூரியன்

3547. வட்ட வட்ட இராட்டினம்
வாரித்தின்னும் இராட்டினம்

ஏப்பம் இடும் இராட்டினம்
இருந்து கழியும் இராட்டினம். அது என்ன?

–பணியாரம்

3548. வட்ட வட்டக் கிணற்றிலே
வழுக்குப் பிள்ளை களத்திலே
ஈட்டி குத்திப் பாயுது என்னமோ சண்டை ஓயுது.

–வடை

3549. வட்ட வட்டக் குருவி
வால் இல்லாத குருவி
நெல்லுக்கிடந்த இடத்தில் எல்லாம்
துள்ளித் துள்ளி விளையாடும்.

–பணம்

3550. வட்ட வட்ட குயில்களாம், வாயில்லாக் குயில்களாம்,
சுற்றுகின்ற போதிலே சுகமான ராகமாகும். அது என்ன?

–இசைத்தட்டு

3551. வட்ட வட்டச் சக்கரம் வளவளப்பான சக்கரம்
பட்டுதைத்த சக்கரம் பருமனான சக்கரம்
ஆரக்கால் உள்ள சக்கரம் அழகான சக்கரம்
சூரியனையும் வெல்லவல்ல சுந்தரச் சக்கரம்
மாரியையும் தாங்கவல்ல மாயமான சக்கரம்
கையிலேறுஞ் சக்கரம் என்னவென்று கழறுவீர்.

–குடை

3552. வட்ட வட்ட சிங்கண்ணா
வாலில்லாத சிங்கண்ணா
என்னை வந்து எழுப்பண்ணா.

–மூட்டைப்பூச்சி

3553. வட்ட வட்ட சிப்பி
வாலில்லாத சிப்பி
எலும்பில்லாத சிப்பி
என்னை எழுப்பும் சிப்பி. அது என்ன?

–மூட்டைப்பூச்சி

3554. வட்ட வட்ட பாதையிலே
வந்து நிற்கும் வெள்ளைக் கொக்கு
சற்று நேரம் சூடான பின்
சிவப்பாக மாறிவிடும். அது என்ன?

–தோசை

3555. வட்ட வட்ட பாய்
வாழ்வு தரும் பாய்
ஊரெல்லாம் சுற்றும் பாய்
ஒவ்வொருவருக்கும் வேண்டும் பாய்.

–ரூபாய்

3556. வட்ட வட்டப் பாய் வாழ்வுதரும் பாய்
துட்டர் திருடும் பாய் தூய வெள்ளிப் பாய்.

–ரூபாய்

3557. வட்ட வட்ட வறுவல், வாழைக்காய் வறுவல்,
இந்த வறுவலை நீட்டினால் நினைச்சதை வாங்கலாம்.

–ரூபாய்

3558. வட்ட வடிகாலிலே, முட்டுச் சந்து முனையிலே
முளைத்திருக்கிற பூவுக்கு எள்ளுத் தண்ணீர்
இறைத்திருக்க
இழைநூல் கட்டிப் போட்டிருக்கே!

–விளக்கு தீபம் நூல்

3559. வட்ட வடிவழகி
தண்ணீரில் வாழும் அழகி
வாடி வதங்கினாலும்
வந்திடுவாள் பந்திக்கு.
அவள் யார்?

–தாமரை

3560. வட்ட வடிவாள் வரவரத் தேய்வாள்
முற்றும் மறைவாள் மூன்றாம் நாள் முளைப்பாள்.
யார்?

–நிலா

3561. வட்ட வளைவு நண்டு
வாலுள்ள நண்டு
வேனில் காலந்தன்னில்
வீட்டில் வேண்டும் நண்டு
காலில்லாத நண்டு
கையில் கொள்ளும் நண்டு
பிராணன் இல்லாத நண்டு
பெருமூச்சிடுமாம் நண்டு
இது என்ன நண்டு?

–விசிறி

3562. வட்ட வனப்புப் பட்டம், வால் உள்ள பட்டம்,
வேனா வெயிலு வேர்வை விரட்டிவிடும் பட்டம்,
காலில்லாத போதும் காற்றில் ஆடும் பட்டம்,
நர்த்தனக் கையார் தொட்டால் நடனம் ஆடும் பட்டம்,
நன்றி சொல்லும் போதும் மஞ்சள் பட்டம்.

–விசிறி

3563. வட்டுக்கும் நாக்குக்கும் தாலிகட்டி
வாழும் வர்த்தகியே, விட்டத்தில்
துட்டுக்கு ஆடும் நர்த்தகியே வாழி நீ!

–தராசு

3564. வட்டு வட்டாட, வட்டக்கிளி பொட்டாட
வற்றக் கொதிக்கிற தண்ணீரில்
வருத்தத்தில் கொட்டுது கண்ணீரு.

–வடை

3565. வடகரை தென்கரை பொங்கிவர
வாளை கிடந்து அடித்துக்கிட
முத்துக் கிருட்டிணன் குத்திக்கிட
கிருட்டிணசாமி ஏந்திக்கிட. அது என்ன?

–சோறுவடித்தல்

3566. வடிகால் வட்ட வடிகால்
வளைய வளையும் வடிகால்
நெய் அளைகிற வடிகால்
நெல் உயரத்தில் பொண்ணு நின்று
மிதக்குகிற வடிகால் என்ன வடிகால்?

–விளக்கு

3567. வடிவழகு மாப்பிள்ளை
வயிற்றால் நடக்கிறார். அது என்ன?

–பாம்பு

3568. வடுகா வடுகா செந்தலை வடுகா
வடுகன் பெண்டாட்டி கும்மியக்கா
கும்மியக்கா வயிற்றிலே கீச்சிட்டி மூச்சிட்டி
அது என்ன?

–சேவல், பெட்டை,
முட்டை, குஞ்சு

3569. வண்ண நிலா விண்ணிலே
மலர்ந்திடுவாள் மண்ணிலே. அது என்ன?

–அல்லிப்பூ

3570. வண்ண வண்ண டேக் டேக்
வால் வால் டேக் டேக்
குண்டு சட்டி டேக் டேக்
குதிரை வால் டேக் டேக்.

–பாக்கு, வெற்றிலை,
சுண்ணாம்பு, புகையிலை

3571. வண்ணான் வெளுக்காத வெள்ளை
குயவன் செய்யாத பாண்டம்
மழை பெய்யாத தண்ணீர். அது என்ன?

–தேங்காய்

3572. வண்ணான் வெளுக்காத வெள்ளை
வருணனும் பார்க்காத தண்ணீர்.

–தேங்காய்

3573. வந்ததை அமுக்கிக் கொள்வான்
வழங்குவதே அவன் வழக்கம் இல்லை.

–கடல்

3574. வந்ததை எல்லாம் வாங்கத்தெரியும்
வாங்கியதை எல்லாம் வழங்கத் தெரியாது.

–கடல்

3575. வந்த பிற்பாடு வந்தீர்களே
வந்து விட்டு ஒருதரம் போனீர்களே
போய் விட்டு ஒரு தடவை வந்தீர்களே
இனிமேல் போனால் வருவீர்களே?. அது என்ன?

–பற்கள்

3576. வந்த விருந்தாளியை
வா வென்று கேட்க ஆளில்லை.
அவர் யார்?

–செருப்பு

3577. வந்தாரு போனாரு திரும்பி வந்தாரு
சொல்லுக்கு இடம் வச்சாரு. அது என்ன?

–பல்

3578. வந்தாளும் வந்தாள் வாணிச்சி
சீவி முடித்தாள் செட்டிச்சி
வாரி முடிச்சாள் வலச்சி
கோதி முடிச்சாள் கொசத்தி. அது என்ன?

–நல்லெண்ணெய்

3579. வந்தும் கெடுக்கும்
வராமலும் கெடுக்கும். அது என்ன?

–மழை

3580. வந்து வாசல் மிதிச்சீங்க,
வந்தும் ஒருதரம் போனீங்க, போனாலும்
வந்தாச்சு நல்லது தான்; இனியும்
பொக்கென்று போவீர்களோ
போனதுபோல் மீள வருவீர்களா?

–பல்

3581. வயதானவர்களுக்கு இவன் இன்னொரு கை.
அவன் யார்?

–கைத்தடி

3582. வயல் வெள்ளை வயல்
விதை கருப்பு விதை
கையால் விதைத்து வாயால் பெருக்க வேண்டும்.
அது என்ன?

–காகிதத்தில் மை கொண்டெழுதி வாயால் படிப்பது.

3583. வயலிலே, மலைச்சரிவிலே, மலர்ந்து
இருக்கிற பெண்ணே, உன்னைக் கிள்ளவா,
மெல்லவா, கிளிக்கூட்டில் அடைக்கவா. அது என்ன?

–வெற்றிலை போடல்

3584. வயலூரு பக்கத்து ஆச்சி, வயிறு பிள்ளைத்தாச்சி,
மேல் எல்லாம் அத்தர் பூசி,
மினுக்குகிறாள் பச்சைத் தாசி.

–தாழம்பூ

3585. வயிற்றில் விரல், தலையில் கல். அது என்ன?

–மோதிரம்

3586. வயிறு புடைக்கத் தின்றால்தான்
நிமிர்ந்து நிற்பான் குண்டப்பன். அது என்ன?

–கோணிப்பை

3587. வரகரசி நீரிலே வண்ணமர ஊரிலே
எத்தனையோ காவல் இருந்தும்
எப்படி வந்தாய் என் மகளே
மன்னவனை உறங்க வைத்து
மறுதாழ்ப்பாள் போட்டடைத்து

புழக்கடைத் தடத்திலே
புறப்பட்டு வந்தேன் அம்மா. அது என்ன?

–பெருச்சாளி

3588. வராமலே கொஞ்சநாள் எங்கேயோ இருந்தான்
வந்துவிட்டேன் என்று கூறி மெள்ள மெள்ள வந்தான்
கொஞ்சநாள் சிறப்பாக இருந்துவிட்டுப் போனான்
போனவன் மறுபடியும் திரும்பிவந்து சேர்ந்தான்
பலநாட்கள் வேலைசெய்துமே தங்கிவிட்டுக்
குறைபல செய்துவிட்டு வராமலே போய்விட்டான்.
அவன் யார்?

–பல்

3589. வராவிடில் என்னை வாவென்று அழையார்
வந்தாலெவரும் போவென்றுரையார். நான் யார்?

–வழக்கு

3590. வரிக்குதிரை ஓடியது
வாய்ப்பாட்டுப் பாடியது. அது என்ன?

–இசைத்தட்டு

3591. வரிசைக்கு வரும் முந்தி
வெளியே போகும் பிந்தி. அது என்ன?

–இலை

3592. வரிவரி வண்ணக்கொம்பு
வாடாத முத்துக்கொம்பு. அது என்ன?

–சோளம்

3593. வரிவரிச் சங்கக் கொக்கே
வாரித்தந்த முத்துக் கொக்கே
எட்டுக் கிலோ பாக்கு 200 கிலோ வெத்திலை
ஏறக் குதிரை இறங்கிவரச் சிங்காதனம்
இந்தக் கதை விடுவித்தவர்களுக்கு.

–தேள்

3594. வரிவரியாய்ச் சேலைகட்டி வந்தாளாம் பொம்பளை
வந்தவுடன் கடித்துவிட்டுப் போனாளாம் பொம்பளை.
அது என்ன?

–தேள்

3595. வருகிறதும் போகிறதும் என்னாலே
வந்துகிடக்கிறது மேலாலே
சாகப் போகிறதும் உன்னாலே
செத்துக்கிடக்கிறதும் என்னாலே.

–மீன்

3596. வருடத்திற்கு வருடம் இரண்டிற்குப் பின்னால் இருக்கும்
மூன்று இடத்திலும் ஏதும் இல்லா வருஷம்
என்ன வருஷம்?

–2000 ஆன வருஷம்

3597. வருடம் ஒருமுறை வந்து
வண்ணமுறத் தைலமிட்டு
வகை வகையாய்ச் சிற்றுண்டி
வன்மையுற அளித்திட்டு
டப்பென்பாள் முப்பென்பாள்.
அவள் யார்?

–தீபாவளி

3598. வருடமுழுதும் கனிகொடுக்கும்
மரமென்ன மரஞ்சொல்?

–தென்னைமரம்

3599. வருத்தம் இல்லாத சுமை. அது என்ன?

–குழந்தைச் சுமை

3600. வருவது தெரியும், போனது தெரியாது. அது என்ன?

–புகை

3601. வருவது போவது இரண்டு
வந்தால் போகாது இரண்டு
போனால் வராது இரண்டு. அது என்ன?

–செல்வமும், வறுமையும், புகழும்,
பழியும், மானமும், உயிரும்.

3602. வருவதும் போவதும் தெரியாது
வரும்போது சுகம் தருவான். அவன் யார்?

–தென்றல்

3603. வருவான், போவான், நின்ற இடத்தில்
நிலையாக இருப்பான். அது என்ன?

–முந்திரிப்பருப்பு

3604. வல்லக்கோட்டை முத்தம்மா
வயிறு பெருத்துச் செத்தம்மா.

–பருத்திவிதை

3605. வலியால் துடிக்க வாலால் அடிப்பார்.

–தேள்

3606. வலியோர் வந்தால் என்னை விடமாட்டார்
வலிய நான் வந்தாலும் எனைத் தொடமாட்டார்.

–வழக்கு

3607. வலைபின்னுவான் வலைவீசி இரைபிடிப்பான்
செம்படவனேயல்ல, இடத்திலிருந்து
இடம் தாவுவான் குரங்குமல்ல, அணிலுமல்ல,
நூலேணியில் ஏறுவான் தொங்குவான் உருவம்
சிறிதாயினும் கருமம் பெரிது.
எட்டுக் காலுள்ள இவன் யார்?

–சிலந்தி

3608. வலைவீசி இரை பிடிப்பான்
செம்படவன் அல்ல
நூல் நூற்று வலை பின்னுவான்
தொழிலாளியும் அல்ல.

–சிலந்தி

3609. வழவழங்குது என்ன மாமா?
கொள கொளங்குது என்ன மாமா?
வட்டமிடுது என்ன மாமா?
பொத்தல் விடுது என்ன மாமா?

–வாழைப்பழம், கொய்யாப்பழம்,
தோசை, வடை.

3610. வழ வழ ரோட்டா...
வண்ணாத்தி ரோட்டா...
வழி விடமாட்டா. அது எது?

–பாம்பு

3611. வழி எல்லாம் நடக்கிற வாலிபப் பையனின்
காலடி தெரியலையே? காரணம் புரியலையே?

–எறும்பு

3612. வழிநெடுக வஸ்திரத்து வண்ணான் குறி தெரியுது.

–மைல்கல்

3613. வழியில் போகிறவன் தலையைக் கிள்ளி
அடியில் வைத்தாள். அது என்ன?

–சோளம்

3614. வழியெல்லாம் கூடவே வருவான்
வீட்டுக்குள் மட்டும் வரமாட்டான். அவன் யார்?

–செருப்பு

3615. வழியே போர பாப்பாத்தி
வைக்கோலைப் போட்டுப் பிள்ளை பெத்தா.
அவள் யார்?

–கொழுக்கட்டை

3616. வழக்கு மரம்
துவர்ப்புக் கால்
இனிக்கும் பழம். அது என்ன?

–வாழை

3617. வழுத்துவேன் குடலுண்டு சீவிப்பதன்று
வரிப்பிரிவு முதுகிலுண்டு பிரம்புமன்று
பழுத்தறிவு மேனியுண்டு கிழவனன்று
பலவிடத்தில் தான்படுக்கும் பித்தனன்று
குறித்தபெரு வயிறுமுண்டு பேழையன்று
கொடியிட்டே தான்வசிக்கும் வேந்தனன்று
கொள்கையுடன் இக்கதையைக் கூட்டுவாயே.

–பூசணிக்காய்

3618. வள்ளுவர் கறந்த பால், வற்றாத பால்,
தெள்ளத் தெளியவே திசை முட்டும் பால் என்ன பால்?

–1. முப்பால்
2. அப்பால் (அந்த திசைக்குப் போன பால்)
3. இப்பால் (இத்திசைப்பால்)

3619. வளர்ந்தவன், வளைந்து நெளிந்தவன்,
தொடர்ந்த பயணத்தில் துணை வருபவன். அது என்ன?

–சாலை

3620. வளர்ந்தால் மகிழ்ச்சி, விழுந்தால் சீச்சி.

–தலைமுடி

3621. வளர்ந்தாலும் நான் இன்னும் சிறுபிள்ளைதான்
வெட்டினாலும் அதுகூடச் சிறு தொல்லைதான்.
அது என்ன?

–நகம்

3622. வளரும் பயிர்களுக்கு
வாயால் மண்ணிழுத்து
வகையாய் உணவளிப்பான். அவன் யார்?

–மண்வெட்டி

3623. வளைக்கலாம் நுழைக்காலம் ஒடிக்க முடியாது.

–உரோமம்

3624. வளைச்சாலும் நுழைச்சாலும் ஒடியாத கம்பி

–தலைமயிர்

3625. வளைஞ்சிருக்கும் கூனன்தான் வாயால்
கடிச்சு மேலால போடுவான்.

–அரிவாள்மணை

3626. வளைந்த தங்கக்கம்பி வானிலே தெரியுது. அது என்ன?

–வானவில்

3627. வளைந்த வெள்ளைப் பருப்பு
விருந்தில் உயர்ந்த மதிப்பு
விலையும் ரொம்ப அதிகம்
விரும்பும் நபரும் அதிகம். அது என்ன?

–கிரைண்டர்

3628. வளைந்து நெளிந்து ஓடிவரும் பாம்பு அல்ல
தாவித்தாவிக் குதித்து வரும் குரங்கு அல்ல
ஓயாது இரைந்திடும் வண்டு அல்ல. அது என்ன?

–அலை

3629. வளைந்து நெளிந்து போனாலும்
வழியைச் சொல்லும் சரியாய். அது என்ன?

–சாலை

3630. வளைந்தும் நெளிந்தும் செல்வான்
வளையாபுரி மைந்தன். அவன் யார்?

–பாம்பு

3631. வளைந்து வளைந்தே போகும் பாம்பும் அல்ல
வழிநெடுக நீருதவும் மழையுமல்ல
காடுமலை சுற்றிவரும் கரடியல்ல
கடலிலே மூழ்கிவரும் மீனுமல்ல. அது என்ன?

–ஆறு

3632. வளையும் வளரும் ஒடியாது. அது என்ன?

–தலைமுடி

3633. வளைவான், குழைவான், ஒடியமாட்டான்.
அவன் யார்?

–தலைமுடி

3634. வளைவான், நெளிவான், வயிறு கலங்க வைப்பான்.
அவன் யார்?

–பாம்பு

3635. வற்றாத ஜலமே ஜலம்
பிரிக்காத பந்தலே பந்தல்
ஓடாத ரதமே ரதம். அது என்ன?

–கடல், வானம், கோபுரம்

3636. வறட்டுக் கிணற்றில் முயல் குதிக்கிறது. அது என்ன?

–கொந்தளம்

3637. வா என்று கூப்பிடும், போ என்று சொல்லும்
ஆனால் பேசாது. அது என்ன?

–தொழிற்சாலைச் சங்கு

3638. வாங்காத சுமை என்ன?

–கர்ப்பம்

3639. வாங்கியதைச் சேமிக்கத் தெரியாதவன்.

–வயிறு

3640. வாசலில் பூத்திருக்கும் வாழ்வரசி. அது என்ன?

–கோலம்

3641. வாசலில் வண்ணப்பூ
வரிவரியாய் அழகுப் பூ
தினந்தினமும் வேறு பூ
தெளிவாய்த் தோன்றும் பூ. எது?

–மாக்கோலம்

3642. வாசலுக்கு வாசல் வழிபார்த்து
முறைபார்த்து நேசமாய்க் காவல்
நிஜமாய்ப் புரிபவன் நீ.

–பூட்டு

3643. வாசலை வழி மறைக்கும் வெள்ளைக்காரன்.

–கோலம்

3644. வாடாத பயிர் என்ன பயிர்?

–அறுகு

3645. வாணலியில் சுட்ட பழம்
மாதரசி இட்ட பழம்.

–அப்பளம்

3646. வாதம் இல்லை சண்டை இல்லை
வர்க்க தர்க்க பேதம் இல்லை.
வந்தவள் குடுமியை ஆயினும் மடக்கிப் பிடிப்பவள் யார்?

–சிகை அலங்காரம் செய்யும் தொழிலாளி.

3647. வாய் இல்லாத பறவை
ஊர் ஊராய் பறக்கிறது.

–ஆகாயவிமானம்

3648. வாய் இல்லை வார்த்தைகள் சொல்வேன்
உயிர் இல்லை ஊருக்குப் போவேன்
கால் இல்லை வீட்டுக்கு வருவேன்.

–கடிதம்

3649. வாய்க்கால் வெட்டி வரப்பு வெட்டி
வைகாசி மாதம் தோப்பு வெட்டி
ஆத்தாள் தெருவிலே மகள் கொலுவிலே.

—வைக்கோல், நெல்

3650. வாய்க்கால் வெட்டி வரப்பு வெட்டி
வைகாசி மாதம் தோப்பு வெட்டி
ஈக்கி குத்தி இடை சிறுத்து
இன வாழைக் குருத்து விட்டு
பாக்கி முத்துப் பழம் பழுத்து
பாண்டிராஜன் கடையிலே. அது என்ன?

—நெல்

3651. வாய்க்கால் வரப்பிலே காய்த்தால் ஆயிரங்காய்
பறித்துக் கணக்கிட்ட பேருக்குக் காவேரியாறு பணம்.
அது என்ன?

—மீன்

3652. வாய்க்காலில் தண்ணீர் பாய
வாலைப்பெண் முட்டையிட.

—கத்தரிக்காய்

3653. வாய்க்காலில் நீர் பாய வாத்து வந்து முட்டையிட.

—கத்தரிக்காய்

3654. வாய்கூசாமல் பேசுவான், இராப்பகல் உறங்க
மாட்டான், உணவு உண்ணான், நீர் அருந்தான்,
இரு கைகளாலே ஜாடை காட்டுவான், சுவரில்
ஏறி நிற்பான், எப்பொழுது கேட்டாலும்
அப்பொழுதே பொழுதுரைப்பான். அவன் யார்?

—கடிகாரம்

3655. வாய் சிறிது கடையுண்டு கழுத்து நீளம்
வயிறார வாசனையை உள்ளே வாங்கும்
சேய்போல உண்ட வெல்லம் வாயால் கக்கும்
செகத்தோரே இவராரோ செப்புவீரே.

—புட்டி

3656. வாய்தனிலே நெருப்பெரியும் பேயுமன்று
வாயுமுண்டு வயிறோம்பும் பாம்புமன்று
தேயவுடன் வாயுதரும் தேவனன்று
செங்கையால் மூடிநிற்கும் சிமிழுமன்று
செண்பகமே இக்கதையைச் செப்புவாயே.

—துருத்தி

3657. வாய்தான் சிறிது ஆனால் வாலோ பெரிசு.

–அகப்பை

3658. வாய் திறந்த மூளிக்கு வால் முழம் நீளம்.

–அகப்பை

3659. வாய்வும் நுழையாத வட்டக் குழலுக்குள்
வெள்ளைக்காரன் கூட மஞ்சள் இந்தியனும்
மாறுவேடத்தில் தூங்குகிறார்கள்.

–முட்டை

3660. வாயாலே தின்று வாயாலே கக்கும்
வௌவால் அல்ல
ஒரு முழம் வாலிருக்கும்
பூனையுமல்ல. அது என்ன?

–அகப்பை

3661. வாயில்லாத குடத்திலே வார்த்துவிட்ட தண்ணீர்
வெளுக்காத வெள்ளை விரித்திருக்கே உள்ளே.

–தேங்காய்

3662. வாயில்லாத பறவை
ஊர் ஊராய்ப் பறக்கிறது. அது என்ன?

–வானவூர்தி

3663. வாயில்லாதவன் வார்த்தைகள் சொல்வான்.
அவன் யார்?

–கடிதம்

3664. வாயில்லாமலேயே வகையாகக் கடிப்பான்.
அவன் யார்?

–புதுச்செருப்பு

3665. வாயில்லை பாடும், ஊசியுண்டு நூலில்லை,
ஊசி வைத்தால் பாடும், சுற்றிச் சுற்றிப் பாடும்,
தட்டு வைத்தால் பாடும். அது என்ன?

–கிராமபோன்

3666. வாயிலிருந்து நூல் எடுப்பான்
மந்திரவாதி அல்ல,
கிளைக்குக் கிளை தாவுவான்
குரங்கும் அல்ல,
வலை விரித்துப் பதுங்கி இருப்பான்
வேடனும் அல்ல. அவன் யார்?

–சிலந்தி

3667. வாயிலே சுளை வழியிலே தொலி.

–வாழைப்பழம்

3668. வாயிலே தோன்றி
வாயிலே மறையும் பூ. என்ன பூ?

–சிரிப்பு

3669. வாயிற் பற்களுண்டு கடிக்கும்
தலையிலேறிப் பிராண்டும் பெருக்கும் அழுக்கெடுக்கும்
பூச்சியைப் பிடித்துவிடும். அது என்ன?

–சீப்பு

3670. வாயுவை விட வேகமானது. அது என்ன?

–மனம்

3671. வாயைத் திறந்தால் மாயாண்டி
வடிப்பாள் கண்ணீர் பின் ஓயாண்டி.

–தண்ணீர்க்குழாய்

3672. வாயைத் திறந்தால் வாயாடி
ஓயாமல் அழுகிறாள். அது என்ன?

–தண்ணீர்க்குழாய்

3673. வாயையே மூடாத வத்ஸலா
பொண்ணுக்கு முளைச்சுக் கிடக்குது
மூணுமுழ நாக்கு.

–அகப்பை

3674. வாராத கிணற்று மேலே
ஒளியில்லாத கண்கள் மூன்று. அது என்ன?

–தேங்காய்

3675. வார்ராய் போர்ராய் என்னாலே
வந்திருக்கிறார் உன்னாலே
சாகப் போகிறாய் என்னாலே
செத்துக்கிடக்கிறார் உன்னாலே.

–தூண்டில் (தூண்டில் முள், பூச்சியுடன்)

3676. வாரிவிட்டேன் கொட்டிவிட்டேன்
ஊரெல்லாம் புகைகிறது. அது என்ன?

–சாம்பல்

3677. வாரீர் வாரீர் எம்மையிட்டு
வந்திருக்கின்றேன் உம்மையிட்டு
சாகப் போகிறீர் எம்மையிட்டு
பாதி செத்திருக்கின்றேன் உம்மையிட்டு. அது என்ன?

–தூண்டில், மீனும் புழுவும்

3678. வால் அறுபட்டவள் தோல் உரியவிட்டவள்
தொடுநரம்பு கட்டவள், தலைமுடியை அலைய அலைய
தரைபுரட்டிக் களிப்பாள், கதவுக்குப் பின்னே
ஒளிப்பாள்.

–துடைப்பம்

3679. வால் உயிரில்லாத மனிதன்
உலகமெல்லாம் சுற்றுகிறான். அவன் யார்?

–ரூபாய்

3680. வால் குருவி வயிற்றிலே விதவிதமாய் முட்டைகள்.

–மிளகாய்

3681. வால் கொண்டைக்காரி வலுச் சண்டைக்காரி
ஐயா தொட்டால் விடுவாளா?
துவட்டாமல் போவாளா?

–தேள்

3682. வால் நீண்ட குருவிக்கு
வாயுண்டு வயிறில்லை. அது என்ன?

–அகப்பை

3683. வாலால் தண்ணீர் குடிக்கும்
தலையால் முட்டையிடும். அது என்ன?

–கத்தரிக்காய்

3684. வாலால் நண்டு பிடிப்பேன்
வாயால் தேன் எடுப்பேன்
குள்ளனெனப் பெயர் எடுத்தேன்
கூட்டத்தொடு போர் தொடுப்பேன். நான் யார்?

–குள்ளநரி

3685. வாலால் நீரை வடியாமல் குடிக்கிற ஆடு என்ன ஆடு?

–விளக்கு

3686. வாலிபத்தில் பச்சைப்பட்டு வயோதிகத்தில்
சிவப்புப்பட்டு வரிஞ்சு கட்டும்
பெண்ணுக்கும் தான் வாட்டம் உண்டு
ஓட்டம் உண்டு.

–மிளகாய்

3687. வாலினால் தண்ணீர் குடிக்கும் எங்கள் குருவி.
அது என்ன?

–விளக்குத்திரி

3688. வாலினால் நீர் குடிக்கும்
வாயால் பூச்சொரியும். அது என்ன?

–விளக்கு

3689. வாழ்நாள் எல்லாம்
வாயைத் திறந்திருக்கும். அது என்ன?

–தபால்பெட்டி

3690. வான் மழை பெய்யாத தண்ணீர்
வெள்ளைமான் முதுகளவு விளையாடும் தண்ணீர்
விண்ணோரும் காணாத வெள்ளை
வெண்ணெய்க்கும் வெண்ணெய் நெய்ப்பண்ணை

–தேங்காய்

3691. வான்மிசை பறப்பினும் வன்புள்ளன்று
வால் நீண்டிருப்பினும் வல்விலங்கன்றே. அது என்ன?

–காற்றாடி

3692. வானத்தில் பறக்கும் அது பறவை அல்ல.

–ஆகாயவிமானம்

3693. வானத்தில் வளைந்த தங்கக்கம்பி
நீட்டமுடியாது, நகை செய்யமுடியாது.

–மின்னல்

3694. வானத்திலிருந்து ஒரு குருவி வந்து
வாலால் தண்ணீர் குடிக்கிறது. அது என்ன?

–விளக்கு

3695. வானத்திலுண்டு பூமியிலில்லை
மனத்திலுண்டு இருதயத்திலில்லை
பம்பரத்திலுண்டு கயிற்றிலில்லை
பாலிலுண்டு மோரிலில்லை
தலையிலுண்டு கம்பிலில்லை. அது என்ன?

–வானம்பாடி

3696. வானத்திலே ஒரு கல்
பூமியில் ஒரு கல்
அரிசியில் ஒரு கல்
தண்ணீரில் ஒரு கல்
வெற்றிலையில் ஒரு கல். அது என்ன?

**–கருக்கல், வழுக்கல், புழுங்கல்,
கலங்கல், அழுகல்.**

3697. வானத்திலே சுற்றுவான் விமானமும் அல்ல
வட்டம் போட்டுச் சுற்றுவான் கருடனும் அல்ல.

–பட்டம்

3698. வானத்திலே பறக்கும்
வால்நீண்ட பறவைக்கு
தரையில் இருக்கும் தம்பி கையிலே
இருக்கும் நீண்ட கடிவாளம். அது என்ன?

–பட்டம்

3699. வானத்திலே பறக்குமது வல்லூ ருமல்ல
மேகத்தைப் பிளந்து செல்லுமது பருந்துமல்ல
இருட்டிலே திரியுமது ஆந்தையுமல்ல
இயம்பிடுவீர் அதையுந்தான் என்னவென்றே.

–சந்திரன்

3700. வானத்திலே பறந்திடுவான் வான்பறவை அல்ல
வட்டமிட்டுச் சுற்றிடுவான் விமானம் அல்ல.

–பட்டம்

3701. வானத்திலே பறந்திருந்த
பச்சைக்கிளியைக் கொண்டு வந்து
குத்த குத்தென்று குத்திப்
பாலுஞ்சாதமும் போட்டுத்
தெருவில் போட்டேன் தெம்பாய். அது என்ன?

–எச்சிலை

3702. வானத்திலே பாதை போட்டு
மகாமேரு சிகரம் ஒட்டி
மேலைநாட்டு விஞ்ஞானம் மிதந்து
விண்ணில் எங்கோ போவுதே.

–ஆகாயவிமானம்

3703. வானத்திலே ரோடு போட்டு
எட்டாத தொலைவிலே
இங்கிருந்து பார்த்தால்
இங்கிலீசுக்காரன் பள்ளிக்கூடம். அது என்ன?

–டெலிவிசன்

3704. வானத்திலே வளைந்த தங்கக்கம்பி
நீட்டமுடியாது நகை செய்யமுடியாது.

–மின்னல்

3705. வானத்திற்கும் பூமிக்கும் ஒரே கம்பி. அது என்ன?

–மழை

3706. வானத்தை நாலா மடிச்சி
மலையை நாலா வெட்டி

நிலவைத் தடவி வாயில் போட்டால்
இரத்தம் வரும். அது என்ன?

-வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

3707. வானத்தைப் பார்ப்பதும் சிறகை விரிப்பதும்
வெளவாலாகிக் குஞ்சு பொரிப்பதும்
நீருமதற்குள்ளே நிலமுமதற்குள்ளே
நீராழி மண்டபந்தானு மதற்குள்ளே
காராம் பசுக்கட்டுங் கயிறு மதற்குள்ளே. அது என்ன?

-தென்னைமரம்

3708. வான் தேவன் வடித்த கண்ணீர்
மேக தூதன் தெளித்த பன்னீர். அது என்ன?

-மழை

3709. வானம் விடும் கண்ணீர். எது?

-மழை

3710. வானில் உலா வருவான், இதயம் குளிரவைப்பான்.
அது என்ன?

-மழை

3711. வானில் விரைந்து செல்லும்
விமானம் அல்ல
பாங்காய்ப் பறந்து செல்லும்
பறவை அல்ல.

-வானொலி

3712. விட்டத்திலே சக்கரம் விறுவிறுன்னு சுற்றுதே.

-உருளைக்கட்டை

3713. விட்டம் போட்டு வீடுகட்டி
விசிறி மாட்ட இடமில்லை. அது என்ன?

-மூக்கு

3714. விடிந்தபின் வேலை செய்வான்
வேலை இல்லையேல் மூலையில் கிடப்பான்.

-துடைப்பம்

3715. விடியட்டும் என்று புலம்பினவன் ஒருவன்
விடியவேண்டும் என்று புலம்பினவன் ஒருவன்
விடிந்தால் என்ன விடியாவிட்டால் என்ன
என்று புலம்பினவன் ஒருவன். இவர்கள் யார்?

-பாய், துடைப்பம், உறி

3716. விடிய விடிய பூந்தோட்டம்
விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம். அது என்ன?
-விண்மீன்

3717. விடுகதை போடுகிற எல்லப்பனுக்கு
முதுகில் மூன்று நாமம். அது என்ன?
-அணில்

3718. விண்ணில் பறக்கும் அது விமானமும் அல்ல
வடம் போல வாலுண்டு வானரமும் அல்ல
கொம்பு கொண்டு குத்த வரும் பசுமாடும் அல்ல
உறுமும் பின் ஊசலாடும் ஓநாயும் அல்ல.
-காற்றாடி

3719. விண்ணிலே பிறந்து விண்ணிலே வளர்ந்த விண்ணரசியே
ஞாபகமாய் சொல். வேல் இல்லாத வேல்
என்ன வேல்?
-மறவேல்

3720. விண்ணின் வீதியில் விளையாடிச் சிரிப்பவன்
மண்ணில் மாந்தரின் கண்ணையும் பறிப்பவன்.
அது யார்?
-இடி

3721. விண்ணுக்கு ஏறினாள் தேவி விரைந்து
கிண்ணி ஒன்றைக் கொடுத்தாள்
வெள்ளைத் தண்ணீரை அதில் இறைத்தாள்
'முடக் முடக்' எனக் குடித்தேன். அதில்
முற்றிலும் தித்திப்பு இல்லை. மூடுபனி போன்ற
சுண்ணத்தின் முனைநாற்றம் இருந்தது கண்டேன்!
-பதநீர்

3722. விண்ணைச் சிரிக்கச் செய்வாள்
கண்ணைப் பறிக்கச் செய்வாள். அவள் யார்?
-மின்னல்

3723. விண்ணைத் தொட்டதும் விரியத் தலைப்பட்டதும்
விதவிதமாய்ப் பறவையினம் விருத்தி அதில் செய்ததும்
நீர்த்தேக்கம் கொண்ட நிலா முற்றம் அதற்குள்ளே
துளி கன்று பசு கட்ட தும்புக்கயிறும் அதற்குள்ளே
தூய்மை வீடேறத் துடப்பமும் அதற்குள்ளே!
அது என்ன?
-தென்னை

3724. வித்தில்லாமல் விளைவது என்ன?
வெட்டாமல் சாயுதே அது தான்.

–வாழை

3725. வித்தின்றி முளைக்கும்
விடிந்ததும் கொடை பிடிக்கும் . அது என்ன?

–காளான்

3726. வித்துவான் ஒருவரை வீதியில் கண்டு
விளம்பும் உம்பேர் என்றதும், விடை
சொன்னார் இப்படி
மைதிலி மணாளன் பேருக்கு மறுபேர் அதோடு
மத்தியில் மானை ஒட்டி வனத்தில் நிறுத்தினால்
வந்திடும் என்பேர் என்றார்! சொல்ல வருமா
இந்த சூட்சமப் பேரும் உங்களுக்கு?

–ரகு மான் கான்

3727. விதைக்காத விதை மண்ணிலே
அறுக்காத கதிர் மண்ணிலே.

–சூரியன்

3728. விதையில் கிடைக்காத எண்ணெய்
செக்கில் எடுக்காத எண்ணெய். அது என்ன?

–மண்ணெண்ணெய்

3729. விதையில்லாத செடி
மழையில் பிறந்து வெய்யிலில் காயுது. அது என்ன?

–காளான்

3730. விதையின்றி முளைக்கும்
வேர் இன்றி வளரும். அது என்ன?

–கொம்பு

3731. விபூதிப்பட்டை விலாசம் தெரிய
மரத்தில் இருந்து மண்ணில் குதிப்பான்
மண்ணில் இருந்து மரம் ஏறுவான் மந்தி அல்ல
அவன் மற்றபடி யார்?

–அணில்

3732. விரட்டிப் பிடிப்பதே இவர்கள் வேலை.
அவர்கள் யார்?

–கடிகாரமுட்கள்

3733. விரல் கடை அகலம் வீட்டிற்குள்ளே
ஒரு சாண் உயரம் குழலுக்குள்ளே
இருக்கிறான் ஒரு கருப்பு மனிதன்.

–பென்சில்

3734. அரல் விரலாய்த் தொங்கும்,
இது விருப்பமுள்ள உணவுவகை. அது என்ன?
–முருங்கைக்காய்

3735. விரலுக்கு எடுப்பானவன்
விலையில் மதிப்பானவன். அவன் யார்?
–தங்கமோதிரம்

3736. விரலோடு வளர்ந்தவன்
வீணாகிப் போனவன். அவன் யார்?
–நகம்

3737. விரிச்ச பாயைச் சுருக்கலை
விழுந்த பூவைக் கொடுக்கலை.
–வானம், நட்சத்திரம்

3738. விரித்த சிறகோட விழியசையாப் பாங்கோடே
சிரிச்சு வரும் தம்பி சின்னத்தம்பி. அது என்ன?
–தட்டாம்பூச்சி

3739. விரித்த தலை முடிக்க மாட்டாள்
விரும்பி அவள் பேசமாட்டாள்.
–தென்னைமரம்

3740. விரித்த தலை முடியாத
விவரங் கெட்ட பெண்ணே
நீ பெற்ற பிள்ளைக்கு
வகையாலே ஒரு பெயர். அது என்ன?
–பனைமரம்

3741. விரித்த பாயைச் சுருட்ட முடியாது. அது என்ன?
–கோலம்

3742. விரித்தால் தனக்கடக்கம்
சுருக்கினால் நமக்கடக்கம். அது என்ன?
–குடை

3743. விரிந்த ஏரியிலே
வெள்ளி ஓடம் மிதக்கிறது. அது என்ன?
–மூங்கில்

3744. விரிந்த தட்டில் நிறைந்த பலகாரம்
விருந்து உண்ணத்தான் ஆளில்லை. அவை என்ன?
–வானம், நட்சத்திரம்

3745. விரிப்பாம் எடுப்பாம் கண்ணம்மா
வீழ்ந்து கிடப்பதோ வீட்டுத் தட்டம்மா
–தோசை

3746. விருந்துக்கு முந்திடுவாள்
வீதிதோறும் கிடந்தழிவாள்
கொட்டக் கொட்டத் தின்றிடுவாள்
பட்டிக்கி ரையாவாள் பாவிமகள். அது என்ன?

—எச்சில்இலை

3747. விருந்துக்கு வந்த ராசா
வீதியில் கிடக்கிற ராசா
அரைக்காசுக்குக்கூட யாரும் அவனை
மதிக்க மாட்டார்கள்.

—எச்சில் இலை

3748. விரும்பாமலே வந்து ஒட்டிக் கொள்வான்.
அவன் யார்?

—ஒட்டடை

3749. விழித்துக்கொண்டு இருக்கும்போதே
அடித்துக்கொண்டு இருக்கிறான்.
அவன் யார்?

—கண்ணிமை

3750. விழுந்தால் படுக்காது
எழுந்தால் நிற்காது. அது என்ன?

—தஞ்சாவூர் பொம்மை

3751. வினாக்குறியுடன் பிறந்தாலும் விந்தைக்குறியோடு
வளர்ந்தாலும் விரிந்தால் போதும் அவனுடைய
எட்டுக்கை விளங்கும்.

—குடை

3752. வினா, வெளிவருவதேன்
வைக்கோல் போர் போடுவதேன்?

—விடைக்காக

3753. வீசி எறிந்திட்ட வெள்ளைப்பணம்
வீதியில் கிடப்பதை யாரும் அள்ளக்காணோம்.

—விண்மீன்

3754. வீட்டில் இருக்கிற அண்டாவுக்கு அடைப்பில்லை.
அது என்ன?

—கிணறு

3755. வீட்டில் ஒரு மூலை, மூலையிலே ஒரு மேடை,
மேடையில் செம்பட்டு விரிப்பு, விரிப்பை
நான் தொட்டேன், தொட்டதும் என் விரல் சுட்டது.
வில்வம் பழமாப் போச்சே!

—அடுப்பும் தீயும்

3756. வீட்டில் கிடக்கிற நாய்தான்
வெளியே போகாத நாய்தான்
விதவிதமான நாய்தான்
விரும்பும் உருவில் நாய்தான்
விலைக்கு வாங்கும் நாய்தான்
வளையும் வால் நாய்தான்
கட்டிப்போட்டால் அன்றி
காவலுக்கு இராத நாய்தான்
கண்டீர்களா அதன் பேர் என்ன?

–பூட்டு

3757. வீட்டில் வாழும் ஈபுலி என்ன புலி?

–பல்லி

3758. வீட்டிலே குசலக்காரன்
மேட்டிலே கொடைக்காரன்.

–பல்லி, காளான்

3759. வீட்டிற்கு வந்த விருந்தாளியை
வரவேற்க ஆள் இல்லை.

–செருப்பு

3760. வீட்டிற்குள் வரும்போது மூணுபால்
சொல்லி வாருங்கள். அது என்ன?

–அப்பால்
–இப்பால்
–தாழ்ப்பாள்

3761. வீட்டுக்கு வந்த தொந்தியப்பன்
தினமும் கரைகிறான். அது என்ன?

–நாட்காட்டி

3762. வீட்டுக்கு வீடு வாசற்படியிலே போட்டுக்கிடக்கிற
பூப்பந்தலுக்குப் பேரென்ன சொல்லுவார்கள்?

–கோலம்

3763. வீட்டுக் குழல் வழியே விளையாடும் கருமேகம்.

–புகை

3764. வீட்டுக்குள் இருப்பவர்கள் வெளிச்சுவரில்
மோதிவிட்டால் காட்டு மின்மினியில் களை காட்டும்
பொறி ஊட்டும். என்ன அது?

–தீப்பெட்டி

3765. வீட்டுக்குள்ளே இருப்பாள்
விந்தையாகப் பேசுவாள்
வந்தவரை வா என்பாள்
வாசல் தாண்டமாட்டாள்.
அவள் யார்?

–நாக்கு

3766. வீட்டைச் சுற்றிப் புளியமரம்
உலுக்கினால் கலகல என்கும்.

–வளையல்

3767. வீட்டிலே சுற்றியே கல்லு
வெளிச்சம் போட்ட கல்லு
பாட்டி பார்த்தபோது
பலவும் பதுங்கல் ஆச்சே.

–பற்கள்

3768. வீட்டைச் சுற்றி வேலி. அது என்ன?

–கண் இமை

3769. வீட்டை விட்டு வெளியே வராமலேயே
ஊர் விஷயம் முழுக்க பேசுவான். அவன் யார்?

–நாக்கு

3770. வீடிரண்டு விடுதி பதினாலு
ஆடும் பெண்கள் எழுபது பேர்
ஆட்டி வைப்பாரிரண்டு பேர். அது என்ன?

–பல்லாங்குழி

3771. வீடில்லா நகரங்கள் நீரில்லாச் சமுத்திரங்கள்.
அது என்ன?

–தேசப்படம்

3772. வீடு கட்டி வைத்தும்
குடியிருப்பவனைப் பார்க்க முடியவில்லை.
அது என்ன?

–கல்லறை

3773. வீடு நிறைய ஊற்றுப்பட்டை. அது என்ன?

–ஓடு

3774. வீடெல்லாம் நக்கிவிட்டு
விடைபெற்றுக் கிடக்குது ஓரிடத்தில். அது என்ன?

–விளக்குமாறு

3775. வீதி நீளப் பரந்து கிடக்கு அளக்க முடியலை
வெள்ளிக் கல்லு சிந்தி இருக்கு
அள்ள முடியலை. என்ன அவை?

–வானமும் நட்சத்திரமும்

3776. வீதி மணமணக்க மேனி எல்லாம்
பளபளக்க மஞ்சள் பட்டுடுத்தி மணமகனார்
வந்தபின்னர் மனையும் மணக்குதடி
மங்கலம் சிறக்குதடி.

–எலுமிச்சம்பழம்

3777. வீதியை அகலமாக்குவது எது?

– அ என்ற எழுத்து

3778. வீமனுக்குச் சோறுபோட்டு வீதியிலே
கிடக்கிற பெண்ணை
நாயக்கர் வந்து நக்கிக்கிட்டுப் போனாரு.
அது என்ன?

–இலை

3779. வீற்றிருக்க நாலு கால் உண்டு.
வீசுவதற்கோ குஞ்சு வால் இல்லை.

–நாற்காலி

3780. வெட்கங்கெட்ட புளியமரம்
வெட்ட வெட்ட வளருது.

–தலைமுடி

3781. வெட்டரிவாள் போல இலை இருக்கும்
வெள்ளரி விதை போலப் பூப் பூக்கும்
வெறுத்துக் கசக்கும்படி காய் காய்க்கும்
விறலி மஞ்சள் நிறப் பழம் பழுக்கும்.

–வேம்பு

3782. வெட்ட வெட்டக் குலையாத
வெங்கலக்கட்டை. அது என்ன?

–நிழல்

3783. வெட்ட வெட்டச் சவுக்குமே
மீறி மாறி முளைக்குமே.

–தலைமுடி

3784. வெட்ட வெட்டத் தொலையாத
வீரமணிக்கட்டை. அது என்ன?

–நிழல்

3785. வெட்ட வெட்ட முளைக்குது,
தைலமெல்லாம் கேட்குது. அது என்ன?

–தலைமுடி

3786. வெட்டவெளிக் காட்டுக்குள்ளே
விளக்கை வைத்துக்கொண்டு
விக்கி விக்கி அழுதுகொண்டு
விரைவாக ஓடுவாள். அவள் யார்?

–புகைவண்டி

3787. வெட்ட வெளிப் பொட்டலிலே
விதவிதமாய் பூச்சரங்கள். அது என்ன?

–வானம், நட்சத்திரம்

3788. வெட்டிக் காட்டில் விதை ஊன்றி
வீரமலைக் காட்டில் கொடி ஓடி
கண்டனூரில் பால் எடுத்து
கடை எல்லாம் புகையுது. அது என்ன?

–சாம்பிராணி

3789. வெட்டிக் கூறுபடுத்தி வைக்கிறதே ஒழிய
எவரும் தின்கிறதே இல்லை. அது என்ன?

–சீட்டுக்கட்டு

3790. வெட்டிய பிறகு தான் தெரியும். இவனுக்கு
எத்தனை கண் என்று. யாரது?

–நுங்கு

3791. வெட்டி வெட்டி எரியும்
எங்கள் வீட்டு விளக்கு. அது என்ன?

–மின்னல்

3792. வெட்டுக்குழியில் விதை தோண்டி
வீரத்தங்கை மலையில் காய்காய்த்துத்
தானாய்ப் பழுத்து விழும் பழம் என்ன பழம்?

–பனம்பழம்

3793. வெட்டுவார் அழமாட்டேன்
கிள்ளுவார் அழமாட்டேன்
கடிப்பார் அழமாட்டேன்
சாயமும் பூசுவார் சாது என்னையே. நான் யார்?

–நகம்

3794. வெண்மையான காடு, கருப்பு விதைகொண்டு
காலால் விதைப்பர், வாலால் அறுப்பர்.

–காகிதத்தில் மைகொண்டு
எழுதி வாசிப்பவர்.

3795. வெண்மையான பூமியிலே வேகமாய் ஓடுவான்
நொண்மையுற்றால் நின்றிடுவான்
சென்னியை அறுத்தாலும் சக்தி பெற்றிடுவானே.
அவன் யார்?

–பென்சில்

3796. வெயில் நேரத்தில் உடம்பில் தோன்றுவான்.
அவன் யார்?

–வேர்க்குரு

3797. வெயில் போனதும் கறுப்பி இதழ்விரிச்சு
நன்றாக இளிப்பாள், வீட்டில் நுழைந்தாலும்
காக்காச்சி முகத்தைச் சுழிப்பாள், மழையில்
நன்றாகக் குளிப்பாள், வெயிலுக்கோ நிழல்
அளிப்பாள். இவள் யார் சொல்?

–குடை

3798. வெயிலில் மலரும் காற்றில் உலரும். அது என்ன?

–வியர்வை

3799. வெள்ளக்குதிரைக்கு வெலாவுல பொத்தல். அது என்ன?

–மதகு

3800. வெள்ளரிக்காய் விதைகள் சின்ன வீட்டு
வாசலில் முளைத்தது எப்போது?

–பற்கள்

3801. வெள்ளிரிப்பழம் வெடித்திருந்துங் கட்டுவாரில்லை
இராசாமகன்ஓடுகின்றான் பிடிப்பாரில்லை
உரோசாப்பூ மலர்கின்றன கிள்ளுவாரில்லை
வேந்தரே இதன் கருத்தை உரைப்பீர் நீரே.

–சூரியன், சந்திரன்,
நட்சத்திரங்கள்.

3802. வெள்ளரி விதையும் குதிக்குது
வெள்ளிக் குதிரையும் மிதிக்குது.

–சோறு, நுரை

3803. வெள்ளலையில் மிதக்கும் அது கப்பல் அல்ல
விண் சுற்றித் திரிந்திடும் அது விமானம் அல்ல
கருக்கிருட்டைத் தின்னும் ஒளிக்காந்தம் அல்ல
காதலுக்கு வெறியூட்டும் காமன்கணை அல்ல
கருத்தறிந்து இதன் பெயரைக் கூறுவீரே.

–சந்திரன்

3804. வெள்ளிக்கட்டி மண்ணுக்குள்ளே. அது என்ன?

–முள்ளங்கி

3805. வெள்ளிக் குண்டு வெண்கலக் குண்டு
தண்ணீரில் போட்டால் மிதக்கும் குண்டு. அது என்ன?

–வெண்ணெய்

3806. வெள்ளித்தட்டு விழுந்தது கிணற்றில்
எடுக்கமுடியவில்லை. அது என்ன?

–நிலவு

3807. வெள்ளிப் பளிங்குருண்டை
வீட்டுக்குள்ளிலிருந்து குண்டுகுண்டாய்
வெளிவந்த குஞ்செல்லாம் யார் யாரோ. அது என்ன?

–கோழிக்குஞ்சு

3808. வெள்ளிமலையில் விதை ஊன்றி
விராலிமலையில் கொடிபடர்ந்து
தஞ்சாவூரில் பிஞ்சுவிட்டுத்
தலைவாசலிற் காய்பறித்தேன். அது என்ன?

–பரங்கிக்காய்

3809. வெள்ளிரூபா துள்ளி விழும். அது என்ன?

–மீன்

3810. வெள்ளி விளக்கேற்றி வெடிக்க மணி அடித்து
கொள்ளிவாய்ப் பேய்க்கணங்கள்
கொட்டுதடா கண்ணீர்துளிகள்.

–மின்னல், இடி, மழை

3811. வெள்ளை அரிவாள் வீதியில் கிடக்குது.

–பிறைச்சந்திரன்

3812. வெள்ளைக் கண்ணாடிக்குடம்
விழுந்தால் நொறுங்கி விடும்.

–முட்டை

3813. வெள்ளைக் கத்தரிக்காய்
கள்ளக் கூக்குரல் போடுது. அது என்ன?

–சங்கு

3815. வெள்ளைக் கல்லோ கரடு
வெள்ளரிப்பழமோ முரடு.

–கற்கண்டு, பலாப்பழம்

3816. வெள்ளைக்காரன் கைமண்ணுக்குள்ளே. அது என்ன?

–முள்ளங்கி

3817. வெள்ளைக்காரன் கோவில்லே உள்ளுக்குத்தான்
யாரோ ஊற்றிவச்சுப் போனாங்க
தெள்ளத்தெளிந்த தீர்த்தம் தித்திப்பு தீர்த்தம்
கேட்டு வாங்கிக் குடிக்கக்கிட்ட யாரும் இல்லை.

–தேங்காய்

3818. வெள்ளைக்காரன் தொப்பி வெளுத்திருக்குமாம்
அதிலே ஒரு செடி தளிர்த்திருக்குமாம். அது என்ன?

–முள்ளங்கி

3819. வெள்ளைக்காரன் தோட்டத்திலே
மேலே பச்சை கீழே வெள்ளை. அது என்ன?

–முள்ளங்கி

3820. வெள்ளைக்காரன் பூக்க
வெகுபேர் காத்திருக்கிறார்கள். அவர்கள் யார்?

–சாதம்

3821. வெள்ளைக்காரியை வீட்டிற்குள் ஒளித்துவைத்து
வெளியிலே கிளியோடு காவல் காக்கிறார்.

–இலவம்பஞ்சும், கொட்டையும்.

3822. வெள்ளைக் காளையும் கறுத்த காளையும்
பிடிச்சுகிட்டு வந்தேன்.
ரெண்டையும் தண்ணீரிலே விட்டேன்
வெள்ளைக் காளை முங்கிருச்சி
கறுத்த காளை மிதந்திரிச்சி. அது என்ன?

–உளுந்து

3823. வெள்ளைக் குத்துவிளக்கு, நொள்ளைத் திரியின் நுனியில்
கொள்ளிச் சுடரைக் கொண்டு கொழிக்கும்
வெளிச்ச விள்க்கு, எண்ணை இன்றித் தன்னை எரித்து
மடியும் விளக்கு, கண்ணீர் சிந்தும் விளக்கு,
தியாகச் சுடராம் விளக்கு.

–மெழுகுவர்த்தி

3824. வெள்ளைக்குதிரையும் கறுப்புக் குதிரையும்
ஆற்றுக்குப் போச்சு
வெள்ளைக்குதிரை வீட்டிற்கு வந்தது
கறுப்புக்குதிரை ஆற்றோடு போச்சு. அது என்ன?

–உளுந்தம்பருப்பு

3825. வெள்ளைக்குதிரையும் கறுப்புக்குதிரையும்
மாறிமாறி ஓடும். பிடிக்க முடியவில்லை. அது என்ன?

–பகலும் இரவும்

3826. வெள்ளைக்குதிரை வேலியைத் தாண்டுது.

–சோளப்பொரி

3827. வெள்ளைக் கொக்கு பாடுது
விடிஞ்சதும் ஜனம் கூடுது
ஓங்காரத்தைத் தேடுது
ஒலியால் தெய்வம் நாடுது.

–சங்கு

3828. வெள்ளைக்கொல்லை கறுப்பு விதை
கை விதைத்து வரும் வாய் கொறித்துவரும். அது என்ன?

–காகிதம், மை, வாசித்தல்

3829. வெள்ளைச் சட்டைக்காரன்
வேடிக்கைக்குக் கெட்டிக்காரன்.
அவன் யார்?

–கண்ணாடி

3830. வெள்ளைச்சட்டை வெளுத்திருக்க
அதில் இரண்டில் துளுத்திருக்க. அது என்ன?

–முள்ளங்கி

3831. வெள்ளைச் சீமாட்டிக்குத் தலைமேலே விளக்கு.
அது யார்?

–மெழுகுவர்த்தி

3832. வெள்ளைத் தண்ணீரிலே
வேசி ஆடுகிறாள். அது என்ன?

–மத்து

3833. வெள்ளைத்திடல், கறுப்பு விதை. அது என்ன?

–புத்தகம்

3834. வெள்ளைத் திரைமேலே
வேடிக்கை பல காட்டும். அது என்ன?

–திரைப்படம்

3835. வெள்ளைத் துணி போர்த்திருப்பாள்
சின்னப்பூவம்மாள். அவள் யார்?

–கொழுக்கட்டை

3836. வெள்ளைத் துணியின் மீது கறுப்பு விதை விதைச்சு
அவை விளையாமல் கொள்ளாமல்
விலைக்கு விற்கிறார்கள்.

–அச்சுப்பத்திரிக்கை, இதழ்கள்

3837. வெள்ளை நிலத்தில் கறுப்பு விதையைக்
கையால் விதைத்து வாயால் பொறுக்க வேண்டும்.
அது என்ன?

**–காகிதம், மை,
வாசித்தல்**

3838. வெள்ளைநிறச் சாமியார், குளத்தங்கரையில்
ஒற்றைக்காலில் தவம் இருக்கிறார். யாரவர்?

–கொக்கு

3839. வேகமாய்ப் போகிற அம்மணிக்கு
விழுந்த கைக்குட்டையை எடுக்க நேரமில்லை.
அது என்ன?

–பறவை இறகு

3840. வேகவேக ஓட்டக்காரன்; அவன்
ஓட்டத்தில் வரவும் உண்டு; செலவும் உண்டு.
அது என்ன?

–குதிரை

3841. வேகாத வெய்யிலிலே வெண்ணெய் பிசைந்து
வைத்தேன், உருகவில்லை ஓட்டவில்லை
உலர்ந்துவிட்டது. அது என்ன?

–சுண்ணாம்பு

3842. வேகாத வெயிலில் வெள்ளையப்பன் விளைகிறான்.
அவன் யார்?

–உப்பு

3843. வேசனார் கோவிலில்
விதை ஊன்றித்
தஞ்சாவூரில் பிஞ்சுவிட்டுத்
தாமரைக்குளத்தில்
காய்காய்த்ததாம். அது என்ன?

–அல்லிக்கொடி

3844. வேசைக்கு வாடாத பூ என்ன பூ?
(வேசை - வெய்யில் காலம்)

–சேவல்கொண்டைப்பூ

3845. வேட்டை ஆடாத மான், வேடர்கள் நிறைந்த மான்,
பார்த்தால் தெரியாத மான், பாய்ந்து ஓடாத மான்,
எந்த மான்?

–அந்தமான்

3846. வேண்டுதலுக்குப் பலபேர் இவனை
விசிறிபடிப்பார்கள். அது என்ன?

–தேங்காய்

3847. வேண்டும் குளம் என்னடி பெண்ணே
விளையாடும் குளம் என்னடி பெண்ணே

மணக்கும் குளம் என்னடி பெண்ணே
கணக்காய்ச் சொல்லடி கண்மணி என் கண்ணே.
அது என்ன?

–தெகுளம் (நிறைதல், பெருகுதல்)
தகுளம் (மகளிர் விளையாட்டு) வகுளம் (மகிழமரம்)

3848. வேதனை இன்றியே வேகமாய்த் துடிப்பான்.
அவன் யார்?

–கண் இமை

3849. வேர் இல்லாத புல்லை வேலூர் தெப்பத்தில்
பார்த்தேன், கால் இல்லாத மான் அதைக்
கண்டபடி தின்னுதே.

–மீன், பாசி

3850. வேரடி குப்பை மேட்டில் வித்தின்றி
முளைத்த கொள்ளி, விளையாட்டுக்காரப்பிள்ளை
விநாயகர் குட்டிச் சப்பரம் புறப்படக்
காத்திருக்கப் பிள்ளையார் வரவில்லையே?

–காளான்

3851. வேலிக்கு அந்தாண்ட வெள்ளைக்குதிரை. அது என்ன?

–பருத்தி

3852. வேலிக்குள் நின்று விரிந்த குடை என்ன குடை?

–காளான்

3853. வேலிக்குள்ளே வெண்கலக் குண்டான். அது என்ன?

–காளான்

3854. வேலியிலே படர்ந்திருக்கும்
வெள்ளைப்பூப் பூத்திருக்கும்
கனியும் சிவந்திருக்கும்
கவிராயர்க்குகந்திருக்கும். அது என்ன?

–கோவைப்பழம்

3855. வேலியின் மேல் வெள்ளித்தடி. அது என்ன?

–பாம்பு

3856. வேலியைச் சுற்றி நீரியமாலை. அது என்ன?

–கறையான்

3857. வேலியைச் சுற்றி நீலியப் பாம்பு. அது என்ன?

–அரைஞாண்கயிறு

3858. வேலியைத் தாண்டி வெள்ளைக்குதிரை
போய்விட்டது. அது என்ன?

–பருத்தி

3859. வேலியைத் தாண்டின வெள்ளாடு.

–சோளப்பொரி

3860. வேலியைத் தாண்டுது வெள்ளாடு. அது என்ன?

–சாம்பல்

3861. வேலின் தலைபோல்வான்
விளங்கு கைப்பிடியான்
சூடு தடுப்பான்
சுடுகஞ்சி குளிப்பான். யார்?

–அகப்பை

3862. வேலூர் பொத்தையில் விதை ஊன்றி
விளாத்திகுளத்தில் கொடிவீச
வெள்ளியங்கிரியிலே பிஞ்சுவிட
வீட்டுமுற்றத்தில் காய்பறித்தேன்.

–பரங்கிக்காய்

3863. வேலைக்காரி கெட்டிக்காரி
வெளியே தலைகாட்டாள்
உடன்பிறந்த சொந்தக்காரி.

–நாக்கு

3864. வேலைவெட்டி இல்லாமல் ஒருவன் வீதி
நெடுகிலும் ஓடுகிறான், சாடுகிறான். யார் அவன்?

–நாய்

3865. வேற்றூரிலிருந்து வந்தாள்
வெண்பட்டு உடுத்தி வந்தாள்
காற்று மாதிரிப் பறந்து வந்தாள்
ககனமெல்லாம் சுற்றி வந்தாள்.
அவள் யார்?

–கடிதம்

3866. வேற்றூருக்குச் செல்லும் வீதி ஓரத்தில்
விழுந்துதினம் கிடக்கும் மலைப்பாம்பு
மணி அடித்தாலன்றி அது நகராதாம்.

–புகைவண்டி

3867. வேறு யாரையும் பிடிக்காமல்
விரிச்ச தலையை முடிக்காமல்
நம்ம கொல்லத்து ராசாத்தி
நாணிக்கோணி நிற்கிறாள்.

–தென்னைமரம்

3868. வைக்கோல் துரும்பெடுத்து
வரிவரியாய்க் கோட்டை கட்டித்
திக்கில்லாத பிணம் தெருவிலே கிடக்கிறது.

–மலம்

3869. வைக்கோல் போர் சேர்ப்பதேன்
வினாவிக் கேட்பதேன்.

–விடைக்காக

3870. வைகுண்டம் போனாலும் வராத
சப்பரம் என்ன சப்பரம்?

–பிணம்

3871. வைத்தியர்களுக்கு நான் ஒரு உற்ற துணை
ஒளி எனது ரூபம், எப்பொருளையும்
ஊடுருவிச் செல்வேன் உடலுள்
உறுப்புகளைக் காண உதவுவேன்.
நான் யார்?

–எக்ஸ்ரே

3872. ஜன்னல் பின்னல் கயிறு
ஜாதிலிங்கக் கயிறு
எண்ணெய் படாத கயிறு
இது என்ன கயிறு?

–பாம்பு

3873. ஜனக நகரின் பெயர், அனுமான் பெயர்,
பார்வதியின் பெயர், பெண் சாதியைக் குறிக்கும்
பெயர், ஓர் அவயப் பெயர், ஓர் இராகப்
பெயர் ஆகிய இவற்றைக் கண்டுபிடித்து
இந்தப் பெயர்களின் நடுவெழுத்தால் விசேடமான
பாடல் பெற்ற ஒரு ஊரின் பெயரைக் காணலாம்.
அந்த ஊரின் பெயரென்ன?

**–மிதிலை, மாருதி, பவானி, மனைவி,
மூக்கு, முகாரி, திருவானைக்கா.**

3874. ஜனித்ததும் சலங்கை கட்டி
'ஜல் ஜல்' என்று நடக்கும்
தாய்ப்பாலைச் சிந்தாமல் 'தள தள' என்று வளரும்.

–கோழிக்குஞ்சு

3875. ஜாடிக்கு ஏற்ற மூடி
மூடிக்குள்ளே குருவி வளைந்து படுத்துக் கிடக்குது.

–முந்திரிப்பழமும், பருப்பும்

3876. ஜாடி மேலே குரங்கு. அது என்ன?

–முந்திரிக்கொட்டை

3877. ஜாடியோடு திரிஞ்சதால் கோடிச் சொத்தும் கூறையாம்.

–கள் குடித்தல்

3878. ஜிகுஜிகு ஜிகினா சிங்கார ஜிகினா
தங்கச் சீவலாய் தெருவீதி எல்லாம்
சிந்திக் கிடக்கிற ஜிலுஜிலு ஜிகினா
பத்தர் இடுக்கிக்குள் படாத ஜிகினா!

–சூரியன்